ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன் 102, 103, 104

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் மாதவெளியீடு]

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம் 9 | ஹேவிளம்பி௵ 1957 ஜூன், ஜூலை, ஆகஸ்டு௴ | இதழ் 6, 7, 8

இராமாநுச நூற்றந்தாதி பாசுரங்கள்.

நையும்மனமுன் குணங்களையுன்னி * என்னாவிருந்தெம்
ஐயனிராமானுச னென்றழைக்கும் * அருவினையேன்
கையுந்தொழுங் கண்கருதிடுங்காணக் கடல்புடைசூழ்
வையமிதனில் * உன்வண்மை யென்பாலென் வளர்ந்ததுவே. (102)

வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய் * அன்றுவாளவுணன்
கிளர்ந்தபொன்னாகங்கிழித்தவன் * கீர்த்திப்பயிரெழுந்து
விளைந்திடுஞ்சிந்தை யிராமானுசனென்றனமெய்வினைநோய்
களைந்து நன்ஞானமளித்தனன் * கையில்கனியென்னவே, (103)

கையில்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும் * உன்றன்
மெய்யில்பிறங்கிய சீரன்றிவேண்டிலன்யான் * நிரயத்
தொய்யில்கிடக்கிலும் சோதிவிண்சேரிலுமிவ்வருள்நீ
செய்யில் தரிப்பன் * இராமாநுச! என்செழுங் கொண்டலே. (104)

அன்பர்களுக்கு அறிவிப்பு.

ஸ்ரீராமாநுஜன் நெ. 101, மே மாதத்தில் வெளிவந்தது. ஜூன், ஜூலை, ஆகஸ்டு ஆகிய மூன்று மாதங்களின் பத்ரிகைகள் இப்போது ஒன்று சேர்ந்து வெளிவந்து விட்டன. இனி அந்தந்த மாதப் பத்திரிகை அந்தந்த மாதத்திலேயே வெளிவரும்படி கவனிப்போம்.

தானேயெழுதிய தன் சரிதையை விரைவில் முடித்துத்தரவேணு மென்று பல அன்பர்கள் அடிக்கடி யெழுதிக்கொண்டிருந்தபடியால் ஒருவாறு அதை முடித்து வெளியிட்டு விட்டோ மிப்போது. இனி பயிண்டு செய்வித்துக் கொள்ள விருப்ப முள்ளவர்கள் நான்கு பகுதிகளையும் ஒன்றுசேர்த்து ஒரே புத்தகமாக பயிண்டு செய்வித்துக் கொள்ளலாம்.

அடியேனுடைய உத்தேசப்படி இன்னும் பலபல மஹான்களின் உருவப்படங்களையும் வெளியிடவேண்டியிருக்கிறது. மற்றொரு ஸமய விசேஷத்தில் தன்சரிதையனுபந்தம் வெளியிடவே நேரும். அதில் எல்லாமநோரதங்களும் நிறைவேறு மென்று எண்ணமுள்ளது.

ஒரு பெரிய நோக்கர்.

நாம் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முழுமைக்கும் திவ்யார்த்ததீபிகை யுரை யெழுதி வெளியிட்டிருக்கிறோமென்பது உலகம் முழுவது முணர்ந்ததே. இது, முதலாயிரம் மூன்று வால்யமாகவும், பெரிய திருமொழியாயிரம் 4 வால்யமாகவும், இயற்பா ஆயிரம் மூன்று

வால்யமாகவும், திருவாய் மொழியாயிரம் பத்து வால்யமாகவும் ஆக மொத்தம் இருபது வால்யங்களாக இருப்பதனுல் முழுமைக்கும் 60/– ரூ. விலையாகிறது. இவ்வளவு கனத்த விலை கொடுத்து வாங்கப் பலர் சிரமப்படுகிருர்கள். மிகவிரிவான வுரை இல்லாமற் போனுலும் பாசுரங்களின் பொருளை (அல்லது) கருத்தை எளிதாகத் தெரிந்து கொள்ள உபயோகமாகும்படியும், குறைந்தவிலைக்குக் கிடைக்கும்படியும் ஒருரை வெளியிட்டால் உலகுக்கே மஹோபகாரமாகும் என்று பல அன்பர்கள் இரண்டொரு வருஷமாகவே எழுதிவருகிருர்கள். இது அவசியம் நிறைவேற்றவேண்டிய கோரிக்கையேயென்று நாம் முடிவுசெய்து விட்டோம். ஸ்ரீராமாநுஜன் உருவத்திலேயே இதை அச்சிடுவதாகவும் முடிவு செய்தாயிற்று. பாசுரம் நான்கு வரி; உரை 5, 6 வரிக்கு மேற்படாமல் இருக்கும். சிலவிடங்களில் கருத்தை விவரிக்க அவசிய மேற்பட்டால் 10, 12 வரிக்கு மேற்படாமலிருக்கும். அப்படி விரிவுரையை அபேக்ஷிக்கும் பாசுரங்கள் 150 அல்லது 200 க்கு மேற்பட மாட்டா. இங்ஙனம் வெகுநேர்த்தியான பதிப்பு ஆரம்பமாய்விட்டது. மிகவுயர்ந்த பழமழப்பான காகிதமே உபயோகிக்கப்படுகிறது. மூன்று மாதங்களில் ஒரு ஆயிரத்தை முடித்து ஒருவருஷத்திற்குள் நாலாயிரமும் பூர்த்தி செய்வதென்று உறுதிகொண்டிருக்கிறேன். ஒவ்வோராயிரமும் ஐந்து ரூபா விலையில் கிடைக்கும்படி செய்வோம். நாலாயிரமும் மிகவிளக்கமான உரையுடனும் பல அநுபந்தங்களுடனும் 20/– ரூ. விலையில் கிடைக்கு மென்றபடி.

பதினைந்து ரூபாய் முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கு அதற்குமேல் யாதும் செலுத்த வேண்டாதபடி 15 ரூ. விலையிலேயே முழுவதும் கிடைக்கும். ஷை 15 ரூபாயை இன்ஸ்டால்மெண்ட் ஸிஸ்டத்தில் அனுப்பலாமா? என்று கேட்கக்கூடாது. 1957 ஸெப்டம்பர் மாதம் முடிவுக்குள் 15 ரூ. பூர்த்தியாக செலுத்தியாகவேண்டும். மூன்று மாதங்களுக்கொருமுறை ஒவ்வொராயிரமாகக் கிடைத்துவருமென்பது உறுதி. முதலில் திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழியாயிரம் தொடக்கமாகிறது. அபேக்ஷையுள்ளவர்கள் மூந்திக்கொள்ளவேண்டும்.

இங்ஙனம்,

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம், **அண்ணங்கராசாரியர்,**

10–8–57. க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

ஸ்ரீ ராமாநுஜனுக்குச் சந்தா செலுத்தியவர்கள்.

(75) M. S. கிருஷ்ணஸாமி அய்யங்கார், மேலபாளையம்.
(76) S. சுந்தரராஜன், ஹிராகுட் காலனி, ஒரிஸா.
(77) N. ரங்கஸாமி அய்யங்கார், அட்வகேட், வேலூர்.
(78) A. V. கிருஷ்ணஸாமி அய்யங்கார், எர்ணுகுளம்.
(79) A. N. ஜகன்னதன், பள்ளத்தூர்.
(80) V.G. ராமாநுஜன், பர்மாஷெல், மதராஸ்
(81) T. S. ராஜன் செட்டி & Bros. மதருஸ்.
(82) B. V. சீனிவாஸன், மதராஸ்.
(83) K. ருத்ரகோடி, மதராஸ்.
(84) K. ஸ்ரீனிவாஸராகவன், பாபநாசம் ப்ராஜக்ட், திருநெல்வேலி.
(85) N. ஜானகிராமன், மதராஸ்.
(86) M. ரங்கஸாமி அய்யங்கார், மதராஸ்.
(87) T. பொன்னுரங்கம், மதராஸ்.
(88) M. நடராஜ செட்டியார், மதருஸ்.
(89) P. A. ஸம்பத்து, மதராஸ்.
(90) S. R. ஸம்பத்து, மதராஸ்.
(91) ஸ்ரீமதுபயவே. கோ. கம். சுத்த ஸத்வம் சிறுபுலியூர் ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.
(92) அண்ணு J. கிருஷ்ணமாச்சாரியார். மதுரை.
(93) T. ராமாநுஜாச்சாரியார், திருவிந்தளூர்.
(94) A. K. ராகவாச்சாரியார், கல்கத்தா.
(95) K. S. S. ராமாநுஜம், கல்கத்தா-29.
(96) K. நாராயணஸாமி பாகவதர், மாளிகை மேடு.

ஸ்ரீ:

தானேயெழுதிய தன் சரிதை—நான்காம் பகுதியின்

தொடர்ச்சி.

ஒரு குறிப்பு ;—இனிமேல் இச்சரிதையில் சேர்க்கப்படும் திருவுருவப்படங்கள் பெரும்பாலும் என்னுடைய சரிதையில் ஸம்பந்தப் படாதவையாகும். எனக்கு மிகவும் ஆப்தர்கள் என்றும், உலகுக்கே கௌரவிக்கத் தக்கவர்கள் என்றும் இப்படிப்பட்ட காரண விசேஷங்களினால் இனி வெளியிடப்படும் உருவப்படங்களை அன்பர்கள் கண்டுகளிப்பது. சுருக்கமான குறிப்புகள் தருவேன்.

ஸ்ரீமதுபயவே. வித்வான். காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமியின் காலக்ஷேபகோஷ்டி



1. ஸ்ரீ. உவே. வேளுக்குடி. K. வரதாசாரியர்.
2. ,, பிள்ளை லோகம். பாஷ்யகாராசாரியர்.
3. ,, காரப்பங்காடு. (தேசி.) ஸ்ரீரங்கராஜாசார்யர்.
4. ,, தி. அ. சதாபிஷேகம். கோவிந்தநரஸிம்ஹாசாரியர்.

அடியேனுடைய க்ரந்தரசனைகள்

அடியேன் இயற்றிய நூல்களைப்பற்றிக் கீழ்ப்பகுதிகளில் ஆங்காங்கு எழுதியிருந்தாலும், இப்போது அவற்றைப்பற்றி ஒன்றும் விடாமல் பூர்த்தியாகவும் சிறிது விரிவாகவும் எழுத விரும்புகிறேன். அடியேனுடைய வாழ்க்கையில், வடமொழி தென்மொழி தெலுங்கு ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும் உபந்யாஸங்கள் செய்துவருவது தவிர பல நூறு நூல்களை யெழுதி வெளியிடும் பாக்கியம்

விசேஷமாகக் கிடைத்துள்ளது. பதினெட்டு இருபது வயது வரையில் ஸம்ஸ்க்ருதத்தில் தான் விசேஷமாக எழுதிக்கொண்டிருந்தேன். இருபதாவது வயதிலிருந்து தமிழிலும் எழுத ஆரம்பித்தேன். நாற்பதாவது வயதிலிருந்து தெலுங்கிலும் ஹிந்தியிலும் எழுதத்தொடங்கினேன். திருத்தகப்பனருடைய அதிமாநுஷ க்ருத்யங்களினாலும் அபரிமிதக்ருபையினாலும் அடியேனுக்கு வடமொழிப் பயிற்சியும் அந்த பாஷையில் விச்ருங்கலமாக எழுதும் பெற்றியும் பத்து வயதுக்குள்ளாகவே உண்டாயிற்றென்பதை என்னுடைய ஹர்ஷப்ரகர்ஷத்தினால் மீண்டும் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். ஸம்ஸ்க்ருதபாஷையில் தாராளமாகப் பேசவும் எழுதவும் எனக்கு சக்தியில்லாத காலம் என்னுடைய நினைவுக்கு வரவில்லை. இதற்குரிய திருத்தகப்பனரின் க்ருஷி அபரிமிதமாக இருந்தது.

திருப்பதியில் ஜ்ஞாநாநுஷ்டாந நிதியான ஸ்ரீமத் கிடாம்பி அப்பாஸ்வாமியென்று ஒருமஹான் எழுந்தருளியிருந்தார். அவர் ஸ்ரீ காதிஸ்வாமிக்கு அம்மான் முறையில் சேர்ந்தவர். அதனால் அடிக்கடி காஞ்சிக்கெழுந்தருள்வர். திருத்தகப்பனருக்குப் பரமஸ்நிக்தராகையாலே அஸ்மத் க்ருஹத்திலும் அடிக்கடி ஸேவை ஸாதிப்பர். அப்போது அந்த ஸ்வாமி அநுக்ரஹிக்கிற வழக்கம்—"அண்ணா! நீ ரங்கஸாமிக்குப் புத்ரனாகவும் அழகிய மணவாள ஜீயர்ஸ்வாமிக்கு தௌஹித்ரனாகவும் ஜனிக்கப்பெற்றதுண்டே, இதுதான் உனக்குப் பெரிய பாக்யம்; இந்த ஜன்மத்தில் வாசித்து உனக்கு வரவேண்டியது ஒன்றிருப்பதாக நான் நினைக்கவில்லை" என்று.

அது நிற்க. திருத்தகப்பனர் அமரம், சப்தமஞ்ஜரி, தாதுபாடம், ஸ்ரீராமாயண ஸங்க்ரஹம் இவற்றைப் பாடஞ்சொல்லிக் கற்பிக்கிறவிதம் உலகில் எங்கும் காண முடியாதென்றே சொல்லுவேன். பண்டிதர்களென்று அவரிடம் யாராவது வந்துவிட்டால் அவர்களை உமக்கு அமரம் தெரியுமா? சப்தமஞ்ஜரி தெரியுமா? தாதுமாலிகை தெரியுமா?" என்றே முன்னம் கேட்பர். என்ன! இப்படி கேட்கிறாரேயென்று அவரவர்கள் வருந்துவர்கள். பல பேர்கள் அமரம் தெரியாதென்பர்கள். உடனே 'அமரம் தெரியாதவன் மரம்' என்று ஸாதிப்பர். எப்படிப்பட்ட பண்டிதரும் சப்தமஞ்ஜரியிலும் தாதுபாடத்திலும் திருத்தகப்பனருடைய ஒரு கேள்விக்குக் கூட நேரான விடை கூறமாட்டார். சப்தமஞ்ஜரியில் மிருது சப்தம், சுசி சப்தம், கர்த்ரு சப்தம் இவற்றுக்குப் பும்லிங்க ஸ்த்ரீ லிங்க ரூபங்களைக் காட்டாமல் நபும்ஸக ரூபத்தைமட்டும் காட்டியிருக்கிறதே; ஏன்? அந்த சப்தங்கள் நபும்ஸக லிங்கத்தில் மட்டுந்தானுண்டோ? என்று திருத்தகப்பனர் கேட்பர். வியாகரணத்தை நன்றாக வாசித்திருக்கிறேனென்பவர்களுங்கூட இதற்கு பதில் சொல்லமாட்டாமல் திகைத்து நிற்பர்கள். தாது பாடத்தில் கேட்டாலோ வாயைத் திறக்கவே மாட்டார்கள். ஐம்பத்தைந்து வருஷங்களுக்கு முற்பட்ட செய்தியை இப்போதெழுதினபடி.

இக்காலத்தில் சிரோமணிகளென்றும் வித்வான்களென்றும் ப்ரவீணர்களென்றும் ப்ரஸித்திபெற்றிருப்பவர்களுங்கூட அப்படிப்பட்ட வினாக்களுக்கு விடையிறுக்கமாட்டாதவர்கள் பலர் காணப்படுகிறார்கள். திருத்தகப்பனர் வித்யார்த்திகளாயிருப்பவர்களை ஒன்றும் கேட்கமாட்டார். பண்டிதரென்று வருபவர்களைத் திக்கு முக்கலாடும்படி கேள்விகள் கேட்பர். பிச்சியெடுத்துவிடுவர். பல பண்டிதர்கள் அணுகுவதற்கும் அஞ்சி விலகிச் சென்றுவிடுவர்கள். பல பண்டிதர்கள் அவருடைய கேள்விகளைப் புரிந்துகொள்ளவே மாட்டாமல் திகைத்து நிற்பர்கள். சில பண்டிதர்களைப் பரீக்ஷித்துப்பார்த்து 'இவர்களே உண்மையான பண்டிதர்கள்' என்று ப்ரசம்ஸித்து அவர்களிடத்திலே அதிமாத்ரம் கௌரவம் காட்டியிருப்பர். அன்றியும் அவர்களை ஸ்ரீ காதிஸ்வாமியிடம் அழைத்துச் சென்று தகுந்த ஸத்காரமும் செய்விப்பர்.

இவ்வண்ணமாகத் திருத்தகப்பனார் பண்டிதர்களைக் கேள்விகள் கேட்பதும் அவர்களுக்கு மருமங்களைத் தெரிவிப்பதுமான செய்திகள் அடியேனுக்கு ஏழாவது பிராயத்திலிருந்தே நன்கு தெரியும். ஒரு க்ஷணகாலமும் தம்மைவிட்டுப் பிரியாதபடி அடியேனை அநவரதமும் கூடவே வைத்துக்கொண்டிருப்பாராதலால் அவரிடத்தில் பண்டிதர்கள் படும்பாடுகளை யெல்லாம் நன்கறிவேன். இவர்கள் பேசிக்கொள்ளுகிற விஷயம் இன்னதென்று புரிந்து கொள்ளவும் அடியேன் அப்போது சக்தியற்றவன். ஆனாலும் அவ்விஷயங்களை யெல்லாம் ஒரு தடவைக்குப் பல தடவையாக அடியேனும் தெரிந்து கொள்ளும்படி விவரித்துக்காட்டி என்வாயினால் அநுவாதமும் செய்வித்தருள்வர். திருவாய்மொழியில் * பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட * என்றவிடத்து ஈட்டில் ஓர் ஐதிஹ்யமுள்ளது. அதன்படி இந்தப் பாசுரத்தைத்தான் அடியேன் ஸதாஸர்வதா திருத்தகப்பனார் திறத்தில் அநுஸந்தித்திருப்பது. அடியேனுடைய பதினான்காவது பிராயத்திலேயே திருத்தகப்பனார் திருநாட்டுக் கெழுந்தருளினாலும் அப்போதே அவர் அடியேனுடைய க்ரந்த ரசனைகளை விசேஷமாகக் கடாக்ஷித்தருளப்ராப்தமாயிற்று.

அக்காலத்தில் காஞ்சியிலும் காஞ்சீப்ராந்தங்களிலும் யார் பரமபதித்தாலும் திருத்தகப்பனாரே சரமச்லோகமியற்றிக் கொடுப்பது. தாமல் என்னுமக்ரஹாரத்திலிருந்து ஒருவர் அங்கே ஒரு பெரியவர் பரமபதித்ததைச் சொல்லித் திதிவார நக்ஷத்ராதிகளைக் குறித்துக் கொண்டுவந்தார்; அப்போது திருத்தகப்பனார் திருமேனி பாங்கில்லாமல் உள்ளே சயனித்திருந்தபடியால், வந்தவர் அந்த குறிப்புச் சீட்டை என்னிடம் கொடுத்து 'இதை அப்பாவிடம் கொடுத்தால் ச்லோகம் எழுதிக் கொடுப்பர், அதை நீ வாங்கி வைத்திரு; அதை நான் பிறகு வந்து பெற்றுக் கொண்டு போகிறேன்' என்று சொல்லிப் போனார். இதை நான் திருத்தகப்பனாரிடம் தெரிவியாமலே நானே இரண்டு ச்லோகங்களை எழுதி வைத்திருந்து, அந்த தாமல் ஸ்வாமி வந்து கேட்டபோது அதை அவரிடம் கொடுத்து விட்டேன். அவரும் பெற்றுக்கொண்டு போய்விட்டார். இச்செய்தியை பிறகும் நான் திருத்தகப்பனாரிடத்தில் தெரிவித்திலேன். சிலநாள் பொறுத்து அந்த தாமல் ஸ்வாமி சரமச்லோக ஸம்பாவனை யென்று ஒரு ரூபாய் கொணர்ந்து திருத்தகப்பனாரிடம் கொடுக்க வந்தார். இவரோ இதைப்பற்றி எனக் கொன்றும் தெரியாதே யென்கிறார். பிறகு விசாரிக்கப் படுகையில் விஷயம் வெளியாயிற்று. திருத்தகப்பனார் விக்கிவிக்கி யழுகிறார். அருகே யிருந்த பிதாமஹி 'என்ன ரங்கஸாமீ! என்ன ரங்கஸாமீ!' என்று கேட்டுக்கொண்டே அவளும் அழுகிறாள். 'இந்த பையனுடைய துண்டைத் தனத்தைப் பார்த்தாயா' என்று சொல்லி மேன்மேலு மழுகிறாரானந்தம் பொங்கி. இப்போதும் அடியேன் சரம ச்லோக மியற்ற நேரும் போதெல்லாம் அந்த ச்லோகத்தின் முதல்பாதம் நினைவுக்கு வந்தே தீரும்—"அப்தே சார்வரி நாமகே திநமணௌ யாதே துலாம் பாண்டரே" என்று. விக்ருதி வருஷத்திற் பிறந்தவடியேனுக்கு சார்வரி வருடத்தில் என்ன வயதென்பதை யாவருமறிவர். இப்போது இதை அடியேனும் ஆனந்தம் பொங்கியே யெழுதுகின்றேன். அஹம்பாவத்தாலன்று, அபத்தமாகவுமன்று.

சார்வரி வருடத்திற்குப்பிறகு க்ரோதி வருஷத்தின் முடிவில் திருத்தகப்பனார் திருநாடலங்கரித்தார். அந்த இடைக்காலத்தில் தேவப்பெருமாள் பெருந்தேவித் தாயார் விஷயமாகவும் திருவேங்கட முடையான் விஷயமாகவும் ரங்கநாதன் விஷயமாகவும் மற்றும் பல விஷயமாகவும் எத்தனையோ ஸ்துதிகள் எழுதினேன். அந்த காலத்தில் ஸ்ரீகாதி ஸ்வாமி ஸுதர்சன அச்சுக்கூடம் ஆரம்பித்திருந்தபடியால் அவரிடம் கொண்டுபோய்க் காண்பித்து 'இதை அச்சுபோட்டுக் கொடுமே' என்று பயமறியாமல் சொல்லுவேன்; ஸ்வாமியும் வாசித்துப் பார்த்து ஆனந்தப்பட்டு உடனே அச்சிட்டுக் கொடுக்க நியமிப்பர். ஒரு ஸம்வத்ஸரம் தீபாவளியன்று

ஸ்ரீகாதி ஸ்வாமி என்னை வரவழைத்து "பட்டாஸ் வாங்கிக்கொள்ள அப்பா ஏதாவது காசு கொடுத்தாரா? என்ன கொடுத்தார்?" என்று கேட்டார். "நித்யப்படி திருவாராதனத்திற்கே ச்ரமமாக இருக்கையில் எனக்குப் பட்டாஸ் வாங்க என்ன கொடுப்பர்? என்றேன். உடனே ஏதோ கொடுப்பதற்காக எழுந்தார். அப்போது "எனக்குப் பட்டாஸ் வாங்கப் பணம் கொடுப்பது இருக்கட்டும்; நானெழுதுகிற நூல்கள் உமக்குப் பிடித்தால் அச்சுபோட்டுக் கொடுமே" என்றேன். [அப்போது, தேவரீருக்கு என்னவும் ஸ்வாமிக்கு என்னவும் தெரியாது. நீர் என்றும், உமக்கு என்றுமே சொல்லுகிற பேதைமை.] அப்படி அடியேன் விஜ்ஞாபித்ததற்கு ஸ்ரீ ஸ்வாமி போரவுகந்தருளி, பிரஸ்மானேஜரை யழைத்து 'இவன் எது எழுதிக் கொடுத்தாலும் அச்சிட்டுக் கொடு' என்று நியமித்தருளினர். இப்படிப்பட்ட செய்திகள் நூற்றுக்கணக்கில் நினைவுக்கு வருகின்றன. எவ்வளவென்றெழுதுவேன்? இவற்றில் வெறுப்புக்கொள்வார் பலர்; உகப்புக் கொள்வார் மிகச் சிலர், அன்னுருடைய த்ருப்திக்காக ஸ்வல்பமே யெழுதுகிறேன்.

அப்போது ஸ்ரீ ஸ்வாமி ஆரம்பித்திருந்த மஞ்ஜுபாஷிணியிலும் அவற்றை வெளியிடுவித்திருக்கிறார். அக்காலத்தில் எனக்கு மஹாசாந்த: என்று ஒரு மறை பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. அது எதற்காக வென்பதுபற்றி இங்கு விவரிக்க விருப்பமில்லை. அப்போது அந்தப் பெயரினல் தான் என்னுடைய வியாஸங்களெல்லாம் மஞ்ஜுபாஷிணியில் மட்டுமன்றிக்கே ஸம்ஸ்க்ருத சந்த்ரிகா, ஸஹ்ருதவாதிநீ. மித்ர கோஷ்டி, விஜ்ஞாநசிந்தாமணி முதலிய ஸம்ஸ்க்ருத பத்ரிகைகளில் வெளியிடப்பட்டு வந்தன. இவ்விஷய மறிந்த என்னுடைய ஸஹபாடிகளில் இப்போது ஒருவரே யுள்ளார்—ஸ்ரீகாஞ்சீ ஸன்னிதி வீதியில் ஸ்ரீ உவே. சாமா. (ராஜாளி) ராஜகோபாலதாதாசார்ய ரென்பவர். இவர் நாளைக்கும் "மஹாசாந்தரே! ஸௌக்கியமா?" என்றுதான் வினவுவது வழக்கம். இவர் இளமையில் சிலவாண்டுகள் ஸ்ரீகாதிஸ்வாமி திருமாளிகையில் பகலுமிரவும் என்னோடு கூடவே யிருந்தவர். அப்போது ஸ்ரீஸ்வாமி வடதேச ஸஞ்சாரமாக எழுந்தருள நேர்ந்ததால், நாலைந்து மாதங்களுக்கு இதர ஸஹாய மில்லாமல் நானே மஞ்ஜுபாஷிணீ ஸம்பாதகனக இருந்து வரும்படி நியமித்துவிட்டு எழுந்தருளினரென்பதையும் [ருக்ண சய்யாசயாநரான] திருத்தகப்பனர் கேள்விப்பட்டு "இந்த பையன் தீர்க்காயுஸ்ஸாக இராது போலிருக்கிறதே!" என்று தம் திருத்தாயாரிடம் [என் பிதாமஹியிடம்] அடிக்கடி சொல்லிச் சொல்லி யழுவர்.

பதினன்கு பிராயத்துக்குள்ளேயே அடியேன் பத்ய நூல்களும் கத்ய நூல்களும் கத்ய பத்ய நூல்களும் பல பல எழுதியாயிற்று. எந்த பண்டிதரும் அவற்றில் குற்றங் குறைகள் கூற இடமில்லாமல்தானிருக்கும். அடியேனுடைய நாற்பது வயதுக்குப் பிறகுதான் சிலர் அடியேனுடைய க்ருதிகளில் குற்றங் குறைகள் கூறத் தொடங்கினர்கள். அன்னவர்களத்தனை பேரும் உடனுக்குடனே பங்கப்பட்டவர்களே யல்லது ஒருவரும் தம் முயற்சி நிறைவேறப் பெற்றதில்லை. இதற்காக அடியேன் திருத்தகப்பனருடைய விலக்ஷண க்ருபையையும் விஜாதீய க்ருஷியையுமே அடிக்கடி நினைப்பது. மாத்வர்களான ராம சந்த்ராசார், வித்யாசார் என்னுமிருவருடைய அநுக்ரஹமும் அப்ரதிமமானதென்று ஸ்மரிப்பதுண்டு.

புனப்ராந்தத்தில் கொல்ஹாபூர் என்பது ஒரு பெரிய நகரம். அதன் ஸமீபத்திலுள்ள வாயி யென்னும் க்ஷேத்திரத்தில் "அப்பா சர்ம வித்யாவாசஸ்பதி" என்று மஹாராஷ்ட்ர ப்ராஹ்மணரான ஒரு பெரிய வித்வான் இருந்தார். அவருடைய ஸம்ஸ்க்ருத பாண்டித்யமும் ஸம்ஸ்க்ருதவ்யாஸங்களெழுதுகிற சாதுர்யமும் ஆச்சரியமானது. எழுத்தில் வல்லவர் அவரைப் போன்றவர் என்னுடைய புத்திக் கெட்டினவரையில் இன்றளவும் ஒருவரும் ஸ்புரிக்க

செங்கற்பட்டு ஸ்ரீமதுபயவே. ஜி. க்ருஷ்ணமாசார்ய (அட்வகேட்) ஸ்வாமியின் திருத்தாயார் திருவத்யயனத்தன்று கோஷ்டி.

ஸ்ரீவைஷ்ணவ வுலகில் ப்ரக்க்யாத சிஷ்யஸம்பத்தியையுடைய ஸ்ரீமத் உவே. முதலியாண்டான் ஸ்வாமிகள் இருவர்.

வில்லை. அவர் ஸம்ஸ்க்ருத சந்த்ரிகா என்கிற மாஸிகபத்ரிகையை நெடுநாள் நடத்தி வந்தார். அது சிறு புஸ்தகாகாரமானது. அதை நிறுத்தி 'ஸம்ஸ்க்ருத வாதினீ' என்கிற பெயரால் சுதேசமித்திரன் உருவத்தில் நான்கு பக்கங் கொண்டதாய் வாரந்தோறும் நடத்திவந்தார். ஸ்ரீகாதிஸ்வாமி சிஷ்யாநுக்ரஹார்த்தமாகப் புனநகரத்தி லெழுந்தருளியிருக்கையில் இந்த அப்பா சர்மா ஸ்ரீஸ்வாமியை ஸந்தித்து வார்த்தையாடுகையில் "இப்போது உங்களுடைய மஞ்ஜுபாஷிணீ பத்ரிகையில் வெளிவருகிற வியாஸங்கள் யாருடையவை?" என்று கேட்க, ஸ்ரீஸ்வாமி அடியேனைப்பற்றித் தெரிவிக்க, அவர் "என்னுடைய பத்ரிகைக்கும் வியாஸங்களெழுதியனுப்ப ஏற்பாடு செய்ய வேணும்" என்று அபேக்ஷித்தாராம். அதற்கு ஸ்ரீ ஸ்வாமி "அவன் வித்யார்த்தி தசையில் இருப்பவனாதலால் அவனுக்கு அதிக அவகாசம் கிடையாது" என்று ஸாதித்தாராம்; அது கேட்ட அந்த வித்யா வாசஸ்பதி "இந்த வியாஸங்களை வித்யார்த்தியா எழுதுகிறார்? அவருக்கு என்னவயது இருக்கும்?" என்று விசாரித்து பதில் தெரிந்து கொண்டு என்னோடு நேராகப் பத்ரவ்யவஹாரங்கள் செய்யத் தொடங்கினார். எம்மிருவர்க்கும் அபரிமிதமான ஸ்நேஹம் வெகு விரைவில் உண்டாயிற்று. நேராகக் காஞ்சீபுரத்திற்கும் வந்து விட்டார். வெகு விலக்ஷணமான திவ்ய தேஹம். தேசாசாரப்படி வெகு மநோஹரமான பட்டுத்தலைப்பாகை. ஆச்சரியமான ஸம்ஸ்க்ருதப் பேச்சு. அவர் அடுத்த வருடத்தில் ப்ளேக் என்கிற நோயிலகப்பட்டு ஒரு நாழிகையில் கீர்த்தி சேஷராக ஆய்விட்டார். இந்த

துக்கத்தை அடியேன் இன்னமும் மறக்க முடிகிறதில்லை. அடிக்கடி ஸ்மரித்து வருந்துவதுண்டு. அவருடைய நூற்றுக் கணக்கான ப்ரேமலேகங்களைப் பல காலம் வரையில் ரக்ஷித்து வைத்துக் கொண்டிருந்து அடிக்கடி வாசித்து மகிழ்ந்து வந்தேன். அவர் தம்முடைய பத்ரிகைக்கு என்னை ஸஹகாரி ஸம்பாதகனாகக் கொண்டு வாரந்தோறும் வியாஸங்களை வரவழைத்து ப்ரசுரம் செய்வித்து வந்தார். அப்படி ஒரு ஸம்வத்ஸரம் நடைபெற்றது.

மலை நாட்டில் வித்துவக்கோடு திவ்ய தேசத்திற்கு ஸ்டேஷனாகிய பட்டாம்பிக்கு மிக அருகில் பெருமுடியூர் என்பது ஓர் ஊர். அவ்விடத்தில் புன்னச்சேரி நம்பி. நீலகண்ட சர்மா என்பவர் சிறந்த பண்டிதர். ஜ்யோதிஷம் ஆயுர்வேதம் முதலிய கலைகளிலும் வல்லவர். நித்யப்ரஹ்மசாரி. அவர் விஜ்ஞாந சிந்தாமணி யென்கிற ஸம்ஸ்க்ருத பத்ரிகையை நெடுங்காலம் நடத்தி வந்தவர். திருவல்லிக்கேணியிலெழுந்தருளியிருந்த ஸ்ரீ மதுபயவே. அத்தங்கி கவிபூஷண ஸ்வாமிக்கு அவர் பரமாப்தராகையாலே ஒரு ஸமயம் அந்த ஸ்வாமியிடம் வந்திருக்கையில், அந்த ஸ்வாமி அடியேனைப்பற்றி ப்ரஸ்தாவித்து "இன்னாருடைய வியாஸங்களையும் வரவழைத்து உமது பத்ரிகையில் பிரசுரிப்பது நலம்" என்று தெரிவித்தாராம். அதிலிருந்து அவருடைய ஸ்நேஹமும் பிரபலமாக வுண்டாகி அவரது பத்ரிகைக்கும் வியாஸங்களெழுதியனுப்பிக் கொண்டிருக்க நேர்ந்தது. அவருடைய ஸ்நேஹ பலமாகவே மலையாள லிபியிலும் அப்போது பரிசயமேற்பட்டது இரண்டு மூன்று தடவை அவருடைய இருப்பிடத்திற்கும் சென்று வந்தேன். அவரும் கீர்த்தி சேஷராகி வெகுகாலமாய் விட்டது. அவருடைய வித்யார்த்திகளில் கே. வாஸுதேவசர்மா என்பவரோடு அதிக ஸ்நேஹமுண்டாகி விசேஷமான பத்ரவ்யவஹார மேற்பட்டிருந்தது அவர் ஜீவித்திருக்கிறார் திருச்சூரில்.

இந்த ப்ரணாளியில் நினைவுக்கு வருகிற மற்றொரு சோசநீயமான விஷயத்தையும் தெரிவித்து நிற்கிறேன். ஸ்ரீ வில்லிபுத்தூரில் மஹா சிஷ்டாக்ரகண்யராக விளங்கின ஸ்ரீமத். சிறுபுலியூர் பெரியஸ்வாமியைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் இருக்கமாட்டார்கள். அந்த ஸ்வாமியை நேரில் ஸேவித்தவர்களும் இற்றைக்கும் பலருள்ளார்கள். அடியேனும் ஸேவிக்கப் பெற்றவனே. அந்த ஸ்வாமிக்குத் திருக்குமாரர்கள் இருவர். மூத்த திருக்குமாரர் திருத்தகப்பனாரை விட்டுப் பிரியாதவராய் நெருப்பையுமலம்புகிறவர் என்று ப்ரஸித்தராய் வித்வத் வரிஷ்டரா யெழுந்தருளியிருந்தார். இளைய திருக்குமாரர் ஸ்ரீ கொட்டயாசார்யஸ்வாமி யென்று திருநாமம் பூண்டவர் ஸ்ரீ பெரும்பூதூரில் வந்திருந்து வாசித்து ஸாஹித்ய வியாகரணங்களில் உத்தீர்ணராய் ஸம்ஸ்க்ருத லேகனத்தில் நல்ல விரகராய் எழுந்தருளியிருந்தார் அவர் விசக்ஷணா' என்றொரு ஸம்ஸ்கிருத பத்ரிகை நடத்த ஆரம்பித்துச் சில ஸஞ்சிகைகளையே வெளியிட்டார். அவர்க்குக் காஞ்சியில் ஸன்னிதி வீதியில் ச்வசுரக்ருஹமாகையாலே அடிக்கடி இங்கெழுந்தருள நேரும். அவர் என்னைக் கண்டாலும் காணுக்கண்ணிட்டுப் பரத்வங் கொண்டாடியிருந்து வந்தார். அவருடைய விசக்ஷணா பத்திரிகையில சில குற்றங்குறைகளை நிரூபித்து மஞ்ஜுபாஷிணியில் ஒரு பெரிய வியாஸம் வெளியிட்டு விட்டேன்; அதனால் அவர்க்குக் கோபமும் தாபமு முண்டாக வேண்டியிருந்தும் அவை சிறிதுமுண்டாகாமல் பரமப்ரீதியே தோன்றியது பிறகு அவரோடு அதிமாத்ரமான ஸ்நேஹமுண்டாகி அவருடைய பத்ரிகைக்கும் விஷயதானம் செய்வதாக இசைந்து அநேக வியாஸங்களை யெழுதிக் கொடுத்தேன். தைவதுர்விபாகத்தினால் அந்த ஸ்வாமி மிக்க இளமையிலேயே காஞ்சியிலேயே திருநாட்டுக் கெழுந்தருளினார். அன்று ஸ்ரீமந் நாதமுனிகளின் சாத்துமுறை. நம்மாழ்வார் ஸன்னிதிக்குத் தேவப்பெருமா ளெழுந்தருளி கோஷ்டி நடந்து கொண்டிருக்கையில் அங்கிருந்த அடியேனுக்கு சரமஸந்தேசம் சொல்லியனுப்பினார். உடனே ஓடிச் சென்று வார்த்

தையாடிக் கொண்டே யிருக்கையில் 'ஊருக்குப் போய்வருகிறேன்' என்று சொல்லுபவர் போல போய்வருகிறேனென்று சொல்லிக் கொண்டே வைகுண்ட யாத்திரை புறப்பட்டு விட்டார். அந்த ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் நேர்ந்த பத்ரவ்யவஹாரங்களும் அபரிமிதங்கள். இப்போது ஸேவை ஸாதித்தருளா நின்ற [சிறுபுலியூர் ஸ்வாமி யென்று ப்ரஸித்தரான] அவருடைய திருப்பேரனர் அடியேனைக் காணுகிறபோதெல்லாம் "தேவரீர் நம் தாதாவுக்கு எழுதிய ஸம்ஸ்க்ருத கடிதங்களை இன்னமும் திருமாளிகையில் வைத்து அடிக்கடி கண்டு கொண்டிருக்கிறோம்" என்று ஸாதிப்பர். இப்படி நூற்றுக்கணக்கான மஹான்களின் பரிசயம் ஸௌஹார்தம்—பரமக்ருபை அடியேனுக்கு இளமையிலேயே ஏற்பட்ட பாக்யத்தையும் எழுதி முடியாது; அவர்களை யெல்லாம் பெரும்பாலு மிழந்த தௌர்ப்பாக்யத்தையு மெழுதி முடியாது. அப்போதே நாற்றிசையிலும் நல்லாரோடு விளைந்த நட்புச் செல்வம் இன்றளவும் அநுவர்த்தித்தே வருகின்றது. இவையெல்லாம் பதினெட்டு வயதுக்கு உட்பட்ட செய்திகள். ப்ராஸங்கிகமான விவை நிற்க.

மிக்க இளமையில் எழுதியும் அச்சிட்டும போந்த நூல்களில் ஒன்றுகூட ஸம்ரக்ஷிதமாக இல்லாமையினாலே அவை அஸத்கல்பமாய்ப் போயின. அடியேன் க்ருஹஸ்தனாகி ஆங்காங்கு ஸஞ்சரித்து உபந்யாஸங்கள் செய்யத் தலைப்பட்ட பின்பு சில கனதனவான்கள் பல துறைகளிலும் க்ரந்தங்களை யெழுத அடியேனை உத்ஸாஹப்படுத்தியதனாலும், அவற்றைத் தாங்களே அச்சிட்டு வெளியிடுவதாகவும் அங்கீகரித்தபடியாலும் *விமசத்யபடு விச்ருத ஈநாசித வித்ய:* என்று தேசிகன் ஒரு ச்லோகத்தில் குறிப்பிட்ட நாலமாகிய இருபகாம் வயது முதலாக உலகுக்கு உபகாரமாயபடி பலநூல்களைப் பல துறைகளில் எழுதத் தொடங்கினேன். ஒவ்வொரு நாளும் புலஸ்கேப் காகிதத்தில் ஐம்பது ஷீட், எண்பது ஷீட் என்றிப்படி யெழுதுவேன். எழுதுவதில் அடிக்கெழுதுவதென்பது இளமையிலிருந்தே கிடையாது தபால்கட்டு கட்டுகிற ஸமயம் வரை எழுதுவதும், எழுதியான வரையில் உடனே புக்போஸ்டு கட்டி அச்சுக் கூடங்களுக்கு அனுப்புவதும், அனுப்பப்பட்டவை மூன்று நாளே அச்சாகி வருவதுமான வழக்கமே தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது. ஐம்பது பக்கங்களுக்குக் குறைவாக எழுதின நாளே என் நினைவுக்கு வரவில்லை. வெளியூர்களுக்குப் போக நேர்ந்தாலும் ஆங்காங்கும் எனக்கு எழுதுகிற காரியமே யொழிய வேறு கிடையாது. இடையூறின்றி எழுதுவதற்கென்றே வெளியூர் போவது முண்டு. ஸ்வஸ்தானத்திற் காட்டிலும் பரஸ்தலங்களில் தான் அடியேனுக்கு எழுதுகிற ஸௌகரியம் அபரிமிதம். எனது நூல்களில் பாதி பாகத்திற்குமேல் பரஸ்தலங்களில் எழுதப்பட்டவை யென்று சொல்லலாம். ரைலில் போக நேரும்போது ஒரு நிமிஷங்கூட வீணாகாதபடி நூற்றுக்கணக்கான பக்கங்களை யெழுதி முடிப்பேன்.

மூன்று தடவை பதரிகாச்ரம யாத்திரை செய்திருக்கிறேனென்றும், இருபது தடவைகளுக்குமேல் ஹரித்வார ஹ்ருஷீகேச பர்யந்தமான யாத்திரைகள் செய்திருக்கிறேனென்றும் தெரிவித்திருக்கிறேன். வெகு ச்ரமமான அந்த யாத்திரைகளிலும் விச்ராந்தி வேணுமென்று உள்ளம் நினையாது, உடல் விரும்பாது. எங்குத் தங்க நேர்ந்தாலும் பகவான் வெகு ஸௌகரியமான இடத்தையே காட்டிக் கொடுக்க ப்ராப்தமாகுமாதலால் தேவேந்த்ரபவனம் போன்ற அவ்விடங்களில் இருந்து கொண்டு ஊணு முறக்கமும் மறந்து எழுதினவையே பெரும்பாலுமடியேனுடைய நூல்கள். இப்போது இந்தத் தன் சரிதைப்பகுதியும் வெளிப்பயணத்தில்தான் எழுதப்பட்டு வருகிறது.

ரக்ஷிக்கப்படாமற்போன நூல்கள் போக, அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல்கள் [ஹேவிளம்பி ஹூ ஆனிமீ புஷ்யம் 30—6—1957 வரையில்] 420 நானூற்

றிருபதென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் ஆயிரம் பக்கமுள்ள நூல்களுமுண்டு. 400, 500 பக்கமுள்ள நூல்களுமுண்டு; 100, 200 பக்கமுள்ளவையும் பல. பத்தெட்டு, 20, 30 பக்கமுள்ளவையும் சில. பூருவர்களின் திவ்ய க்ரந்தங்களைக் கணக்கிடும்போது ஸ்ரீபாஷ்யமும் ஒரு நூலாகும், ஸ்ரீரங்க கத்யமும் ஒரு நூலாகும். ஸித்தித்ரயமும் ஒரு நூலாகும், சதுச் ச்லோகியும் ஒரு நூலாகும். ஸஹஸ்ரநாம பாஷ்யமும் ஒரு நூலாகும், அஷ்டச்லோகியும் ஒரு நூலாகும். தத்வ முக்தா கலாபமும் ஒரு நூலாகும், ந்யாஸதசகமும் அல்லது வைராக்ய பஞ்சகமும் ஒரு நூலாகும். இந்த நிதர்சனங்களை இங்கு அடியேன் எடுத்துக்காட்டுவது எதற்காக வென்னில், வடமொழியிலும் தென்மொழியிலும் அடியேன் நூற்றுக் கணக்கான பக்கங்களிலும் ஆயிரக்கணக்கான பக்கங்களிலும் எழுதி வெளியிட்டுள்ள பலபல நூல்களை விட்டிட்டு, விஷயாநுரூபமாக அமைந்திருக்கின்ற சில சிறு நூல்களை மட்டும் காட்டிச் சிலர் "இவை அண்ணங்கராசாரியருடைய 420 க்ரந்தங்களிற் சேர்ந்தவை" என்று ஸாதிப்பதுண்டு. அது பரிஹாஸப் பேச்சாகவோ வேறு எவ்வகையான பேச்சாகவோ இருக்கட்டும். பவபூதி மஹாகவி உத்தர ராமசரித நாடகத்தில் "யதா ஸ்த்ரீணும் ததா வாசாம்" என்று சொல்லியிருப்பது ப்ரஸித்தமானதே. இத்தனை நூல்கள் இயற்றவேணுமென்று அடியேன் ஸங்கல்பித்துக்கொண்டதுமில்லை; இத்தனை நூல்கள் எழுதிவிட்டோமென்று டம்பங்கொள்வதுமில்லை. ஆழ்வார் திருவாய்மொழியில் (7-9-9)* திறத்துக்கே துப்பரவாம் திருமால்* என்கிறார். அதற்கு என்ன பொருளென்பதை வியாக்கியானங்கள் கொண்டு அறிவது அப்படிப்பட்ட ஸாமர்த்திய முடையனான பகவான் எலியெலும்பனான இச்சிறுவனைக் கொண்டு செய்வித்துக் கொண்ட—செய்வித்துக் கொள்ளுகின்ற காரியங்கள் அவன் திருவுள்ளத்திற்கு உகப்பானவை யாதலால், மனத்தை நடுநிலையில் வைத்திருக்கின்ற மஹான்கள் பலர் உகந்திருக்கின்றார்கள்.

வேதாந்த தேசிகனுடைய காலத்தில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டு அதனை அவர் யதிராஜஸப்ததியில் ச்லோ. 43ல் அநுவதித்து ஸமாதானமும் கூறியுள்ளார். (அதாவது) *குமதிவிஹித க்ரந்த க்ரந்திப்ரபூத மதாந்தர க்ரஹிளமநஸ: பச்யந்த் வல்பாம் யதீச்வரபாரதீம்*—ஆதிசங்கராசாரியர் அநேக க்ரந்தங்கள் எழுதியிருப்பதையும், ஸ்வாமி யெம்பெருமானார் ஸ்வல்ப ஸங்க்யையான க்ரந்தங்களே அருளிச் செய்திருப்பதையு மெடுத்துக்கொண்டு சிலர் ஏதோ பேசினார்கள் போலும்; அதையநுவதித்து அதற்கு தேசிகன் ஸாதித்த ஸமாதான மென்னவென்றால்—* விகடமுரபிந் வக்ஷ: பீடபரிஷ்கரணேசித: குலகிரிதுலாரோஹே பாவீ கியாநிவ கௌஸ்துப:* என்பது. திராசின் ஒரு தட்டில் குலபர்வதங்களையும் மற்றொரு தட்டில் *குருமாமணிப்பூண் குலாவித் திகழும் திருமார்வு* என்று பெரியாழ்வாரருளிச் செய்தபடி எம்பெருமானுடைய திருமார்புக்கு அணிகலனான ஸ்ரீகௌஸ்துபமணியையும் வைத்து நிறுத்தால் கௌஸ்துபம் குறைவாகவே தோன்றும்; திராசுதட்டில் காணப்படுமதான இந்தக் குறைவினால் கௌஸ்துபமணியின் மஹிமைக்கு என்ன குறையென்றார். இப்படி எம்பெருமானார் போல்வாருடைய திவ்யக்ரந்தங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் ஒரு குறையுமில்லை; அன்னாருடைய கோஷ்டியில் எடுத்துக் கழிக்கவும் தகுதியற்ற அடியேனைப்போன்ற புல்லறிவாளர்களின் சுவடிகள் நூற்றுக்கணக்கிலன்றிக்கே ஆயிரக்கணக்கிலமைந்தாலும் ஒரு நலனுமில்லையென்பது உண்மையுரை. ஆனால் நிகழ்ந்தவற்றைத் தெரிவிக்க வேண்டிய முறையில் இது தெரிவிக்கலாகிறதத்தனை.

ஸம்ஸ்க்ருதம் தமிழ் தெலுங்கு ஹிந்தி ஆகிய இந்நான்கு பாஷைகளிலும் இதுவரை அச்சாகி வெளிவந்திருக்கிற நூல்களை முன்னம் குறிப்பிட்டுவிட்டு, பின்னே அவற்றைப்பற்றின முக்கியமான விவரங்களை வரைந்திடுவேன். எந்த நூல் எந்த லிபியில் அச்சிடப்பட்டிருக்கிறதோ, அந்த நூலை அந்த லிபியிலேயே இதில் அச்சிடுவிக்கின்றேன்.

அடியேனுடைய நூல்கள் பன்னிரண்டு துறைகளில் தோன்றியுள்ளன ;

அவையான :—

1. பூர்வாசார்யர் பெருமையுரைத்தல்.
2. இதிஹாஸபுராணசரித்திரமுரைத்தல்.
3. உபந்யாஸகர்களுக்கு உதவியான உபந்யாஸங்கள் வரைதல்.
4. வேதாந்த விளக்க நூல்களிடுதல்.
5. திவ்யப்ரபந்தங்களுக்கு உரையிடுதல்.
6. ஆசாரியர்களின் தமிழ் நூல்களுக்கு உரையிடுதல்.
7. ரஹஸ்யார்த்தவிளக்க நூல்களிடுதல்
8. ஸ்தோத்ர நூல்களுக்கு உரையிடுதல்.
9. வேத லக்ஷண விசார நூல்களிடுதல்.
10. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க நூல்களிடுதல்.
11. லோகாபிராம நூல்களை யெழுதுதல்.
12. பரபக்ஷ ப்ரதிக்ஷேப நூல்களிடுதல்.

ஆக இப்பன்னிரண்டு துறைகளிலும் அமைந்திருக்கின்ற நமது நூல்கள் நாற்றிசையிலும் பரவியுள்ளன. இவற்றுள் பரபக்ஷப்ரதிக்ஷேப நூல்களைமட்டுமே நமது தேசஸ்தர்கள் பெரும்பான்மையாகப் பார்ப்பது வழக்கம். மற்ற பதினொரு துறைகளில் அமைந்துள்ள நூல்களில் இவர்களுடைய கடாக்ஷ பாதம் விசேஷமாக ஏற்படுவதில்லை. வாதவிவாத நூல்களைமட்டும் பார்த்துவிட்டு "வீணாக இவ்வளவு விவாத நூல்களை எதற்காக எழுதவேண்டும்?" என்று சொல்லுபவர்கள் சிலரோ பலரோவுள்ளார்கள். ஒவ்வொரு விவாத நூலும் தோன்ற வேண்டிய காரணத்தை மேலே க்ரமேண விவரிக்கப் போகிறோமாதலால் அதனால் விவேகிகளுக்குப் பரம த்ருப்தி விளைந்தே தீரும். ஸ்ரீராமபிரானைப்பற்றி யருளிச்செய்கிற நம்மாழ்வார் திருவாய்மொழியில் "வல்லரக்கர் புக்கழுந்தத் தயரதன் பெற்ற மரதகமணித்தடம்" என்றார். கண்ணனைப்பற்றி யருளிச்செய்கிற பெரியாழ்வார் "தேனுகன் பிலம்பன் காளியனென்னுந் தீப்பப் பூடுகளடங்கவுழக்கி" என்றார். இவற்றைக் கொண்டு ஸ்ரீராமனையும் ஸ்ரீக்ருஷ்ணனையும் வீண்வம்புச் சண்டைக்காரர்களென்று யாரும் சொல்லுவதில்லை. தாமாகவே மடிந்து போக வந்து சேருகிற விரோதி வர்க்கங்களைக் களைந்தொழிக்க வேண்டுவது கடமையாகிறதன்றோ.

அடியேனுடைய வாழ்க்கையில் எவ்வெவ்விதமாக எத்தனை விவாதங்கள் நேர்பட்டனவென்பதை அறிந்திருப்பவர்கள் பலருளரெனினும் அவர்கள் கால விப்ரகர்ஷத்தாலே அவற்றை மறந்தேயிருப்பார்கள். அடியேனும் மறந்து போயிருக்கிறேன். வெளியிட்ட நூல்களை யெடுத்துப் பார்க்கும்போதுதான் ஒவ்வொன்றும் நினைவுக்கு வருகின்றது. 21—5—1938-ல் வித்வத்விநோதினியென்று ஒரு புத்தகம் வெளியிட்டிருந்தேன். அதை இன்று எடுத்துப் படித்தபோது உண்மையில் அடியேனுக்கே விஸ்மயமுண்டாயிற்று-இவ்வளவு விசேஷங்களா நடந்திருக்கின்றனவென்று அபூர்வ விஷய விஜ்ஞானத்திற்போல் வியந்தேன். அந்த வித்வத் விநோதினியை இங்கு ஸங்க்ஷேபமாக வெளியிடுகிறேன்-இதைக்கொண்டு பல விஷயங்களை அவரவர்கள் அறிந்து கொள்ளலாமன்றோ ; இதை அவசியம் வாசித்துப் பார்க்கவேணுமென்று நாம் வேண்டுவது மிகையே.

" வித்வத்விநோதிநீ. 21—5—1938 "

(ஸ்ரீ காஞ்சீ. அண்ணங்கராசாரியர்.)

பண்டிதர்களின் பாதகமலங்களில் நீசனேன் நிறையொன்றுமிலேன் செய்யும் விண்ணப்பம். பேரருளாளனுடைய வைகாசித் திருநன்னாளில் அடியேனுக்கும் அடியேனுடைய க்ரந்தங்களுக்கும் விசேஷமான ப்ரஸித்தியை விளைக்கும் விஷயத்தில் அநேக ஸம்வத்ஸரமாகவே ஆவல்கொண்டு வருஷம் தவறாமல் முயற்சி

கள் செய்துவரும் சில மஹான்கள் இவ்வருஷத்தில் ஏதோ உபேக்ஷையாக இருந்து வருகிறார்கள்போலும்! என்று அடியேன் குறையுற்றிருந்தேன். அக்குறைதீர "ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அறிவிப்பு" என்ற மகுடம் புனைந்த வோர் சிறுபத்திரிகை நேற்று (20—5—38) வெளிவரக்கண்டேன். அதில் அடியேனுடைய பெயரையும் அடியேனது சில நூல்களையும் குறிப்பிட்டு எழுதியுள்ள விஷயம் அனைவருமறிந்ததேயாகும். ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி. ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமியும் அவரைச்சார்ந்த சிலரும் வெளியிட்டிருந்த க்ரந்தங்களுக்கு உத்தரமாக அடியேன் இயற்றி வெளியிட்டிருக்கும் க்ரந்தங்களைப்பற்றி 20—5—38 பகல் 2-மணிக்கு நூற்றுக்கால் மண்டபத்தில் பஹிரங்கமான ஸதஸ்ஸு நடத்தி அதில் விசாரம் செய்யப்போகிறதாகவும், அந்த விசார கோஷ்டியில் வாதம்புரிய அடியேனை அழைப்பதாகவும், அடியேன் வராதபக்ஷத்தில் என்னுடையபக்ஷம் தவறு என்று ப்ரஸித்த வித்வான்களைக்கொண்டு ஸித்தாந்தம் செய்துவிடுவதாகவும் அந்த விளம்பரத்தில் வரையப்பட்டுள்ளது. இந்த விளம்பரம் நேற்று பகல் ஒன்றேகால் மணிக்கு அடியேனுக்குக் கிடைத்தது. வாதஸபைக்கு அடியேனையழைப்பவர் இன்னாரென்று தெரியாமையாலும், (அதாவது விளம்பரத்தில் கையெழுத்தே யில்லாமையாலும்) அந்த ஸதஸ்ஸுக்குத் தலைவரும் மத்யஸ்தரும் தெரியாமையாலும் அவற்றை விசதமாகத் தெரிந்துகொள்ளாமல் அங்குச் செல்வது உசிதமன்று என்று கருதிய அடியேன் ஒரு அந்தேவாஸியிடம் கடிதம் எழுதிக் கொடுத்து நூற்றுக்கால்மண்டபத்திற்கு அனுப்பினேன். "வாதத்திற்கு என்னையழைப்பவர் யார்? ஸபைத்தலைவர் யார்? மத்தியஸ்தர்யார்? இம்மூன்றையும் விளங்கவுணர்த்தினால் எந்த ஸமயத்திலும் [சனி ஞாயிறு இரண்டு நாட்கள் தவிர] ஸதஸ்ஸுக்கு வந்து என்னுடைய க்ரந்தங்களின் சாஸ்த்ரீயத்வத்தை நன்கு உபபாதித்து உபந்யஸிக்கத்தடையேகிடையாது" என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தேன். இக்கடிதம் அந்த ஸதஸ்ஸில் பலரறிய வாசிக்கப்பட்டபோது அவ்விடத்தில் விஜயஞ் செய்திருந்த ஸ்ரீ உவே. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிகளால் "இது யுக்தமான பதில்" என்று ஆமோதிக்கப்பட்டதென்று தெரியவந்தது. அய்யா ஸ்ரீ க்ருஷ்ண தாதாசார்யரென்பவரும் மற்றுஞ்சிலரும் அந்த ஸதஸ்ஸில் அநாவச்யகமாகவும் ஆக்ரஹ பரீவாஹமாகவும் தென்னாசார்ய தூஷணோக்திகளைப் பேச அப்போதே அங்கிருந்த சில தேசிகபக்தர்களே ஸதுபதேசங்களினால் அவர்களை வாய் மாளச் செய்ததாகவும் தெரியவந்தது. எந்தவிதமாக ஸதஸ்ஸை நடத்துவது என்பதைப்பற்றி என்ன நிர்ணயித்தார்களென்பது தெரியவரவில்லை. நம்முடைய வர்ணாச்ரமதருமங்களுக்கே மஹத்தான ஹானிவருவதாயிருக்க, அந்தப் பெரிய ஆபத்தைப் போக்கிக்கொள்வதற்காக அனைவரும் ஐகமத்யமாய்ச் சேர்ந்து காரியங்கள் செய்யவேண்டுவது அவசியமாயிருக்கும்போது அதை விட்டுவிட்டு மிகவும் அவசியமற்ற இந்த ஆந்தராளிக விவாதங்களை வளரச்செய்துகொண்டுபோவதில் என்ன பயன்? என்று ஒரு பண்டிதர் எழுந்து உபந்யஸித்ததாகவும், வி. வி. ஸ்ரீ. ஐயங்கார் ஸ்வாமிகளும் அதையே ஆதரித்துப் பேசிவிட்டு, 'இந்த வீணான விவாத ஸதஸ்ஸினால் ஒரு லாபமும் காணபதரிது" என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றதாகவும் தெரியவந்தது. இப்படியிருக்கையில், நேற்றிரவு 9 மணிக்குமேல் "பரவஸ்து ஸ்ரீநிவாஸதாஸன்" என்று கையெழுத்திட்டவொரு கடிதம் என்னிடம் வந்தது; 23—5—38 திங்கட்கிழமை தினம் விஷயங்களை விசாரம் செய்ய பண்டிதர்கள் ஸித்தராயிருக்கிறார்கள். தேவரீர் எழுந்தருளுவதை எழுத்து மூலமாய் உடனே தெரிவிக்கவும்" என்று அதில் உள்ளது.

அதற்காகவே நாடுநகரமும் நன்கறிய இந்த பதில் தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீதேசிகனுடைய அப்ரதிம மஹாக்ருபைக்குப் பாத்திரமான ப்ரதிவாதி பயங்கர ஸந்ததியில் தோன்றியிருக்குமடியேன் அந்த பிருதத்தை ஸம்ரக்ஷித்துக்கொள்ள

நம் தேசிகனுடைய நிரவக்ரஹமான அநுக்ரஹத்தைப் பெற்றிருக்கின்றேன். இவ்வுலகிலுள்ள ஸகல வித்வான்களையும் ஒன்றுசேர்த்து ஸதஸ்ஸு கூட்டினாலும், அடியேன் ஒருவனாய் வந்து விஷயங்களை விஜ்ஞாபித்துக்கொள்ள ஒருபோதும் மயங்கமாட்டேன். இரவு 12-மணிக்குவந்து என்னை யெழுப்பி வாதத்திற்கு விளித்தாலும் விரைந்து எழுந்து வந்து, நானெழுதியுள்ள க்ரந்தங்களின் விஷயங்களில் பிறர் செய்யும் ஆக்ஷேபங்களைத் தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல் சாஸ்த்ரார்த்தச் சொல்மழை பொழிந்து நிரஸிக்க ஸஜ்ஜனாயிருக்கின்றேன்.

ஸமீபகாலத்தில் ஸ்ரீவைஷ்ணவநிதி என்று வெளிவந்துள்ள புத்தகத்தில், இதுவரை அடியேன் இயற்றியுள்ள நூல்களைப்பற்றின விவரணங்களை அனைவரும் காணலாம். இதுவரையில் வடமொழியிலும் தென்மொழியிலும் வியாக்கியான க்ரந்தங்களாகவும் ஸ்வதந்த்ர க்ரந்தங்களாகவும் பரமதநிரஸக்ரந்தங்களாகவும் அடியேன் இயற்றி வெளியிட்டுள்ள புத்தகங்கள் 145. அடியேன் மிகச் சிறிய ஞானத்தனேயாயினும் பரம்பரையாக ஸ்ரீ தேசிகனை ஆராதிக்கும் பாக்ய முடைமையினாலும், ஸ்ரீ தேசிக திவ்யஸூக்திகளை அநவரதம் சிந்தனை செய்து வரும் சேம முடைமையினாலும் உலகமெல்லாம் தலையால் சுமக்க வேண்டும்படியான நூல்களை அடியேன் எழுதி வருகின்றேன். இதில் பொறாமைப் படுமவர்கள் ஸ்ரீ தேசிகனுடைய வைபவத்தில் பொறாமைப்படுமவர்களேயாவர். "வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்னுமாழ்வார் பாசுரம் பலிதமாகி, பகவத்பாகவதக்ருபையினால் அடியேன் இன்னும் சிறிது காலம் இந்நிலவுலகில் வாழப்பெறுவனேல், இன்னமும் பல நூற்றுக்கணக்கான க்ரந்தங்களை லோகோபகாரமாக என்மூலமாய் ஸ்ரீ தேசிகன் வெளியிடுவித்தருள்வாரென்பதில் ஐயுற வேண்டா. ஸ்ரீ தேசிகன் அருளிய ஸகல க்ரந்தங்களுக்கும் ஸுமநோமநோஹரங்களான வியாக்கியானங்களை இதுவரையில் போலவே இனிமேலும் * மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத் துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழுந் தொண்டர் வாழ வெளியிட்டே என்வாழ்நாளைக் கழிப்பேன் என்பதை அனைவரும் அனுதினமும் காணப்பெறலாம். இத்தகைய தொண்டுதன்னில் பொறாமையுறுவார் பலருளரெனினும் * कलकण्ठगणास्वाद्ये कामस्याम्रे निजाङ्कुरे । निम्बवृत्तिभिरुद्गीर्णे न चूतः परितप्यते ॥ * என்று நம் ஸ்வாமி தேசிகன் அருளிய அமுதமொழியே நமக்கு நித்யாநுஸந்தானம். பூர்வாசார்ய திவ்ய க்ரந்தங்களையே பழிப்பார் பலருளர் என்னும்போது நீசனேனுடைய நூல்களைப் பழிப்பார் கிளம்புவதில் என்ன வியப்பு? இது நிற்க. பஹிரங்கஸதஸ்ஸில் வந்து வாதப்போர் புரிய வேணுமென்று நம்மை அழைப்பவர்களின் அபிப்பிராயம் யாது கொல்? அஸ்மதாசார்ய கோஷ்டியில் பரிகணிதரான ஆச்சான்பிள்ளையின் திவ்யஸூக்தியில் பிறர் ஏறிட்ட தூஷணபரிஹாஸங்களைக் களையவேண்டிய கடமை நமக்கு உள்ளதாதலால் அந்தக் கடமையைச் செலுத்தவேண்டி நாம் சில க்ரந்தங்கள் எழுத நேர்ந்தது. உத்தமாச்ரமியான ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமிகள் இவ்விஷயத்தில் க்ரந்தரூபேண வாதப்ரதிவாதங்களை நெடுநாளாக நடத்திவருகின்றார். பிரதிலேகனத்தில் தாம் தளர்ச்சியடைய நேர்ந்துவிடுமாயின் த்ரிதண்ட சிகாயஜ்ஞோபவீதாதிகளைத் துறந்து அத்வைதஸந்நியாஸியாகிவிடுவதாக சபதம் கூறியே அந்த ஸ்வாமி இதில் ப்ரவர்த்தித்திருக்கிறாரென்பதும் க்ரந்தங்களில் ப்ரஸித்தமாகவுள்ளது. ஸமீபகாலத்தில் அந்தஸ்வாமியால் நிஷ்கர்ஷமென்கிறவொரு சிறு க்ரந்தம் வடமொழியில் வெளியிடப்பட்டது. ஆச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தி க்ரந்தஜ்ஞைரபஹாஸ்யந்தான்; மந்தப்ரோக்தந்தான் என்று ஸ்தாபிப்பதற்காக அந்த க்ரந்தம் பிறந்திருக்கிறது. அதன் மேல் ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவ

விமர்சம் என்கிற க்ரந்தம் அடியேனால் எழுதப் பட்டது. இது முழுவதும் ச்லோகரூபம். தமிழுரையுடன் இந்த க்ரந்தம் வைஜயந்தியில் அச்சாகி வெளி வந்துகொண்டிருக்கின்றதென்பதை உலகமறியும். இதுவரையில் 90 சுலோகங்கள் வெளி வந்தாயின. இன்னமும் ஏறக்குறைய 110 சுலோகங்கள் வெளி வரப்போகின்றன. தேவநாகரலிபியிலும் க்ரந்தலிபியிலும் இது வெளிவந்து கொண்டிருக்கின்றது. அனேகமாய், நம் பேரருளாளன் அவப்ருதம் கண்டருள்வதற்குள் இந்த க்ரந்தம் முற்றுப்பெற்று ஒவ்வொரு பண்டிதர்க்கும் கிடைக்கவேபோகிறது. இதுவரையில் இரண்டு ஸஞ்சிகைகளில் வெளிவந்த 90 சுலோகங்கள் பண்டிதர்களின் கைத்தலத்திலேயே உள்ளன. இன்னமும் விரும்புவார்க்கு அளிக்கவும் செய்வோம். இந்த க்ரந்தம் தத்வமுக்தாகலாபத்தோடும் அதிகரணஸாராவளியோடும் தோள்தீண்டியாக விளங்குகின்றதென்பதைப் பல வித்வான்கள் உபச்லோகித்திருக்கின்றார்கள். இதற்கு ஸமாதானக்ரந்தம் வெளியிட ஸ்ரீமத்கோழியாலம் ஸ்வாமி ஸர்வாத்மநா கடமைப்பட்டிருக்கின்றார். அதை நாம் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறோம். சென்ற வருஷத்தில் அந்த ஸ்வாமியின் ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானமாகவே அடியேன் வெளியிட்டிருக்கின்ற ப்ரஹ்மவ்யாப்திபரிஷ்க்ரியா என்னும் க்ரந்தத்திற்கு இதுவரை பதில் வெளிவரவில்லை. அதுபோலவே ப்ரக்ருத ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவ விமர்சக்ரந்தத்திற்கும் பதில் வெளிவர அவகாசம் அணுமாத்திரமுமில்லையென்பதை யறிந்து கொண்ட சிலர்; நேரில் வாதப்போர் என்று வைத்து "ஸங்கே சக்திः கலௌ யுகே." என்பதற்கிணங்க தங்களுடைய ஸமாஜ பாஹுள்யத்தையே பற்றாசாகக்கொண்டு கோலாஹலங்கள் செய்து "அண்ணங்கராசாரியர் வாதத்தில் தோல்வியடைந்துவிட்டார்" என்று ஜயபேரி யடித்துவிடலாமென்கிற நசையினால் இப்போது இவ்வழியில் புகுந்தனர்போலும். என்னே! இவர்களின் ரூதுவல்லமை! நம்முடைய ஸ்ரீபாஷ்யாதி மஹாக்ரந்தங்களைப் பலவாறு தூஷித்து ஸமீபகாலத்தில் இதரமதஸ்தர்கள் சில க்ரந்தங்களை வெளியிட்டிருப்பது ஜகத்ப்ரஸித்தம். அவர்களை வாதப்போருக்கு அழைக்க வல்ல பண்டிதர் ஒருவருமில்லையா? நம் வித்வான்களுக்கு அதுவன்றோ அவச்யமான கைங்கர்யம்.

இந்த ஸ்ரீமத் கோழியாலம்ஸ்வாமியே பரபக்ஷநிராக்ருதி என்கிற ஒரு க்ரந்தத்தைச் சில ஆண்டுகட்குமுன் அடியேனைக்கொண்டு பரிஷ்கரிப்பித்து வெளியிடுவித்தார். மைலாபூர் மஹாமஹோபாத்யாய, கருங்குளம் கிருஷ்ணசாஸ்தரிகளவர்கள் அதற்குமறுப்பாக அதிகரண சதுஷ்டயீ என்கிற க்ரந்தம் அச்சிட்டு சென்ற ஜனவரி மாதத்தில் சென்னையில் கூடின பண்டிதமஹாபரிஷத்தில் ஸ்ரீவைஷ்ணவ வித்வான்களனைவர்க்கும் விநியோகித்தார். ஒவ்வொருவரும் வாங்கி அதை சிரஸாவஹித்தார்களேயல்லது அவரை வாதப்போருக்கழைக்கத் துணிவுகொண்டார் ஒருவருமில்லை. அந்த க்ரந்தத்தில் அவர் எழுதியிருப்பது ஸ்ரீவைஷ்ணவ உலகுக்கே தலைவணக்கம் தருகின்றது. ஸ்ரீகோழியாலம் ஸ்வாமி வீண் கோலாஹலக்காரர் என்பதை அந்த சாஸ்த்ரிகள் நிரூபித்திருக்கிறார்கள்.

* स्वपक्षरक्षणाशक्ताः परपक्षनिराकृतौ । प्रावर्तन्त भवन्तोऽद्य प्रावीण्यं किमतः परम् * என்றிங்ஙனே அவர் எழுதியுள்ளவற்றைக்கண்டு இன்னமும் வாளாகிடக்கின்ற வித்வான்கள் நம்மை வாதப்போருக்கு அழைப்பது எந்த எண்ணத்தினாலென்பதை விவேகிகள் உணரவேணும். கீழே தெரிவித்த எண்ணந்தானே. மடத்தாருக்கும் முனித்ரயத்தாருக்கும் மன்ஸாலகட்டையாருக்கும் விவாத விஷயங்கள் எத்தனையில்லை? க்ரந்தச்சண்டைகளும் ப்ரளயமாகவுண்டே. அந்தந்த வித்வான்களும் திரண்டிருக்கின்றார்களேயித்திருநாளில். இவர்களுக்குள் வாதப்போர் முந்துற முன்னம் நடைபெறலாமே—என்று நாம் பலகால் தெரிவித்திருந்தும் அதைப்பற்றி வாய்

திறவாமல் நம்மையே அழைக்கின்ற இவர்களின் நப்பாசையை நல்லார் நன்கறிய வேணும். எந்த வொழுங்கில் இவர்கள் ஸதஸ்ஸு நடத்தப் போகிறார்கள்? த்வங்காரஹுங்காரத்திலும் சதுர்த்தோபாயப்ரயோகத்திலும் சென்று முடியுமத்தனை. இரண்டு கக்ஷியிலும் பற்றில்லாத வொரு வித்வானை மத்யஸ்தராக அமைத்து அவரது முன்னிலையில் ஒருவரே விஷயம் சொல்லவேணும்—அந்த மத்தியஸ்தர் அதை அநுவதிக்க வேணும்—பிறகு ஒருவர் ப்ரதிவாதம் பண்ணவேணும்—என்றிங்ஙனே நிபந்தனைகள் நியமித்து, வீண் கோலாஹலங்களுக்கு அவகாசம் சிறிதும் ஏற்படாதபடி தக்க பாதுகாப்பு செய்வித்து ஸதஸ்ஸு நடத்தப்படுமாயின் அடியேன் அஹோராத்ரமும் உடனிருந்து வாதம் புரிய என்ன தடை? "வாதத்திற்கு வரத் துணிவில்லாமையினால் இங்ஙனே வ்யாஜோக்திகளைத் தெரிவிக்கின்றார்" என்று இவ்வளவையே இனி ப்ரதிபக்ஷிகள் கோஷிப்பர்கள்; கீழே நாம் தெரிவித்த விஷயங்களெல்லாம் யுக்தமா? அயுக்தமா? என்பதைப்பற்றிச் சிறிதும் ஆராயாமல் யார் எப்படி உத்கோஷித்தாலும் அதில் நமக்கு நோக்கில்லை. உபயவாதிகளும் க்ரந்தங்களில் எழுதிக்கொண்டிருக்கும் விஷயங்களை வாயினால் கோஷிப்பது தவிர ஸதஸ்ஸில் வேறு என்ன ஆகும்? ஒருவர்வாதத்தைத்தள்ளி ஒருவர் வாதத்தையே ஸமஞ்ஜஸமென்று ஸ்தாபிக்க யாருக்கு என்ன அதிகாரம்? அப்படி ஸ்தாபிக்கவல்ல அதிகாரி யாவர்? இந்த நிர்ணயமின்றிக்கே ஸதஸ்ஸு நடத்தி என்ன லாபம். இவர்கள் எதிர்பார்க்கும் லாபம் கனவிலும் ஸித்திக்காது. இவர்கள் விரும்புகிறபடி நாளது திங்கட்கிழமைமுதல் வெள்ளிக்கிழமை வரை ஐந்து நாள் அடியேன் ஸதஸ்ஸுக்கு வருகிறேன். வேறொருவரையும் துணைகொள்ளாமல் அடியேனொருவனே வக்தவ்யவிஷயங்களை நிரூபிக்கிறேன். அவற்றிற்கு ஒருவரே ப்ரதிவாதம் சொல்லட்டும். இப்போது விசாரத்திலிருக்கும் ஸமஸ்யமாநேத்யாதி விஷயம் வ்யாகரண சாஸ்த்ராநுபந்தியாதலால் அந்த சாஸ்த்ரத்தில் தேர்ந்தவொரு தடஸ்தர்முன்னிலையில் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே வாதம் நடத்தவேண்டியது.

திங்கட்கிழமை ஸதஸ்ஸில் முதன் முதலாக நடைபெறவேண்டிய விஷயத்தைப்பற்றி இப்போதே தெரிவிக்கின்றேன். கவனிக்கவேண்டியது. 20—5—38ல் நடந்த கூட்டத்தில் அய்யா கிஷ்ணதாதாசாரியர் அப்ரஸக்தமாக "தென்னாசாரியர்கள் வர்ணாச்ரமவரம்புகளை யழிப்பதற்கென்றே க்ரந்தங்கள் இயற்றினவர்கள் என்றும், ஸ்ரீவசநபூஷணம் ஆசார்யஹ்ருதயம் முதலான க்ரந்தங்களில் இது ஸ்பஷ்டம் என்றும் சொல்லி, 'ம்லேச்சனும் பக்தனானால்..........அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ணாச்ரம வித்யாவ்ருத்தங்களை* இத்யாதி ஆசார்யஹ்ருதய சூர்ணிகைகளைக்கூறிப்பழித்தும் சென்றிருக்கிறார் என்பதும், நமது அந்தேவாஸிகள் அப்போது அவருக்குத் தக்க மறுப்புகள் கூறியிருக்கிறார்களென்பதும் அனைவருமறிந்ததே. ஒரு விசாரமும் தொடங்காமலிருக்கும்பொழுதே இவ்வளவு ஆசார்ய தூஷணைகள் வெளிவந்தால், மேன்மேலும் என்ன ஆகும் என்பதை விவேகிகள் உய்த்துணரலாம். அந்த ஐயா கிருஷ்ணதாதாசாரியர்க்கு அஜ்ஞானமும் அந்யதாஜ்ஞானமும் துராக்ரஹமும் ஸதாசார்யாபசார ப்ராவண்யமும் தவிர வேறு லவலேசமும் கிடையாதென்பதை மூன்று நான்கு க்ரந்தங்களினால் பரக்க நிரூபித்து வெளியிட்டிருக்கிறேன். அவற்றுள் முக்கியமானது ஸத்ஸம்ப்ரதாய பரிசுத்தி என்பது. இந்தக்ரந்தம் ஒவ்வொரு பண்டிதரிடமுமுள்ளது. திருமுற்ற வெளியில் எந்த வேளையிலும் இப்புத்தகம் விலைக்குக் கிடைக்கின்றது. வாயெடுக்கும் போதெல்லாம் தென்னாசார்யர்களையும் அவர்களது திவ்யஸூக்திகளையும் அளவு கடந்தமுறையில் தூஷித்தே போதுபோக்குமிந்த அய்யா க்ருஷ்ணதாதாசாருடைய யோக்யதையே திங்கட்கிழமை ஸதஸ்ஸில் முன்னம் சர்ச்சிக்கப்படவேண்டும். தென்னாசார்யர்களை அஜ்ஞர்களென்று வசை கூறுமிவர் அந்த தென்னாசார்யர்

களின் திவ்ய ஸூக்திகளையே களவு கொண்டு நிரப்பிச் சில க்ரந்தங்களைத் தாம் இயற்றியதாக வெளியிட்டுள்ளார். அடைக்கலப்பத்து வியாக்கியானம் என்பது ஒன்று. இதில் ஏடு ஏடாக தென்னாசார்ய வியாக்கியான பங்க்திகளே தம்முடைய வாக்கியமாகக் கையாளப்பட்டிருக்கின்றன. எந்த எந்த இடங்களிலிருந்து எந்த எந்த பங்க்திகளைக் களவு செய்திருக்கிறாரென்பதை வரிசையாக நான் எடுத்து ஸதஸ்ஸில் காட்டுகிறேன். அந்த புத்தகத்தில் முக்கால் பாகத்திற்குமேல் தென்னாசார்ய ஸ்ரீஸூக்தி மாலிகைகளே என்பதையும், பல இடங்களில் அந்த ஸ்ரீஸூக்திகளின் பொருளைக்கூட இவர் தெரிந்து கொள்ளாமலே கையாண்டிருக்கிறாரென்பதையும் அலகலகாக நிரூபிக்கிறேன். அன்றியும், இந்த க்ருஷ்ணதாதாசார்யர் அதிகமாக நிந்திப்பது மணவாளமாமுனிகளையே. அப்படியிருந்தும் அந்த மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளைக்கொண்டுதான் இவர் தம் சுவடிக்குப் பெருமை ஸம்பாதிக்கப் பார்க்கிறார் இவர் ரகுவீரகத்யத்திற்கு வியாக்கியானமெழுதி நெல்லூரில் தெலுங்குலிபியில் இரண்டொருபாரம் அச்சிட்டிருக்கிறார். ஸ்ரீவசநபூஷணத்தின் முகப்பில் மணவாளமாமுனிகள் அருளிச்செய்திருக்கிற வியாக்கியான ஸ்ரீஸூக்தியை அரும்பதவுரையுட்படக் களவாடி அப்படியே தம் வியாக்கியானத்திற்கு அவதாரிகையாக இட்டிருக்கிறார். இது மறைக்கக்கூடியதன்று. தம்முடைய ஸம்ப்ரதாயத்தில் பல பல க்ரந்தங்கள் இருக்கவும் அவற்றிலிருந்து ஒரு பங்க்திகூட எடுத்துக்கொள்ள இவர் விரும்புகிறதில்லை. ஏன்? அசடுபிசடாயக்கிடக்கின்ற அந்த பங்க்திகளால் தம் சுவடிக்குப் பெருமை ஏற்படமாட்டாதென்பதே காரணம். அதை நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். அஜ்ஞரென்று தம்மால் ஸதா தூஷிக்கப்படுகின்ற ஆசார்யமணிகளின் ஸ்ரீஸூக்திகளையே களவாடிப் பெருமை ஸம்பாதிக்கப் பார்க்குமிவருடைய பிழைப்பு என்னே! என்னே! வெள்காத வீண் பிழைப்பே!. இப்போது இவர் என்ன சொல்லுகிறார்? "ஆமாம், நான் தென்னாசார்யதிவ்யக்ரந்த திவ்யஸூக்தி தஸ்கரன்தான்" என்று ஒப்புக்கொள்கிறாரா? மறு வாய் திறக்கிறாரா? ஒப்புக்கொண்டுவிடுகிறபக்ஷத்தில் அப்படிப்பட்ட மஹநீய மஹாசார்யர்களைத் தாம் தூஷித்துவருவது துராக்ரஹத்தாலத்தனை என்பது தன்னடையே விளங்கிற்றாகும். 'நான் தஸ்கரனல்லேன்' என்று இவர் மறுதலைக்கும் பக்ஷத்தில் திங்கட்கிழமையன்று நூற்றுக்கால் மண்டபத்தில் இதைப்பற்றின விசாரணையே நடைபெறவேண்டியது. இவருடைய தஸ்கரத்வத்தை நான் நிரூபிக்கத் தவறினேனாகில் தோற்றேன் தோற்றேனென்று நிற்கின்றேன். இந்த க்ருஷ்ணதாதாசாரியர் இன்னமும் சில க்ரந்தங்களைத் தாம் எழுதியது போல் சிலர்க்கு வாசித்துக்காட்டிக் கொண்டிருக்கிறார். ஆண்பிள்ளையாகில் அவற்றையும் வெளிக்காட்டட்டும். மணவாளமாமுனிகளின் அமுதமொழிகளே (பாரா பாராவாக) அவற்றில் இல்லாமற்போகுமாயின் அடியனாகின்றேன். எங்கள் ஆசாரியர்களின் அமுதமொழிகளை இவர் எவ்வளவும் கொள்ளை கொள்க. அவ்வாசிரியர்களைத் தூஷிப்பதில் நின்று விலகுவராயின் உய்யலாமே. இதைப்பற்றி இவர் என்ன சொல்லுகிறாரென்பது எழுத்து மூலமாக வெளிவரவேண்டும்.

இவர்களுடைய ஸம்ப்ரதாயத்தில் தென்னாசார்ய தூஷணைகளை நிரப்பி க்ரந்தமெழுதினவர்களில் தலைவரான உ. வே. திருவஹீந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரியார் உலகமெல்லாம் போற்றும் ச்ருதப்ரகாசிகையை,—ஸ்வாமி தேசிகன் ஸம்ரக்ஷித்த ச்ருதப்ரகாசிகையை பெயர் குறித்து, "அதில் தவறுதலான விஷயங்கள் இருக்கின்றன; அவற்றைப் பரிஹரிப்பதற்காகவே தேசிகன் க்ரந்த மெழுதினார்" என்று எழுதி அச்சிட்டிருக்கும் வாசகங்களையும் ஸதஸ்ஸில் வித்வான்கள் நோக்கவேண்டும். இத்தகைய துர்ப்பாஷிதங்களைப்பற்றி ஸதஸ்ஸில் பரிசீலனை செய்யவேண்டுவது அவசியமன்றோ? ஆசார்யஸ்தானம் வஹிக்கின்றவொரு மஹான் இப்படி அருவருக்கத்தக்க ஸதாசார்ய தூஷணைகளை யெழுதிவைத்

திருப்பது பரஸித்தமாகவேயிருந்தும் அதைப்பற்றி ஸதஸ்ஸு கூட்டி விசாரங்கள் நடத்த ஒரு வித்வானுக்கும் ஆவச்யகதை தோன்றவில்லை. பல திவ்ய தேசங்கள் நிரம்பியுள்ள காஞ்சியை திவ்ய தேசமன்றென்று பழித்தும், மதுராந்தகம் போலே காஞ்சியும் ஒரு ஊர் என்று எழுதியுமிருக்கின்ற சேட்லூர் நரஸிம்ஹாசாரியார் சென்ற வருஷத்தில் இத்திருநாளுக்கு வந்திருந்தாரே; அவரை ஒருவரும் வாதப் போருக்கு அழைக்கவில்லையே. இது அவசியமற்றதென்னில், ச்ருதப்ரகாசிகையை தூஷித்திருப்பதைப்பற்றின விசாரங்கூடவா அவசியமற்றது?

அந்த சேட்லூரார் ச்ருதப்ரகாசிகையை ஸ்பஷ்டமாக தூஷித்திருக்கின்றாரென்று நாம் தெரிவிப்பது பொய்யா மெய்யா? என்பதைப்பற்றியும் திங்கட்கிழமை விசாரம் நடைபெறவேண்டும். இதெல்லாம் அவசியமல்லாத விஷயங்களென்னில், எதுவும் அவசியமற்றதேயாகும் "ச்ருதப்ரகாசிகாசார்யரும் தென்னாசார்யரே கிடீர்" என்று திருப்புட்குழிஸ்வாமி ஸாதித்துவந்தபடியால் அவரை தூஷிப்பதும் அவசியந்தான்—என்றல்லவோ இவர்களின் எண்ணம். கடைசியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ப்ராமாணிக பண்டிதஸதஸ்ஸில் விஷய விசாரங்கள் செய்வதில் நமக்குப் பரமகுதூஹலமே. நம்முடைய க்ரந்தங்கள் ஜனிக்கவேண்டிய அவகாசத்தை யளித்தவர்களின் யோக்யதைகளைப்பற்றி மூந்துற முன்னம் பரிசீலனை செய்துவிட்டுப் பிறகு நம்முடைய உத்தர க்ரந்தங்களைப்பற்றி விசாரமெடுத்துக்கொள்வோம் இவ்வருஷம் பேரருளாளன் திருத்தேர் ஒழுங்குபட்டுத் திருநாள் முடிவுபெறுவதற்கு ஒரு மாதத்திற்குமேலாகுமென்று தெரியவருவதால் அவ்வ்ருதம் வரையில் (சனி ஞாயிறு நீங்கலாக) மற்ற நாட்களில் தினப்படியாக ஸதஸ்ஸு நடந்து வரட்டும். ஒவ்வொருநாளும் என்னுடைய ஒவ்வொரு க்ரந்தத்தைப்பற்றியும் விஷய ஸௌஷ்டவத்தை விளக்கியே பேசிவருவேன்.

இங்ஙனம்,
ஸ்ரீவைஷ்ணவதாஸன்,
21—5—38. ப்ர. அண்ணங்கரார்யதாஸன்

இங்ஙனம் வித்வத்விநோதிநீபுஸ்தகம் வெளியிட்ட பிறகு என்னுயிற்றென்பது அன்பர்களுக்குத் தெரியவேணுமே. இத் தன்சரிதையில் (இரண்டாம் பகுதியில்) பக்கம் 138ல் எழுதியிருப்பதை மீண்டும் நினைப்பூட்டுகிறேன். அதாவது—

"கீழச்சேரி பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியார் என்றொருவர் இருந்தார்; இவர் காலஞ்சென்று பத்தெட்டு வருஷமாகிறது. அவர் தேவப்பெருமாளுடைய பெரிய உத்ஸவங்கள்தோறும் ஸ்ரீரங்கத்திலிருந்தோ சென்னையிலிருந்தோ காஞ்சிக்கு வருவர். வருகிறபோதெல்லாம் என் விஷயமான தூஷணைகளை நிரப்பித் துண்டுப் பிரசுரமச்சிட்டுக் கட்டுக்கட்டாகக் கட்டிக்கொண்டு வந்து தன் கையினாலேயே விநியோகிப்பர் பாவம்! 'இத்தோடு அண்ணங்கராசாரியார் மடிந்து விட்டார்' என்றும் சொல்லிக்கொண்டிருப்பர். மூன்றாவது நாளிலேயே விசதமான பதில் புத்தகத்தைப் பெற்றுக்கொண்டு தலைமறைவாய்ப் போய்விடுவர்." என்று எழுதியிருக்கிறேன். மேலே உதாஹரித்த வித்வத்விநோதினியில் 'பரவஸ்து ஸ்ரீநிவாஸ தாஸன்" என்று குறிப்பிடப் பெற்றுள்ளவர் அவரேதான். அடியேனுடைய அனேக க்ரந்தங்கள் தோன்றுவதற்கும், அவை பிரபலப்ரசாரமடைவதற்கும் முக்கியமான ஹேதுபூதர் அந்த கீழச்சேரி பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யரேயாவர். அவர் ஒரு விஷயமுமறியாதவர். கேவலம் மதாபிமாநி; ஆக்ரஹி. இதற்காகவே அவரிடத்தில் சில லௌகிகர்கள் பக்திவைத்துக் காசு கொடுத்துக்கொண்டுமிருந்தார்கள். பரமஸாதுக்களாய் ஏகாந்த சீலர்களாய் ஆசார்யாபசாரவைதேசிகர்களாயுமிருந்த வடகலைஸம்பிரதாய வித்வான்களை வலியப்பிடித்திழுத்து "அண்ணங்கராசார்யருடைய நூல்களுக்குக் கண்டனமெழுதுங்கள்" என்று தூண்டிவிட்டு அவர்களெல்லோரும் உடனுக்குடனே அடியேனிடமிருந்து விபுல விமலப்ரத்யாக்

யான நூல்களைப் பெற்று விஷண்ணராகும்படி செய்வதொன்றையே நித்ய கால க்ஷேபமாகக் கொண்டிருந்தவர் இந்த கீழச்சேரி ஸ்ரீநிவாஸாசாரியர். ஆனால் கள்ளங்கவடு அறியாதவர். இவ்வளவு ஸந்தர்ப்பத்திலும் அடிக்கடி அடியே னுடைய க்ருஹத்திற்குவருவர்; ஸாக்ருதப்ரணாமம் செய்கிறேனென்று சொல்லிக் கொண்டு தொழுது தொழுது எழுவர். ப்ரதிப்ரணாமம் செய்தால், கூடவேகூடா தென்று சொல்லித் தடுத்துவிடுவர். அப்படிப்பட்ட ஸமயங்களில் "இவ்வளவு ப்ராவண்யங் கொண்டிருக்கிற நீர் இதற்கு மாறாக காரியங்கள் செய்து கொண்டு வருகிறீரே; இதையும் அதையும் பார்ப்பவர்கள் பரிஹஸிப்பர்களே; இரண்டத் தொன்றை விட்டு விட்டாலன்றோ நலமாகும்" என்று சொல்லுவேன். 'இது வொரு ஸ்வரூபம், அதுவொரு ஸ்வரூபம்; இவற்றுக்குப் பரஸ்பரவிரோதமென்ன?'' என்று சொல்லிக் கொண்டேபோவர்.

மேலே குறித்த வித்வத்விநோதிநி வெளியான பின்பு அவரை நான் காணப்பெறவில்லையென்று ஞாபகம். அவ்வளவோடு அவருடைய கோலா ஹலங்கள் சாந்தமாயின. கீர்த்தி மூர்த்தியான மஹாவிவேகியான வி. வி. ஸ்ரீநி வாஸய்யங்கார் ஸ்வாமிகள் மேலே விவரித்த வித்வத்விநோதிநியைப் பலகால் வாசிக்கச் சொல்லித் திருச்செவிசாத்தி "அண்ணங்கராசாரியர் செல்லுகிற மார்க் கம் அநவத்யமானது. 'பல குள்ளநரிகள் ஒன்று கூடினாலும் சிங்கத்தை ஒன்றும் செய்யமாட்டா' வென்பது உங்களுக்கு ஞாபகமிருக்கத்தக்கது" என்று சொல்லி, வீண் வம்பு தண்டாக்கள் செய்ய நினைத்தவர்களை உத்ஸாரணம் செய்துவிட்டார். அவருடைய அந்தரங்கத்தில் ஒரு துக்கம் மாத்திரம் அபரிஹார்யமாக இருந்தது. அதாவது, அய்யா க்ருஷ்ணதாதாசாரியர் இரவும் பகலும் தென்னாசார்யர்களை தூஷித்துக் கொண்டிருந்து, தத்ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலுள்ள ஸ்ரீஸூக்தி பங்க்தி களைக் களவாடி யெழுதியே தம் பெயரால் அடைக்கலப்பத்து வியாக்கியானம் முதலிய ஒன்றிரண்டு புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டாரென்பதை நன்கு ஆராய்ந்து உணர்ந்ததனாலுண்டான துக்கமே அது.

இனிமேல் அடியேனுடைய நூல்களை யெல்லாம் வரிசையாக வெளியிடுகிறேன். இதில் ஒரு விஜ்ஞாபனம் முக்கியமாக நோக்கத் தக்கது. பத்து பன்னிரண்டு அல்லது 20, 22 நூல்கள் அடியே னாலெழுதப்பட்டிருந்தும் அந்தேவாஸிகளின் பெயராலோ ஆப்தர் களின் பெயராலோ வெளியிடப்பட்டவையுண்டு. இது ஸமயாநு குணமாகவும் ஔசித்யாநுகுணமாகவும் ஆவச்யகதாநுகுணமாக வும் தழுவப்பட்டவொரு முறையாகும். இதற்கு ஸ்ரீமத் பரமஹம்ஸ கோழியாலம் ஸ்வாமிதாம் 'மார்க்கதர்சீ மஹர்ஷி:' என்னத் தகுந்தவர். எங்ஙனேயென்னில், அந்த ஸ்வாமி தாம் வெளியிட் டருளின 'ஸமஸ்யமாந ஸூக்த்யர்த்த நிஷ்கர்ஷம்' என்கிற வொருநூலின் ரக்ஷாபத்ரத்தில் "एतद्ग्रन्थकर्तृभिः कृताः कारिताश्च ग्रन्थाः" என்று மகுடமிட்டு தம்முடைய க்ரந்தங்களோடுகூட பிறர் பெய ரால் வெளிவந்த சில க்ரந்தங்களையும் குறிப்பிட்டுள்ளார். இதனால் பிறரை ஏவி க்ரந்தங்களை யெழுதச் செய்வதும் தாமே யென்பது புலனாயிற்று. தாமெழுதிய நூலையே காரண விசேஷாத் பிறர் பெயரால் வெளியிட்டாரென்பது தேறிற்று. மஹான்கள் காட்டிய இந்தவழக்கத்தை அடியேன்போல்வாரும்தழுவுவது குறறமற்றதே யென்று கொள்க. தோழிபாசுரம், தாய்பாசுரம் போலவும் கொள்க.

நான்கு பாஷைகளில் அடியேனியற்றி வெளியிட்டுள்ள நூல்களுள்

ஸம்ஸ்க்ருத பாஷையிலமைந்த நூல்களிவை 155

1. श्रीकाञ्चीहस्त्यद्रिवैभवम्
2. धर्मवादः
3. बालकोपदेशमालिका
4. सुप्रभातदिव्यप्रबन्धप्रतिकृतिः
5. मुनिवाहनसूरिसूक्तिपद्यमाला
6. [illegible]
7. ध्रुवचरितम्
8. कुचेलोपाख्यानम्
9. 𑌉𑌪𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑌞𑍍𑌜𑌰𑍀
10. सावित्रीपातिव्रत्यम्
11. [illegible]
12. गोदास्तुति विवृतिः
13. ब्रह्मन्यासपरिष्क्रिया
14. [illegible]
15. [illegible]
16. [illegible]
17. [illegible]
18. जगद्गुरुवैभवम्
19. जगद्गुरुपञ्चामृतम्
20. [illegible]
21. सभाभुजङ्गीसर्वस्वम्
22. श्रीशैलेशाष्टकव्याख्या
23. श्रीमद्वेङ्कटनाथगुरुस्तोत्रम्
24. औत्तरदिव्यदेशदिव्यप्रबन्धावलिः
25. वैदिकलौकिकरञ्जनदशकम्
26. उपाख्यानरत्नमाला
27. लक्ष्मीतत्त्वविनिर्णयः (यद्वा) श्रीतत्त्वशोधनम्
28. मदिरेक्षणार्थतत्त्वम्
29. पाठशोधनपरीक्षा
30. రసిక రసాయనమ్
31. कृतकृत्यप्रतीक्षणम्
32. श्रीरामावतारः
33. गोपालपञ्चाशत्
34. [illegible]
35. रोदसीतत्त्वबोधिनी
36. श्रीरामायणदण्डकः
37. नन्दनन्दनवैभवचूर्णिका
38. भगवद्रामानुजसहस्रनामस्तुतिः
39. श्रीमत्कृष्णगुरुस्तुतिः
40. रत्नपरीक्षा
41. उद्यानशुष्कवचोविमर्शः
42. सहस्रनामभाष्यप्रभावः
43. युष्मत्सूक्तिसौरभम्
44. क्षेत्रतीर्थयात्रादर्शः
45. साधुपाठसौवादवम्
46. श्रीमत्परकालमहायोगिवैभवम्
47. द्राविडाम्नायरसास्वादः
48. वर्णाश्रमधर्मरक्षा
49. गोष्ठीनाथशतकम्
50. हयग्रीवशतकम्
51. गरुडविंशतिः
52. कमलास्तुतिः
53. आदिवराहत्रिंशत्
54. कलिवैरिदशकम्
55. लोकाचार्यस्तोत्रम्
56. श्रीमद्वरवरमुनिवैभवस्तोत्रम्

57. श्रीशैलेशदयापात्रस्तोत्रम्
58. अद्भुतवार्ताप्रकाशः
59. श्रीरामरत्नवरत्नम्
60. श्रीलोकाचार्यकर्णामृतम्
61. श्रीवरवरमुनीन्द्रविजयमाला
62. श्रीराममद्रकर्णामृतम्
63. श्रीगोपालभक्तामृतम्
64. श्रीगोविन्दगीतामृतम्
65. श्रीवरवरमुनिस्तोत्ररसायनम्
66. श्रीशैलेशदयापात्रमङ्गलाशासनम्
67. श्रीमद्वरवरमुनिकर्णामृतम्
68. श्रीवरवरमुनिनक्षत्रमाला
69. श्रीवरवरमुनिवारमाला
70. श्रीवरवरमुनितिथिमाला
71. श्रीवरवरमुनिपक्षमाला
72. श्रीवरवरमुनिमासमाला
73. श्रीवरवरमुन्यृतुमाला
74. श्रीवरवरमुन्ययनमाला
75. श्रीवरवरमुनिसंवत्सरमाला
76. श्रीवरवरमुनिसहस्रनामस्तोत्रम्
77. श्रीवरवरमुन्यष्टोत्तरशतनामस्तोत्रम
78. श्रीवरवरमुनिमङ्गलाशासनस्तोत्रम
79. श्रीवरवरमुनिदण्डकस्तुतिः
80. रहस्यत्रयश्लोकमालिका
81. तत्त्वत्रयश्लोकमालिका
82. श्रीवचनभूषणश्लोकमालिका
83. वेदान्तसर्वस्वम्
84. संप्रदायसिद्धाञ्जनम्
85. अप्रमेयपद्यार्थशतदूषणी
86. भगवद्रामानुजहृदयम्
87. मङ्गलाशासनपद्यमाला
88. भट्टनाथसूक्तशतकम्
89. श्रीगोदाव्रतप्रबन्धपद्यावली
90. श्रीगोदासूक्तपद्यावली
91. श्रीकुलशेखरसूक्तपद्यावली
92. श्रीमालाप्रबन्धपद्यावली
93. मधुरकविसूक्तपद्यावली
94. बृहत्सूक्तपद्यावली
95. तिरुवाशिरियप्रबन्धदण्डकः
96. श्रीपरकालरथप्रबन्धदण्डकः
97. लघुपाळीप्रबन्धप्रतिकृतिः
98. गुरुपाळीप्रबन्धप्रतिकृतिः
99. मङ्गलाशासनप्रबन्धव्याख्या
100. श्रीभट्टनाथसूक्तव्याख्या
101. श्रीगोदाव्रतप्रबन्धव्याख्या
102. श्रीगोदासूक्तव्याख्या
103. श्रीकुलशेखरसूक्तव्याख्या
104. श्रीभक्तिसारदिव्यसूक्तिव्याख्या
105. श्रीमालाप्रबन्धव्याख्या
106. सुप्रभातदिव्यप्रबन्धव्याख्या
107. मुनिवाहनसूरिसूक्तिव्याख्या
108. मधुरकविसूक्तव्याख्या
109. श्रीपरकालसूरिबृहत्सूक्तव्याख्या
110. तिरुवाशिरियप्रबन्धव्याख्या
111. श्रीपरकालरथप्रबन्धव्याख्या
112. लघुपाळीप्रबन्धव्याख्या
113. गुरुपाळीप्रबन्धव्याख्या
114. सहस्रगीतिव्याख्या
115. प्रपन्नगायत्रीव्याख्या
116. गोदासूक्तसर्वस्वम्

117. अभिनवदयाशतकम्
118. अभिनवदयाशतकतात्पर्यसारः
119. मदिरेक्षणार्थमाधुर्यम्
120. సహృదయ సౌభాగ్యమ్
121. വാഭ്കാലഹൃദ്യാവതാരതത്വം
122. परीक्षाविमर्शपरामर्शः
123. परिष्कारपरामर्शः
124. रक्षाविलोचनभावप्रकाशिका
125. ഖജഖ്യജാന്ത്രോക്തിഖണ്ഡഷവഖിജഢഃ
126. गोदार्थोक्षावमर्दविमर्शः
127. देशिकावतारवत्सरचिन्ता
128. सप्ततिरत्नतत्त्वम्
129. वैभवप्रकाशिकाविमर्शः
130. रामानुजदयापात्रपद्यचरित्रम्
131. पात्रपद्यचरित्रप्रतिष्ठा
132. సత్సంప్రదాయ సహస్రాంశుః
133. సత్సంప్రదాయ సహస్రాంశువ్యాఖ్యా
134. पदपाठपरित्राणम्
135. शतभूषणीवज्रकुठारः
136. नवीनचरित्रग्रन्थविमर्शः
137. रहस्यत्रयार्थसर्वस्वम्
138. श्रीवचनभूषणदिव्यार्थदीपिका
139. रहस्यत्रयसारसारप्रदीपिका
140. समस्यापूर्तिशतकम्
141. चित्रप्रश्नोत्तरमाला
142. चरमश्लोकावली
143. अपूर्वरामायणम्
144. दिव्यपुरुषपरीक्षा
145. महिलापुरकेशवसुप्रभातम्
146. ,, केशवकर्णामृतम्
147. ,, केशवमङ्गलम्
148. चेन्नकेशवसुप्रभातम्
149. वात्सल्यार्थप्रकाशिका
150. वात्सल्यार्थप्रकाशिकाविवृतिः
151. दिव्यसूरिवैभवम्
152. पूर्वाचार्यवैभवम्
153. तर्कशास्त्रसर्वस्वम्
154. यात्रास्तोत्रामृतम्
155. सदर्थसमुच्चयः

ஹிந்தீபாஷையிலமைந்த நூல்கள் 8.

156. आल्वारवैभव
157. दिव्यदेशसूची
158. तिरुप्पल्लाण्डुव्याख्या
159. यतिराजविंशतिव्याख्या
160. श्रीवैष्णवसुधा
161. श्रीपरकालसूरिसूक्तसारसंग्रह
162. मधुरोपन्यासमाला
163. पूर्वाचार्यप्रभाव

தெலுங்கு பாஷையிலமைந்த நூல்கள் 41.

164 శ్రీ విష్ణుసహస్రనామ టీక
165 ముకుందమాల టీక
166 స్తోత్రరత్న టీక
167 గద్యత్రయ టీక
168 అతిమానుష స్తవ టీక
169 శ్రీ వైకుణ్ఠ స్తవ టీక
170 హయగ్రీవస్తోత్ర టీక
171 శ్రీ స్తుతియనే కనకధారా స్తవ టీక
172 యతిరాజవింశతి టీక

173 ధాటీపంచక టీక
174 శ్రీరంగనాథస్తోత్రటీక
175 క్షమాషోడశి టీక
176 శ్రీ వేంకటేశస్తోత్ర టీక
177 నరసింహాష్టక టీక
178 దేవరాజాష్టక టీక
179 దేవరాజమంగళ టీక
180 తిరుమంత్రార్థ టీక
181 ఆచార్య హృదయప్రథమ ప్రకరణ టీక
182 భగవత్కథామృతము
183 ఆళ్వార్ల వైభవము
184 దివ్యదేశ దర్పణము
185 విశేషార్థ రత్నమాల
186 సత్సంప్రదాయసారనిధి
187 పూర్వాచార్య ప్రభావము
188 కంచి తేవప్పెరుమాళ్ళ వైభవము
189 వేదాంతదేశిక వైభవము
190 తిరుప్పల్లాండు టీక
191 పెరియాళ్వార్ తిరుమొఴి టీక
192 నాచ్చియార్ తిరుమొఴి టీక
193 తిరుప్పావ టీక
194 నిత్యానుసంధాన టీక
195 అపూర్వ రామాయణము
196 ఉత్తర దివ్యదేశ దివ్యప్రబంధావళి
197 బదరియాత్రా ప్రదీపము
198 శ్రీ భాష్యార్థసార సంగ్రహము
199 మలయాళ దివ్యదేశయాత్ర
200 శరణాగతి సామ్రాజ్యము
201 ఉపన్యాస రత్నావళీ
202 జగదాచార్యసూక్తి సుధానిధి
203 నాచ్చియార్ తిరుమొళి సారము
204 పెరియాళ్వార్ తిరుమొఴి సారము
శ్రీ రామానుజ పత్రిక (ఇది మాస పత్రిక.)

தமிழ் நூற் பகுதி [தமிழ் நூல்கள் மொத்தம் 266]

செந்தமிழ்நூற்களும், மணிப்ரவாளநூற்களும்

இப் பகுதியிலடங்கும்.

கீழே பக்கம் 281-ல் குறித்த பன்னிரண்டு துறைகளினடைவே காண்மின்.

1. பூர்வாசார்ய ப்ரபாவ நூற்கள்

205. கூரத்தாழ்வான் வைபவம்
206. ஸ்ரீராமாநுஜர் வைபவம்
207. அனந்தாழ்வான் வைபவம்
208. ஆழ்வார்கள் வைபவம்
209. வேதாந்த தேசிகன் வைபவம்
210. மணவாளமாமுனிகள் வைபவம்
211. அண்ணா வைபவம்
212. பூர்வாசார்ய ப்ரபாவம்
213. புரட்டாசித் திருவோண மலர்
214. ஐப்பசித் திருமூல மலர்
215. வாதிபீகர விஜயம்
216. அண்ணாவின் கால நிர்ணயம்.

2. இதிஹாஸ புராண சரித்திர நூல்கள்

217. அத்திகிரி வைபவம்
218. திவ்யப்ரபந்த பகவத்கதாம்ருதம்
219. ஸ்ரீ ராமாயண ஸாரம்
220. வான்மீகி ராமாயண வசனம்
221. அபூர்வ ராமாயணம்
222. நரஸிம்ஹாவதார சரிதம்.

3. உபந்யாஸ நூல்கள்

223. ஸ்ரீ ராமாநுஜ பூஷணம்
224. பக்தாம்ருதம்
225. பன்னிருதிங்களநுபவம்
226. அறுபத்திரண்டு உபந்யாஸ மாலை
227. எம்பெருமானாரறுபத்திரண்டு
228. சாரீரகமீமாம்ஸை யறுபத்திரண்டு
229. பகவத்கீதை யறுபத்திரண்டு
230. அறுபத்துமூன்று உபந்யாஸமாலை
231. சக்ரவர்த்தி திருமகனறுபத்து நான்கு
232. அறுபத்துநான்கு நன்மொழிகள்
233. அறுபத்துநான்குநல்வார்த்தைகள்
234. அறுபத்துநான்கு ஆராய்ச்சி மாலை
235. விசதவாக் சிகாமணி வாக் வைசத்யம்
236. அங்கண்மா ஞாலத்தமுது
237. அர்ச்சாவதார வைபவம்.

4. வேதாந்தார்த்த விளக்க நூல்கள்.

238. ஸ்ரீ பாஷ்ய ஸாராம்ருதம்
239. த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வம்
240. விசேஷார்த்த ரத்நநிதி
241. ஸ்வஸ்வரூப நிரூபணம்
242. பரஸ்வரூப நிரூபணம்
243. ஸஹஸ்ரநாம பாஷ்யப் பெருமை
244. விஷ்ணு ஸஹஸ்ரநாம வுரை.
245. மாமுனிவன் மேற்கோள் விளக்கு
246. அத்ருஷ்டார்த்த ஸர்வஸ்வம்
247. தென்னாசார்ய ஸம்ப்ரதாயம்
248. ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதி
249. ஸ்வாபதேசார்த்த ஸாகரம்
250. விபவாவதார சோக தத்வம்
251. நரஸிம்ஹாவதார தத்வம்
252. தடஸ்தபரிசீலநம்
253. க்ருஷ்ணாவதார கதாரஹஸ்யம்

5. திவ்யப்ரபந்தார்த்த விளக்க நூல்கள்.

254. திருப்பல்லாண்டுதிவ்யார்த்ததீபிகை
255. பெரியாழ்வார் திருமொழி „
256. பெரியாழ்வார் திருமொழி பொழிப்புரை
257. திருப்பாவை திவ்யார்த்த தீபிகை
258. „ மற்றொரு வகையான உரை
259. „ ஸ்வாபதேசவுரை
260. „ விசேஷார்த்தவுரை
261. நாச்சியார் திருமொழி திவ்யார்த்த தீபிகை
262. „ சிறிது சுருக்கமான தெளிவுரை
263. பெருமாள் திருமொழி திவ்யார்த்த தீபிகை
264. „ சிறிது சுருக்கமான தெளிவுரை
265. திருச்சந்த விருத்த திவ்யார்த்த தீபிகை
266. „ சிறிது சுருக்கமான தெளிவுரை
267 திருமாலை திவ்யார்த்த தீபிகை
268. திருப்பள்ளி யெழுச்சி „
269. அமலனாதிபிரான் „
270. கண்ணிநுண் சிறுத்தாம்பு „
271. பெரிய திருமொழியாயிரம் தீபிகை
272. திருக்குறுந் தாண்டகம் „
273. திருநெடுந் தாண்டகம் „
274. முதல் திருவந்தாதி „
275. இரண்டாந் திருவந்தாதி „
276. மூன்றாந் திருவந்தாதி „
277. நான்முகன் திருவந்தாதி „
278. திருவிருத்தம் „
279. திருவாசிரியம் „
280 பெரிய திருவந்தாதி „
281. திருவெழு கூற்றிருக்கை „
282. சிறிய திருமடல் „
283. பெரிய திருமடல் „

284. திருவாய்மொழியாயிரம் ,,
285. இராமாநுச நூற்றந்தாதி ,,
286. ,, சுருக்கமான தெளிவுரை
287. நித்தியாநுஸந்தான வுரை
288. திவ்யப்ரபந்த ஸாரத்திரட்டு
289. திவ்யப்ரபந்த ஸாராம்ருதம்
290. திவ்யப்ரபந்தக் கண்ணாடி
291. திவ்யப்ரபந்தத் திருநாமமாலை
292. அருளிச் செயலாராய்ச்சி
293. அருளிச்செயல் பாகவதம்
294. ஆழ்வார்களுகந்த இராமன்
295. ஆழ்வார்களுகந்த கண்ணன்

6. ஆசாரியர்களின் தமிழ் நூல்களுக்கு உரைகள்.

296. உபதேச ரத்தினமாலையுரை
297. திருவாய்மொழி நூற்றந்தாதியுரை
298. ஆர்த்திப் பிரபந்தவுரை
299. ஞானஸாரவுரை
300. ப்ரமேயஸாரவுரை
301. ஸப்தகாதையுரை
302. அடைக்கலப்பத்து உரை
303. அத்திகிரிமாகாத்மியவுரை
304. திருச்சின்னமாலையுரை
305. பிள்ளையந்தாதியுரை
306. (தனி) கம்பரின்பக் கவித்திரட்டு

7. ரஹஸ்யார்த்த விளக்க நூல்கள்.

307. முமுக்ஷுப்படிஸாரம்
308. ஸ்ரீவசநபூஷணஸாரம்
309. தத்வத்ரயஸாரம்
310. ஆசார்யஹ்ருதயஸாரம்
311. ,, சிறிது சுருக்கமானது
312. ஆசார்யஹ்ருதயப் பதவுரை

8. ஸ்தோத்ரம் முதலிய ஸம்ஸ்க்ருத நூல்களுக்கு உரைகள்.

313. அகிலபுவநஜந்ம வியாக்கியானம்
314. த்வம்மேஹம்மே வியாக்கியானம்
315. முகுந்தமாலை ,,
316. ஸ்தோத்ரரத்னம் ,,
317. சதுச்ச்லோகி வியாக்கியானம்
318. தேவராஜாஷ்டகம் ,,
319. சரணாகதிகத்யம் ,,
320. ஸ்ரீரங்ககத்யம் ,,
321. ஸ்ரீவைகுண்டகத்யம் ,,
322. ஸ்ரீவைகுண்டஸ்தவம் ,,
323. அதிமாநுஷஸ்தவம் ,,
324. ஸுந்தரபாஹுஸ்தவம் ,,
325 வரதராஜஸ்தவம் - அதிகவிரிவான வியாக்கியானம்
326. ,, அதிக விரிவில்லாத வியாக்கியானம்
327. ஸ்ரீஸ்தவ வியாக்கியானம்
328. ஸுதர்சந சதகம் ,,
329. ஸ்ரீரங்கராஜஸ்தவம் - இரண்டு சதகமும் ,,
330. ஸ்ரீ குணரத்ந கோசம் ,,
331. அஷ்ட ச்லோகி ,,
332. யதிராஜவிம்சதி ,,
333. தாடீபஞ்சகம் ,,
334. ராமாநுஜ சதுச்ச்லோகி ,,
335. ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம் ,,
336. க்ஷமா ஷோடசி ,,
337. ஸ்ரீ வேங்கடேச ஸ்தோத்ரம் ,,
338. தேவராஜமங்களம் ,,
339. நரஸிம்ஹாஷ்டகம் ,,
340. காஞ்சீக்ஷேத்ரஸங்க்ரஹஸ்துதி ,,
341. தேவராஜ பஞ்சகம் ,,
342. பராங்குசாஷ்டகம் ,,
343. வரவரமுநி சதகம் ,,
344. வரவரமுநி பூர்வதிநசர்யா ,,
345. ,, உத்தரதிநசர்யா ,,
346. நக்ஷத்ரமாலிகா ,,
347. த்ரமிடோபநிஷத்ஸங்கதி ,,

(தேசிக ஸ்தோத்ர வியாக்கியானங்கள்)

348. ஹயக்ரீவ ஸ்தோத்ர வியாக்கியானம்
349. கோதாஸ்துதி ,,
350. பரமார்த்த ஸ்துதி ,,
351. வைராக்ய பஞ்சகம் ,,
352. ந்யாஸ தசகம் ,,

353. பகவத் த்யாந ஸோபாநம் ,,
354. தசாவதார ஸ்தோத்ரம் ,,
355. அ!ரீதி ஸ்தவம் ,,
356. கோபாலவிம்சதி ,,
357. யதிராஜ ஸப்ததி ,,
358. ரகுவீரகத்யம் ,,
359. த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி ,,
360. த்ரமிடோப நிஷத் ஸாரம் ,,

(ஸ்வகீய ஸம்ஸ்க்ருத நூல்களினுரைகள்)

361. கலிவைரி தசகம் ,,
362. ஸ்ரீமத் க்ருஷ்ணகுருஸ்துதி ,,
363. லோகாசார்ய ஸ்தோத்ரம் ,,
364. வரவரமுநி தண்டகம் ,,
365. வரவரமுநி வைபவ ஸ்தோத்ரம் ,,
366. ஸ்ரீசைலேச தயாபாத்ர ஸ்தோத்ரம் ,,
367. ஸ்ரீமத் வரவரமுநி ஸ்தோத்ர ரஸாயநம் ,,
368. ஸ்ரீசைலேச தயாபாத்ர மங்களா சாஸநம் ,,
369. ஸ்ரீமத் வரவரமுநி கர்ணாம்ருதம்
370. ஸ்ரீமத் வரவரமுநி நக்ஷத்ர மாலா ,,
371. ஸ்ரீமத் வேங்கடநாத குரு ஸ்தோத்ரம் ,,
372. வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகை ,,
373. யாத்ரா ஸ்தோத்ராம்ருதம் ,,
374. ஸபாபுஜங்கீஸர்வஸ்வம் ,,

9. வேதலக்ஷண விசார நூல்கள்.

375. ஸர்வஸ்வஸம்ரக்ஷணீ
376. சாஸ்த்ரஜ்ஞாந சாண பலகம்
377. ஸர்வஸ்வரக்ஷா
378. அஸூயா பரமௌஷதம்
379. வித்வத் வைதிக பூஷணம்
380. வைதிக வித்வதாபரணம்.

10. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க நூல்கள்.

11. லோகாபிராம நூல்கள். 12. பரபக்ஷப்ரதி க்ஷேப நூல்கள்.

(அகராதி யடைவு.)

381. அத்புத சக்தி
382. அத்யமேபத்யார்த்த தத்வம்
383. ,, தத்வப்ரதிஷ்டா
384. ,, தத்வப்ரதிஷ்டா விஜய த்வஜம்
385. ,, விஜயத்வஜ வைஜயந்தீ
386. அர்ச்சாவதாரத் திருமண் காப்பு
387. ஆசார்ய ஹ்ருதய பாடபரீக்ஷாரம்
388. ஆச்சான்பிள்ளை யஷ்டாத்யாயி
389. ஆச்சான்பிள்ளையாறுரஹஸ்யம்
390. ஆராய்ச்சி மணிமாலை
391. உத்யாந ஸம்வாதம்
392. உத்யாந சிக்ஷா
393. உபதேச ரஸாயனம்
394. ஐகமத்யரஸம்
395. ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலை
396. க்ஷேத்ர தீர்த்தயாத்திரை விளக்கு
397. சதபூஷணீ வஜ்ரகுடார ஸாரம்
398. சாஸ்த்ரார்த்த சந்த்ரிகை
399. சிரோமணி சிரோபூஷா
400. சிரோமணி சேகரம்
401. சுகஸாரண மதமர்த்தநம்
402 செந்தமிழாராய்ச்சி
403. சேஷாவதாரச் சிறப்பு
404. சேட்லூரார் மாயமயக்கம்
405. சேட்லூரார் நூலாராய்ச்சி
406. ச்ருத ப்ரகாசிகாரக்ஷா
407. ஸ்ரீ வைஷ்ணவ மஹாநிதி
408. ஸ்ரீமட ஸௌபாக்யம்
409. ஸ்ரீ ராமாநுஜன்
410. ஜகதாசார்ய ஸூக்தி ஸுதாநிதி
411. தத்வநிவேதநம்
412. தத்வஹிதோபதேசம்
413. தத்வார்த்த பூஷணம்
414. தானே யெழுதிய தன்சரிதை

415. திருப்புட்குழிஸ்வாமி வைபவ பரிஷ்காரம்
416. ,, பரிசிஷ்டம்
417. திவ்யஸூரிசரித காலநிர்ணயம்
418. தீண்டாமை தொலையாமை
419. துவரைப்பிரான் திருவருள்
420. தேசிகப் பிரபந்தவுரை யாராய்ச்சி
421. தேசிகப்ரபாவ பரிஷ்காரம்
422. தேசிகஸூக்தி ஜயத்வஜமாலா
423. தேசிகஸூக்தி பரிமளம்
424. தேசிகஸூக்தி ஸித்தாஞ்ஜநம்
425. தேவப்பெருமாள் ஸன்னிதி விமர்சம்
426. நப்பின்னையவதார ரஹஸ்யம்
427. நமஸ்காரதத்வம்
428. நமஸ்காரதத்வ விஜயத்வஜம்
429. நற்பொருள் விளக்கம்
430. நான் கண்ட நல்லது
431. ந்ருஸிம்ஹ ப்ரியாநிரீக்ஷணம்
432. ந்ருஸிம்ஹ ப்ரியாஸமீக்ஷணம்
433. பக்தன் மூவிதமாராய்ச்சி
434. பகவச்சாஸ்த்ரதத்வம்
435. பரதுக்கதுக்கித்வ பரமார்த்தரக்ஷா
436. பாதுகாஸஹஸ்ர வுரையாராய்ச்சி
437. பாத்ரதத்வஜயத்வஜம்
438. பாத்ரதத்வ பராமார்த்தம்
439. பிழைதிருத்தப் பேரின்பம்
440. பெரியாழ்வார் திருமகள்
441. பேரருளாளன் பாடல் விளக்கம்
442. ப்ரணவாதிகாரதத்வம்
443. ப்ரமாணத் திரட்டாராய்ச்சி
444. மடவித்வத் விபூஷணம்
445. மாமுனிவனருள் விளக்கு
446. யுஷ்மத்ஸூக்தி ஸௌரபம்
447. ரக்ஷாவிமர்சசிக்ஷா
448. ராமாநுஜ தயாபாத்ர சரித்ரம்
449. ராமாநுஜ தயாபாத்ர தத்வம்
450. வம்பவிழ் கோதை தத்துவம்
451. வரதன் ஸன்னிதி வரலாறு
452. விதவாவபநவித்வம்ஸநம்
453. வித்வத்விநோதிநி
454. வ்யாமோஹ ப்ரசமௌஷதம்
455. வாத்ஸல்யார்த்த விவரணம்
456. வாத்ஸல்யார்த்த விஜயத்வஜம்
457. விஷ்ணு கோவில்களும் விசேஷ தர்ம பரிபாலனமும்
458. ஸதாசார்ய ஸூக்திரக்ஷா
459. ஸத்புருஷ ஸமாராதநம்
460. ஸத்ஸம்ப்ரதாய பரித்ராணம்
461. ஸத்ஸம்ப்ரதாய பரிசுத்தி
462. ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கரன்
463. ஸதுபதேசசிக்ஷா
464. ஸத்ய நாராயணாஸ்த்ரம்
465. ஸத்ய நாராயணாஸ்த்ரஸத்ய ப்ரதாபம்
466. ஸத்ய வாதிஸமாச்வாஸநம்
467. ஸாது ஸாத்விக ஸம்வாதம்
468 ஸௌஜந்ய ஸௌரபம்
469. ஸ்தோத்ரவ்யாக்யாந சோதநம்
470. ஸ்வக்ரந்த சோதநம்.

ஸ்வகீய க்ரந்தஸூசீ முற்றிற்று

ஒரு குறிப்பு

—(o)—

நான்கு பாஷைகளிலும் மொத்தம் நமது நூல்கள் 420 என்று முன்னம் தெரிவித்தோம். எல்லா நூல்களையும் தேடி யெடுத்து ஆராய்ந்து எழுதுகையில் மொத்தம் 470 என்று தேறியது. இவற்றில் அந்தேவாஸிகள் பெயராலும் ஆப்தர்கள் பெயராலும் வெளியிட்டவை 50 போக 420 என்றதும் ஸரியே.

ஸம்ஸ்க்ருத நூல்களைப்பற்றிய விவரணங்கள்

1. ஸ்ரீ காஞ்சீஹஸ்த்யத்ரி வைபவம்: முதற்பதிப்பு க்ரந்தலிபியிலும், இரண்டாம் பதிப்பு தேவநாகரலிபியிலுமான கத்யப்ரபந்தம். ஹஸ்திகிரி மாஹாத்மிய மென்கிற புராணத்தையநுஸரித்து காஞ்சீஹஸ்திகிரியின் வைபவம், தேவப் பெருமாளவதரித்த வரலாறு, தேவப்பெருமாளை நான்கு யுகங்களில் நால்வர் ஆராதித்த வரலாறு முதலியன மிக விரிவாக எழுதப்பட்டுள்ளது. ஸம்ஸ் க்ருதவ்யுத்பத்தி பெறவிரும்புவார்க்கு மிகவுபயோகமான நூல்.

2. தர்மவாதம்: தர்மார்த்த காம மோக்ஷங்களென்கிற சதுர்வித புருஷார்த்தங் களில் தர்மத்தைப்பற்றி விரிவான உபந்யாஸம். தேவநாகரலிபி. இந்நூல் தோன்றினதையும் அச்சிடப்பெற்றதையும்பற்றி இத் தன்சரிதையில் இரண்டாம் பகுதியில் (பக்கம் 82, 83-ல்) விவரிக்கப்பட்டிருக்கிறது.

3. பாலகோபதேசமாலிகா: ஸம்ஸ்க்ருத வித்யார்த்திகளுக்கு வ்யுத்பத்தி ஸாதகமாக எழுதப்பட்டது. தேவநாகரலிபி. கீழ் இரண்டாவது லக்கங்கொண்ட நூலோடு சேர்த்து 1908-ஆம் வருஷத்தில் அச்சிடப் பெற்றுள்ளது.

4. ஸுப்ரபாத திவ்யப்ரபந்த ப்ரதிக்ருதி: தொண்டரடிப் பொடியாழ்வாரருளிச்செய்த திருப்பள்ளி யெழுச்சிக்கு ச்லோகரூபமான மொழிபெயர்ப்பு. இருபது ச்லோகம். இதுவும் கீழ் 2, 3 லக்கங்கொண்ட நூல்களோடு சேர்த்து அச் சிடப்பெற்றுள்ளது. ஒன்றுசேர்ந்த இம்மூன்று நூல்களும் பாம்பே, கேமராஜ் ஸ்ரீ வேங்கடேச்வர பிரெஸ்ஸில் கிடைப்பன.

5. முநிவாஹந ஸூக்திஸுக்தி பத்யமாலா: திருப்பாணாழ்வாரருளிச்செய்த அமலனாதி பிரானுக்கு ச்லோகரூபமான நேர் மொழிபெயர்ப்பு.

6. திவ்யப்ரபந்த வைபவவிவேக: திவ்யப்ரபந்தங்கள் வேதமுமல்ல, வேதத்திற்காட் டில் உயர்ந்தவையுமல்லவென்று ஒரு ஸமயம் தேவப்பெருமாள் ஸன்னிதி நூற்றுக்கால் மண்டபத்தில் சிலர் செய்த பூர்வபக்ஷத்தை நிரஸித்து பிரமாணோபபத்திகளுடன் ஸித்தாந்த ஸ்தாபநம் செய்த சாஸ்த்ரார்த்த நூலிது. க்ரந்தலிபி. இந்நூலைப்பற்றி இத் தன்சரிதையில் பக்கம் 32-ல் விரிவுகாண்க.

7. த்ருவ சரிதம்: உத்தாநபாத புத்ரனான த்ருவனுடைய சரித்திரம். கத்ய ப்ரபந்தம். தேவநாகரலிபி.

8. குசேலோபாக்யானம்: குசேல முனிவன் சரித்திரத்தை ஐம்பது பக்கங்களுக்குக் குறையாமல் விரித்தெழுத வேணுமென்று ஒரு பெரியவர் நியமிக்க அப் படியே யெழுதினது இது. நியமித்தவர் கீர்த்தி மூர்த்தியான திருக்கண்ண புரம் பட்டப்பாஸ்வாமி. ஸம்ஸ்க்ருத கத்யகாவ்யம். தேவநாகரலிபி.

9. உபந்யாஸ ரத்நமாலா: ஐந்து பெரிய விஷயங்களைப்பற்றின ஐந்து உபந்யாஸங் கள். திருக்குடந்தையில் வாழும் உவே. சின்னமு. ர. ஸ்ரீநிவாஸபாட்டரா சார்யரின் வேண்டுகோளுக்கிணங்கி எழுதப்பட்டவிது அவர் தம்மாலேயே (அப்போதிருந்த தம்முடைய) கோமளாம்பா முத்ராலயத்தில் க்ரந்தலிபியி லச்சிடப்பட்டது. இத் தன்சரிதையில் பக்கம் 47-ல் வரி 11-ல் ப்ரஸ்தாவிக்கப் பட்டிருக்கும் நபர் இந்த ஸ்ரீநிவாஸபாட்டரே.

10. ஸாவித்ரீ பாதிவ்ரத்யம்: புராண ப்ரஸித்தையான ஸாவித்ரியின் கற்பின் கனத்தைப்பற்றி * மாலதீமாதவீ ஸம்வாதமென்று வைத்து ஸம்பாஷணை நூலாக அமைக்கப்பட்டது. தேவநாகரலிபி. இதன் ரசநாசைலி பல பண்டிதர்களால் கொண்டாடப்பட்டது.

11. பரிபந்தி பஞ்சபங்கீ: வடமொழியில் பரிபந்தியென்கிற சொல் வைதிகபதமேயல்லது லௌகிகபதமல்லவென்றும், ஆனாலும் லௌகிக ப்ரயோகங்களிலும் இது காணப்பட்டு வருகிறதென்றும் ஒரு க்ரந்தத்தில் நாம் ப்ராஸங்கிகமாக எழுதியிருந்ததை திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜில் வியாகரணோபாத்யாயராக விருந்து இப்போது காஞ்சீபுரியில் விச்ரமித்து வருகின்ற ஸ்ரீ உவே. வித்வான். வேளிய நல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்யர் மறுத்தெழுத, அதன் மேல் கண்டனமாக வெழுதப்பட்டவிது ஐந்து பங்கங்கள் கொண்டபடியால் பஞ்சபங்கியென்று பெயர்பெற்றது. இதில் பெரும்பாலும் வியாகரண சாஸ்த்ரார்த்த விசாரம். க்ரந்தலிபி. * छन्दसि परिपन्थिपरिपणौ पर्यवस्थातरि * என்றார் பாணினிமஹர்ஷி. * लोके तु परिपन्थिशब्दो न न्याय्यः * என்றார் ஸித்தாந்த கௌமுதீகாரர். * भाषायां परिपन्थिशब्दस्य असाधुः प्रयोगः * என்றார் பதமஞ்ஜரீகாரர். இங்ஙனே பலபல ஆதாரங்களைக் காட்டியும், ப்ரதிபக்ஷி தமக்கு ஸாதகமாகக் காட்டிய விஷயங்களை நன்கு கண்டித்தும் வையாகரணர்கள் மெச்சும்படியாக எழுதப்பட்ட நூலிது.

12. கோதாஸ்துதி வியாக்கியானம்: தேசிகனருளிச்செய்த கோதாஸ்துதிக்கு ஸ்ரீ உவே. மாம்பலம் வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் நியமனத்தினாலெழுதப்பட்ட ஸம்ஸ்க்ருத வியாக்கியானம். தேவநாகரலிபி. மணிப்ரவாள வியாக்கியானமும் தனிப்பட எழுதப்பட்டுள்ளது. அதைப்பற்றி மேலே காண்க.

13. ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா: பகவானுடைய வ்யாப்தியைப்பற்றி 122 ச்லோகங்களும் அவற்றுக்கு விவரணரூபமான கத்யங்களுங்கொண்ட நூலிது. இதைப்பற்றிச் சிறிது விளக்கமாகத் தெரிவிக்க வேண்டியதாகிறது. அடியேன் திருச்சந்த விருத்தத்திற்கு திவ்யார்த்த தீபிகையுரை எழுதும்போது அதில் 1949- ஆம் வருஷத்திய இரண்டாம் பதிப்பில் (பக்கம் 34-ல்) (பா. 5) * நின்றியங்கு மொன்றலாவுருக்கடோறு மாவியாய், ஒன்றியுள் கலந்து நின்ற * என்றவிடத்தில் எம்பெருமான் வஸ்துதோறும் பரிஸமாப்ய வர்த்திக்கும்படியைப்பற்றிப் பூருவாசாரியர்களின் ஸித்தாந்தத்தை விவரித்தெழுத நேர்ந்தது. அடியேனுக்குப் பரமாப்தரான (வைகுண்டவாஸி) ஸ்ரீ உவே. தாயார் ஸன்னிதி வரதாசார்யர்ஸ்வாமி அடியேனுடைய நூல்களை ஒன்றுவிடாமல் கடாக்ஷித்து ரஸித்துவருகிற முறையில் அவ்விடத்தையும் கடாக்ஷித்து அதை ஸ்ரீமத்பரமஹம்ஸ கோழியாலம் ஸ்வாமி ஸன்னிதியிலே வாசித்துக்காட்டிச் சர்ச்சை செய்தார். அப்போது அந்த ஸ்வாமி இது தேசிகஸூக்தி விருத்தமென்று ஸாதித்து பூர்ணத்வவிசார: என்றொரு மிகச்சிறிய நூலை வடமொழியிலெழுதி க்ரந்தலிபியில் அச்சிட்டு வெளியிட்டார். உடனே அந்த ஸ்வாமியின் திருவுள்ளத்தைத் தெளிவிக்கவேண்டி அடியேனெழுதிய நூலிது. இதற்கு அந்த ஸ்வாமி ஒன்றும் மறுப்பெழுதாமல் வாளா விருந்திட்டார் பிறகு சிலவாண்டுகள் கழித்து ஸ்ரீ. D. T. தாதாசார்யரென்பவர் ஸர்வசக்தி யென்றொரு சிறு சுவடியெழுதி வெளியிட்டார். உடனே அத்புத சக்தி யென்னும் நூலை நாமெழுதி அந்த தாதாசார்யருடைய அஸாது வாதங்களை நிரஸித்தோம். அதைப்பற்றிமேலே

தமிழ் நூற்பகுதியில்காண்க. அதன் பிறகு பல வாண்டுகள் கழித்து ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமிதாமே சில எழுதினதும் அவையும் ப்ரத்யாக்க்யாத மானதும் மேலே விளங்கும். இத் தன்சரிதைநூலில் கீழே (பக்கம் 178-ல்) ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ள ஸ்ரீமத் பரமஹம்ஸ. இளங்காடு ஸ்வாமி இந்த ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா க்ரந்தத்தைப் பலகால் கடாக்ஷித்து "அதி கரண ஸாராவளியோடும் தத்வ முக்தாகலாபத்தோடும் சேர்த்துப் பரி கணிக்கத்தக்கது இந்த நூல்" என்று தம்முடைய சிஷ்ய கோஷ்டியில் ஸாதித்து, உடனே "இந்த க்ரந்தத்தில் விசாரிக்கப்பட்டுள்ள விஷயங்களில் நம்மவர்களுக்கு விஸம்வாத மிருக்கலாம். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வரவில்லை. சாஸ்த்ரார்த்தங்களை யடக்கி ச்லோக ரசனை அமைத் திருப்பது தத்வமுக்தாகலாபாதிகளுக்குப் பின் வாங்கினதன்று என்பது என்னபிப்ராயம்" என்று ஸாதித்தார்.

14. வேதாத்யயந ஸர்வஸ்வம்: இது வேதலக்ஷண விசார பரமாக வடமொழியிலெழுதி க்ரந்தலிபியில் அச்சிடப்பட்டது. இதைப்பற்றிக் கீழே இரண்டாம் பகுதி யில் (பக்கம் 128 முதல்) மிக விரிவாக விளக்கப்பட்டிருப்பது காண்க. கீர்த்தி மூர்த்திகளான ஸ்ரீமத் கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி, லக்ஷ்மீ புரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி போல்வாரான வித்வத்வரிஷ்டர்கள் அடி யேனுடைய நிரூபணப்ரணாளி நிரவத்யமானதென்று ப்ரஸித்தப்படுத்தின பின்பு பிறருடைய வீண்வாத கோலாஹலம் உபசாந்தமாயிற்றென்று இதுவும் கீழே 134 முதலிய பக்கங்களில் விசதீகரிக்கப்பட்டுள்ளது.

15. ஸர்வ ஸ்வகவசம்: கீழே (லக்கம் 14) வேதாத்யயநஸர்வஸ்வத்தை தூஷிக்க வந்தவர்களில் ஒருவரான ஸ்ரீ உவே. அழிசூர் திருமலாசார்ய ரென்பவ ருடைய துர்வாதங்களைக் களைந்த நூலிது. க்ரந்த லிபியிலச்சிடப்பட்டது. மேலே ப்ரஸ்தாவித்த திருமலாசார்யருக்கு ஆசார்யரான ஸ்ரீ உவே, வித் வான். (வைகுண்டவாஸி) ராமாநுஜாசார்ய ஸ்வாமி சிலகாலம் ஸ்வக்ராம மான அழிசூரைவிட்டு உத்தரமேரூரில் வாஸஞ் செய்துவந்தார். அப்போது அவ்விடத்தில் அடியேனுக்குப் பரமாப்தராயிருந்த ஸ்ரீ உவே. ஸலக்ஷண கன பாடி. ராகவாசார்ய ஸ்வாமி இந்த நூலை அச்சிடுமுன் பெற்று அந்த ஸ்வாமி யிடம் வாசித்துக் காட்ட, அந்த ராமாநுஜாசார்ய ஸ்வாமி இந்நூலுக்கு "சித்ராபர்வ சபேடிகா" என்று மறுபெயர் சாத்தினர். அதுவும் இந் நூலின் முடிவில் நிபந்திக்கப்பட்டிருக்கிறது. 'சித்ராபர்வசபேடிகா' என்றால் இன்னது பொருளென்றே அப்போது விளங்காமலிருந்தது. அந்த திருமலாசாரியர்க்கு சித்ராபர்வமென்று வழக்குப் பெயராமென்பது பிறகு தெரியவந்தது. [இங்கே ஒரு தத்துவம் மறுபடியும் ஞாபகப்படுத்தப்படு கிறது; நம்முடைய நூல்களில் சில நூல்கள்மட்டும் [7, 8-க்கு உட்பட்டவை] நமது அந்தேவாஸிகளின் பெயராலும் பரமாப்த ஸஹ்ருதய ஸஹ்ருந் மணிகளின் பெயராலும் வெளிவந்தவையுண்டு. ஸமய விசேஷங்களில் நம் முடைய வேத வேதாந்த வைஜயந்தீ பாடசாலையில் ஆவச்யகதாநுகுண மாக நாம் நடத்தும் உபந்யாஸங்களைக் கொண்டே அவை லிகிதப்படுத்தப் பட்டனவாதல் அறிக. இங்ஙனே தமிழிலும் சில சிலவுண்டு. இவ்வகுப்பில் சேர்ந்தது இந்த ஸர்வஸ்வகவச நூல்.]

16. பரமார்த்த பரித்ராணம்: கீழ் 11, 15 லக்கங்களில் தெரிவித்தபடி வேதலக்ஷண விசாரச் சண்டை முற்றியிருந்த காலத்தில் மன்னார் குடியிலும் அக்ரஹார வேத பாடசாலையில் இதைப்பற்றிப் பரிஷத்து நடந்தபோது (வைகுண்ட

வாஸியான) ஸ்ரீ உவே. வித்வான் வண்ணுத்தங்கரை ஸீமாச்சார் ஸ்வாமி யென்பவர் திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜிலிருந்து வந்து பரிஷத்தில் கலந்துகொண்டார். அந்த ஸ்வாமிக்கு வேதாத்யயநகந்தமுமில்லாமலிருந்த படியாலே சர்ச்சிக்கப்படுகிற விஷயங்களின் ஸ்வரூபத்தைப் புரிந்துகொள்ள அவர் மிகவும் ச்ரமப்பட்டார். அப்போது அந்த ஸ்வாமிக்கு நல்தெளிவு உண்டாவதற்காக நூற்றுக் கணக்கான வைதிக ஸ்தலங்களை யெடுத்து அவ்வவ்விடங்களுக்குரிய உபபத்திகளை விளக்கி சாஸ்த்ரார்த்தமயமாக எழுதப்பட்ட வடமொழி நூலிது. க்ரந்தலிபியிலச்சிடப்பட்டது. அக்காலத்தில் தோன்றிய வேதலக்ஷண விவாதக்ருதிகளில் இந்த பரமார்த்த பரித்ராண நூல்தான் கடைசியாக நின்றது. இவ்வளவோடு பிறருடைய வம்புகோலாஹலங்கள் அடங்கியொழிந்தன. மதுரையில் ஹரி ஸமய திவாகரத்தவர் அச்சிட்டு வெளியிட்ட "கும்பகோண பிசாசோச்சாடந மந்த்ரமஹோததியின் முதல் தரங்கம்" என்று ப்ரஸித்தமான நூலினுலும் நிச்சேஷமாயொழிந்தது.

17. ரஸிக புதாஞ்ஜநம்: கீழ் 14, 15, 16 லக்கங்களில் விவரித்தபடி வேதலக்ஷண விசாரப் போரில் பங்கமடைந்த திருக்குடந்தை வாஸிகள் சிலர், அவ்வூரில் ப்ரஸித்த வித்வானுகவும் அடியேனுககுப் பரமாப்தராகவுமிருந்த மஹாமஹோபாத்யாய ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி யென்பவரை புத்திபேதம் செய்து கிளப்பிவிட்டு அவரால் "அண்ணங்கராசார்யஸ்ய அபசப்த நாநி" என்று நாலைந்து காகிதங்கொண்ட ஒரு துண்டுப் பிரசுரம் வெளிவரும்படி செய்தார்கள். அதில் விஷயமென்னவென்றுல், கீழே நெ-9 உபந்யாஸ ரத்நமாலையில் அபசப்த ப்ரயோகங்களிருப்பதாக நிரூபணம். அதற்கு ப்ரத்யக்ஷரகண்டனமாக வெளியிடப்பட்டது இந்த ரஸிகபுதரஞ்ஜநமென்கிற நூல். இது க்ரந்தலிபி. இதன் பிறகு அந்த ஸ்வாமி மர்மப்ரகாசமென்றொரு நூல வெளியிட்டு அதற்கும் உபதேச ரசாயநமென்கிற பதில் பெற்று உபசாந்தராகி அடியேனோடு புராதந ஸௌஹார்தத்தை அநுவர்த்திக்கச் செய்து கொண்டாரென்பது ஜகத்ப்ரஸித்தம். அவருடைய திருவுருவப்படம் இச்சரிதையில் பக்கம் 27-ல் காண்க.

18. ஜகத்குரு வைபவம்: அஸ்மதாசார்யரான ஸ்ரீகாதி ஸ்வாமி ஜகத்குருப்ரக்யாவிக்யாதராயெழுந்தருளியிருந்த விஷயம் உலகமறிந்தது. அந்த ஸ்வாமியின் சரித்ரபரமாக எழுதப்பட்ட வடமொழி வசன நூலிது.

19. ஜகத்குரு பஞ்சாம்ருதம்: ஸ்ரீகாதி ஸ்வாமி விஷயமாகவே மங்களா சாஸனம், ப்ரபத்தி, ஸுப்ரபாதம், திநசர்யா, வைபவவிவரணம் என்று ஐந்து பகுதிகளாக வைத்து நூறு ச்லோகரூபமாக எழுதப்பட்ட நூலிது.

20. ஸுதர்சந குருஸ்துதி: காஞ்சியில் வேத வேதாந்தவைஜயந்தீ வித்யாலய ப்ரதிஷ்டாபக ஹேதுபூதராய் வித்யாநிதியா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமது பயவே. மாம்பள்ளம் ஸுதர்சநாசார்யஸ்வாமி விஷயமான துதிநூல். இந்த ஸ்வாமியைப்பற்றிக் கீழே இரண்டாம் பகுதியில் (97 முதலிய பக்கங்களில்) விசதமாக வரையப்பட்டுள்ளவை காண்க.

21. ஸபாபுஜங்கீஸர்வஸ்வம்: வேதாந்த தேசிகன் விஷயமான ஸ்துதிநூலொன்றில் "ஸபா புஜங்கீ குணபம் தருண்ய:" என்ற விடத்தில் 'ஸபா புஜங்கீ' என்ற தன் உண்மைப் பொருளை விரிவாக விவரிக்கத் தோன்றிய ஸம்ஸ்க்ருத காவ்யமிது. 105 ச்லோகமுள்ள இரண்டு ஸர்க்கங்கள் கொண்டது. தேவ

நாகரி, தெலுங்கு லிபிகளில் உரையுடனச்சிடப்பட்டுள்ளது. மூலமாத்ரமான பதிப்புமுண்டு. இதைப்பற்றி மேலே தமிழ்நூற் பகுதியில் விரிவுகாண்க.

22. ஸ்ரீசைலேசாஷ்டகவ்யாக்க்யாநம்: எறும்பியப்பா அருளிச் செய்த ஸ்ரீசைலேசாஷ்டகத்திற்கு வடமொழி வியாக்யானம். க்ரந்தலிபியிலும் தேவநாகரியிலும் அச்சாகியுள்ளது. தமிழுரையுமுண்டு; அதைப்பற்றி மேலே.

23. ஸ்ரீமத் வேங்கடநாத குருஸ்தோத்ரம்: "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:" என்கிற தனியனிலுள்ள (32) அக்ஷரங்களை அடைவே ஆதியாக வைத்து சார்தூல விக்ரீடிதவ்ருத்தத்திலியற்றப்பட்ட தேசிகவைபவஸ்துதிநூலிது. தேவநாகரலிபியிலும் க்ரந்தலிபியிலும் தமிழுரையுடனச்சிடப்பட்டது.

24. ஔத்தர திவ்யதேச திவ்யப்ரபந்தாவளி: ஸ்ரீபதரிகாச்ரமம், திருப்பிரிதி, கண்டமென்னுங் கடிநகர், நைமிசாரணியம், சாளக்கிராமம், வடமதுரை, விருந்தாவனம், சிங்கவேழ்குன்றம் முதலான வடநாட்டுத் திருப்பதிகளைப்பற்றி திவ்யப்ரபந்தங்களிலுள்ள பாசுரங்களையெல்லாம் ஸம்ஸ்க்ருதப்படுத்தியது இது. ஒரு பர்யாயம் வடநாட்டுத் திருப்பதியாத்திரையில் எழுதப்பட்டவிது அங்கேயே ப்ருந்தாவனத்தில் அச்சிடப்பட்டது.

25. வைதிக லௌகிகரஞ்ஜநதசகம்: ஸாமாந்ய விசேஷ பண்டிதஜநமநோரஞ்ஜகமாக எழுதப்பட்ட பத்து ஸம்ஸ்க்ருத கதைகள்.

26. உபாக்க்யாநரத்நமாலா: இதிஹாஸ புராணங்களிலிருந்து முக்கியமான சில உபாக்கியானங்களைத் தொகுத்து எழுதப்பட்ட வடமொழி வசன நூல்.

27. லக்ஷ்மீதத்வநிர்ணய: எம்பெருமானுக்குப் போலே பிராட்டிக்கும் விபுத்வ, ஜகத்காரணத்வ, உபாயத்வங்களுண்டென்று சொல்லுவாருடைய வாதங்களையெல்லாம் நிரஸித்து ப்ரமாணோபபத்திகளுடன் ஸத்ஸம்ப்ரதாயார்த்தத்தை ஸ்தாபித்தெழுதப்பட்ட சாஸ்த்ரார்த்த நூல். இது, ஸ்ரீ தத்வ சோதகமென்கிற பெயரால் சிறிது வேறுபாடுடன் மறுபதிப்புப் பெற்றிருக்கிறது.

28. மதிரேக்ஷணார்த்த தத்வம்: மஹர்ஷிகளும் மஹாகவிகளும் ஸ்த்ரீகளை மதிரேக்ஷணு என்பதுண்டு. இச்சொல்லின் உண்மைப் பொருளைப் பலர் அறியாது வேறாக எழுதியிருக்கையாலே "மதிரோ மத்தகஞ்ஜந:" என்கிற நிகண்டுவை யநுஸரித்து உண்மைப் பொருளையுணர்த்த நேர்ந்த தொருகால். அதைக்கண்ட வொரு பண்டிதர் அதற்கு மறுப்பெழுத, அதிலிருந்து இந்த விவாதம் மிகமிக வளர்ந்திட்டது. வேறு சில பண்டிதர்களும் இந்த விவாதத்தில் தலையிட்டு தீபசலபந்யாயேந சிதைந்தனர். அன்னவர்களில் D. T. தாதாசார்யர் தலைமை ஸ்தானம் பெற்றவர் இது, மேலே விவரிக்கப்படும் வடமொழி தென்மொழி நூல்களினாலும் விசதமாகும்.

29. பாட சோதநபரீக்ஷா: ஸ்ரீமத் பரமஹம்ஸ கோழியாலம் ஸ்வாமி பாட சோதநம் என்றொரு க்ரந்தம் வெளியிட்டிருந்தார். ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளான சில பூர்வ க்ரந்தங்களில் வெகுகாலமாகச் சில பல பாடப்பிழைகள் நேர்ந்து விட்டன வென்றும், அவற்றைத் தம்முடைய விமர்ச சக்தியினால் திருத்துவதாகவுங் காட்டி அந்த க்ரந்தம் அந்த ஸ்வாமியால் வெளியிடப்பட்டிருந்தது. அதனால் பல வித்வான்களின் திருவுள்ளம் புண்பட்டிருக்கையில் அடியேன் இந்த பரீக்ஷா க்ரந்தம் எழுதிவெளியிட அவச்யமாயிற்று. இதைப்பற்றித் தேவப்பெருமாள் ஸந்நிதி நூற்றுக்கால் மண்டபத்தில் பண்டித

பரிஷத்து கூட்டி சர்ச்சிக்க வேணுமென்று கிளர்ச்சியேற்பட்டு அப்படியே பரிஷத்து நடைபெற்றது. ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமிக்கு ப்ரதிநிதியாக ஸ்ரீ உவே. உத்தமூர் வீரராகவாசாரியர்ஸ்வாமி வந்து வாதித்தார். பிறகு அடியேனுடைய பிரதி வாதங்களைக் கேட்டுக் கொண்டிருந்து, மத்யஸ்த வித்வான்கள் ஸுப்ரஸந்நர்களாயிருப்பதறிந்து எழுந்து சென்றார். அது நிற்க. இந்த பாட சோதநபரீக்ஷா க்ரந்தத்தில் 72 பாராக்களால் பலபல அபூர்வ விஷயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. முடிவில் 95 ச்லோகங்களையியற்றி நூலின் ஸாராம்சங்களை விளக்கிக்காட்டியிருக்கிறேன். இங்கும் வெகு சுருக்கமாக ஸாராம்சங்களைக் காட்டுகிறேன்.

உலகில் எந்த க்ரந்தங்களிலுமே அச்சுப்பிழைகள் பல நேர்ந்துவிடுவதுண்டென்பது யாவருமிசைந்த விஷயம். அப்படிப்பட்ட பிழைகளைத் திருத்துவதில் யார்க்கும் விவாதமிராது. ஸதாசார்ய ஸன்னிதியில் காலக்ஷேபம் செய்கிற மஹான்கள் அந்த அச்சுப் பிழைகளைப் பெரும்பாலும் திருத்தியே வைத்துக் கொள்ளுகிறார்கள். பிற்பட்ட சில அச்சுப் பிரதிகளில் அந்தத் திருத்தங்கள் ஏறியுமிருப்பதுண்டு. ஆகவே அத்தகைய பிழைகளை ஸ்ரீஸ்வாமி திருத்திக்காட்டி யிருப்பதில் யார்க்கும் வக்தவ்ய மொன்றுமிராது. பல திருத்தங்களைத் தாம் ஸ்வதந்திரமாகச் செய்துள்ளார். ஓலை ஸ்ரீகோசங்களை ஆதாரமாகக் காட்டிச் செய்திருக்கும் திருத்தங்கள் மிகச் சில. 100-ல் 95 திருத்தங்கள் கேவலம் தம்முடைய ஸ்வாதந்திரியத்தாலேயே செய்திருப்பவை. "இருக்கிற பங்க்தி அந்வயிக்காமையினால் இப்படித் திருத்தியேயாகவேண்டும்" என்றே பெரும்பாலும் திருத்தங்களைக் காட்டியுள்ளார். இதனால் பல பாடங்கள் அந்தபரம்பரையாய்த் தவறுதலாக வந்திட்டனவென்று இவருடைய திருவுள்ளம் வியக்தமாகக் காண்கிறது. சில விடங்களில், அந்தந்த க்ரந்தமருளிச் செய்த ஆசார்யரே தவறுதலாக எழுதிவிட்டாரென்று கருதி இப்படித் திருத்திக் கொண்டால் நன்றாயிருக்குமென்று எழுதியுள்ளார். இவற்றால் பல பெரியார்களின் திருவுள்ளம் கன்று மென்று திண்ணமாகத் தெரிகிறது. ஆகவே இந்த க்ரந்தத்தை மிகவும் ஆழ்ந்து பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஸ்ரீ ஸ்வாமியும் இவ்விதமாகவே தமது நூலை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யவேணுமென்றும் தவறுதல்களிருந்தால் அவசியம் எடுத்துக்காட்டவேணுமென்றும் அதனால் தம்மைத் தாம் திருத்திக்கொள்ள நேருமென்றும் தமது நூலிலேயே யெழுதியிருப்பதும் தவிர அடியேனுக்கும் விசேஷித்து நியமித்துள்ளார். மஹா நியமனமென்று அடியேன் சிரமேற்கொண்டு மிகவும் ஆழ்ந்து ஆராய்ந்து இந்த பரீக்ஷா க்ரந்தத்தை யெழுதி யுள்ளேன். ஸ்ரீ ஸ்வாமியின் பாடசோதன க்ரந்தத்தின் போக்கு நான்கு வகையாக அடியேனால் பிரிக்கப்பட்டிருக்கிறது. 1. அவசியமாக சோதிக்கவேண்டிய முக்கியமான விடங்களைத் தொடாமலே விட்டிட்டது. 2. ஏற்கெனவே சில பதிப்புகளில் திருத்தம்பெற்று வெளிவந்திருக்கின்றவற்றையே தாம் திருத்துவதாகக் காட்டுவது. 3. வ்யுத்பந்நர்களுக்கு அவசியமல்லாத திருத்தங்களைச் செய்வது. 4. வித்வான்கள் கடுமையாக ஆக்ஷேபிக்கக் கூடிய திருத்தங்களைச் செய்வது - என இந்த நான்கு வகுப்புக்களில் சேரக்கூடிய திருத்தங்கள் ஸ்ரீஸ்வாமியின் நூலில் மலிந்துள்ளன. வித்வான்கள் உகந்து ஏற்கக்கூடிய திருத்தங்களும் இடையிடையே சில வுண்டு. அவற்றை அபலாபம் செய்யவில்லோம். ஆனால் அவை சோபிக்கமாட்டாத நிலைமையில் விழுந்திட்டன. ஏனென்றால், வித்வான்கள் வருந்தவும் மறுக்கவுங் கூடிய திருத்தங்கள் நிறைந்து, அவை குறைந்திருப்பதால்.

வித்வான்கள் கடுமையாக ஆக்ஷேபிக்கக்கூடிய திருத்தங்களைச் செய்திருக்கிறாரென்கிறவிது ஸ்ரீ ஸ்வாமியின் க்ரந்தத்திற்கு கௌரவ ஹாநிகரமான பெரிய

விஷயம். எவ்விடத்தும் எல்லாப் பெரியார்களும் சுத்தமென்றே கொண்டு ஆதரித்து ப்ரவசனம் செய்துவருகின்ற பாடங்களை அசுத்தமென்றாக்கித் திருத்துவது நியாயமன்றே. தமக்கு அந்வயிக்கவில்லை யென்ற காரணத்தைக் காட்டியே அனேக பாடங்களைத் திருத்தியிருக்கிறார். அந்வயிக்காத விடங்களில் மஹநீய வித்வான்களை யுபஸர்ப்பணம்பண்ணிக் கேட்டுத்தெளிய ப்ராப்தம். ஸாதாரணமாக எல்லார்க்கும் எளிதாக அந்வயிக்கக்கூடிய இடங்களிலுங்கூட ஸ்ரீஸ்வாமி ஆபாததஃ கடாக்ஷித்து மருண்டு திருத்தங்கள் செய்திருப்பதாக நன்கு தெரிகின்றது. அப்படிப்பட்ட பல இடங்களை அடியேன் இதில் எடுத்துக் காட்டித் தெளிவு பெறுத்தியிருக்கின்றேன். மிகப் பழைய ஏட்டுச்சுவடிகளைக் காட்டித் திருத்தங்கள் செய்தாலும் மஹான்கள் ஏற்றுக்கொள்ள ஆலோசிக்கும்படியான இடங்களில் இந்த ஸ்வாமி ஒரு ஸ்ரீகோச பலத்தையுங் கொள்ளாமல் தம்முடைய புத்தி பலத்தினாலேயே இந்தத் திருத்தங்களைச் செய்வதாகவும் ஸ்பஷ்டமாக வெழுதி "மனமே அரசன் மதியே மந்திரி" யென்கிற கணக்கிலே காட்டியுள்ள திருத்தங்களைப்பற்றி மற்றும் பல வித்வான்களும் விமர்சிக்க ப்ரார்த்தனை.

இந்த பாடசோதநபரீக்ஷா நூலிலுள்ள விஷயங்களுக்குக் கண்ணாடி.

1. அவச்யம் சோதிக்கவேண்டிய பாடங்களைத் தொடாமலே விட்டிட்டாரென்கிற விஷயம் நமது நூலில் 11, 24, 25, 26, 51 வது பாராக்களில் நிரூபிதம். 2. முன்னமே அச்சில் வெளிவந்திருக்கிற திருத்தங்களையே வீணாகத் தாம் செய்கிறாரென்பது 11, 28, 30, 32, 36, 38, 39, 40, 45, 46, 47, 48 பாராக்களில். 3. அவசியமற்ற திருத்தங்களைச் செய்திருக்கிறாரென்பது 12, 16, 50-ல். 4. ந்யாய வீரோதம், யுக்திவிரோதம், ச்ருதப்ரகாசிகாதிவ்யாக்யாந விரோதம் முதலிய காரணங்களினால் மஹான்கள் ஆக்ஷேபிக்கக் கூடிய திருத்தங்களைச் செய்திருக்கிறாரென்பது 17, 22, 23, 31, 37, 49, 52, 54 முதலிய பாராக்களில். 5. அவசியம் திருத்தவேண்டுமிடங்களில் ஏற்கெனவே திருத்தி வெளியிட்டிருப்பதை நோக்காமலோ அல்லது திரஸ்கரித்தோ அவ்விடங்களில் தாம் மிகவும் விரஸமான திருத்தத்தைச் செய்திருக்கிறாரென்பது 10, 34 முதலிய பாராக்களில் நிரூபிக்கப் பட்டிருப்பது காண்க. ஔசித்யத்தைக் கடந்து திருத்துகிறாரென்பது 13 முதலிய பாராக்களில். 6. ச்ருதப்ரகாசிகை, பாவப்ரகாசிகை மற்றும் பலவற்றை ஆழ்ந்து பரிசீலனை பண்ணாமலே ஸஹஸா தூஷிக்கிறாரென்பதை 17, 41, 42, 43, 44 ல் காண்க. 7. லேகக சோதகாதி கர்த்தாக்களுக்கு ப்ரமாதங்களிருப்பதாக நினைக்கிறவளவோடு நில்லாமல் க்ரந்தகர்த்தாக்களான பூருவர்களுக்கும் ப்ரமாதமுள்ளதாக நினைத்துத் திருத்துகிறாரென்பது 6-A, 59, 63 முதலிய பாராக்களில் நிரூபிதம். 8. மேலே குறித்தவை தவிர மற்ற பாராக்களில் க்ரந்த சோதனங்களைப் பற்றின பலவகையான மருமங்கள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இந்த க்ரந்தத்தின் ப்ரமேயம் எல்லார்க்கும் கண்ட தாரணமாம்படி 95 ச்லோகங்களுமியற்றப்பட்டு முடிவில் சேர்க்கப்பட்டன.

30. ரஸிக ரஸாயநம்: இது பெரிய நூல், அன்றாயினும் விஷயம் மிகப்பெரிது. ஸ்ரீமான் D T. தாதாசார்யருடைய பல வியாஸங்களுக்கு நம்முடைய கண்டனங்கள் புஸ்தக ரூபமாகவும் பத்ரிகா ரூபமாகவும் வெளிவந்திருக்கின்றன வென்பது விச்வப்ரஸித்தமான விஷயம். விவாதத்தில் ஆரம்ப விஷயமென்னவென்றால், ரகுவம்சத்தில் (4—2) * திலீபாநந்தரம் ராஜ்யே * என்கிற ச்லோகத்தின் மல்லிநாத வியாக்கியானத்தில் (எல்லாப் பதிப்புகளிலும்) பிரபலமான அச்சுப் பிழையொன்று விழுந்துவிட்டதாகவும் அதைத் தான்

திருத்திக் காட்டுவதாகவும் உத்யாநபத்ரிகையில் ஒரு வியாஸமெழுதி வெளியிட்டாரிவர். அங்கு அச்சுப்பிழை யாதொன்றும் கிடையாதென்றும், காண்கிறபாடத்தில் யாதொரு அநுபபத்தியும் கிடையாதென்றும் இவருடைய மருளை விரிவாக நிரூபித்து மஞ்ஜுபாஷிணியில் மறுப்பு வியாஸமெழுதியிருந்தேன். மஞ்ஜுபாஷிணி நிறுத்தப்பட்டு இற்றைக்கு 27, 28 வருஷமாகிறபடியால் முப்பது வருஷங்களுக்கு முந்தின செய்தி இதுவென்று உணரலாம். அந்த மறுப்பு வியாஸத்திற்கு இந்த தாதாசாரியர் யாதொரு பதிலும் எழுதவில்லை, எழுதவும் முடியாது. அதனால் உள்ளத்துள்ளே பகைகொண்டு அதை வளர்த்துவந்தார். அந்தப் பகையின் சேஷ்டைகள் பல முகமாக வெளிவரத் தொடங்கின. ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட விஷயங்களில் இவர்க்கும் நமக்கும் வாதவிவாதங்கள் ஏற்பட்டு அவை முழுவதும் ஏடுபட்டுக் கிடக்கின்றன. இத் தன்சரிதையில் பக்கம் 140-ல் ஸ்ரீமதுபயவே. அப்ரமேய வித்யாநிதி (வைகுண்டவாஸி) காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் சோதிடவார்த்தையை விரிவாக உதாஹரித்திருக்கிறேனல்லவா? "பண்டிதர்கள் தாமாகவே வந்து உம்முடைய வாக்கில் மாட்டிக்கொள்ளுவர்கள்; திக்குமுக்கலாடி நிற்பர்கள்" என்று அந்த ஸ்வாமி சபதமிட்டுரைத்த திருவாக்கை யதார்த்தமாக்கி வைக்கும் பண்டிதர்களில் இவர் தலைவராய் நிற்பவர். இவருடைய உக்திகளுக்குக் கண்டனமாக நாமெழுதி வெளியிட்ட பல நூல்களில் ரஸிகரஸாயநமென்கிறவிதுவும் ஒன்று. இதில் இத் தாதாசாரியருடைய பல மருள்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றைப்பற்றிமட்டும் இங்குத் தெரிவிக்கிறேன். காஞ்சீபுரியில் வாழ்ந்த ஸ்ரீமத் தண்ட்ரி பட்டப்பா தாதாசாரியரென்கிற சிறந்த வித்வான் ஸுபாஷித நீவிக்கு ஆச்சரியமான வியாக்கியானமொன்று (வடமொழியில்) எழுதியிருந்தார். அதை இவர் உத்யாநபத்ரிகையில் சிறிது சிறிதாக அச்சிட்டு வந்தார். அதில் இவருடைய புத்திக்ருதமான பிழைகள் மலிந்திருந்தன. ஸஹிக்கமுடியாத பிழைகளைமட்டும் நாம் உபேக்ஷிக்கமாட்டாமல் எடுத்துக் காட்டிவந்தோம். அதில் அந்த பட்டப்பா ஸ்வாமி ப்ராஸங்கிகமாக ஒரு கதையெழுதியிருந்தார். அதாவது, ஒரு தனிகனுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதையறிந்தவொரு சோதிடன் அக்குழந்தையின் ஜாதகத்தைப் பரிசீலனைபண்ணி ஏகாந்தமாகத் தந்தையிடம் வந்து 'இக் குழந்தை பத்துநாள் ஜீவித்திருந்தால் தாய் தந்தையர்க்கு மரணம் தப்பாது' என்று சொன்னான். அது கேட்ட தந்தை மிக வருந்தித் தன் மனைவியோடு ஆலோசித்தான். இக் குழந்தையை முடித்திடுவது நலமா? நமக்கு நேரும் மரணத்தை ஸஹித்துக்கொள்வது நலமா? என்று. நாம் பிழைத்திருந்தால் பல பிள்ளைகள் பிறக்கவுங்கூடும்; நமக்கு மரணம் நேர்ந்துவிட்டால், காப்பாரில்லாமல் இக் குழந்தையும் ஜீவித்திருப்பது அரிதாகும். இத்யாதிகளை ஆலோசித்து, குழந்தையை முடித்துவிடும்படி ஒரு வேலைக்காரியிடம் கொடுத்துவிட்டான். அவளும் அப்படியே செய்கிறேனென்று சொல்லிக் குழந்தையைப் பெற்றுக்கொண்டு போய் அதைக் கொலை செய்யமாட்டாமல், ஸந்ததியில்லாமல் வருந்திக்கொண்டிருந்த (தேசாந்தரஸ்தரான) தன்னுறவினரொருவர்க்கு அக் குழந்தையைக் கொடுத்துவிட்டாள். அக்குழந்தை தூரதேசத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்த மாதா பிதாக்கள் அக் குழந்தை கொலையுண்டு போய்விட்டதாகவே நினைத்திருக்கின்றார்; பதினெட்டு வருடங்கள் கடந்தன. அவர்களுக்கு மறுபடியும் ஸந்தானமுமுண்டாகவில்லை. தேசாந்தரத்தில் இனிது வளர்ந்துவருகின்ற அப்புத்திரன் உரிய காலத்தில் சோதிட நூல் பயில்விக்கப்பெற்று, ஜ்யோதிச்

சாஸ்த்ர முகத்தால் தன் சரிதையைத் தானுணர்ந்து தன்னைப் போஷித்து வருகின்ற தந்தையை நோக்கி 'என் பிறப்புச் செய்தியை உள்ளபடி சொல்லும்' என்றான். அத்தந்தை உள்ளபடியே தெரிவிக்க, அப்போது 18 வயது வாய்ந்த இக் குமாரன் உடனே புறப்பட்டுத் தனது உண்மைத் தாய் தந்தையரிடம் சென்று சேர்ந்து தன்னை வெளியிட்டு எல்லாச் செய்திகளையும் கூறி 'நான் உங்கள் புதல்வன்' என்றான். அவர்களும் பரமானந்த மெய்தினர். இது கதை. இதில், வந்து சேர்ந்த குமாரன் எந்த மாதா பிதாக்களிடம் வந்தானோ அந்த மாதா பிதாக்களுக்கு (வ்யாக்யாதாவான பட்டப்பா ஸ்வாமியால்) ஒரு விசேஷணம் இடப்பட்டிருக்கிறது "अपुत्रतया हतपुत्रतया च खिद्यमानयो:" என்று. பட்டப்பா ஸ்வாமி தம் திருக்கையாலெழுதின ஸ்ரீ கோசம் க்ரந்தலிபியிலுள்ளது. க்ரந்தலிபியில் கவர்க்க த்விதீயாக்ஷரமும் வகாரமும் அதிகமாக பேதப்பட்டிராது. அதனால் (खि) என்னுமெழுத்தை இந்த முத்ராபக தாதாசார்யர் (வி) என்று வாசித்துவிட்டு (வித்யமானயோ:) என்று காபி யெழுதிக்கொடுத்து அச்சிட்டுவிட்டார். இது அநியாயமான தவறுதலல்லவா? இதை உலகுக்கு எடுத்துக் காட்டாமலிருக்க முடியுமா? ஹாஹாகாரத்துடன் எடுத்துக்காட்ட வேண்டிய தவறல்லவா இது; ஆகவே உலகமறிய எடுத்துக் காட்டப்பட்டது. இதற்கு ப்ராமாணிகர் செய்ய வேண்டியதென்ன? பதில் ஒன்றுமெழுதாமல் ஸ்ரீமத் கம்பீரமாக இருந்து விடலாம்; அல்லது அச்சுப்பிழையாக விழுந்துவிட்டதென்று ஒரே வார்த்தையில் முடித்துவிடலாம். இவ்விரண்டையும்விட்டு, இங்கு खिद्यमानयो: என்றிருக்கத் தகவேதகாது; (வித்யமானயோ:) என்றுதா னிருக்கவேண்டும் என்று ஆக்ரஹங்கொண்டு அந்த தாதாசார்யரால் எழுதப்பட்ட பதில் வியாஸங்களைப் பண்டிதவுலகம் கண்டு பரிஹஸித் திருக்கின்றது. அது கிடக்க; * செய்வன திருந்தச்செய் * என்றபடி எதையும் நாம் திருந்தச் செய்வது இயல்பாதலால் தண்ட்ரி. பட்டப்பா ஸ்வாமியின் ஸ்வஹஸ்தலிகிதமான ஸ்ரீகோசத்தை பஹிரங்கப்படுத்தி இதனுண்மையைத் தெரிவிக்க வேண்டி ஸ்ரீமதுபயவே. வித்வான். இளங்காடு ரங்காசார்ய ஸ்வாமி ஸன்னிதியில் இந்த சர்ச்சைகளை விஜ்ஞாபித்தேன். [இந்த ஸ்வாமியைப் பற்றி இத் தன்சரிதையில் பக்கம் 25 ல் காண்க.] உடனே அந்த ஸ்வாமி பட்டப்பாவின் திருக்குமாரரிடமிருந்து அந்தஸ்வஹஸ்தலிகித ஸ்ரீகோசத்தை வாங்கிவந்து, அன்றுநடந்த வெள்ளிக்கிழமைத் தாயார் புறப்பாட்டில் பண்டிதர்களுக்கெல்லாம் அதைக் காட்டினார். அதில் 430-ஆம் பக்கத்தில் எட்டாவது வரியில் விவாதாஸ்பதமான பதமுள்ளது. ஸந்தேஹத்திற்கு ஈஷத்தும் அவகாசமில்லாதபடி खिद्यमानयो: என்றே எழுதப்பட்டிருப்பதை ஒவ்வொருவரும் கட்கூடாகக் கண்டார்கள். இதெல்லாம் இந்த ரஸிக ரஸாயனநூலில் விரிவாகக் காணக்கிடைக்கும். இந்நூலின் முகப்பில், மேலே குறித்த இளங்காடு ஸ்வாமியின் அபிநந்தன ச்லோகமாலிகையுமுண்டு. இதற்காக அந்த தாதாசாரியர் இந்த ஸ்வாமியிடம் பட்ட அபசாரங்கள் பல. இவ் விஷயத்தில் மிகவும் அநாவச்யகமாக வாதவிவாதங்கள் வளர்ந்திட்டது அத்யந்த சோசநீயம். இத்தகைய மற்றுள்ள விஷயங்களும் மேலே விரியும்.

31. க்ருதக்ருத்யப்ரதீக்ஷணம் : *ப்ராயோஹ்யக்ருதக்ருத்யத்வாத் ம்ருத்யோருத்விஜதே ஜந:, க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம் * என்கிற ச்லோகத்திற்கு இன்சுவை மிக்க விவரணம். கத்யப்ரபந்தம்.

32. ஸ்ரீராமாவதார : ஸ்ரீராமாவதாரத்தில் விமர்சரூபமான சில விவரணங்களிதில்.

33. கோபாலபஞ்சாசத்: அஸ்மத்குலகூட ஸ்தரான ப்ரதிவாதிபயங்கரம் அண்ணவுக்கு வீதியாரவருவானென்கிற கண்ணபிரானது திருக்கோலம் மணவாள மாமுனிகள் திருவருளால் ஆராத்ய தேவதையாகக் கிடைத்த விஷயம் ஸுப்ரஸித்தம். அண்ணு ஸாதித்த ஸ்ரீக்ருஷ்ண மங்களத்தில் "ஸ்ரீவாதிபீகராக்க்யேந ஸ்ரீஸௌம்யவரயோகிந:, லப்தாய கோபபாலாய நித்யஸ்ரீர் நித்ய மங்களம்." என்றுள்ள ச்லோகத்திலும் ப்ரஸித்தம். அந்த திவ்ய மங்கள விக்ரஹம் அஸ்மதாசார்யரான ஸ்ரீகாதி ஸ்வாமி திருமாளிகையில் திருவாராதனம் கண்டருளி வருகிறபடி. இந்த கோபாலன் விஷயமாக இயற்றப்பட்ட ஐம்பது சுலோகங்கள் கொண்ட துதிநூல் இது. ஸ்ரீகாதி ஸ்வாமியின் வடதேச யாத்திரையில் உடன் வரும் சிஷ்யவர்க்கங்கள் கண்டபாடமாக்கிப் பத்து வருஷகாலம் நித்ய மநுஸந்தித்து வந்தார்களிதை நித்ய திருவாராதன காலத்தில்.

34. ஸதாசார்யஸம்க்திரக்ஷா: மேலே தமிழ்நூற்பகுதியில் இப்பெயர் கொண்ட நூல் வரும். அந்த நூலின் ஸாரமான சாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷம் கொண்ட வடநூலிது. க்ரந்தலிபியில் அச்சிடப்பட்டுள்ளது. பிராட்டியைப்பற்றினவிசாரம்

35. ரோதஸீதத்வபோதிநீ: லௌகிகப்ரயோகங்களில் 'ரோதஸீ' என்று வரும் பதப்ரயோகத்தைப்பற்றின சாஸ்த்ரார்த்த விளக்கம். இது தமிழ்ப்பாஷையிலுமுண்டு. அது தமிழ் நூற்பகுதியில் காணத்தக்கது.

36. ஸ்ரீராமாயணதண்டகம்: ஸ்ரீராமாயணத்தில் ஆறுகாண்டங்களின் கதையையும் ஆறு தண்டகமாக அமைத்தது இது. ஒவ்வொரு தண்டகத்தின் முடிவிலும் ஒவ்வொரு சுலோகம் அந்தந்த காண்ட கதையின் ஸங்க்ரஹமாயமைந்தது. இது தெலுங்குலிபியிலும் தேவநாகரலிபியிலும் பதிப்பிக்கப்பட்டது.

37. நந்தநந்தநவைபவசூர்ணிகா: ஸ்ரீபாகவதத்திலும் ஸ்ரீவிஷ்ணு புராணத்திலுமுள்ள ஸ்ரீக்ருஷ்ண கதைகளைப் பூர்த்தியாக இருபத்துநான்கு பெரிய சூர்ணிகைகளில் அமைத்தது இது. கேசவாதி சதுர்விம்சதி நாமாவளீ க்ரமத்தில் இயற்றப்பட்டது. ஸங்கீத ரஸிகர்களுக்குப் பரமபோக்யமாம்.

38. பகவத்ராமாநுஜஸஹஸ்ரநாமஸ்துதி: எம்பெருமானார் விஷயமாக ஸஹஸ்ரநாமாவளீஸ்தோத்ரமியற்றத் தொடங்கி முந்நூறு நாமாவளியோடு நின்றது. விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் ஒவ்வொரு நாமத்தின் முதலெழுத்தே இந்த ஸ்துதியில் திருநாமங்களுக்கும் முதலெழுத்தாகவைத்துச் செய்யப்பட்டது. * விச்வம் விஷ்ணுர் வஷட்கார: * இத்யாதிச்லோகத்தில் வி, வி, வ, இத்யாதிகளான அக்ஷரங்களை ஆதியிலே கொண்ட நாமங்களிருப்பதுபோல இதிலுமுள்ளது; *வித்யாநிதிர் விசுத்தாத்மா வகுலாபரணாச்ரித:, பூதார்த்தவாதீ பூபாரஹாரீ பூரிகுணோஜ்ஜ்வல:* இத்யாதியாக இந்த ஸ்துதியிலுள்ளது. இந்தஸ்துதி பூர்த்தியடையாமல் முந்நூறு திருநாமத்தளவிலே நின்றதற்குக் காரணம் இடையிலே மணவாளமாமுனிகள் பரமக்ருபையாலே தம் பக்கலில் துவக்கிக்கொண்டதனால் அவர் விஷயமாகவே பலபல ஸ்துதிகளை இயற்ற நேர்ந்ததுவேயாம். அவை மேலே விவரிக்கப்பெறும்.

39. ஸ்ரீமத்க்ருஷ்ணகுருஸ்துதி: பெரியவாச்சான் பிள்ளை விஷயமாக 24 ச்லோகங்கள் கொண்ட ஸ்துதியிது. புத்தூர் அக்ரஹாரத்திலிருந்த ஸ்ரீ உவே. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் (ஸ்ரீவைஷ்ணவஸுதர்சந பத்ராதிபர் அட்வகேட்) இடையில் சிலகாலம் மனக்கலக்கமுற்று அடியேனோடு விவாதப்பட்டிருந்தது விச்வப்ரஸித்தம். அது மேலே தமிழ்நூற்பகுதியிலும் விசதமாகும். அந்த

ஸ்வாமி பகவத்க்ருபையினால் தாமாகவே தெளிந்து பழைய நட்பை அநுவர்த்திக்கச் செய்துகொண்ட பின்பு 'பெரியவாச்சான் பிள்ளை விஷயமாக ஒரு நல்ல ஸ்துதிநூல் இயற்றித் தரவேணுமென்று வேண்ட, அந்த வேண்டுகோளை வியாஜமாகக்கொண்டு எழுதப்பட்டவிது அவர் தம்மாலேயே தமது மாதப்பத்திரிகையில்வெளியிடப்பட்டது. தமிழுரையோடுதனிப்புத்தகமாகவுமுள்ளது. ஸ்வாமி இருபத்துநாலாயிரப்படி ஸாதித்ததற்காக 24 ச்லோகம்.

40. ரத்நபரீக்ஷா: தேசிகனருளிச்செய்த ந்யாயஸித்தாஞ்ஜநத்திற்கு வியாக்கியானமாக ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி பணித்த ரத்நபேடிகையிலுள்ள ரத்னங்களில் ஒன்றைப்பற்றின பரீக்ஷை இது. இது 59 ச்லோகங்கள் கொண்டது; அவற்றின் தாத்பர்ய விவரணமான கத்யமாலிகையுமுள்ளது. இதில் விமர்சிக்கப்பட்டுள்ள விஷயத்தின் ஸாரத்தைச் சுருக்கமாகத் தெரிவிப்போமிங்கு. ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஈச்வரபரிச்சேதத்தில் * ச்ரியா ஸஹ து தாம்பத்யம் சாச்வதம்......* என்றுள்ள காரிகையின் வியாக்கியானத்தில் திருப்புட்குழியப்பா ஸ்வாமி ஸாதித்திருப்பதாவது घटपटयोः द्वित्वम् என்று சொல்லவேண்டுமிடத்தில் घटेन सह पटस्य द्वित्वम् என்று சொல்லவொண்ணாது; அப்படிச் சொன்னால் கடமும் இரண்டு, படமும் இரண்டு என்று சொன்னதாக ஆகுமேயொழிய 'கடமும் படமும் சேர்ந்து இரண்டு வஸ்துக்கள்' என்று சொன்னதாக ஆகமாட்டாது-என்று; இது ப்ராமாணிகர்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதன்று. घटपटयोः द्वित्वम् என்கிற வாக்யமும் घटेन सह पटस्य द्वित्वम् என்கிறவாக்யமும் ஸமரூபமான அர்த்தத்தையேகொண்டதாகும். 'மஹாபாரதமானது வியாக்யானத்தோடுகூட ஐம்பது ருபா விலையுள்ளது' என்று சொன்னால் மூலமும் ஐம்பது ரூபா விலையுள்ளது, வியாக்யானமும் ஐம்பதுரூபா விலையுள்ளது என்பதாகப் பொருள்படுமோ! घटेन सह पटस्यापि द्वित्वम् என்று அபிசப்தஸம்வலிதமாக வாக்கியமிருந்தால் கடமும் இரண்டு, படமும் இரண்டு என்பதாகப் பொருள் தேறக்கூடும்... ..இத்யாதிகளான பல விஷயங்களையும் சாஸ்த்ர ஸம்வாதங்களையும் பரக்க நிரூபித்து ரத்நபேடிகாகாரருடைய வாதம் மறுக்கப்பட்டுள்ளது. இப்பெரியவர் ஸ்ரீவசநபூஷண மீமாம்ஸாபாஷ்யத்திற்குத் தாம் கண்டனமெழுதிவிட்டதாக இந்த ரத்நபேடிகையில் ஆங்காங்கு காட்டிவருகிறார்; அது பாமரப்ரதாரணமத்தனையென்று பண்டிதர்களின் உள்ளத்திற் பதியவைப்பதற்காக இந்தப் பரீக்ஷாக்ரந்தமெழுதப்பட்டது. இது க்ரந்தலிபியிலும் தேவநாகரலிபியிலுமச்சிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கு இதுவரை ஒரு வித்வானும் மறுப்பெழுத நெஞ்சாலும் நினைத்ததில்லை.

41. உத்யாநசுஷ்கவசோவிமர்ச: கீழே 30 லக்கமுள்ள நூலுக்கு விஷய பூதரானவர் உத்யாநபத்ரிகையில் அஸம்பத்தமாக எழுதியிருந்த பல விஷயங்களுக்கு விரிவான மறுப்பு. இது போன்ற நூல்களெல்லாம் வித்வான்களுக்குப் பாரிதோஷிகமாகக் கிடைக்கக் கூடியவையாதலால் விருப்பமுள்ளவர்கள் வரவழைத்துப் பார்த்து ஆனந்திக்கவேணும்.

42. ஸஹஸ்ரநாமபாஷ்யப்ரபாவ: ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு பட்டரருளிச்செய்த பகவத் குணதர்ப்பணமென்ற பாஷ்யத்தின் பெருமையைப் பலவிடத்து ஸ்வாரஸ்யங்களை யெடுத்துக்காட்டி நிரூபிப்பது இது.

43. யுஷ்மத்ஸூக்திஸௌரபம்: மணவாள மாமுனிகளருளிச்செய்த யதிராஜவிம்சதியில் * யுஷ்மத் பாதாரவிந்த யுகலம் பஜதாம் குருணும் * என்றவிடத்து 'யுஷ்மத்

பாத' என்றிருக்கக் கூடாதென்றும் 'த்வத்பாத' என்றே யிருக்க வேணு மென்றும் சிலரெழுதினதற்கு மறுப்பு. ப்ராமாணிகங்களான பரச்சத ப்ரயோகங்களை யெடுத்துக்காட்டித் தெளிவு பிறப்பிக்கத் தோன்றியது இது.

44. க்ஷேத்ரதீர்த்தயாத்ராதர்ச: அடியேனுடைய வடநாட்டுத் திருப்பதி யாத்திரை யொன்றில் க்ஷேத்ர தீர்த்த யாத்திரை விஷயமாக விரிவாயெழுதப்பட்ட வடநூலிது. அந்தந்த க்ஷேத்திரங்களிலுள்ள பல மஹான்களின் உருவப் படங்களுங்கொண்டதிது.

45. ஸாதுபாடஸௌவாதவம். பூர்வாசார்ய திவ்யஸூக்திகளிலும் மஹாகவிகளின் உக்திகளிலும் திருத்தமானபாடங்களின் சுவையைப்பற்றின விமர்சநூலிது.

46. ஸ்ரீமத்பரகாலமஹாயோகி வைபவம்: மைஸூரில் வர்த்தமாந காலத்தில் ஸ்ரீப்ரஹ்மதந்த்ர பரகாலாஸ்தான மடாதிபதியாக எழுந்தருளியிராநின்ற ஸ்ரீமதபிநவரங்கநாத பரகாலயதீந்த்ர மஹாஸ்வாமியின் திவ்ய சரித்ரம் ஸ்ரீஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்திமஹோத்ஸவ ஸமயத்தில் மடத்தின் கார்ய நிர்வாஹகர்களின் அபேக்ஷைக்கிணங்கி எழுதப்பட்டது. மடம் மூலமாகவே அச்சிடப்பட்டது. தெலுங்குலிபியிலும் தேவநாகரலிபியிலுமுள்ளது.

47. த்ராவிடாம்நாயரஸாஸ்வாத: திவ்ய ப்ரபந்தங்களை ஸம்ஸ்க்ருதபாஷையில் மொழி பெயர்க்கத் தொடங்கினபோது, திவ்யப்ரபந்தங்களிலுள்ள ரஸவிசேஷங்கள் ஸம்ஸ்க்ருதஜ்ஞர்களுக்கு விசதமாகத் தெரிவதற்காக வெகு லலிதமாய் எழுதப்பட்ட நூலிது.

48. வர்ணாச்ரமதர்மரக்ஷா: ஆலயங்களில் அரிஜநப்ரவேசக் கிளர்ச்சி தோன்றிய போது ஸ்ரீமான் காந்திஜீ அவர்களுக்கு எழுதியனுப்பப்பட்ட நூலிது. நமது வைதிகமநோஹரா பத்திரிகையி லச்சிடப்பட்டுள்ளது. தனிப் புத்தகமாகவும் அச்சாகும்.

49. கோஷ்டிநாதசதகம் திருக்கோட்டியூரெம்பெருமான் விஷயமாக விஜ்ஞாபித்த 104 ச்லோகங்கள் கொண்ட துதிநூல். இதைப்பற்றி இத் தன்சரிதையில் கீழே பக்கம் 248-ல் ப்ரஸ்தாவித்திருக்கிறேன். அப்போது அச்சிடப்படாமலிருந்தவிது இப்போது அச்சாகிவிட்டது.

50. ஹயக்ரீவசதகம்: ஹயக்ரீவன் விஷயமாக விஜ்ஞாபித்த 100 ச்லோகங்கள் கொண்ட துதிநூல். மஞ்ஜுபாஷிணீ பத்திரிகை நின்றுபோன பிறகும் வைதிகமநோஹரா ஆரம்பிப்பதற்கு முன்பும் இடைக்காலத்தில் "வேத வேதாந்த வைஜயந்தீ" என்னும் பெயரால் மூன்று மாதங்களுக்கொரு முறையாக ஸம்ஸ்க்ருதபத்ரிகை புஸ்தகாகாரமாக நடத்திவந்தேன். அதில் அநேக கத்ய ப்ரபந்தங்களும் பத்யப்ரபந்தங்களும் வெளியிடப்பட்டன. அவற்றுள் 'ஸ்தோத்ரமாலிகா' என்னும் பகுதியில் இது முதன்மையாக வெளியிடப்பட்டது. "மிக்க இளமையில் எழுதிய ஸ்தோத்ரமாலிகாதி க்ரந்தங்களை இப்போதுள்ள ஸ்வல்பமதி விகாஸத்தின்படி திருத்தி வெளியிடலாமாயினும் திருத்தாமலே வெளியிடுகிறேன்" என்று முகவுரை எழுதியிருக்கிறேனங்கு.

51. கருடவிம்சதி: பெரிய திருவடி விஷயமாக 20 ச்லோகம். கீலக௵ மார்கழிமீ ஸ்ரீரங்கத்தில் பதற்பத்து ஒன்பதாந்திருநாளன்று எம்பெருமானார் ஸந்நிதியில் ஸ்தோத்ரபாட கோஷ்டியிலிருந்த ஸ்வாமிகளின் நியமனத்தை முன்னிட்டு உடனே அவ்விடத்திலேயே இது விஜ்ஞாபிக்கப்பட்டதென்று

இதன் முகவுரையிலுள்ளது. முடிவில் 24-ஆம் ச்லோகம்.

* श्रीमद्रङ्गे भाष्यकाराख्येऽस्मिन् गोष्ठ्यामस्यां दीप्यतां पण्डितानाम् ।
आज्ञां लब्ध्वा दासदासेन सद्यः प्रोक्तं स्तोत्रं ह्येतदार्यैः स्व्यकारि ॥ *

என்றதும் காண்க.

52. கமலாஸ்துதி: பெரிய பிராட்டியார் விஷயமாக 30 ச்லோகம். ஆர்யாவ்ருத்தம்.

53. ஆதிவராஹத்ரிம்சத்: திருவிடவெந்தை யெம்பெருமான் விஷயமாக 30 ச்லோகம். அக்ஷராந்தாதியாயும் ககாராதி அக்ஷரமாலையாயு மியற்றப்பட்டது.

54. கலிவைரிதசகம்: நம்பிள்ளை விஷயமாக 12 ச்லோகம். இது நம்பிள்ளை ஸந்நிதியில் க்ருத்திகைதோறும் பக்தவர்க்கங்கள் அநுஸந்தித்து வருவது.

55. லோகாசார்யஸ்தோத்ரம்: * லோகாசார்யாய குரவே* இத்யாதியான பிள்ளை லோகாசார்யருடைய தனியனிலுள்ள ஒவ்வோரெழுத்துக்கும் ஒவ்வொரு ச்லோகமாக இயற்றப்பட்ட துதிநூல். நம்பிள்ளை ஸந்நிதியில் த்வாதசிதோறும் முமுக்ஷுப்படி ஸேவித்தவுடனே அநுஸந்திக்கப்பட்டுவருவது இது.

56. ஸ்ரீமத்வரவரமுனிவைபவஸ்தோத்ரம்: *ஸ்ரீசைலேசதயாபாத்ரத் தனியனிலுள்ள ஒவ்வோரெழுத்துக்கும் ஒவ்வொரு ச்லோகமாக இயற்றப்பட்ட துதிநூல். நம்பிள்ளை ஸந்நிதியில் திருமூலந்தோறும் தத்வத்ரயம் ஸேவித்தவுடனே அநுஸந்தித்து வருவது இது.

57. ஸ்ரீசைலேசதயாபாத்ரஸ்தோத்ரம்: கீழ் 56 லக்கமுள்ள ஸ்தோத்ரமானது ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தனியனின் (ஸ்ரீ) என்கிற எழுத்துக்கு ஒரு ச்லோகம், (சை) என்கிற எழுத்துக்கு ஒரு ச்லோகம்...என்று இவ்வண்ணமாக இயற்றப்பட்டது. இந்த ஸ்தோத்ரம் அங்ஙனல்லாமல் (ஸ்ரீ) என்கிற எழுத்தில் சகார-ரேப-ஈகாரங்களிருப்பதால் இம்மூன்றெழுத்துக்கும் மூன்று ச்லோகம். (சை) என்னுமெழுத்தில் சகார-ஐகாரங்களிருப்பதால் இவ்விரண்டெழுத்துக்கும் இரண்டு ச்லோகம்...இவ்வண்ணமாக 86 ச்லோகங்களமைக்கப்பெற்ற துதிநூலிது. சென்ற பார்த்திவஹு மணவாள மாமுனிகளின் மஹோத்ஸவத்தில் ஒன்பதாந்திருநாளிரவு திருவாய்மொழி சாத்து முறைத் திருவோலக்கத்தில் அரங்கேற்றம் செய்யப் பெற்றது இது. மேல் 65 லக்கம் முதல் 78 லக்கம் வரையிலுமுள்ள துதிநூல்களும் அரங்கேற்றப்பெற்றவை

58. அத்புதவார்த்தாப்ரகாச: இதைப்பற்றி அன்பர்கள் கவனிக்கவேணும். இதோர் அற்புதவார்த்தை கேளீர். முதல் தடவையாக அடியேன் பதரிகாச்ரம யாத்திரை சென்றது 1943ஹு அதாவது ஸ்வபாநுஹு ஆனி மாதத்தில். ஏழெட்டு அநுசரர்களுடன் புறப்பட்டு பதரிகாச்ரமத்தைப் பேரின்ப வெள்ளமாக ஸேவித்துக்கொண்டு மீளுகையில் வழியடைவே அயோத்யை முதலான திவ்ய தேசங்களையும் ஸேவித்துக்கொண்டு ப்ரயாகக்ஷேத்ரம் (அலஹாபாத்) வந்து சேர்ந்தேன். அங்கு தாராகஞ் ஜென்னுமிடத்தில் கங்கைக்கு அதிஸமீபத்தில் ஒரு மாளிகையின் மாடிமேல் தங்கியிருந்தேன். அந்த மாளிகையின் பக்கத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவபக்தர் தேசிகனுடைய க்ருதியாகிய ஸுதர்சநாஷ்டகத்தை நல்ல ராகத்தோடு உச்சஸ்வரத்தில் பாடிக்கொண்டிருந்தார். ச்லோகந்தோறும் *ஜயஜய ஸ்ரீஸுதர்சந ஜயஜய ஸ்ரீஸுதர்சந * என்று வருகிறதே, அதை ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்த அடியேனுக்கு "நாமும் இப்படியொரு ஸ்துதிநூல் இயற்றுவோம்" என்று ஆசை கிளர்ந்தது. அப்போது இரவு மணி பத்து. அடியேன் படுத்துக்

கொண்டே கண்விழித்துக்கொண்டே அப்படியொரு ஸ்துதிநூல் இயற்றத் தொடங்கி ஒரு ச்லோகம் மனத்துள் சிந்தித்தேன்; அதாவது—

दिशिदिशि स्फीतकीर्तिक सवितृधिक्कारिदीप्तिक! सकलतेजस्समुच्छ्रित निखिलदेवैस्समाश्रित ।
विपुलकाशीपुरान्तक विविधरक्षोगणान्तक जयजय श्रीसुदर्शन जयजय श्रीसुदर्शन ॥ *

என்கிற இந்த ச்லோகத்தை நெஞ்சிலேயே சிந்தித்தேன். நாளை காலை சேஷபூரணம் செய்துகொள்வோமென்று நித்திரை செய்யலானேன். நடு நிசியில் மிகவிலக்ஷணமானதொரு கனாக்கண்டேன். ஆச்சரியமான ஸௌந்தர்ய லாவண்ய நிதியாய் பத்து பிராயமுள்ளவனானவொரு சிறுவன் என்னருகே வந்திருந்து, பூர்வ ராத்திரியில் நான் நெஞ்சினுள்ளே சிந்தித்த (மேலே குறித்த) ச்லோகத்தை மிக இனிமையாகப் பாடிக்கொண்டு என்னுடம்பைத் தடவிக்கொடுத்தான்; நாம் மனத்தினுள்ளேயே சிந்தித்த ச்லோகத்தை இச்சிறுவன் எப்படி தெரிந்துகொண்டு பாடுகிறான்! என்று கனவிலேயே விஸ்மிதனான அடியேன் அவன் முகத்தை நோக்கினேன். அந்த முகாரவிந்த ஸேவையை என்னவென்று சொல்லுவேன்! பிறகு அச்சிறுவனுக்கும் எனக்கும் ஹிந்தியில் ஸம்பாஷணை நடந்தது. அப்பா! நீயார்? என்றேன். நான் யாரானால் உமக்கென்ன? எதற்காகக் கேட்கிறீர்? என்றானவன். நான் நெஞ்சினுள்ளே சிந்தித்திருந்த ச்லோகம் உனக்கு எப்படி பாடமாயிற்று? என்று கேட்டேன். அதற்கு அச்சிறுவன் 'என்னாலும் தெரிந்துகொள்ள முடியாததொன்று இருப்பதாக நீர் நினைக்கிறீரோ?' என்றான். அதற்கு நான் 'அப்படியா? நீ ஸர்வஜ்ஞனென்றறிந்து ஸந்தோஷிக்கிறேன்; நீ எதற்காக வந்தாய்? எங்கிருந்து வந்தாய்? என்றேன். அதற்கு இப்போது நான் சொன்ன ச்லோகம் போலவே இதே விருத்தத்தில் என் விஷயமான ஸ்தோத்ரமொன்றை உம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளவந்தேன்' என்றான். அதற்கு மேல் 'அயோத்யையிலிருந்தா வந்தாய்?'' என்றேன்; ஆமாம் என்றான். [அயோத்தியில் ஒரு வேளை மட்டும் தங்கியிருந்து உடனே ப்ரயாகைக்கு வந்துவிட்டேனென்பது அன்பர்களறிந்திருக்கவேண்டும்.] அதற்குமேல் நான் கேட்டேன். என் வாக்கிலிருந்து ஒரு துதிநூலைப் பெற்றுப் போக வந்தேனென்கிறாயே; உன் பெயர் தெரியாமல் உன்னை நான் எப்படி ஸ்துதிப்பேன்? என்று.

உடனே அச்சிறுவன் ஒரு சிறு பெட்டியைத் திறந்து நவரத்னகசிதமாய் திவ்யமான வொருவில்லையெடுத்துக்கையிலேந்திக்கொண்டு புன்முறுவலோடு ஏதேதோ சொன்னான் அவை என்னால் கிரஹிக்க முடியவில்லை. அப்போது நான் அவனை நோக்கி "அப்பா! உன்னையறிந்து கொண்டேன்; நான் ஆசார்ய வர்யரைத் துதிப்பதையே விரதமாகக் கொண்டவன்; உன்னை எங்ஙனம் துதிப்பேன்? என்னை சோதிக்கவந்தாயோ?" என்றேன்; அதற்கு அச்சிறுவன்—'இல்லையில்லை; என்னுடைய ஆசையை யறிவித்தபடி; என்னைச் சிறிது துதித்தநால் ஒரு கெடுதலும் வராது; ஆசார்ய ஸ்துதியேதான் எனக்கும் ப்ரியமானது. என்னையும் சிறிது துதிக்கலாமே-என்று சொல்லிக்கொண்டே சார்ங்கபாணியான அந்ததிவ்யபுருஷன்மறைந்துசென்றான். அடியேன் உடனே யெழுந்து தாயனாகி அந்த திவ்ய புருஷனுடைய கட்டளையை நிறைவேற்றத் தொடங்கி, அவன் திருக்கையில் தாங்கியிருந்த சார்ங்கத்தில் நவரத்னங்களைக் கண்டதனாலே நவரத்னமென்றே பெயரிட்டு ஒன்பது ச்லோகங்களை அம்மஹா புருஷன் விரும்பிய விருத்தத்திலேயே எழுதித் தலைக்கட்டினேன். இவ்வொன்பது ச்லோகத்தில் ஸ்ரீ ராமாயண கதை முழுவதும் ஸாரமாக அடக்கப்பட்டது. ஒவ்வொரு ச்லோகமும்

"ஜயஜய ஸ்ரீரகூத்வஹ! ஜயஜய ஸ்ரீரகூத்தம!" என்றே முடியும். அப்போது அடியேன் இவ்வளவோடும் நிறுத்தவில்லை; அநவரதமும் அடியேனுள்ளத்துள்ளே யுறையும் மணவாள மாமுனிகளையும், அவரது ப்ராசார்யரான பிள்ளை லோகாசாரியரையும் குறித்து ஏற்கெனவே துதிகள் விஜ்ஞாபித்திருந்தாலும், கனவில் கண்ட திவ்ய புருஷனுடைய திருவாக்கில் வெளிவந்த வார்த்தைகளை யநுஸரித்து அப்போது அவ்வாசாரியர்களிருவரைக் குறித்தும் இரண்டு ஸ்துதிகள் விஜ்ஞாபித்தேன். மாமுனிகள் விஷயமான ஸ்துதிக்கு ஸ்ரீமத்வரவரமுநீந்த்ரவிஜயமாலா என்று பெயர்: இது முப்பத்திரண்டு ச்லோகங்கள் கொண்டது. ஒவ்வொரு ச்லோகமும் 'ஜய ஜய ஸ்ரீமுநீச்வர! வரவர ஸ்ரீமுநீச்வர' என்றே முடிவு பெறுவது. மற்றொரு ஸ்துதி ஸ்ரீலோகாசார்ய கர்ணாம்ருதமென்பது. பத்து ச்லோகங்கள் கொண்டது. ஒவ்வொரு ச்லோகமும் * ஜயஜய ஸ்ரீகுருத்தம! ஜயஜய ஸ்ரீஜகத்குரோ!* என்றே முடிவுபெறுவது. ஆக இந்த மூன்று ஸ்துதிகளை அங்கே இயற்றினது ஆச்சரியமல்ல; அதற்குமேல் நடந்த ஆச்சரியம் கேண்மின். இந்த ஸ்துதிகளை அப்போதே அவ்விடத்திலேயே அச்சிடவேணுமென்று ஆசை தோன்றியது. போஜநாநந்தரம் நகரில் சென்று அச்சுக்கூடங்களை விசாரிப்போமென்றிருந்தேன். அந்த தாராகஞ்ஜிலேயே அதிஸமீபத்தில் 'பாரதவாஸீப்ரெஸ்' என்னுமச்சுக்கூடத்திற்குத் தலைவர் ப்ரதாப நாராயண சதுர்வேதி யென்பவர் இவர் எனக்கு முன்பின் பரிசயமில்லாதவர் பகவானால் ப்ரேரிதர்போலத் தாமாகவே என் ஜாகைக்குவந்து குசல ப்ரச்னங்கள் பண்ணித் தாம் முத்ராக்ஷர சாலாத்யக்ஷரென்பதைத் தெரிவித்து 'எனக்கு ஏதேனும் ஸேவைகிடைக்குமோ?' என்றார். என்ன சொல்லுவேன் நான்? அன்றே அப்போதே நான்கு மணி காலத்தில் மூன்று ஸ்துதிகளையும் அச்சிட்டுக் கொடுத்துவிட்டார். மேலே விவரித்தெழுதிய செய்திகளும் அதிலேயே அச்சிடப்பட்டன. இதற்கே அத்புத வார்த்தா ப்ரகாசமென்று பெயர். இந்த அத்புத வார்த்தையை ஏதோ நாவல் எழுதப்படுவதாகப் பிறர் நினைப்பர்களேயொழிய உண்மையென்று நம்புவது அரிதே. இங்ஙனம் வேறு யாரேனுமெழுதியிருந்தால் அதை நான் நம்பமாட்டேனன்றோ. பிறர் கருதுவது எங்ஙனேயாயினுமாகுக. என் அந்தரங்க ஸாக்ஷிகமான செய்திகளையெழுதி நான் ஆனந்தப்படக் குறையில்லையே. இது நடைபெற்று இற்றைக்குப் பதினன்கு வருஷங்கள் பூர்த்தியாகிறது. ஆனாலும் இன்றைய நிகழ்ச்சி போலவேயுள்ளது. இது நிற்க; இதிற்காட்டிலும் மிகவற்புதமான மற்றொரு செய்தியும் தெரிவிக்க வேண்டியதுண்டு; அதனை மேலே நெ. 62. ஸ்ரீராமபத்ரகர்ணாம்ருதத்தின் விவரணத்தில் காண்க,

59. ஸ்ரீராமரத்ந நவரத்நம் நாம ஸ்ரீராமாயண ரஸாயநம். இதைப்பற்றிக் கீழ் நெ. 58ல் விவரித்தாயிற்று.

60. ஸ்ரீலோகாசார்ய கர்ணாம்ருதம். இதைப் பற்றியும் கீழ் நெ. 58ல் விவரித்தாயிற்று.

61. ஸ்ரீ வரவரமுநீந்த்ர விஜய மாலா. இதைப் பற்றியும் கீழ் நெ. 58ல் விவரித்தாயிற்று.

62. ஸ்ரீ ராமபத்ர கர்ணாம்ருதம். கீழ் நெ. 58 ல் விவரித்த செய்திகளுக்குத் தொடர்ச்சியான மேற் செய்தி கேண்மின். ப்ரயாக க்ஷேத்ரத்திலிருந்து சித்ரகூடம் ஸேவிக்கச் சென்றேன். மந்தாகிநியின் கரையில் ஸுந்தரமான மந்திரத்தில் ரம்யமான ஹர்மியத்தில் படுத்துறங்குகின்றேன். முன்னாள் ப்ரயாக க்ஷேத்ரத்தில் காட்சி தந்த திவ்ய புருஷனை தன்னிற் காட்டிலும் மிக விஞ்சிய அழகுடையனாய்த் தனக்கு ஸமவயஸ்கனானவொரு தோழப் பிள்ளை

யோடுங் கூட வந்து அருகே நின்று மறுபடியும் தனது குதூஹலம் விஞ்சி வளர்ந்து வருவதாக ஏதேதோ பேசுகின்றான். 'அப்பா! உன்னுடன் வந்திருக்கின்ற இவனார்?' என்று கேட்டேன். அதற்கு 'அவனையே கேள்' என்றான். அப்படியே அவனைக் கேட்க முயன்ற போதே *இடவணரை யிடத்தோளொடு சாய்த்து இருகை கூடப் புருவம் நெறிந்தேறக் குடவயிறு படவாய்கடை கூடக் குழலூதிக் கொண்டு கருங்கண்தோகை மயிற் பீலி யணிந்து கட்டி நன்குடுத்த பீதக வாடையான திருக்கோலத்தைக் காட்டிக் கொண்டே தன் தோழனோடும் மறைந்தனன். தசரத நந்தந- நந்த நந்தனர்கள் ஏக காலத்திலே காட்சியளித்தருளப் பெற்ற களிப்பினால் உடனே யெழுந்து மந்தாகினியில் குடைந்தாடி ஸ்ரீராம பத்ர கர்ணாம்ருதம், கோபால பக்தாம்ருதம், கோவிந்த கீதாம்ருதம் என்கிற மூன்று துதிகளை விஜ்ஞாபித்து அவற்றை மறுநாளே காசியில் அச்சிடுவித்தேன். இவற்றுள் ஸ்ரீராம பத்ர கர்ணாம்ருதம் 84 சூர்ணிகைகள் கொண்டது. ஸ்ரீராமாயண கதைகளை வரிசையாகப் பேசுவது. இதில் 21, 22 சூர்ணிகைகள் காண்மின்—

* चित्रकूटविहारहर्षितयोगिमण्डलराघव * अत्र चित्रमनुग्रहं मयि दर्शयन् स्थित राघव *

என்பன; இங்குச் சொன்ன அநுக்ரஹமே கீழ் விவரிக்கப்பட்டது.

63. ஸ்ரீகோபால பக்தாம்ருதம். இதைப்பற்றிக் கீழ் நெ. 62ல் விவரித்தாயிற்று. இது 43 ச்லோகங்கள் கொண்டது. ஒவ்வொரு ச்லோகமும் *ஜயஜய ஸ்ரீயதூத்வஹ ஜயஜய ஸ்ரீச கேசவ* என்று தலைக்கட்டுவதிது. யாத்திரையில் காசியில் இது அச்சிடப்பட்டபோது அவகாசக் குறைவினால் 13 ச்லோகங்கள் மட்டுமே அச்சிடப்பட்டன; அதன் சேஷமான மற்ற முப்பது ச்லோகங்கள் (நெ.44) க்ஷேத்ர தீர்த்தயாத்ராதர்சத்தின் முடிவில் அச்சிடப்பட்டன.

64. ஸ்ரீகோவிந்த கீதாம்ருதம். இதைப்பற்றியும் கீழ் நெ. 62ல் விவரிக்கப்பட்டுள்ளது காண்க. இது 4 சூர்ணிகைகள் கொண்டது. நம்மாழ்வார் திருவாய்மொழியைப்பற்றி *பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்* என்றருளிச் செய்தாப் போலே இத் துதிநூல்கள் ஸம்ஸ்க்ருத வித்வான்களுக்கும் ஸங்கீத ரஸிகர்களுக்கும் பக்தி பரவசர்களுக்கும் மிக்க இனிமையைத் தருவனவாதலால் இவையும் மற்றுஞ் சிலவும் இத் தன்சரிதையின் முடிவில் அநுபந்தமாகச் சேர்க்கப்படும்.

65. ஸ்ரீமத் வரவரமுநி ஸ்தோத்ர ரஸாயநம். மேலே, நெ. 66 ஸ்ரீசைலேச தயாபாத்ர மங்களா சாஸநஸ்துதியில் (ச்லோ 27.) * जाग्रद्दशायामात्मीयदिव्यमङ्गलविग्रहम् । प्रदर्शितवते मह्यं प्राज्ञभोग्याय मङ्गलम् * என்று விஜ்ஞாபித்திருக்கிறபடி கனவிலன்றிக்கே நனவிலேயே அடியேனுக்கு மணவாள மாமுனிகள் ஸேவைஸாதித்தருளின விஷயம் அடியேனுடைய நூல்களையெல்லாம் ஆநுபூர்வியாகக் கடாக்ஷித்தவர்களுக்கு விசதம்; அப்படிப்பட்ட பரமாநுக்ரஹ மயரான மாமுனிகள் விஷயமாகப் பலபல ஸ்துதிகள் விஜ்ஞாபிக்க பாக்யசாலியானேன். கீழ் 56, 57, 61லக்க முள்ள மூன்று ஸ்துதி நூல்கள் தவிர, மேலே நெ. 79 வரையிலுள்ள பதினைந்து ஸ்துதிகளும் *அண்ணிக்குமமுதூறு மென்னாவுக்கே* என்னும்படி பரம போக்யமாக அமைந்தவை. இவையெல்லாம் யாத்திரையிலேயே விஜ்ஞாபிக்கப்பட்டவை. இவை தேவநாகரி தெலுங்கு க்ரந்த லிபிகளில் அச்சிடப்பட்டவை. பெரும்பாலும் தெளிவான தமிழுரையோடுங் கூடியவை. இவற்றுள் இந்த ரஸாயநஸ்துதி 32 ச்லோகங்கள் கொண்டது. ஸ்ரீசைலேச தயா பாத்ர மென்னும் தனியனிலுள்ள எழுத்துக்களின் வரிசையாக தீர்க்காக்ஷரமில்லாமல் ஹ்ரஸ்வாக்ஷரங்களையே அமைத்து இத் துதி நூல்

இயற்றப்பட்டது. பாதங்களின் முடிவில் மட்டும் தீர்க்காக்ஷர மிருப்பது விருத்தமன்று. இத்துதியில் தீர்க்காக்ஷரம் புகாமையினாலே ஸ்ரீசைலேசத் தனியனில் தீர்க்கமாகவுள்ள அக்ஷரங்களும் இதில் ஹ்ரஸ்வமாகவே யிருக்கும். எடுத்துக் காட்டாக இதிலிருந்து இரண்டு மூன்று ச்லோகங்களை இங்குத் தருவோம்;—

श्रितजनविरचितदुरितगणं क्षणलवविदलितमकुरुत यः ।

स दिशति वरवरमुनिगुरुराट् मम हृदि निजशुभतनुमनिशम् ॥ १ ॥

शमदममुखशुभगुणजलधे सुविशदविवरणकरणपटो ।

अनुदिनमिह भुवि तव यशसां ततिमहमनुभवविषयमधाम् ॥ २ ॥

निरवधिनिरुपममहिमनिधे वरमुनिवर ! तव शुभकृपया ।

अनुदिनमनुकलमुदयमियात् स्तुतिततिरनवधि गुणभरिता ॥ ३२ ॥

66. ஸ்ரீசைலேசதயாபாத்ர மங்களாசாஸநம்: ஸ்ரீசைலேசத் தனியனிலுள்ள எழுத்துக்களின் அடைவே ஒவ்வோரெழுத்துக்கு ஒவ்வொரு ச்லோகமாக இட்டு (அநுஷ்டுப்பில்) மணவாள மாமுனிகளின் மங்களா சாஸநபரமான 32 ச்லோகங்கள்கொண்டது; இதிலிருந்தும் சில ச்லோகங்கள் கேண்மின்;—

श्रीशठारियतीशानश्रीसूक्तचमृतपायिने । श्रीमत्सुन्दरजामातृमुनीन्द्रायास्तु मङ्गलम् ॥ १ ॥

शैशवात्प्रभृति श्रीमन्नारायणगुणाम्बुधौ । निमग्नहृदयायास्तु मुनिवर्याय मङ्गलम् ॥ २ ॥

लेखने विशदव्याख्यानिबन्धानां पटीयसे । लेलिहानेन्द्ररूपाय मुनीन्द्रायास्तु मङ्गलम् ॥ ३ ॥

नित्यकैङ्कर्यनिष्णातशेषावतरणात्मने । मुनये रम्यजामात्रे नित्यश्रीर्नित्यमङ्गलम् ॥ ३२ ॥

67. ஸ்ரீமத் வரவரமுநிகர்ணம்ருதம்: பகவத்விஷயத்தி லீடுபட்டவர்கள், *மணிவண்ணா! உன் சேவடி செவ்விதிருக்காப்பு* என்றநுஸந்திப்பது போல மணவாளமா முனிகளிடத்திலீடு பட்டவர்கள் *वरवर मुनिपदकमल! जय*வரவரமுநிபதகமல!ஜய' என்று எப்பொழுதுமநுஸந்தித்திருக்கப்ராப்த மாகையாலே இந்த வாக்யத்திலுள்ள 13அக்ஷரங்களின் வரிசையாக அமைந்த 13ச்லோகங்கள் கொண்டது இது. இதுவும் செ. 65, ரஸாயநஸ்துதி நூல்போலவே ஹ்ரஸ்வாக்ஷரமயம்.

वरवरमुनिवर ! तव चरणौ रविसममिह मम मनसि परम् ।

सुनियतमुदयत इति वदतो मम खलु जनिरिह सुफलवती ॥ १ ॥

लसतिहि भुवि बहुगुरुजनवाक् फलमिह न किमपि भवति तया ।

मुनिवर यदि तव न भवति गीः ध्रुवमिह सुविपुलतिमिरमहो ॥ ११ ॥

जगदिदमनवधिगुरुमरितं भवति हि, भवतु च गुरुनियुनम् ।

शुभगुणवरवरमुनिगुरुराडयमिह निरुपम गुरुपदभाक् ॥ १२ ॥

यतिपतिमतमिह विशदयितुं कृतजनिरिह भुवि वरमुनिराट् ।

विलसति मम हृदि परमकृपाजलनिधिरविरतममितमुदा ॥ १३ ॥

68. ஸ்ரீவரவரமுநிநக்ஷத்ரமாலா. முத்ராலங்காரரீதியில் நக்ஷத்ரங்களின் பெயர்களையிட்டு எழுத்தந்தாதியாக அமைக்கப்பட்ட 27 ச்லோகங்கள் கொண்டதிது; இதில் திருமூல நக்ஷத்ரச்லோக மொன்று கேளீர்;

जन्मशुद्धवैष्णवाग्र्यमानसोद्यदप्रमेयमोदमूलम् अद्वितीय भक्तियुक्तदिव्यसूरिसूक्ति.तत्त्वबोधमूलम् ।
लक्ष्मणार्यदर्शनीय निस्तुलार्थरत्नराशिजीवमूलम् अत्र सुन्दरोपयन्तृयोगिवर्य निस्तुलावतारमूलम् ॥१९॥

69. ஸ்ரீவரவரமுநி வாரமாலா: ஞாயிறு முதலான ஏழு வாரங்களையிட்டு அமைக்கப்பட்ட ஏழுச்லோகங்கள் கொண்டதிது. இதில் மங்கள வாரத்தின் ச்லோகம்—

पूर्वं सर्वे देशिकवर्याः शुभचर्याः यन्मूर्त्याऽत्र प्रादुरभूवन् समवेताः ।
तेनैतेन श्रीवरयोगिप्रवरेण श्रीमान् रङ्गी मङ्गलवारान्निधिरासीत् ॥

70. ஸ்ரீவரவரமுநிதிதிமாலா: ப்ரதமை முதலான 15 திதிகளையிட்டு அமைக்கப்பட்ட எழுத்தந்தாதியான 16 ச்லோகங்கள் கொண்டதிது. இதில் நவமிக்கும் ஏகாதசிக்குமான ச்லோகங்கள் கேளீர்;—

गीर्वाणवाचि सततं नवनवमीदृक्स्तुतीरहं रचयन् । रुचिरोपयन्तृमुनिवरसेवाहेवाकभरित एव स्याम् ॥९॥
तुष्यन् विवेकरेकादशीतिपाठीति केवलं विप्रः । यदि वरमुनीन्द्रफणितिषु वैदुष्यमियात्तदा स सर्वज्ञः ॥११॥

இந்த ச்லோகத்தின் பொருளாவது, விவேகரேகாத்—விவேகமின்மையாலே, अशीतिपाठीति केवलं तुष्यन् विप्रः—கிருஷ்ணயஜுர் வேதத்தில் எண்பது ப்ரச்நங்களை யோதி அவ்வளவினாலேயே தன்னை க்ருதக்ருத்யனாக நினைத்து மகிழ்கின்ற அந்தணன் அவ்வளவில் தருப்தியடைந்திடாமல் மணவாள மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளில் வல்லமை பெறுவானாயின் அவன் ஸர்வஜ்ஞனே யாவன் என்கை. யஜுர்வேதத்தில் "அசீதியுமாயிற்று" என்றன்றோ சொல்லிவருகிறார்கள்.

71. ஸ்ரீ வரவரமுனிபக்ஷமாலா: க்ருஷ்ணபக்ஷ சுக்லபக்ஷங்களையிட்டு அமைத்த துதி நூலிது; இது நடாதூரம்மாளுடைய பரமார்த்த ஸ்துதிபோன்று இரண்டே ச்லோகமாகையாலே பக்தர்கள் நித்யாநுஸந்தானம் செய்யப்ராப்தம்.

युगलं वरमुनिपद्योस्सततं हृदये विचिन्तयेयुर्ये । यशसा जगदिदमखिलं शुक्लयितुं ते ध्रुवं प्रवीणास्स्युः ॥
स्यूतां वरवरमुनिवरशुभगुणमुक्ताफलैरिमां मालाम् । कलयत सदैव कण्ठे कृष्णो भगवान् शुभानि वितरेद्वः ॥
पक्षमालामिमां वाचि शिक्षमाणेषु सादरम् । पक्षपाती भवेद्विष्णुः वक्षसा चाद्रियेत तान् ॥

72. ஸ்ரீவரவரமுநிமாஸமாலா: மேஷம், வ்ருஷபம் முதலான 12 மாதங்களையிட்டுச் செய்த துதிநூலிது.

(ककाराद्यक्षरानुपूर्वी प्रायशः)

कलानामेष* सर्वासां निधिर्वरवरो मुनिः । करोतु सततं वासं कृपया मम मानसे ॥१॥
खलानां दमनायैव कलयन्नुदयं भुवि । वरयोगीश्वरस्स्वामी वर्धतां पुरुषर्षभः ॥२॥

* मेषराश्यादिनिर्देशः क्रमेण द्रष्टव्यः ।

73. ஸ்ரீவரவரமுநிருதுமாலா: வஸந்தம், க்ரீஷ்மம் முதலான ஆறு ருதுக்களையிட்டுச் செய்த துதிநூலிது. இதைப் பூர்த்தியாகவே உபஹரிப்போமிங்கு.

सदैव सन्तो वरयोगिपादद्वंद्वैकचिन्तानिरता मदीये । चित्ते वसन्तो मुदमद्वितीयां सम्पादयन्तां नियतं दयन्ताम् ॥
हाहा भवग्रीष्मविशेषतप्ताः सद्यो विहातुं सकलांश्च तापान् । श्रीरम्ययोगीन्द्रपदाम्बुजन्मच्छायामुपाश्रित्य भवन्तु हृष्टाः
श्रीमच्छठारातियतीन्द्रमुख्यप्राचीनसूरीन्द्रगणावतारः । श्रीरम्यजामातृमुनीश्वरोऽयं वर्षायुतं जीवतु भक्तभोग्यः ॥३॥
श्रीमद्वचोभूषणदिव्यसूक्तिव्याख्यादिविख्यापितवैभवाब्धिः । श्रीरम्यतीन्द्रप्रवणो मुनीन्द्रः जेजेतु भूमौ शरदस्सहस्रम् ॥

योगीन्द्र ! हे मन्तरि :: मन्त्रराजं नित्यं त्वदीयं मयि दासदासे ।
श्रेयांसि भूयांसि तरङ्गयेथाः कारुण्यवातोत्थकटाक्षपूरैः ॥५॥

(टिप्पणी). ::हे योगीन्द्र त्वदीयं मन्त्रराजं मन्तरि मयि=त्वदीय श्रीशैलेशमन्त्रनित्यमनननिरते मयीति यावत् ॥
कारुण्यपूरैः शिशिरान्तरङ्गः कान्तोपयन्ता मुनिसार्वभौमः । एवं सदा मां स्वगुणावलीनां सङ्कीर्तनैकोत्सुकमातनोतु ॥
इत्थमृतुमालिकास्तुतिमभिराममुनीन्द्रगुणमयीं पठताम् । अण्णङ्गरार्यरचितामनुकूलमनघैव धीर्विजृम्भेत ॥

74. ஸ்ரீவரவரமுநயயநமாலா: தக்ஷிண, உத்தர அயனங்களையிட்டுச் செய்த துதி நூலிது. இதையும் இங்குப் பூர்த்தியாக அநுபவிப்பிக்கின்றேன்.

भवाब्धिसन्तारणदक्षिणानि श्रीसूक्तिरत्नान्यमृतोपमानि ।
संदत्तवान् कान्तवरोपयन्ता योगीश्वरो मे न जहाति चित्तम् ॥
सर्वोत्तरश्रीशठवैरिवाचां स्वादिष्ठमर्थं समयेऽनुगृह्णन् ।
रङ्गाधिराजादुपलब्धपद्यो रम्योपयन्ता मुनिरेव दैवम् ॥२॥
अयननाम निवेश्य कृतामिमां वरमुनीन्द्रनुतिं हृदि कुर्वताम् ।
अयनमुत्तममच्युत आदरात् वितरतीह परत्र च पश्यत ॥ ३ ॥

75. ஸ்ரீவரவரமுநிஸம்வத்ஸரமாலா: ப்ரபவ, விபவாதிகளான அறுபது வருஷங்களையுமிட்டுச் செய்த 60 ச்லோகங்கள் கொண்ட மிக விலக்ஷணமான துதிநூலிது. இதில் இரண்டு நியமங்கள் உண்டு; (1) வருஷத்தின் பெயரை ச்லோகத்தின் தொடக்கத்திலேயேவைப்பது. (2) ஒவ்வொரு ச்லோகத்திலும் ஆரம்பத்தில் எந்த எழுத்து உள்ளதோ அதுவே மற்ற மூன்று பாதங்களுக்கும் ஆரம்பத்தில் நிற்கும்படி செய்வது. இதில் சில ச்லோகங்களை இங்கு அநுபவிக்கத் தருகிறேன்.

प्रभवो बहवस्सन्ति प्रसिद्धा भुवि सन्तु ते । प्रज्ञानिधिर्वरो योगी प्रभुरेको विवेकिनाम् ॥१॥
विभवान्विविधान् सद्भ्यः वितरीतुं प्रकल्पते । विशिष्य वरयोगीन्द्रविभवध्यानवासना ॥२॥
शुक्लपक्षेन्दुवन्नित्यं शुद्धसत्त्वं प्रवर्धते । शुभ्रां रम्यमुनेर्मूर्तिं शुद्धे मनसि भेजुषाम् ॥३॥
प्रमोदोऽतनुरस्माकं प्रवृद्धिं हृदि विन्दति । प्रसिद्धवरयोगीन्द्रप्रभावध्यानहेतुना ॥४॥
प्रजोत्पत्तिकृतौ नित्यं प्रवीणो विष्णुरस्तु सः । प्रजानां प्रबोधार्थं प्रजज्ञेऽसौ वरो मुनिः ॥५॥
*आङ्गीरसकृदानन्दमावहन्तीर्महस्ततीः । आविष्कुर्वन्ममैवान्तरातिष्ठति वरो मुनिः ॥६॥
श्रीमुखाम्भोजनिर्गच्छच्छ्रीसूक्त्यमृतवर्षणैः । श्रीवैष्णवमतोद्धर्ता श्रीरम्यमुनिरेधताम् ॥७॥

* आनन्दमावहन्तीः, आङ्गीः=अङ्गसंबन्धिनीः(स्वदिव्यमङ्गलविग्रहस्येति यावत्) महस्ततीः । असकृदाविष्कुर्वन्

भवसागरसन्तारो भवत्विति यदीच्छथ । भक्तिं वरमुनीन्द्रस्य भव्योक्तिषु करिष्यथ ॥८॥

युवत्वं प्रापुषां मा भूद्यौवनस्य वृथा व्ययः । युक्तं सुन्दरजामातृयोगिश्रीसूक्तिचिन्तनम् ॥९॥

धातुसाम्ये सति स्वैरं धावद्भिः किं नु साध्यते । धारणार्हा सतां कण्ठे धार्यतां वरयोगिवाक् ॥१०॥

ईश्वरो जगतां विष्णुरीर्यते तत्र मन्महे । ईष्टे वरमुनीन्द्रोऽसौ ईश्वरस्यापि पोषणे ॥११॥

बहुधान्यधनेच्छाभिर्बहुधा भ्रमतां भुवि । बद्धानां वरयोगीन्द्रो बहुशो नैति मानसम् ॥१२॥

प्रेमा दिव्यप्रबन्धेषु प्रासव्येति समुत्सुकाः । प्राज्ञाः वरमुनीन्द्रोक्तीः प्रकामं चिन्तयन्त्विह ॥१३॥

(अथवा श्लोकान्तरम्)

प्रमाथि चञ्चलं चेति प्रोक्तं गीतासु यन्मनः । प्रसभं यो जिगायैतत् प्रसिद्धस्स वरो मुनिः ॥१४॥

रौद्रीं धनुर्लतामल्पां रामश्चिच्छेद किं नु तत् । रौद्रसंसारगुल्मौघान् रम्ययोगी छिनत्ति नः ॥५४॥

दुर्मतिध्वंसनीस्सूक्तीः दुग्धेस्म वरयोगिराट् । दूषयन्तः परे तास्तु दुरितान्यार्जयन्त्यहो ॥५५॥

दुन्दुभिध्वनततत्तूल्यै दूषणोक्तिविघोषणैः । दोषदूरस्थयोगीन्द्रं दूषयन्तो भुवो भराः ॥५६॥

रुधिरोद्गारिबाणौघान् रूक्षान् क्षेप्तुं पटुर्हरिः । रुचिरोक्तिभिरेवासौ रुन्धे सर्वान्वरोमुनिः ॥५७॥

रक्ता क्षिप्रं रसज्ञा मे रम्ययोगीन्द्रकीर्तने । रमारमणमुत्सृज्य रात्रिन्दिवमुदञ्चति ॥५८॥

क्रोधनो दारुणो मूर्खः क्रूर इत्युक्तिगोचरः । कोऽपि नैव भवेद्द्रंशे कान्तयोगीन्द्रसेविनाम् ॥५९॥

अक्षयास्सम्पदस्सर्वा अत्रामुत्र च लिप्सवः । अभिराममुनिस्तोत्रमनुसन्दधतामिदम् ॥६०॥

76. ஸ்ரீவரவரமுநிஸஹஸ்ரநாமஸ்தோத்ரம்: மணவாளமாமுனிகள் விஷயமான ஸஹஸ்ரநாமம்

लक्ष्मीनाथसहस्रनामरचनासंसक्तचित्तं तु मां लक्ष्मीशस्स हरि स्स्वयं करुणया स्वप्ने समाजग्मिवान् ।

श्रीमत्सुन्दरयोगिवर्यविषये स्तोत्रं कुरुष्वैतदित्याज्ञाप्यान्तरधात्ततो वरमुनिं स्तौमि दशस्त्रोत्रतः ॥

எம்பெருமான் விஷயமாக "அத்புத ஸஹஸ்ரநாமம்" என்று ஒரு ஸ்துதியியற்றத் தொடங்கினேனடியேன். அதில் அத்புதமாவது என்னெனில், ஒவ்வொரு திருநாமத்திலும் முடிந்த சொல்லையே (அல்லது எழுத்தையே) அடுத்த திருநாமத்தின் முதலாக அமைப்பது. இங்ஙனே எண்பது திருநாமங்கள் வரையில் இயற்றினேன். அவை வருமாறு:—

सर्वश्रुतिततिस्तुत्यः स्तुत्यमाहात्म्यशेवधिः । शेवधीभूतपादाब्जः पादाब्जाश्रितशोकहा ॥

शोकहारिनिजध्यानो ध्याननिष्णातसुग्रहः । ग्रहपीडादिसर्वार्तिसमूलोन्मूलनक्षमः ॥

क्षमादिसद्गुणाम्भोधिरम्भोधिशयनोत्सुकः । उत्सुकानन्तसद्भक्तहृत्सुखाधानतत्परः ॥

परमात्माऽऽत्मपादाब्जप्रणताशेषदैवतः । दैवतौघशिरोधार्यपादाब्जोऽब्जविलोचनः ॥

लोचनातिथिसद्भक्तमोचनोत्सुकमानसः । मानसैकनिधानार्हमहनीयशुभाश्रयः ॥

आश्रयाकांक्षिदेवेन्द्राद्याश्रितः श्रितमुक्तिदः । मुक्तिदानैकविख्यातः ख्यातसद्गुणसागरः ॥

[illegible]रोन्मथनोद्धर्षी हर्षिताशेषसज्जनः । सज्जनस्वान्तनिलयो लयसर्गादिकारणम् ॥

रणशूरो रमानाथोऽनाथरक्षाविचक्षणः । क्षणनिर्लूनसर्वाघो घनसंनिभसद्वपुः ॥

पुष्कराक्षः क्षमाशाली लीलामानुषविग्रहः । हतराक्षसदैत्यौघो घनसंनिभविग्रहः ॥

हनुमद्भक्तिसंतुष्टः तुष्टूषद्भक्तिवर्धनः । नक्राक्रान्तगजत्राता तापविध्वंसनोदयः ॥

यमसंयमनिष्क्षातमुनिप्रत्यक्षगोचरः । रक्षिताशेष भुवनो नमज्जनभवान्तकः ॥

कमलास्तनकस्तूरीकर्दमाङ्कितविग्रहः ।

இவ்வண்ணமாக இயற்றிக்கொண்டு செல்லுகையில் அன்றிரவு எம்பெருமான் பேருள்பொலியக் கனவிலே காட்சி தந்து "என் விஷயமான ஸஹஸ்ரநாம ஸ்துதிகள் பல இருப்பதால் மணவாள மாமுனிகள் விஷயமாக ஒரு ஸஹஸ்ரநாமம் இயற்றுவாயாக" என்று நியமித்து அந்தர்த்தானமடைந்த அதிசயம் வாசாமகோசரம். இது ஒரு யாத்திரையில் (பெஜவாடாவில்) கிருஷ்ணாநதீ தீரத்தில் நேர்ந்த ஸம்பவம். அந்த நியமனத்தை சிரஸாவஹித்து உடனே துயிலெழுந்து இந்த ஸ்ரீமத் வரவரமுநி ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமியற்ற ஆரம்பித்து அன்றே தலைக்கட்டினேன். எம்பெருமானின்னருளும் மாமுனிவனின் மஹாக்ருபையும் மிகவியக்கத்தக்கதாயிருந்தது

श्रीमान् सुन्दरजामातृमुनिस्संयमिसत्तमः । पर्यायभाष्यकृद्भोगिराजांशो भद्रवाक्प्रदः ॥

काषायवासाः कान्तोपयन्तृयोगी कलानिधिः । कांक्षिताशेषफलदः (१०) कामक्रोध विनाशनः ॥

यज्ञसूत्राञ्चितोरस्कः शिखाशेखरशोभनः । घोरसंसारकान्तारश्रान्तविश्रान्तिपादपः ॥

स्वपादाब्जसमासक्तभक्तसंतारणव्रती । कुदृष्टिध्वान्तमार्ताण्डः कुत्सितार्थ निषूदनः ॥

कुदृष्टिकुहनाच्छेत्ता कुदृष्टिमदमर्दनः । आर्जवैकान्तनिलयो (२०) भक्तवात्सल्यवारिधिः ॥

कौटिल्यदूरगस्सौम्यः सुन्दरास्यस्सुधीमणिः । अभिजातपदाम्भोजो नलिनायतलोचनः ॥

पुलकाञ्चित दिव्याङ्गः पुरुषोत्तम सेवनः । सर्वोपनिषदर्थज्ञः (३०) सर्ववेदार्थवित्तमः ॥

सर्वोपबृंहणाभिज्ञोऽभिज्ञशिष्यसमन्वितः । अष्टदिग्गजसच्छिष्याभिष्टुतोऽभीष्टपोषणः ॥

वानाचलमहायोगिवदनाम्भोजभास्करः । वाधूलदेशिकाद्युक्तस्तोत्रसंक्षिप्तवैभवः ॥

वादिभीतिकराचार्यवाग्विख्यापितवैभवः । भगवद्भक्तभक्ताग्र्यो गुणकीर्ताभिपूजितः ॥४०॥

वैराग्यशेवधिश्शिष्टाग्रेसरश्शेमुषीनिधिः । नैसर्गिकमहाभक्तिर्नैष्ठिकोऽनिष्टनाशनः ॥

श्रीशैलेशार्यसच्छिष्यश्शेषांशो ज्ञानशेवधिः । महायोगी (५०) महाप्राज्ञो महाभक्तो महामतिः ॥

श्रीरामानुजसिद्धान्तनिर्धारणधुरन्धरः । लोकाचार्यमहासूक्तिव्याख्याविख्यातवैभवः ॥

श्रीकासारादियोगीन्द्रदिव्यसूक्त्यभिवर्धनः । अविद्याध्वान्तसंहर्ता विश्वविद्याविशारदः ॥

अन्यथाज्ञानविध्वंसी * मन्युर्वैदेशिको (६०) महान् । अभिरामवराभिख्योऽनसूयुरनघश्शुचिः ॥

अव्याजकरुणासिन्धुरार्तबन्धुरमेयधीः । अत्याश्चर्यवचोदाता दान्तिशान्त्यादिशेवधिः ॥७०॥

कैवल्यनित्यमुक्तित्वसंस्थापनसमर्थधीः । सकृत्प्रणामानुष्ठानसौवादवसमर्थनः ॥

नव्यनव्यदुराचारवैमुख्योत्पादनोक्तिदः । द्राविडाम्नायविद्वेषिदुरध्वविनिवारकः ॥

*கோபமென்பது இருக்குமிடமே தெரியாதவர்.

अशुद्धमतनिष्ठोक्तदुरर्थक्षेपदक्षिणः । विशुद्धसंप्रदायस्थसुशुद्धहृदयालयः ॥
विवक्षितार्थविशदीकारदक्षवचःप्रदः । प्रदत्तसर्वसौभाग्यो भाग्यभूमप्रदर्शितः ॥
प्रदर्शितविशेषार्थः (९९०) प्रदर्शितमहागुणः ॥
प्रदर्शितमहावर्त्मा प्रदर्शितमहानिधिः । प्रदर्शितमहाभूमा प्रदर्शितसुविग्रहः ॥
प्रदर्शितस्वपादाब्जः प्रदर्शितमहाकृपः । कृपाविभवसन्दत्तसुपावनवचस्ततिः ॥
वचस्ततिसहस्राहविश्रुतामितवैभवः । परस्सहस्रनामौघप्रकाश्यमहिमार्णवः ॥१०००॥
अहोरात्रमदुद्गीतमहोतुङ्गवचःप्रदः । अनारतमदुद्गीतस्वनामावळिहृष्टहृत् ।
पवित्रीकृतमज्जन्मा पवित्रीकृतमद्वचाः । पवित्रीकृत मद्वंशः पवित्रीकृतमन्मनाः ॥
श्रीवादिभीकराचार्यश्रीमत्कुलमहाधनम् । अण्णङ्गराख्याविख्याततदासमानसवासभाक् ॥१००८॥

श्रीमद्वरवरमुनि सहस्रनामस्तोत्रं समाप्तम् ॥

77. ஸ்ரீவரவரமுநயஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரம்:

सहस्रनामकीर्तनेऽप्यतृप्तिपूर्णमानसं पुनःपुनस्स्वदिव्यनामकीर्तनैकदीक्षितम् ।
जनंत्विमं वरोमुनिः कृपानिधिः प्रसन्नधीः पुनश्च चोदयत्यहो शताभिधानकीर्तने ॥
श्रीशैलेशदयापात्रं धीभक्त्यादिगुणार्णवः । यतीन्द्रप्रवणो वन्द्यो रम्यजामातृयोगिराट् ॥
यतीन्द्रापरपर्यायः पर्यायभुजगेश्वरः । वाचस्पतिर्विशदवाक्चूडामणिरमेयधीः ॥१०॥
श्रीमत्परमहंसार्यस्तत्वज्ञानविवर्धनः । यथाभूतार्थकथनो यथादृष्टार्थबोधनः ॥
गुणानुभवकैङ्कर्यनैयत्यनिरताग्रणीः । आचार्यप्रेमसंपत्तिसमुज्ज्वलितमानसः ॥
आभ्यन्तरदृढप्रेमा बाह्याडम्बरवर्जितः । सर्वप्रमाणसंग्राही सर्वभूतसुहृत्तमः ॥
सर्वपापफलध्वंसी सर्वपुण्यफलप्रदः । सर्वदेशदशाकालसमिन्धानयशश्चय ॥१००॥
सर्वदेवाळयस्तोमसमुद्घोषितवैभवः । सत्संप्रदायसिद्धान्तसंवर्धनविचक्षणः ॥
सर्वदेवालयाराध्यदिव्यमङ्गलविग्रहः । सर्वशास्त्रार्थवैशद्यसमुत्पादकसूक्तिदः ॥
सर्वसूरिगणांशात्मा सर्वविज्ञानसागरः । सर्वाचार्यसमुत्तुङ्गस्सर्वरक्षकरक्षकः ॥१०८॥
एवमष्टोत्तरशतानर्घनामस्तुतिश्शुभा ॥
श्रीमत्सुन्दरजामातृमुनिनामावळीम् मुदा । सदा चिन्तयतां गेहे सर्वसंपद्ध्रुवा ध्रुवा ॥

श्रीमद्वरवरमुनये नमः ॥

78. ஸ்ரீவரவரமுநிமங்களாசாஸநஸ்தோத்ரம்: *"ஸ்ரீமதே ரம்யஜாமாத்ருமுநீந்த்ராய மஹாத்மநே, ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீர் நித்யமங்களம்."* என்னும் ஸுப்ரஸித்த ச்லோகத்திலுள்ள 32 அக்ஷரங்களின் வரிசையிலிட்டு அமைத்த துதியிது. இதையும் இங்கே பூர்த்தியாக அநுபவிக்கத்தருகிறேன்.

श्रीमते रम्यजामातृमुनीन्द्राय महात्मने । श्रीरङ्गवासिने भूयान्नित्यश्रीर्नित्यमङ्गलम् ॥
इत्येतत्पद्यरत्नस्थवर्णानुक्रमशोभिताम् । रचये रम्यजामातृमुनिमङ्गलमालिकाम् ॥

श्रीरामानुजयोगीन्द्रदर्शनोद्धारकारिणे । श्रीमते रम्यजामातृमुनिवर्याय मङ्गलम् ॥१॥
मय्येव करुणां नित्यमप्रमेयां वितन्वते । मनीषिभिरुपास्याय महाचार्याय मङ्गलम् ॥२॥
तेजोराशिमयं स्वीयं दिव्यमङ्गलविग्रहम् । आविष्कृतवते मह्यमाचार्येन्द्राय मङ्गलम् ॥३॥
रङ्गनाथसमुद्गीतमन्त्रविख्यातकीर्तये । रम्यजामातृमुनये चित्तभोग्याय मङ्गलम् ॥४॥
यतीन्द्रयामुनार्यादिदिव्यसूक्त्यर्थदायिने । यतीन्द्रप्रवणायास्तु यतिवर्याय मङ्गलम् ॥५॥
जानकीजानिमुत्सृज्य देवराजगुरुस्तु यम् । अर्च्यमङ्ग्यकरोत्तस्मै आचार्येन्द्राय मङ्गलम् ॥६॥
माता पिता सुहृद्भ्राता सर्वं च नियमेन यः । मद्वंश्यानां भवत्यस्मै महाचार्याय मङ्गलम् ॥७॥
तृणीकृतविरिञ्चादिमहैश्वर्याय योगिने । महते महतां बृन्दैर्महितायास्तु मङ्गलम् ॥८॥
मुदा सदा शठारातिमुखसूक्त्यर्थवर्षिणे । मुग्धस्मिताञ्चितास्याय मुनीन्द्रायास्तु मङ्गलम् ॥९॥
नीचानपि महोत्तुङ्गान् कुर्वते कृपया स्वया । निर्निमेषानुभाव्याय मुनये नित्यमङ्गलम् ॥१०॥
द्राघीयसीं कृपां दिव्यां दिशते मयि संततम् । द्राक्षापाकोक्तिदक्षाय मुनीन्द्रायास्तु मङ्गलम् ॥११॥
यत्सूक्तिलवलेशार्थवेदिनां तत्त्ववेदिता । प्रथिता मुनये तस्मै प्राज्ञभोग्याय मङ्गलम् ॥१२॥
ममैव मुखतो नित्यं महतां मोददायिनीः । स्तुतीरुत्सृजते बह्वीः स्तुतियोग्याय मङ्गलम् ॥१३॥
हालाहलनिभैरुक्तैरप्यनुद्विग्नचेतसे । हसदाननपद्माय मुनीन्द्रायास्तु मङ्गलम् ॥१४॥
मञ्जूनि सूक्तिरत्नानि मनीषिभ्यो ऽनुगृह्णते । मान्याय महितैर्नित्यं महाचार्याय मङ्गलम् ॥१५॥
नेदीयानेव वैकुण्ठो यत्पदाम्बुजसेविनाम् । नित्याराध्याय मुनये तस्मै स्यान्नित्यमङ्गलम् ॥१६॥
श्रीमल्लोकगुरूत्तंसश्रीसूक्त्यमृतरक्षिणे । श्रीमच्छेषावताराय मुनीन्द्रायास्तु मङ्गलम् ॥१७॥
रङ्गनाथमनोहारिदिव्यश्रीसूक्तिराशये । रम्याय योगिराजाय रम्यगात्राय मङ्गलम् ॥१८॥
गतागतजुषां पुंसां संसारमरुकानने । शरणाय मुनीन्द्राय शरण्यायास्तु मङ्गलम् ॥१९॥
वारणाचलनाथस्य मङ्गलाशासनं मुदा । वितन्वानाय मुनये विद्वद्भोग्याय मङ्गलम् ॥२०॥
सितपक्षेन्दुवन्नित्य समिन्धानसुकीर्तये । सार्वभौमाय यमिनां सुन्दरार्याय मङ्गलम् ॥२१॥
नेत्रे सत्संप्रदायस्य दात्रे सर्वार्थसंपदाम् । पात्रे भवाब्धिमग्नानां त्रात्रे मे नित्यमङ्गलम् ॥२२॥
भूयसां श्रेयसां राशिं भूयोभूयः प्रयच्छते । भूजुषां भाग्यरूपाय भूयादार्याय मङ्गलम् ॥२३॥
यामुनार्ययतीन्द्रादिहृदयाम्भोजभानवे । धेनवे सूक्तिदुग्धानां मम दैवाय मङ्गलम् ॥२४॥
निधिवन्नित्यभोग्यानां श्रीसूक्तीनां ततीरिह । विश्राणितवते विश्वविद्याभिज्ञाय मङ्गलम् ॥२५॥
मर्त्यैर्बहुभिरप्यन्यैरलभ्यां भक्तिसंपदम् । मह्यं दत्तवते प्रेम्णा माननीयाय मङ्गलम् ॥२६॥
श्रीवाग्भूषणसच्छास्त्रमहार्थामृतवर्षिणे । श्रीमत्कान्तोपयन्त्राख्यजीमूतायास्तु मङ्गलम् ॥२७॥
निरयान् विविधान् गन्तुं सन्नद्धानपि चक्षुषा । वीक्ष्योज्जीवयते विद्योदन्वते नित्यमङ्गलम् ॥२८॥
यदृच्छया स्वनामानि कथञ्चिद्वदतामपि । अघानि हरते भूयादाचार्येन्द्राय मङ्गलम् ॥२९॥
मंदानामप्यमन्दानां शुद्धधीभक्तिसंपदाम् । अद्वेषमात्रतो दात्रे मुनीन्द्रायास्तु मङ्गलम् ॥३०॥

गतिर्गम्यं मुमुक्षूणां यस्यैव चरणौ सताम् । तस्मै सुन्दरजामातृमुनिवर्याय मङ्गलम् ॥३१॥

लक्ष्मणार्यावतारश्रीलक्ष्मणा भूषितात्मने । सौम्यजामातृमुनये नित्यश्रीर्नित्यमङ्गलम् ॥३२॥

मङ्गलाशासनस्तोत्रमिदं वरमुनीशितुः । शृण्वतां वदतामस्तु नित्यश्रीर्नित्यमङ्गलम् ॥

79. ஸ்ரீவரவரமுநிதண்டகஸ்துதி: மணவாள மாமுனிகளின் வைபவங்களைப் பெரிய தண்டகங்களெட்டினால் விஜ்ஞாபித்த நூல் இது. தேவநாகரி தெலுங்கு லிபிகளில் அச்சிடப்பட்டது. விரிவான தமிழுரையுமிதற்குண்டு.

80. ரஹஸ்யத்ரயச்லோகமாலிகா: முமுக்ஷுப்படி ரஹஸ்யத்தை ஓரக்ஷரம் விடாமல் பரிபூர்ண மொழிபெயர்ப்பாகச் செய்த 234 ச்லோகங்கள் கொண்ட நூலிது. இதைப்பற்றியும் மேலே 81, 82 லக்கமுள்ள நூல்களைப்பற்றியும் இத் தன் சரிதையில் கீழ் இரண்டாம் பகுதியில் (பக்கம் 87, 88ல்) விரிவாக எழுதப் பட்டுள்ளவை காண்க.

81. தத்வத்ரயச்லோகமாலிகா: தத்வத்ரயமென்னும் ரஹஸ்யத்தை ஓரக்ஷரம் விடாமல் பரிபூர்ண மொழிபெயர்ப்பாகச்செய்த 212 ச்லோகங்கள்கொண்ட நூல்.

82. ஸ்ரீவசநபூஷணச்லோகமாலிகா: ஸ்ரீவசநபூஷண ரஹஸ்யத்தை ஓரக்ஷரம்விடாமல் பரிபூர்ண மொழி பெயர்ப்பாகச் செய்த 440 ச்லோகங்கள் கொண்ட நூலிது. நெ. 80, 81, 82 இம் மூன்று நூல்களும் தேவநாகரலிபியிலும் தெலுங்கு லிபியிலுமுள்ளன. 80 நெ. நூல்மட்டும் க்ரந்தலிபியிலுமுள்ளது.

83. வேதாந்தஸர்வஸ்வம்: தத்வத்ரயத்தின் மணவாள மாமுனிகளின் வியாக்யியா னத்தைத் தழுவி மிகவிரிவாக எழுதப்பட்டது. மூன்று ப்ரகரணங்கள் கொண்டது. இதில் முக்கால் பாகம் அச்சிடப்பெற்றது. அச்சிட்ட பாரங் கள் பாதிபாகம் செல்லரிக்கப்பட்டனவாதலால் அநுத்ஸாஹத்தினால் இது பூர்த்தி செய்யப்படாமலிருக்கிறது.

84. ஸம்ப்ரதாயஸித்தாஞ்ஜநம்: தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸாரார்த்தங்களை யுணர்த் தும் 100 ச்லோகங்கள் கொண்ட நூலிது. இந்த ச்லோகங்களெல்லாம் அத் ருஷ்டார்த்த ஸர்வஸ்வம், ஸதாசார்யஸம்ச்க்திரக்ஷா முதலான ஸ்வகீய (மணி ப்ரவாள) க்ரந்தங்களில் ஆங்காங்கு மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிற வத்தனையல்லது தனிநூலாக வெளியிடப்படவில்லை. இனி வெளிவரும்.

85. அத்யமே பத்யார்த்த சததூஷணீ: ஸ்ரீராமாயண யுத்த காண்டத்தில் ஸமுத்ர சரணாகதி ப்ரகரணத்திலுள்ள *அத்ய மே மரணம் வாபி தரணம் ஸாக ரஸ்ய வா * என்கிற ச்லோகத்தின் அர்த்த விஷயமாக 20 வருஷங்களுக்கு முன்பு பிரபலமான வாத விவாதங்கள் க்ரந்த மூலமாக நடந்தன. மேலே யெடுத்த ச்லோகத்தில் 'மே தரணம், ஸாகரஸ்ய மரணம்' என்கிற அந்வய க்ரமந்தான் பூர்வாசார்யாபிமத மென்றும், அதுவே தான் யுக்த மென்றும் சில வித்வான்களின் வாதம்; இது ஸர்வாத்மநா அஸங்கத மென்பதை அடி யேன் ஸ்தாபித்து மணி ப்ரவாளத்தில் சில நூல்களெழுத நேர்ந்தது. அது மேலே தமிழ்ப் பகுதியில் விசதமாகும். இந்த விவாதத்தில் அடியேன் முடி வாக எழுதின ஸம்ஸ்க்ருத க்ரந்தமிது. இந்த சததூஷணியில் பஞ்ச விம்சதி தூஷணங்களே முதற்பகுதியாக அச்சிடப்பட்டன. மேற் பகுதிகள் வெளி வர வேண்டாவென்று ஸாமரஸ்யத்தில் தலைக்கட்டிற்று.

86. பகவத் ராமாநுஜஹ்ருதயம்: அரிஜன ப்ரவேச இயக்கத்தில், விசால ஹ்ருதயம் படைத்த பகவத் பாஷ்யகாரருக்கு இது ஸம்மதமே யாகும் என்று சிலர்

வாதித்தபோது அவருடைய ஹ்ருதயவைசால்யம் எப்படிப்பட்டதென்று ஒழுங்கான முறையில் பரிசீலனைசெய்து வடமொழியில் எழுதப்பட்ட நூலிது.

87. மங்களாசாஸந பத்யமாலா : திருப்பல்லாண்டு திவ்யப்ரபந்தத்திற்கு நேர் மொழி பெயர்ப்பான ச்லோகமாலிகை. இந்த 87 லக்கத்திலிருந்து 98 லக்கம் வரையிலுள்ள 12 நூல்களும் திவ்ய ப்ரபந்தங்களுக்கு ச்லோக ரூபமாக மொழி பெயர்ப்பான நூல்களாகும்.

88. பட்டநாத ஸூக்த சதகம் : பெரியாழ்வார் திருமொழியில் ஒவ்வொரு பதிகத்திற்கும் ஸாரமாக ஒவ்வொரு ச்லோகம்; தவிர, இன்சுவை மிக்க சில பதிகங்களுக்குப் பூர்த்தியாக ச்லோகங்கள் ; இடையிடையில் ரஸகனமான பாசுரங்களுக்கு ச்லோகங்கள்; இவ்வண்ணமாக 100 ச்லோகங்கள் கொண்டது இது.

89. ஸ்ரீகோதாவ்ரதப்ரபந்த பத்யாவலீ : திருப்பாவை முப்பதுக்கும் 30 ச்லோகங்கள்.

90. ஸ்ரீகோதாஸூக்த பத்யாவலீ: நாச்சியார்திருமொழிபதிகங்களின்ஸார ச்லோகங்கள்.

91. ஸ்ரீகுலசேகர ஸூக்தபத்யாவலீ : பெருமாள் திருமொழி பதிகங்களின் ச்லோகங்கள்.

92. ஸ்ரீமாலாப்ரபந்த பத்யாவலீ : திருமாலைக்குப் பூர்த்தியாக ச்லோகமாலிகை.

93. மதுரகவி ஸூக்த பத்யாவலீ : கண்ணிநுண்சிறுத்தாம்பு ச்லோக மாலிகை.

94. ப்ருஹத்ஸூக்த பத்யாவலீ : பெரியதிருமொழியாயிரத்திற்கும் பதிகங்களின் ஸாரமாக ச்லோகமாலிகை.

95. திருவாசிரிய ப்ரபந்த தண்டகம் : திருவாசிரியம் ஏழு பாட்டுக்கும் ஏழு தண்டகம்.

96. ஸ்ரீபரகாலரதப்ரபந்த தண்டகம்: திருவெழுகூற்றிருக்கைமுழுவதும் ஒரே தண்டகம்.

97. லகுபாலீப்ரபந்த ப்ரதிக்ருதி: : சிறியதிருமடலுக்கு ஆர்யாவ்ருத்த ச்லோகமாலிகை.

98. குருபாலீப்ரபந்த ப்ரதிக்ருதி: : பெரியதிருமடலுக்கு ஆர்யாவ்ருத்தச்லோகமாலிகை.

99. மங்களாசாஸநப்ரபந்த வ்யாக்யா : திருப்பல்லாண்டுக்கு விரிவான ஸம்ஸ்க்ருத வியாக்கியானம். இந்த லக்கம் முதல் மேல் 116 லக்கம் வரையிலுள்ள 18 நூல்களும் திவ்ய ப்ரபந்தங்களுக்கு எளிய தெளிய ஸம்ஸ்க்ருத வியாக்கியானங்கள். அடியேனுடைய வாழ்க்கையில் இவை யெழுதப் பெறுகையே அநிதரஸப்யமான பரமபாக்யம்.

100. ஸ்ரீபட்டநாத ஸூக்தவ்யாக்யா : பெரியாழ்வார் திருமொழிக்குப் பூர்த்தியாக ஸம்ஸ்க்ருத வியாக்கியானம். இது தேவநாகரலிபியிலும் தெலுங்கு லிபியிலும் அச்சிடப்பட்டது.

101. ஸ்ரீகோதாவ்ரத ப்ரபந்த வ்யாக்யா : திருப்பாவைக்கு மிகவிரிவான ஸம்ஸ்க்ருத வியாக்கியானம் ; ஸ்வாப தேசார்த்தங்களும் நிரம்பியது.

102. ஸ்ரீகோதா ஸூக்த வ்யாக்யா : நாச்சியார் திருமொழிக்குப் பரிபூர்த்தியான ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

103. ஸ்ரீகுலசேகர ஸூக்தவ்யாக்யா : பெருமாள் திருமொழிக்குப் பூர்த்தியான ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

104. ஸ்ரீபக்திஸார திவ்யஸூக்திவ்யாக்யா : திருச்சந்த விருத்தத்திற்குப் பூர்த்தியான ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

105. ஸ்ரீமாலாப்ரபந்த வ்யாக்க்யா : திருமாலைக்குப் பூர்த்தியான ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

106. ஸுப்ரபாத திவ்யப்ரபந்த வ்யாக்க்யா : திருப்பள்ளி யெழுச்சிக்கு ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

107. முநிவாஹநஸூரிஸூக்திவ்யாக்க்யா: அமலனாதிபிரானென்கிற திவ்யப்ரபந்தத்திற்கு ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

108. மதுரகவி ஸூக்தவ்யாக்க்யா : கண்ணிநுண் சிறுத்தாம்புக்கு ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

109. ஸ்ரீபரகால ஸூரிஸூக்தவ்யாக்க்யா : திருமங்கையாழ்வாரருளிச் செய்த பெரிய திருமொழியாயிரத்திற்கு ஸம்ஸ்க்ருதவியாக்கியானம். இது, முதற்பத்துக்கு முடிந்து இரண்டாம் பத்துக்கு அச்சாகி வருகின்றது. க்ரமேண முடியும்.

110. திருவாசிரிய ப்ரபந்தவ்யாக்க்யா : நம்மாழ்வாரருளிச் செய்த திருவாசிரிய மேழு பாட்டுக்கும் ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

111. ஸ்ரீபரகாலரதப்ரபந்த வ்யாக்க்யா : திருமங்கையாழ்வார் ரதபந்தத்தி லமைத்து அருளிச்செய்த திருவெழு கூற்றிருக்கைக்கு ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

112. லகுபாளீப்ரபந்த வ்யாக்க்யா : சிறிய திருமடலுக்கு ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

113. குருபாளீப்ரபந்தவ்யாக்க்யா : பெரியதிருமடலுக்கு ஸம்ஸ்க்ருத வியாக்கியானம்.

114. ஸஹஸ்ரகீதிவ்யாக்க்யா : திருவாய்மொழியாயிரத்திற்கு ஈடுமுப்பத்தாறாயிரப்படியைத் தழுவிய வடமொழி வியாக்கியானம். க்ரமேண அச்சாகி வருகிறது.

115. ப்ரபந்த காயத்ரீவ்யாக்க்யா : திருவரங்கத்தமுதனாருளிச் செய்த இராமாநுச நூற்றந்தாதிக்கு ப்ரபந்த காயத்ரியென்று ஸம்ப்ரதாய வ்யபதேசம். அதற்கு ஸம்ஸ்க்ருத வியாக்கியானமிது.

116. ஸ்ரீகோதாஸூக்தஸர்வஸ்வம் : நாச்சியார் திருமொழி ஒவ்வொரு பதிகத்தின் ஸாரார்த்தங்களை விவரித்தெழுதிய வடமொழி வியாக்கியானம்.

இடையில் முக்கிய விஜ்ஞாபனம்.

இந்த ஸம்ஸக்ருத க்ரந்தாவளியில், லக்கம் 4, 5, 24, 87 முதல் 116 வரை. ஆக முப்பத்திரண்டு நூல்கள் திவ்யப்ரபந்த திவ்யார்த்த விசேஷங்களைப் பத்ய ரூபமாகவும் கத்ய ரூபமாகவும் மொழி பெயர்த்தவை. இவ்வளவும் தேவநாகரலிபியில் (பெரும்பாலும்) இருமுறை அச்சாகி வடநாடுகளில் விசேஷப்ரசார மடைந்திருப்பவை. இவை தெலுங்கு லிபியிலும் அச்சாகி வருகின்றபடியால் ஆந்திர தேசத்தாரும் இவற்றை யநுபவித்து வருகிறார்கள். கீழ் கெ. 65 முதல் 79 வரை விவரிக்கப்பட்டுள்ள துதி நூல்களை விஜ்ஞாபனம் செய்ததற்குப் பலனாகவே இந்த திவ்ய ப்ர பந்த விவர்த்த நூல்களை அநாயாஸமாக எழுதவும் அச்சிடவும் பாக்கியம் வாய்த்ததென்று அடியேனுடைய அத்யவஸாயம். மிக முக்கியமான இக் கைங்கரியம் இடையூறின்றி விரைவில் பூர்த்தியாகாதபடிக்கு வெவ்வேறு துறைகளில் பலபலவும் எழுத வேண்டும்படி நேர்ந்து விடுகிறது. இடையூறுகள் அகலவேணுமென்று ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளில் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

117. அபிநவதயாசதகம் : எம்பெருமானுடைய தயையென்னும் குணத்தை, நவீனர்களின்வாதங்களை நிச்சேஷமாகநிரஸித்து நிஷ்கர்ஷிக்கும் பத்யப்ரபந்தம்.

இது இரண்டு சதகமாக அமைந்துள்ளது. மொத்தம் 230 சுலோகங்கள் கொண்டது. ஒரு ஆசார்யருக்கும் மற்றொரு ஜிஜ்ஞாஸுவுக்கும் ஸம்வாத ரூபமாக அமைக்கப்பட்டது. இதில் வாதியாய் நின்றவர் D. T. தாதாசார்யர். இந்நூல் தேவநாகரியிலும் தெலுங்குலிபியிலும் வெளிவந்தபின்பு தயாகுண தூஷணத்தில் உபசாந்தராயினர்.

118. அபிநவதயாசதகதாத்பர்யஸார: : கீழ் 117 லக்கமுள்ள நூல் ச்லோகரூபமானபடியால் அதன்கருத்தை எளிதாகத் தெரிந்துகொள்வதற்குப்பாங்காக அந்த ச்லோகங்களுக்குச் சார்பாகவே எழுதப்பட்ட கத்ய ப்ரபந்தம்.

119. மதிரேக்ஷணார்த்தமாதுர்யம் : கீழ் நெ. 28 மதிரேக்ஷணார்த்ததத்வம் என்கிற நூலுக்குப்பிறகு வெளிவந்த சில துர்வாதங்களுக்கு நிரஸநம். இதில் ப்ராஸங்கிகமாகப் பல விஷயங்கள் சர்ச்சிக்கப்பட்டுள்ளன.

120. ஸஹ்ருதய ஸௌபாக்யம் : கீழ் நெ. 30 ரஸிகரஸாயநமென்னும் நூலைப்பற்றி எழுதியிருந்த விஷயங்களை மறந்திருந்தால் மறுபடி ஒரு விசை கண்டு கொள்வது. அந்த நபரைக் குறித்துப் பலபல நூல்கள் வெளியிட நேர்ந்தபடியால் அவற்றுள் இதுவுமொன்று. ரஸிகவித்வான்கள் இந்நூலை நேராக வாசித்துக் களிக்கவேணுமே யல்லது இங்கு ஸாரஸம்க்ஷேபம் செய்வதனால் பலனொன்றும் தேருது. இந்த நபர் தாம் பெரிய பண்டிதரென்றும் தம்முடைய வாதங்களே வெற்றி பெறக்கூடியவை யென்றும் வெற்றி பெற்றுவிட்டனவென்றும் சிலரிடத்தில் சொல்லிக் கொள்வதாகக் கேள்விப்பட்டு வருகிறோம். உண்மையில் இவர் ஒவ்வொரு விஷயத்திலும் பங்கப்பட்டவரேயல்லது ஒருவிஷயத்திலும் ஸாதுத்வத்தை நிரூபித்து நிலைநாட்டிக் கொள்ளவில்லை. ஒன்றே பார்க்கலாம். தேசிகன் யாதவாப்யுதயத்தில் கோவர்த்தநோத்தரண ப்ரகரணத்தில் *அதியஜேத நிஜாம் யதி தேவதாம்* என்றொரு ச்லோகமருளிச் செய்திருப்பது ப்ரஸித்தம். இது குவலயாநந்தத்தில் அப்பய தீக்ஷிதரால் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. இதில் உத்தரார்த்தத்தில் * क्षितिभृतैव सदैवतका वयम्-க்ஷிதிப்ருதைவ ஸதைவதகா வயம் * என்று பெரும்பாலும் பாடம் வழங்கி வருகிறது; இங்கே (ஸதைவதகா:) என்ற பதம் கவனிக்கத்தக்கது. அப்பய்ய தீக்ஷிதரும் இப்படியே பாடம் கொண்டார். குவலயாநந்தத்திற்கு 'புதரஞ்ஜநீ' என்றொரு சிறந்த வியாக்கியானமெழுதியவர் அதில் உதாஹ்ருதமான இந்த யாதவாப்யுதய ச்லோகத்திற்கும் வியாக்கியானமெழுதுகையில் "" आपोऽन्यतरस्याम् इति ह्रस्वः " என்றெழுதியுள்ளார். இதை நோக்கினால் இந்த வியாக்கியான கர்த்தா (ஸதைவதகா:) என்று பாடம் கொள்ளாமல் 'ஸ தேவதகா:' என்று பாடங் கொண்டாரென்பது அநாயாஸமாக அறியக்கூடியது. 'ஸதைவதகா:' என்று பாடம் கொண்டிருந்தாராகில் இங்கு * ஆபோந்யதரஸ்யாம் * என்று வியாகரணம் காட்ட வேண்டிய ப்ரஸக்தியே கிடையாது. இந்த யாதவாப்யுதய ச்லோகம் * यो वै स्वां देवतामतियजते प्र स्वायै देवतायै च्यवते * என்கிற ச்ருதியைக்கொண்டே அவதரித்ததாகையாலும், அந்த ச்ருதியில் ஒரு தடவைக்கு இரு தடவையாக தேவதா சப்தமே யுள்ளதன்றி தைவத சப்த மில்லையாகையாலும் * வேதஸநாபி ஸ்வோக்தி விநோதரான தேசிகன் 'ஸதேவதகா:' என்று தான் அருளிச்செய்தாரென்று உறுதிகொண்ட புதரஞ்ஜநீகாரர் அதற்குச்சேர வ்யாகரணோபபத்தியையும் காட்டி வைத்தார். இந்த வியாக்கியானமானது

இந்த தாதாசாரியரால் உத்யாந பத்ரிகையில் பதிப்பிக்கப்பட்டு வந்தது. அதில் இவருடைய புத்திக்ருதங்களான பலபல அவத்யங்களை யெடுத்துக் காட்டிவந்தோம். மற்றவைகிடக்க, இங்கு* ஆபோங்யதரஸ்யாம் இதிஹாஸவ: என்று வியாக்கியானமச்சிட்டவிவர் அதற்குச்சேர மூலத்தை 'ஸதேவதகா:' என்றன்றோ பதிப்பிக்க வேணும். அந்த வ்யாக்யாதாவுக்கு அநபிமதமான 'ஸதைவதகா:' என்னும் பாடத்தையே பதிப்பித்திருந்தாரிவர். இதனால் இவர் சிறிதும் ஆராய்ச்சி யில்லாதவர் என்பது நன்கு விளங்க வில்லையா? என்று நாம் வெகு விபுலமாக நிரூபித்திருந்தோம். இவ்விடத்தில் தலைவிதியே யென்று கைகூப்பித் திருத்தம் வெளியிட்டாரிவர். நாம் சர்ச்சித்த ஒவ்வொரு விஷயத்திலும் இவர் இங்ஙனமே கைகூப்பி நின்று திருத்தம் வெளியிடக் கடமைப்பட்டவரே யென்பதைப் பண்டித வுலகம் பிரசுரப்படுத்தியிருக்கிறது. * विवेकधियमेकतो ह्यभिनिवेशलेशो हरेत् * என்று ஆழ்வான் ஸாதித்தது எங்ஙனே பழுதுபடும். ஒரே வார்த்தை;—இவரை நிமித்தமாகக் கொண்டு உலகம் நம்மால் மஹோபகாரங்கள் பலபல பெற்றுள்ளது.

121. பாதுகாஸஹஸ்ராவதாரதத்வம்: இத் தன்சரிதையில் பக்கம் 59ல் "பாம்பே நகரத்தில் நிர்ணய ஸாகரமுத்ராலயாதிகாரிகள்" என்று தொடங்கி இரண்டு பக்கம் எழுதியிருப்பதையும், மேலே 65, 66 பக்கங்களிலெழுதியிருப்பதையும் மீண்டுமொருமுறை வாசிக்கவேணும். இந்நூலைப்பற்றி அவ்விடங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. உண்மையை எவ்வளவு விரிவாக நிரூபித்தெழுதினும் பாமரப்ரதாரணமொன்றிலேயே நோக்குடைய நவீனர்கள் பழம் பாட்டையே திருப்பித் திருப்பிப் பாடிக்கொண்டிருப்பது வழக்கம். ஒருவர் மாறி ஒருவராக அந்த அபத்த அஸம்பத்த ஐதிஹ்யத்தையே இற்றைக்கும் நாளைக்கு மெழுதிக் கொண்டிருக்கிறார்கள். மேலே தமிழ் நூற்பகுதியில் காணப்படவிருக்கிற புரட்டாசித் திருவோணமலரில் (பக்கம் 31-ல்) 'பாதுகாஸஹஸ்ரப்ராதுர்ப்பாவம்' என்ற தலைப்பின்கீழ் உள்ள விஷயம் இங்கு ஸம்க்ஷேபமாக வெடுத்துக் காட்டலாகிறது. இதனால் பிராமாணிகர்களுக்குத் தெளிவு பிறப்பதொன்றே உத்தேச்யம். அந்தவியாஸத்தின் சுருக்கம்:—

ஸ்ரீதேசிகசரித்திரத்தில் நமதுநண்பர் D. ராமஸ்வாமிஐயங்கார் எழுதுகிறார்—"தேசிகனிடம் பொறாமை கொண்டவருள் ஒருவரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் இவருடன் போட்டியிட்டதன் பலனாக ஸ்வாமியிடமிருந்து ஸ்ரீபாதுகாஸஹஸ்ரமென்ற க்ரந்தம் தோன்றியது" என்று. இஃது இருளும் மருளும் வடிவெடுத்த வார்த்தை. அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரென்பவர் பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியார்; வடக்குத்திருவீதிப்பிள்ளையின் திருக்குமாரர்; ஆசார்யஹ்ருதயம், அருளிச்செயல் ரஹஸ்யம், திருப்பாவையாருயிரப்படி முதலான திவ்ய க்ரந்தங்களை யருளிச் செய்தவர். இவர் தேசிகனோடு போட்டியிட்டாரென்று நெஞ்சால் நினைப்பதும் மஹாபசாரம். பரமஸாத்விகப்ரக்ருதிகளென்று தங்களுடைய திவ்யக்ரந்தங்களால் வெளியிட்டுக்கொண்டு பகவத்குணாநுபவைக நிஷ்ணாதர்களாயிருந்த மஹாசார்யர்களை வலுவில், பிடித்திழுத்து நிந்திப்பது நீதிநெறிநிற்பார் பணியன்று. இந்த D. R. கோஷ்டியில் சேர்ந்தவர்கள் பலர் பாதுகாஸஹஸ்ரம் அவதரித்த காரணத்தை யெழுதியுள்ளார்கள். ஒருவர் எழுதின ரீதியைப் பின்பற்றி மற்றொருவர் எழுதுவதென்பது அடியோடு கிடையாது. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக எழுதிவைக்கிற வேடிக்கையைப் பார்க்கவேணும். இவ்விஷயத்தில் ப்ராசீனர்கள் எவ்விதமாக எழுதியிருக்கிறார்களென்பதையும் பிறகு பார்க்கவேணும். அடைவே எல்லாவற்றையும் பார்ப்போம். இவர்கள் தங்களைத் தாங்களே

பரஸ்பரம் கண்டித்துக் கொள்ளுகிறார்களென்பதே நன்கு தேறுவதால் நமக்கு அதிகபரிச்ரமமில்லை. பாம்பே நிர்ணயஸாகர காவ்யமாலை ஸீரீஸில் வியாக்கியானத்தோடு பதிப்பிக்கப்பட்ட பாதுகாஸஹஸ்ரத்திற்கு—காஞ்சீபுரம் சாமா திருமலை தாதாசாரியர் சேர்த்திருக்கிற பூமிகையில் வாதிகேஸரியென்பவர் தாம் பெற்றிருந்த வாதிகேஸரிவிருதுகாரணமான செருக்கினாலும் அஸூயையினாலும் கவித்வ விஷயத்தில் போட்டியிட்டதனால் பாதுகாஸஹஸ்ரம் தோன்றியதென்று எழுதியுள்ளார். வாதிகேஸரி யென்பவர் பிள்ளை லோகாசார்யர் திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரல்லர். அவர் உத்தமாச்ரமி. அழகிய மணவாளச்சீயரென்பவர். திருவாய்மொழிக்குப் பன்னீராயிரவுரை, தத்வதீப தீப ப்ரகாசம் முதலிய நூல்களையிட்டவர். அவர் தேசிகனைவிட பதினேழுவயது பெரியவர். அவரோடுண்டான ஸ்பர்த்தையினால் பாதுகாஸஹஸ்ரம் தோன்றியதாக அந்தத் திருமலை தாதாசாரியரெழுதினர். ந்யாய பரிசுத்திக்கு பூமிகையெழுதின திருவஹீந்திரபுரம் சதாவதானி ஸ்ரீநிவாஸாசாரியரும் அதைப்பார்த்து அப்படியே யெழுதிவைத்தார். இந்த D. R. அவ்வாசிரியரைவிட்டு அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தாம் ஸ்பர்த்தையிட்டதாக வெழுதுகிறார். முன் சொன்ன திருமலை தாதாசாரியருடைய பாதம் பணிந்தவர் இந்த D. R. ஐயங்கார்—என்பது வாசகர்களுக்கு நினைவிலிருக்கட்டும். ஆனால் ஆசிரியர் வடமொழியிலெழுதியிருப்பதால் சிஷ்யர் அஃதறியாமல் யாரேனுமோராசார்யரைப் பிடித்திழுக்கவேணுமென்கிறவளவேகொண்டும், ஜகத்விக்க்யாதரான பேராசிரியரையே தூஷிக்கவேணுமென்னுமாக்ரஹங்கொண்டும் ஆசார்யஹ்ருதயகாரர் ஸ்பர்த்தையிட்டதாக எழுதுகிறார். இன்னமும் பலர் பலவிதமாக எழுதியிருப்பதெல்லாம் கிடக்கட்டும். குருசிஷ்யர்களின் கூற்று காட்டினவிவ்வளவேபோதும். நவீனச் சண்டைகளில் தலையிடாத ப்ராசீனர்கள் எவ்விதமாக எழுதியுள்ளார்களென்று பார்ப்போம். ஆசார்ய சம்பூ என்கிற க்ரந்தம் நவீனர்களின் நவநவோக்தி தோன்றுவதற்கு நெடுநாள் முன்னமே தோன்றியது. அவர் மனஃபூர்த்தியாக அப்ராமாணிக விஷயங்களை யெழுதுகிறவரல்லர். அவர் எழுதியிருப்பதாவது "एवमाबद्धाभिरपरिमिताभिः कृतिभिरापादितमनितरसाधारणस्य गुरोरतिशयम् आशुकविताविभवादपाचिकीर्षुः कश्चन कविः अभ्याशमभ्येत्य गिरमिमामपगतशङ्कमङ्कुरयामास" இத்யாதி. ஆசுகவியென்று ப்ரஸித்திபெற்றிருந்த யாரோவொரு கவி வந்து ஸ்பர்த்தை பண்ணினதாகச் சொல்லப்பட்டது. நவீனர்கள் அதிகமாகக் கொண்டாடும் ச்லோகரூபமான வைபவப்ரகாசிகையிலோ வென்னில், (ச்லோ, 114.) "संप्रार्थितस्संसदि सूरिवर्यैः पादावनीं रङ्गपतेर्निशायाम् । पद्यैस्सहस्रैर्गुरुरस्तवीद्यः तं भावयेऽहं कविसार्वभौमम् ॥" என்றுள்ளது. வித்வான்களின் வேண்டுகோளுக்கிணங்கிப் பாதுகாஸஹஸ்ர மருளிச்செய்தாரென்பது இதன் கருத்து. [இவ்விடத்தில் ப்ராஸங்கிகமாக ஒரு விவக்ஷிதம். மேலே குறித்த வைபவப்ரகாசிகை ஒரு சதுச்சாஸ்த்ரவித்வானால் இயற்றப்பட்டதென்று சொல்லிவருகிறார்கள். மேலெடுத்துக் காட்டிய ச்லோகத்தில் "ஸஹஸ்ரை: பத்யை:" என்று ப்ரயோகித்திருப்பதை வையாகரணர் கண்டால் சிரிப்பார்கள். 'ஸஹஸ்ரேண, பத்யை:' என்று இருக்கவேண்டுமேயல்லது 'பத்யைஸ் ஸஹஸ்ரை:' என்றது ஒருபடியாலும் பொருந்தாது. வேறு சில ப்ரயோகங்களைப்போல் க்லிஷ்டகதியாகவும் ஸமர்த்திக்கக் கூடிய ப்ரயோகமன்றிது. * ग्रन्थैश्चतुस्सप्ततिभिस्सहस्रैः * என்ற மற்றொரு ப்ரயோகமும் ஏதத்ஸமசீலமே.

தமிழில் வாழித்திருநாமம் நாள் பாட்டு முதலானவற்றையும், ஸம்ஸ்க்ருதத்தில் இங்ஙனே சில பத்ய ப்ரபந்தங்களையும் நவீனர்கள் புதியவுறவு கொண்டாடப்

புகுந்தபோது ஸாமான்ய கவிகள் சிலர் இயற்றினார்களத்தனை யென்கிற தத்துவம் உணரத்தக்கது.] இனி ப்ரக்ருத விஷயத்தில் செல்வோம். யாரோவொரு ஆசு கவி வந்து ஸ்பர்த்தைபிட்டதன் பலனாகப் பாதுகாஸஹஸ்ரம் தோன்றிற்றென்றார் ஆசார்யசம்பூகாரர். ஸத்துக்களின் ப்ரார்த்தனையினால் தோன்றிற்றென்றார் வைபவப்ரகாசிகாகாரர். ஸ்ரீவரவரமுநி ஸம்ப்ரதாயத்திலிருந்து மாறுபட்டு தேசிக ஸம்ப்ரதாயத்திற்கு வந்து சேர்ந்ததாகப் பிறரால் எழுதப்பெற்ற பாரத்வாஜ ஸ்ரீநிவாஸாசார்யரென்பவர் பாதுகாஸஹஸ்ரத்திற்கு வ்யாக்யான கர்த்தா; அவர் எவ்விதமாக எழுதிவைத்திருக்கிறாரென்னில்; அந்த வியாக்கியான ஆரம்பத்தில், * रङ्गास्थानीरसिकपरिषत्प्रेरणां प्राप्य शौरेः पादावन्याः स्तुतिमकृत यो यैस्सहस्रेण पद्यैः * என்கிற ச்லோகத்தை முன்னமெழுதிவிட்டு உடனே வசனமாக "श्रीमान् वेङ्कटनाथो गुरुर्भगवतो रङ्गनाथस्य दिव्यास्थानरसिकैर्भागवतैरभ्यनुज्ञातपादुकास्तुतिः पादुकासहस्रं नाम काव्यं प्रणिनाय" என்றெழுதியுள்ளார். ஸ்ரீரங்கத்திலிருந்த ரஸிகர்கள் ப்ரேரணை பண்ண அதன்மேல் பாதுகாஸஹஸ்ரமருளிச் செய்ததாக ச்லோகத்திலுள்ளது; அந்த ரஸிகர்களின் அநுஜ்ஞையைக் கொண்டு (அது) அருளிச் செய்ததாக கத்யத்திலுள்ளது; ப்ரேரணையும் அநுஜ்ஞையும் பர்யாயமன்று. ஒரு காரியத்தில் ப்ரவர்த்திக்கச்செய்வது ப்ரேரணை. ஸ்வயம் ப்ரவ்ருத்தரானவரை அநுமோதிப்பது அநுஜ்ஞை. இது ஸம்ஸ்க்ருதஜ்ஞர்களின் கோஷ்டியில் நிர்விவாதமான விஷயம். இதை எப்படியாவது பொருந்தவிட்டுக்கொள்வோம். ப்ரயாஸமொன்றுமில்லை. யாரும் போட்டியிட்டது கிடையாதென்றும், தேசிகன் தாமே தமது கைங்கரியமாகப் பாதுகாஸஹஸ்ரமியற்றியருளத் தொடங்கினார், அதை மஹான்கள் ஆமோதித்தார்கள்—என்றும் இவ்வளவே தத்துவமாய் முடியும். இது தேசிகனுடைய ஸொந்த ஸ்ரீஸூக்திக்கும் பொருந்தும்; (அதாவது) பாதுகாஸஹஸ்ரத்தினுள்ளேயே நாதபத்ததியில் (41.) * प्रख्यातानां परिषदि सतां कारयित्वा प्रतिज्ञाम् * என்றொரு ச்லோகமுள்ளது. இதனால், தேசிகன் தாமே ப்ரக்க்யாதர்களான ஸத்துக்களின் முன்னிலையில் ஆயிரம் சுலோகம் செய்வதாக ப்ரதிஜ்ஞை செய்து இந்த ஸ்துதியை இயற்றினதாக ஸ்பஷ்டமாகிறது. இவ்விடத்து வியாக்கியானத்திலாவது முன்னோர்கள் ஏதாவது எழுதியிருக்கவேண்டுமே. ஐதிஹ்யமிருந்தால் எழுதாது விட்டிருப்பர்களோ? எந்த விதத்திலாவது மஹாசார்யர்களைப் பிடித்திழுத்து அவர்களுக்கு ஓர் அவத்யம் இட்டுவைக்கவேணும் என்கிற கடு நினைவுதான் இந்த கோஷ்டியார்களுக்குள்ளது. அன்னவர்களில் தலைநின்றவர் D. R. ஐயங்கார்.

இவர்களுடைய கோஷ்டியில் நெடுநாளாகவே ஒரு பழக்கமுள்ளது; (அதாவது) இப்படி அஸம்பத்தமான கதைகளைக் கைபோனபடி யெழுதிவைப்பது; அது ஸர்வாத்மநா அஸங்கதமென்று நிபுணநிரூபணம் வெளிவந்தால் வாய்திறவாமல் வாளாகிடப்பது; மற்றொரு காலத்தில் வேறொருவர் அந்த அஸம்பத்த கதையையே பிரசுரம் செய்யத் தொடங்குவது, புநர்முத்ரணம் பண்ணுவது: சில பாமரர்களாவது வஞ்சிக்கப்பட்டு இதையே பரமார்த்தமென்று கொள்ளட்டுமே யென்று கருதுவது......இப்படியாக இந்த கோஷ்டியார் பழகிவருகிறார்கள். இதெல்லாம் இவர்கள் தேசிகனோடு புதிய வுறவு கொண்டாடத் தொடங்கின காலத்திலிருந்தே தோன்றிய தடுமாற்றங்களென்று திண்ணமாகவெண்ணுவர் தீர்க்கதர்சிகள்.

122. பரீக்ஷாவிமர்சபராமர்சஃ: கீழே லக்கம் 29. கொண்ட பாடசோதநபரீக்ஷா என்னும் நூலின்மேல் வானமாமலையிலொருவர் எழுதி வெளியிட்ட பரீக்ஷா விமர்சமென்பதைப் பராமர்சித்த நூலிது. ரஸமாகத் தெரிவிக்கக் கூடிய விஷயமொன்றுமில்லையிங்கு.

123. பரிஷ்காரபராமர்சஃ: கீழே நெ. 28, 119. இரண்டு நூல்களில் விசாரிக்கப்பட்ட விஷயத்தின் ஸமாப்தி இதிலுள்ளது. ஆந்த்ரதேசத்துப் பல வித்வான்களின் ப்ரசஸ்தி பத்ரிகைகளோடு கூடியது.

124. ரக்ஷாவிலோசநபாவப்ரகாசிகா: இது இரண்டுமயூகங்கள் கொண்டது. இதில் ரக்ஷா என்றது ஸச்சரித்ரரக்ஷையை; விலோசநமென்றது ஸூக்திவிலோசநமென்கிற தர்மசாஸ்த்ரக்ரந்தத்தை. இவ்விரண்டு நூல்களிலுமுள்ள உக்திவிசேஷங்களின் கருத்தை விசதீகரிக்கத் தோன்றிய நூலிது. இந்நூலின் விஷயத்தைச் சுருக்கமாகத் தெரிவிப்போமிங்கு ;—

கீழே நெ. 121 பாதுகாஸஹஸ்ராவதாரதத்வத்தில் ப்ராஸங்கிகமாக ஒரு ரஹஸ்யார்த்த விஷயம் ப்ரஸ்துதமாயிற்று, அதாவது—ஆச்சான் பிள்ளை சரமரஹஸ்யத்ரய மென்கிற க்ரந்தத்தில்—த்வயத்தில் பூர்வ கண்டத்தின் முதற்பதவிவரணத்தில்—“இப்பதத்தில் த்விவசநம் ‘ஸத்விதீயமிவ்வுபாயம்’ என்கிற ஸாஹஸவசனத்தைத் தள்ளுகிறது; அவனு மவளுங்கூடி உபாயமென்னில் சரணங்களிரண்டென்ன வொண்ணாது, நாலென்ன வேணும்” என்றருளிச் செய்திருந்தார். இது முதலான ஸ்ரீஸூக்திகளை தேசிகன் ரஹஸ்யத்ரயஸார த்வயாதிகாரத்தில் “சரணுவிதி நிர்த்தேச:” என்று தொடங்கி மூன்று காரிகைகளினால் தூஷித்தும் பரிஹஸித்தும் போந்தார். மஹாவித்வானாகிய ஆச்சான் பிள்ளையின் திவ்ய ஸூக்தியை ‘மந்தன் பேச்சு’ என்றும் ‘படித்தவர்கள் பரிஹாஸம் பண்ணக்கூடியது’ என்றும், ‘ஆராய்ச்சியில்லாமல் மிகவும் துணிச்சலாக வெளியிடப்பட்டது’ என்றும் மிகவும் அநாவச்யகமாக தேசிகன் தூஷித்தெழுதியிருந்ததை அந்தப் பாதுகாஸஹஸ்ராவதாரதத்துவத்திலே பிரமாணோபபத்திகளுடன் நிரஸிக்கும் அடைவிலே, தேசிகனுடைய ஸச்சரித்ரரக்ஷையிலும் தோழப்பருடைய ஸூக்திவிலோசநத்திலுமுள்ள சில வாக்கியங்கள் உதாஹரிக்கப்பட்டு மந்தரென்னும் வசைமொழி தேசிகன் மீது ஏறும்படியாகத் தோழப்பர் நிகமித்திருக்குமது நிரூபிக்கப்பட்டது. அதற்குமேல் நாலைந்து வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீமான். புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசாரியரென்பவர், ஒரு ஆவணி மாதத்தில மதுரையில் நடந்த வேதாந்த தேசிக பக்தஸபையில் இது விஷயமாக ப்ரஸ்தாவம் செய்து ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டார். அப்போது நடந்துகொண்டிருந்த வேதாந்த தீபிகையிலும் ‘ஸ்ரீதேசிகஸூக்தி ஸாதுத்வஸமர்த்தநம்’ என்றொரு வியாஸமெழுதி வெளியிட்டிருந்தார். அவை தமிழில் வெளிவந்தவை; அவற்றையெல்லாம் நிச்சேஷமாக மறுத்து ரக்ஷாவிலோசநபாவப்ரகாசிகையென்கிற இந்த ஸம்ஸ்க்ருதநூல்வெளியிடப்பட்டது.

(1) ஆச்சான்பிள்ளையருளிச்செய்த விஷயத்தில் தேசிகன் ஏறிட்ட தூஷணபரிஹாஸங்கள் சிறிதும் ஏறமாட்டா. (2) ‘விச்வேதேவார்த்தே’ ‘விச்வேதேவரூபீ’ இத்யாதிவ்யவஹாரங்கள் பிராமாணிகமானவைகளே யென்று தேசிகன் திருவுள்ளமாக ஸச்சரித்ரரக்ஷயில் விளங்குகின்றது. (3) அப்படிப்பட்ட வ்யவஹாரத்தை ஸூக்திவிலோசநத்தில் க்ஷேபித்தெழுதிய தோழப்பர் இட்டிருக்கிற சில வார்த்தைகள் தேசிகனையே ஸ்பரிசிக்கின்றன.—என்கிற இம்மூன்று விஷயங்களே விசாரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவை. இம்மூன்று விஷயங்களுள் முதல் விஷயத்தைப்பற்றிமட்டும் ஸ்ரீமத் பரமஹம்ஸ கோழியாலம் ஸ்வாமியும் தச்சிஷ்யர்களும் நெடுநாள் வரையில் போராடினார்கள். கடைசியாக ‘ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவவிமர்சம்’ என்கிற (நெ. 125) நம்முடைய நூல் வெளிவந்த பிறகே ‘சாந்தஃ கோலாஹலஃ’ என்றாயிற்று. ‘விச்வே தேவார்த்தே’ என்கிற இரண்டாவது விஷயத்தில் கீழ் நெ. 11. பரிபந்திபஞ்சபங்கீ என்கிற நூலுக்கு லக்ஷ்யபூதரான ஸ்ரீ. வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசாரியார் என்னுடைய பக்ஷத்தையே ஸமர்த்தனம் பண்ணி அதற்குரிய பிரமாணங்களும் காட்டி உத்யாநபத்ரி

கையில் ஒரு வியாஸமெழுதி வெளியிட்டார். D. T. தாதாசாரியர்தாமும் அதை அபிநந்தனம் செய்து அதிலேயே வெளியிட்டுவிட்டார். இதனால் மூன்றாவது விஷயமும் முடிந்ததாக ஆய்விட்டது. பிறகு புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸய்யங்கார் 'நம்மவர்களே நமக்கு ப்ரதிகூலர்களாக வெளிவந்துவிட்டார்களே!' என்று ப்ரலாபம் செய்துகொண்டு அவ்விருவர் விஷயமான கோபத்தோடே சாந்தராய்விட்டார். மேலே 125 நெ. நூலைப்பற்றின விவரணத்தில் மற்றவை காண்க.

125. ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவ விமர்சः

கீழே இந்நூலைப்பற்றின ப்ரஸ்தாவமுள்ளது. ஆச்சான்பிள்ளை செய்தருளிய த்வயார்த்த விவரணத்தில் "அவனு மவளுங்கூடி உபாயமென்னில் சரணங்கள் இரண்டென்ன வொண்ணாது, நாலென்னவேணும்" என்கிற ஸ்ரீஸூக்தியின் யதாவஸ்திதமான கருத்தை யதாவத் க்ரஹியாமல் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் தூஷண பரிஹாஸ ஸம்ப்ரமங்கள் தோன்றிவிட்டனவென்பதை நாம் பல நூல்களால் பன்னிப் பன்னியுரைத்திருக்கிறோம். மேலே தமிழ்நூற்பகுதியில் வரும் ஸதாசார்யஸூக்திரக்ஷா, தேசிகஸூக்தி ஸித்தாஞ்ஜநம், தத்வநிவேதநம், ரக்ஷா விமர்சசிக்ஷா முதலான பல நூல்கள் இதற்காகவே தோன்றியவை. நவீநர்களின் வகுப்பில் ரஹஸ்யத்ரயஸார வியாக்கியானமாகிய ஸாராஸ்வாதிநியின் கர்த்தாவை அபரதேசிகனாக அபிமானித்திருக்கிறார்கள். உண்மையில் அவர் ஸாமாந்ய ஜ்ஞானியான வொரு பரமைகாந்தி. அவர் "சரணங்களிரண்டென்னவொண்ணாது, நாலென்னவேணும்" என்னுமாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியை ரஹஸ்யத்ரய ஸாரத்தில் தூஷித்திருக்குமிடத்திற்கு வியாக்கியானஞ்செய்கையில் "समस्यमानपदार्थसंबन्धिलिङ्गवचनानां प्रधानमात्रानुसारित्वात् सामात्यो राजा वदतीति प्रयोगः, न तु वदत इति" என்று எழுதிவைத்தார். இது சாஸ்த்ரஜ்ஞர் எழுதக் கூடிய வார்த்தையேயன்று. இது ஸர்வாத்மநா அஸம்பத்த வார்த்தை யென்பதை அலசியலசிப் பன்னிப்பன்னி யெழுதியிருக்கிறோம். மேற்குறித்த * ஸமஸ்யமாநேத்யாதி வாக்யத்தைப்பற்றி நாம் ஸதாசார்ய ஸூக்தி ரக்ஷையில் (கீழ் நெ. 34.) என்ன எழுதியிருந்தோமென்றால்,

तदिदं वाक्यजालं शास्त्रवासनात्यन्ताभावपिशुनमित्यत्र न कोऽपि शास्त्रवित् विप्रतिपद्येत । .... सामात्यो राजावदत इति यथा न प्रयोज्यम् तथा श्रीमन्नारायणः प्रपत्तव्याविति न प्रयोज्यमिति तु शिक्षा निष्पद्यते । केन प्रयुक्तमत्र तथा । इदमपि विमृशत । वदतीत्यत्र आख्यातार्थसंख्या न स्वप्रकृत्यर्थे अन्वेति; अपि तु भावनान्वयिनि राज्ञि । चरणावित्यत्र तु चरणशब्दोत्तर वचनार्थ संख्या प्रकृत्यर्थचरण एवान्वेति । तत्सिद्धं महद्वैषम्यम् । विशेष्यमात्रानुसारित्वमित्यपि लक्ष्ये कथं समन्वेतीति पर्यालोचनीयम् । सामात्य इत्यत्र विशिष्टे आख्यातार्थान्वय संभवात् विशेष्यमात्रानुसारित्वमित्युपपद्यते । प्रकृते श्रीमन्नारायणरूपविशिष्टे चरणशब्दोत्तरवचनार्थान्वयाभावात् विशेष्यमात्रानुसारित्वकथाया एव न प्रसक्तिः । तदन्वयाङ्गीकारे नारायणद्वित्वमेव हि भायात् । ....इत्थं नाम प्रायस्सर्वमपि विपर्यस्तमेव शुष्कमेव च प्रतिपादयताम् असंबद्धप्रलापपुञ्जमयग्रन्थबृन्दानां संकेतबद्धैरादरणम् सदाचार्यसदुक्तीनां दुराग्रहैकवैवश्येन धिक्करणं च हन्त प्रतिपक्षिणां पारम्परिकमिव ।

என்றெழுதி வைத்தோம். இதற்குமேல் ஸ்ரீமத் பரமஹம்ஸ. கோழியாலம்ஸ்வாமி தம்முடைய திருநாமத்தால் மறுப்பெழுதுவதை நிறுத்திக்கொண்டு சிஷ்யர்கள்

பெயரால் மறுப்பு வெளியிடத் தொடங்கினார். இந்த ஸ்வாமிதாமே தமது திரு நாமத்தினாலேயே வெளியிட்ட ஸமஸ்யமாந ஸௌக்த்யர்த்த நிஷ்கர்ஷமென்கிற நூலின் அட்டையில் "एतद् ग्रन्थकर्तृभिः कृताः कारिताश्च ग्रन्थाः" என்று மகுடமிட்டுப் பிறர் பெயரால் வெளிவந்த நூல்களையும் தம்முடைய ஸொந்த நூல்களோடு சேர்த்து வெளியிட்டதனால் பிறர் நூல்களுக்கும் ஸ்வாமியே கர்த்தா வென்பது விளங்குகின்றதென்று இதை முன்னமே விளக்கியிருக்கிறேன். நமக்கு விஷயம் ப்ரதானமே யொழிய வக்தாக்களைப்பற்றி விசாரமில்லை. பிறருடைய பெயரால் மறுப்புகளை வெளியிட்டும் பயன்படவில்லை. மாதக்கணக்கிலும் வருஷக் கணக்கிலும் பலர்கூடி யெழுதி வெளியிடுபவை யெல்லாம் இரண்டொரு நாளிலேயே பங்கமடைந்து வந்தன. இவ்விசாரத்தில் ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவவிமர்ச மென்கிற இந்த நமதுக்ரந்தமே முடிவாக நின்றது. இந்நூல் இரு நூறுச்லோகங்கள் கொண்ட ஏழு பரிச்சேதங்களையுடையது; விளக்கமான தமிழுரையோடுங் கூடினது. ஈச்வரஹு பங்குனி யுத்தரத்தன்று வெளியிடப் பட்டது. பல வித்வான்கள் தலையிட்டு ஏழெட்டு வருஷகாலம் ஓயாது நடந்த இந்த விவாதத்தின் ஸ்வரூபம் ஸாமான்ய ஞானிகளுக்கும் தெரியும்படி உணர்த்துகிறேனிங்கு. இங்கு அர்த்தத்தைப்பற்றி ஒரு விவாதமும், சப்தப்ரயோகத்தைப்பற்றி ஒரு விவாதமுமாக இரண்டு விவாதங்களுண்டு. த்வயத்தில் 'சரணௌ' என்று த்விவசனமே யுள்ளது; இதனால் இரண்டு திருவடிகளே ஏற்படுகிறபடியாலே எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளே உபாயமென்று விளங்குகின்றது. பிராட்டியும் உபாயமென்னில், அவளுடைய இரண்டு திருவடிகளையும் கூட்டி சரண சப்தத்தில் பஹுவசநப்ரயோகம் பண்ணியிருக்க வேணும்—என்று சொல்லப்பட்டது. இதன்மேல் இரண்டு விதமான சோத்யங்கள். முதல் சோத்ய மென்ன வென்றால் "திருவடிகள் நாலென்று சொல்ல வேண்டிய அவச்யமில்லை; இரண்டென்று சொல்லி யிருந்தாலும் இதனாலேயே பிராட்டிக்கும் உபாயத்வம் ஏற்படக் குறையில்லை" என்பது முதல் சோத்ய மென்று கொள்ளுங்கள். ப்ரதிபக்ஷிகள் இந்த சோத்யத்திலே அதிகமாக வூன்றவில்லை. அவர்கள் முக்கியமாக எடுத்துக்கொண்ட சோத்யமேது வென்றால், பிராட்டிக்கும் உபாயத்வம் தேறவேணுமானால் 'ஸ்ரீமந்நாராயண சரணாந்' என்று த்வய சரீரமிருக்கவேணு மென்று ஆச்சான்பிள்ளை ஆபாதநம் பண்ணுகிறார்; இது மிகவும் அபஹாஸ்யமான ஆபாதநம். "மகனும் தந்தையும் போகிறார்கள்" என்று ஒரு பிரயோகம்; "மகனோடு கூடிய தந்தை போகிறான்" என்று மற்றொரு பிரயோகம். இவ்விரண்டு ப்ரயோகங்களிலும் தாற்பரியம் ஒன்றேயாயினும் வசநப்ரயோகத்தில் வாசியுண்டு. முந்தின விடத்தில் த்விவசந ப்ரயோகம் பொருந்தும். பிந்தின விடத்தில் ஏகவசநப்ரயோகம் பொருந்துமே யல்லது த்விவசநப்ரயோகம் ஒருநாளும் பொருந்தாது. ஏன் பொருந்ாதென்னில், முந்தின விடத்தில் மகன், தந்தை ஆகிற இருவர்க்கும் ஸமப்ராதாந்ய மிருப்பதனால் அங்கு த்விவசநம் பொருந்தும்; பிந்தின விடத்தில் [புத்ரஸமேதஃ பிதா என்பதில்] பிதாவுக்கு மட்டுமே விசேஷ்யதை யுள்ளது; புத்ரனுக்கு அது இல்லை. ஆகவே पुत्रसमेतः पिता गच्छति என்னலாமே தவிர पुत्रश्च पिता च गच्छतः என்றவிடத்திற்போல த்விவசநப்ரயோகம் செய்யவேகூடாது. செய்தால் அது அபஹாஸ்யமேயாகும். அதுபோல *ஸ்ரீமந் நாராயண என்ற ப்ரக்ருத ஸ்தலத்தில் பிராட்டிக்கும் எம்பெருமானுக்கும் ஸமப்ராதாந்ய மில்லை; ஸ்ரீமானை நாராயண னென்கையாலே நாராயண னொருவனுக்கே விசேஷ்யத்வ முள்ளதாகையாலே அவனுக்குள்ளதான இரண்டு திருவடிகளை நோக்கி *ஸ்ரீமந் நாராயண சரணௌ* என்னலாமேதவிர *ஸ்ரீமந்நாராயண சரணாந்* என்னக்

கூடாது; அது பரிஹாஸ்ய ப்ரயோகமேயாகும். ஆகவே ஆச்சான் பிள்ளையின் ஆபாதகம் அபஹாஸ்யம். என்பது தூஷகர்களின் சோத்யம். இது சப்த ப்ரயோகத்தைப் பற்றியதே யொழிய அர்த்த விஷயகமன்று.

இதற்கு அடியேனுடைய ப்ரதிவாத மென்ன வென்றால்; ஆச்சான் பிள்ளை "சரணங்களிரண்டென்ன வொண்ணாது, நாலென்ன வேணும்" என்றிவ்வளவு அருளிச் செய்தாரே யொழிய சப்த ப்ரயோக சரீரத்தை யெழுதிக் காட்டியிருக்கவில்லை. 'ஸ்ரீ நாராயண சரணௌ' என்றிருந்திருக்கவேணு மென்பது அவருடைய திருவுள்ளம். இதுவொரு ஸமாதானம். மற்றொரு ஸமாதான மென்ன வென்றால், 'ஸ்ரீமந்நாராயண சரணௌ' என்கிற ப்ரயோகம் ஒருகாலும் அஸாதுவன்று; பிராட்டியின் திருவடிகளையும் பெருமாளுடைய திருவடிகளையும் விவக்ஷித்து ஸ்ரீமந்நாராயண சரணௌ என்று ப்ரயோகிப்பதை ஒரு சாஸ்த்ரமும் கண்டிக்க முன்வரமாட்டாது. "श्रीमन्नारायणः गच्छतः, श्रीमन्नारायणः वदतः, श्रीमन्नारायणः रक्षकौ" என்றிப்படிப்பட்ட ப்ரயோகங்கள் தூஷணீயங்களாகுமே யொழிய श्रीमन्नारायणस्य चरणाः, श्रीमन्नारायणस्य नयनानि என்றாற்போன்ற ப்ரயோகங்கள் ஸாக்ஷாத் பாணினி பதஞ்ஜலி வரருசிகளாலும் தூஷிக்க முடியாதவை. வ்யதிகரண ப்ரயோகத்திற்கு ஸமாநாதி கரண ப்ரயோகத்தை த்ருஷ்டாந்தமாகக் காட்டவே தகாது. पुत्रसमेतः पिता गच्छतः என்று சொல்லக்கூடாதென்பது வாஸ்தவம். அப்படிப்பட்ட ஸமாநாதிகரண ப்ரயோகம் இங்கில்லை. மகனுடைய ஐந்து ரூபாயையும், தந்தையினுடைய ஐந்துரூபாயையும் விவக்ஷித்து पुत्रसमेतस्य पितुः दशरूप्याणि என்றால் அதை எப்படி க்ஷேபிக்கமுடியாதோ அப்படியே, பிராட்டியினுடைய இரண்டு திருவடிகளையும் எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளையும் விவக்ஷித்து श्रीमन्नारायणस्य चरणचतुष्टयम् என்றால் இதையும் க்ஷேபிக்கமுடியாது. ஆகவே ஆச்சான் பிள்ளையின் ஆபாதகத்தை க்ரந்தஜ்ஞைரபஹாஸ்ய மென்றும் மந்தப்ரோக்தமென்றும் சொல்லுகிறவர்களின் சொல்லே க்ரந்தஜ்ஞை ரபஹாஸ்யமாயும் மந்த ப்ரோக்தமாயும் முடிந்தது—என்பது அடியேனுடைய ப்ரதிவாத ஸர்வஸ்வம். ஸாராஸ்வாதினீகாரர் "समस्यमानपदार्थसंबन्धिलिङ्गवचनानाम्" இத்யாதியாக எழுதியிருப்பது ஓரிடத்திலும் ஸமந்வயம் காட்டமுடியாததாகையாலும், ப்ரக்ருதவிஷயத்திற்கு ஈஷத்தும் உபயுக்தமல்லாமையாலும் அது ஸர்வாத்மநா அஸம்பத்தப்ரலாபம் என்று முடிக்கப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் ப்ரதிவாதம் செய்தருள முன்னின்ற ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி ஸ்ரீரங்கத்தில் திருக்காவிரிக்கரையில் அடியேனோடு சர்ச்சை செய்கையில் * க்ரந்தஜ்ஞை ரபஹாஸ்ய மென்ற விடத்திலுள்ள ஸாராஸ்வாதினீ பங்க்திகளை நான் ஸமர்த்தநம் செய்யாமற்போனால் த்ரிதண்ட சிகாயஜ்ஞோபவீதங்களைத் துறந்து அத்வைதஸம்ந்யாஸியாகக்கடவேன் என்று ப்ரதிஜ்ஞை செய்தருளினாரென்பதை ப்ரக்ருத விஷயகங்களான அடியேனுடைய ஸகலநூல்களிலும் அப்போதே வெளியிட்டிருக்கிறேன். * ब्रह्मेशादिसुरव्रजस्सदयितः त्वद्दासदासीगणः—ப்ரஹ்மேசாதி ஸுரவ்ரஜஸ் ஸதயிதஸ் த்வத்தாஸதாஸீகண:* என்கிற ஆளவந்தார் ப்ரயோகத்தை எடுத்துக்காட்டியபின்பே ஸ்ரீஸ்வாமிக்குத் தெளிவு ஏற்பட்டது. இவ்விஷயத்தில் மறுப்பெழுதின வித்வான்கள் யாவரும் இற்றைக்கும் ஜீவித்தேயுள்ளார்கள்; புத்தங்கோட்டம் சீமாச்சாரொருவரே மறைந்தார், ஆச்சான் பிள்ளையின்

அநவத்ய ஸ்ரீஸூக்தியை க்ரந்தஜ்ஞைரபஹாஸ்யமாக்கவும் மந்த ப்ரோக்த மாக்கவும் அந்தோ! வெகு முயற்சி செய்தார்கள். வைகுண்ட வாஸியான ஸ்ரீ உ.வே மாம்பலம் வாஸுதேவாசார்ய ஸ்வாமி யொருவரே இந்த விவாதத்தின் ஆரம்பத்திலேயே தம்முடைய சிறந்த விமர்ச சக்தியைச் செலுத்தி "ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் இவ்விஷயம் ப்ரக்ஷிப்த மென்றே பெரியோர்களின் ஸித்தாந்தம்" என்று ஒரே வார்த்தையில் முடித்திட்டார். அதுவும் அவருடைய ஜீவித காலத்திலேயே அச்சேறியிருக்கிறது. அதற்காக அவரை நவீனர்கள் நிந்தித்தார்கள். இந்த ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவ விமர்சத்தில் 188, 189 ச்லோகங்கள் இவை காணீர் ;

इळङ्गाडुस्वामीत्यधिधरणि विख्यातयशसा यतीन्द्रेण श्लाघा सहृदयमहो या विरचिता ।
न सा वाचां भूमिः, स पुनरिह पृष्टो भवतु भोः न हि प्रख्यातानामनृतकथनं जातु भविता ॥
तत्त्वमुक्ताकलापादिसद्ग्रन्थतो भेदमीषच्च वा नैव पश्यामि भोः ।
तावके ग्रन्थ इत्येवमेवं मुदा पण्डितानां पुरस्ते महान्तोऽवदन् ॥

இந்த ச்லோகங்களின் கருத்தாவது 'இளங்காடு ஸ்வாமியென்று ப்ரஸித்தரான யதிவரர் இந்த ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவ விமர்சநூலை வாசாமகோசரமாகக் கொண்டாடினார். இதைப்பற்றி அந்த ஸ்வாமியை நேரில் கேட்கலாம்; ஒரு போதும் பொய் சொல்லார். அந்த ஸ்வாமி கொண்டாடிச் சொன்ன வார்த்தை யாவது, 'அண்ணா! உம்முடைய இந்த க்ரந்தம் தத்வமுக்தாகலாபாதி க்ரந்த துல்யமே யொழிய அதற்கு மிதற்கும் ஈஷத்தும் வாசி கண்டிலேன்' என்று, இதை அந்த ஸ்வாமி ஏகாந்தமாக ஸாதிக்கவில்லை; பல பண்டிதர்களின் முன்னிலையில் ஸாதித்தார் என்பதாம். [இது அந்த ஸ்வாமி திருநாட்டுக் கெழுந்தருளின பிறகு வெளியிட்ட தன்று. இது வெளியிட்ட பிறகு அந்த ஸ்வாமி பலவாண்டுகள் ஜீவித்திருந்தார். "அண்ணா! கோழியாலம் ஸ்வாமியும் தச்சிஷ்யர்களும் என்னோடு போராடும்படி செய்து விட்டீரே; அதற்கு நான் அஞ்சவில்லை. உண்மையை யொளிப்பது மநுஷ்யதர்மமா?" என்று அடிக்கடி ஸாதித்துக் கொண்டிருந்தார்.

126. கோதார்த்தோக்ஷாவமர்தவிமர்சஃ : திருவாய்மொழியில் (3-4-4) * வம்பவிழ் கோதை பொருட்டா மால்விடை யேழுமடர்த்த* என்கிற பாசுரத்தில் நப்பின்னைப் பிராட்டிக்காக எருதேழடர்த்த கதை ஆழ்வாரால் அநுஸந்திக்கப்பட்டிருக்கின்றது. இங்கு நப்பின்னைப் பிராட்டியை அப்பெயரையிட்டுக் கூறாமல் 'வம்பவிழ் கோதை' என்று கூறியிருக்கிறது. 'நறுமணம் மிக்க பூமாலையை யணிந்துள்ளவள்' என்பது இதற்குப் பொருள். இது ஸாமாந்ய சப்தமே யொழிய விசேஷ சப்தமன்று. நப்பின்னையென்றோ மைதிலியென்றோ பாஞ்சாலியென்றோ உள்ள சிறப்புப்பெயரையிட்டுச்சொல்லியிருந்தால் அது விசேஷ சப்த மெனப்படும். அப்படிச் சொல்லாமல் பொதுவாக மாதர்கட்குரிய விசேஷணத்தை யிட்டுச் சொல்லியிருந்தால் அது ஸாமாந்ய சப்த மெனப்படும். தமிழ் நூற்களில் நப்பின்னை, ஸீதை, த்ரௌபதி முதலிய ஸ்த்ரீவ்யக்திகளைத் தெரிவிக்கவேண்டு மிடங்களில் ஸாமாந்ய சப்தங்களை யிட்டுத் தெரிவிப்பது தான் அதிகமாயிருக்கும். அப்படி ஸாமாந்ய சப்தத்தை யிட்டுச் சொன்னால் இன்ன வ்யக்தியென்று எப்படி தெரிந்து கொள்ள முடியுமென்றால் அடுத்தபடியாகக் கூறப்படுகிற கதையினால் வ்யக்தி நிச்சயம் எளிதாகவுண்டாய் விடும். * கோவைவாயாள் பொருட்டு ஏற்றினெருத்த மிறுத்தாய்* என்கிறார் நம்மாழ்வார். இங்கு ஏற்றினெருத்த மிறுத்த

கதையின் ஸமபிவ்யாஹாரத்தினல் கோவைவாயாளென்கிற ஸாமாந்ய சப்தம் நப்பின்னைப் பிராட்டியைக் குறிக்கின்றதென்று எளிதினுணரலாமன்றே. திருமங்கையாழ்வார் * தையலாள் மேல் காதல் செய்ததானவன் வாளரக்கன் * என்கிறார். இங்கு ராவண ஸம்ஹார கதையின் ஸமபிவ்யாஹாரத்தினல் தையலாளென்கிற ஸாமாந்ய சப்தம் ஸீதா பிராட்டியைக் குறிக்கின்றதென்று உணரலாகும். திருவல்லிக்கேணிப் பதிகத்தில் *அணியிழை * என்றும் *சந்தமல் குழலாள் * என்றுமுள்ள ஸாமாந்ய சப்தங்கள் த்ரௌபதியைக் குறிக்கின்றன வென்பது அங்குள்ள கதையினல் நிர்ணயிக்கலாகிறது. இங்ஙனே திவ்யப் பிரபந்தத்தில் ஆயிரக்கணக்கான இடங்கள் காணக் கிடக்கின்றன. இது தமிழ் நூல்களுக்கே அஸாதாரணமான மரியாதையாகும். வடமொழி நூல்களில் இங்ஙனே ஓரிடத்திலும் காணக் கிடைக்காது. ப்ரக்ருதம் * வம்பவிழ் கோதை பொருட்டா * என்னும் பாசுரத்தில் மால்விடையேழு மடர்த்த கதையின் ஸமபிவ்யா ஹாரத்தினல் வம்பவிழ் கோதை யென்கிற ஸாமாந்ய சப்தத்தினல் நப்பின்னைப் பிராட்டி தான் விவக்ஷிதை யென்பது எளிதினுணரப்படும். ஸகல வியாக்கியானங்களும் இப்படியேயுள்ளன. தேசிகனருளிச் செய்த த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் இப்பாசுரத்திற்காக * गोदार्थोक्षावमर्दे - கோதார்த் தோக்ஷாவமர்தே * என்று இடப்பட்டிருப்பதாகக் காண்கிறது. மூலமான பாசுரத்திலுள்ள கோதை என்கிற சொல்லுக்கும் இந்த ச்லோகத்திலுள்ள கோதா என்கிற சொல்லுக்கும் யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. வடமொழியில் கோதா என்றால் ஆண்டாளையே பொருளாகக்கொள்ளலாகும். ஆண்டாளுக்காக எருதேழடர்த்தது இடையவே கிடையாது. அது நப்பினைக்காகவே; அவளுக்கோ கோதா என்கிற பெயர் கிடையாது. நீலா என்பதே நப்பின்னையின் ஸம்ஸ்க்ருத நாமமென்பது நிர்விவாதம். * நீலாதுங்கஸ்தநகிரிதட ஸுப்த மித்யாதிகளிலும் இது ஸுப்ரஸித்தம். ஏவஞ்ச, * வம்பவிழ் கோதை பொருட்டா வென்கிற பாசுரத்திற்காக இட்ட ச்லோகத்தில் * நீலார்த்தோக்ஷாவமர்தே * என்றிருக்க வேணுமே யொழிய * கோதார்த்த...* என்றிருப்பது பாடஸ்கலனம்—என்று அடியேனியற்றிய த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவலீ வியாக்கியானத்தி லெழுதி வெளியிட்டிருந்தேன். இதிலும் தீப சலபந்யாயேந பல பண்டிதர்கள் எதிரப்பு கோத்து வந்து விழுந்தார்கள்.- அன்னவர்களில் D. T. தாதாசாரியரும், (காலஞ்சென்ற) திருப்பாப்புலியூர் சடகோபாசாரியரும் தலை நின்றவர்கள். இவர்களின் அசட்டு வாதங்களுக்கு மறுப்பாகச் சில தமிழ் நூற்களும் தோன்றியுள்ளன. அவற்றைப்பற்றி மேலே தமிழ் நூற் பகுதியிற் காணலாகும். இந்த விவாதம் தொடங்கின காலத்தில் ஸ்ரீ மதுபயவே. வித்வச் சிகாமணி. கோஷ்டீபுரம் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமியும் அவருடைய திருத் தம்பியார் ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமியு மெழுந்தருளி யிருந்தார்கள். அவ்விருவரிடத்திலும் இதைப்பற்றிச் சிலர் சர்ச்சிக்கச் சென்றார்கள். அவர்களில் பெரியவர் ஸாதித்ததாவது, விவாதப் பாசுரத்தின் தொடக்கம் வர்பு; இந்த வம்பு விவாதத்தில் நீங்கள் ஏதுக்குத் தலையிடுகிறீர்கள்? அண்ணா செய்திருப்பது ருஜுவான வாதம்; நேராக தேசிகனே யெழுந்தருளினாலும் இங்கு எதிர்வாதம் பண்ணுவதற்கு விஷயமில்லை என்பதாம். ஸேதுபதி ஸம்ஸ்தான மஹா வித்வான். கீர்த்தி மூர்த்தி, ராமநாதபுரம் ரா. ராகவையங்கார் ஸ்வாமியைச் சிலர் சந்தித்து " அண்ணங்கராசாரியர் இவ்விதமாக எழுதியிருக்கிறார்; இதை தேவரீர் விமர்சிக்க வேணும்" என்றார்களாம். அதற்கு அவர் ஸாதித்தாராம்—அண்ணா

ஒன்றெழுதினுரென்றால் அதை நீரும் நானும் விமர்சித்து லாபமென்ன? பாக்யமிருந்தால் அதிலே யீடுபட்டு வாழலாம்; இல்லையாகில் வாளா கிடக்கலாம் என்று. இதை அந்த ராகவையங்கார் ஸ்வாமி தாமே ஒரு விசை ஸ்ரீ பெரும்பூதூர் ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தில் தமது உபந்யாஸத்தினிடையே பல பெரியாரெதிரில் பேசினூர். அதிலிருந்தே நாமு மறிந்தது.

127. தேசிகாவதாரவத்ஸரசிந்தா: வேதாந்த தேசிகன் திருவவதரித்தது விபவ வருஷத்திலென்றும் சுக்ல வருஷத்திலென்றும் நவீனர்கள் விவாதப்பட்டு எழுதி வந்தபோது விபவவருஷத்தில்தானென்று நிர்ணயிக்கத் தோன்றிய நூலிது. கோவில் சண்டைகளுக்காக நூதன கல்பிதமான * ராமாநுஜ தயாபாத்ரத் தனியனுக்கு வருஷம் மாஸம் திதி நக்ஷத்ரம் வாரம் லக்னம் ஹோரை முதலான யாவற்றையுமிட்டு ச்லோகமியற்றி வைத்தவர்கள் ஒன்றுன ஸ்வாமியின் திருவவதார வருஷத்தில் விவாதப்படும்படி செய்து வைத்தார்கள் என்பது ஸாராம்சம். இந்த ஸாராம்சத்தைமட்டும் யாவரும் கவனிக்கவேணும்.

128. ஸப்ததிரத்நதத்வம்: அஸ்மத்குலகூடஸ்தரான ப்ரதிவாதி பயங்கராசார்யர் தேசிகன் விஷயமான ஒரு ஸ்தோத்ரமருளிச் செய்திருந்தார்; அதற்கு ப்ராசார்ய ஸப்ததிரத்நமாலையென்று பெயர் அது இப்போது கிடையாது, லுப்தம். நவீநர்கள் ஸப்ததிரத்நமாலிகையென்று ஒன்று கல்பனை செய்தார்கள். அல்லது வாஸ்தவமான அந்த க்ரந்தத்தில் சில ச்லோகங்களை நீக்கிவிட்டுச் சில ச்லோகங்களைக் கல்பனை செய்து சேர்த்தார்களென்றுவது இசைந்து தீரவேண்டும். ஏனென்னில், தேசிகனை விபவத்தில் உலகமெல்லாம் கொண்டாடிக் கொண்டிருந்தது என்கிற உண்மையை ஸ்துதிநூலில் எழுத வேண்டியிருக்க அதைவிட்டு அக்காலத்தில் யாவரும் தேசிகனை அவமானப்படுத்துவதும் நிந்திப்பதுமாகவே யிருந்தார்களென்றும் அவர்கள் ராவண சிசுபாலாதிகளோடொத்தவர்களென்றும் காட்டுகிற "ஹந்த ஹந்த! ராமக்ருஷ்ண தூஷணுபி தாயிநாம் கிம் நு சித்ரமத்ர சைத்ய ராவணுநு ஸாரிணும்" இத்யாதி ஜுகுப்ஸநீய ச்லோகங்களை யிட்டிருப்பது கொண்டே ப்ராமாணிகர்கள் இது நவீந கல்பிதமென்பதை நிர்ணயிக்கத் தட்டில்லை; * ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:, ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி * என்றாற்போலே ஸ்துதிக்கும் வழியை அறவேவிட்டுப் பரநிந்தையே மலிந்திருக்குமிந்த ஸப்ததிரத்நமாலிகை நவீநர்கள் தேசிக பக்தியை ஏறிட்டுக்கொண்டபின் கல்பித்ததே என்பது முதலிய பல விஷயங்கள் இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

129. வைபவப்ரகாசிகாவிமர்சः: சோளங்கிபுரம் சண்டமாருதம் தொட்டயாசார்ய ஸ்வாமி தேசிக பக்தர்களில் தலைவராக விளங்கினவர். அவர்க்கு தேசிகன் ஸ்வப்நத்தில் ஸேவை ஸாதித்து மதாந்தரகண்டனத்திற்குரிய விஷயங்களை அநுக்ரஹித்தாரென்றும் ஐதிஹ்யமுண்டு. இந்த ஸ்வாமி தென்னுசார்ய ஸம்ப்ரதாயஸ்தரே யென்பது இற்றைக்கும் விளங்கிவருகிற இவருடைய திருவம்சஸ்தர்களால் நிர்விவாதமானது. இந்த ஸ்வாமி தேசிக பக்தாக்ரேஸரராகையாலே தேசிகனைப் புகழ்ந்து துதித்து எத்தனை க்ரந்தங்கள் ஸாதித்தாரென்றாலும் அதில் விவாதப்பட ப்ரஸக்தியே கிடையாது. தேசிக சரித்ர ப்ரதிபாதனத்தில் பரமப்ராமாணிகமென்று ப்ரஸித்தமான ஆசார்ய சம்பூ க்ரந்தத்திலில்லாத கதைகளை நவீநர்கள் கல்பனை செய்யத் தொடங்கின போது அவற்றுக்கு ஸம்வாதம் காட்டவேண்டி இந்த தொட்டயாசார்ய ஸ்வாமி வேதாந்த தேசிக வைபவப்ரகாசிகையென்று ஒரு க்ரந்தமிட்ட

தாகக் கல்பித்துவிட்டார்கள். இந்த வைபவ ப்ரகாசிகையானது ஸாதாரண ஸம்ஸ்க்ருத பண்டிதர்களுங்கூட ப்ரயோகிக்கமாட்டாத அசுத்த ப்ரயோகங்கள் மலிந்ததாகையாலே இது அந்த மஹாவித்வத் ஸார்வ பௌமர் செய்திருக்க ஔசித்யலேசமுங் கிடையாதென்று நன்கு நிரூபித்திருப்பது இந்நூல். இதை இன்னமும் சிறிது விரிவாகத் தெரிந்துகொள்ள அடுத்த நெ. 132 க்ரந்தம் [ஸத்ஸம்ப்ரதாய ஸஹஸ்ராம்சு] மிகவுதவும்.

130. ராமாநுஜ தயாபாத்ரபத்ய சரித்ரம்: தேசிகனுக்கு * ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய தனியனே ப்ராமாணிகமான தென்றும் * ராமாநுஜதயாபாத்ர மென்கிற ச்லோகம் நவீநர்களால் கோவில் கலஹங்களுக்காக ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்றும் அசைக்கமுடியாத ஹேதுக்களை நிரூபித்துத் தமிழில் பலநூல்கள் எழுதப்பட்டிருப்பது மேலே தமிழ் நூற்பகுதியில் விசதமாகும். இந்த நவீனத்தனியன் தோன்றியது காரணமாகவே ஸ்ரீவைஷ்ணவர்களுள் அபரிமிதமான கலஹங்களும் ஆங்காங்கு லக்ஷக்கணக்கான வீண் பொருட்செலவுகளும் ஏற்பட்டு மஹத்தான க்ஷோபம் விளைந்து கொண்டிருப்பதால் இந்த புதுத்தனியனின் உண்மைஸ்வரூபத்தை உலகமுழுவதுமறியப் பல பாஷைகளிலும் யதார்த்தமாக வெளியிட அடியேனுக்கு மிக்க ஆசையுண்டாயிற்று. வட நாட்டினர்க்கு உபயோகமாம்படி வட மொழியில் எழுதப்பட்டதிது. இதன் மொழி பெயர்ப்பு ஆங்கிலத்திலும் வெளியிடுவிக்கப் பட்டுள்ளது. இத்தகைய நூல்களினால் "யதார்த்தவாதீ பஹுஜநத்வேஷீ" என்கிறபடியே விவேகசக்தியற்ற பஹுஜனங்களின் த்வேஷமொன்றுதான் பலனாகத் தேறுமென்பது நமக்கு நன்கு தெரிந்திருந்தும் தத்துவத்தை யுணர்த்துவதில் நாம் இளைப்பதில்லை. இந்த பாத்ரத் தனியன் நவீனந்தா னென்பதையும் கோவில் சண்டைக்காகவே தோன்றியதென்பதையும் அசைக்க வொண்ணாத அறுபது காரணங்கள் காட்டி ஏழெட்டு நூல்களில் விளக்கியிருக்கிறேன். அவற்றைப் பாராதவர்கள் இவ்வுலகில் இல்லை. இதைப்பற்றின நூல்களை நாம் 18 வருஷகாலமாக வெளியிட்டு வருகிறோம். 15-வருஷம்வரையில் ஒருவரும் ஒரு பதிலும் பேசினதுமில்லை, எழுதினதுமில்லை; மதுரையில் ஒருவர் ஏதோ தூஷணையாக வெளியிட்டா ரென்பதும், அதற்கு உடனே மறுப்புகள் வெளிவர அவரும் கையொழிந்து நின்றாரென்பதும் மேலே தமிழ்நூற் பகுதியில் விசதமாகும். மூன்று வருஷங்களுக்கு முன்பு இந்த வடமொழிநூல் வெளியானபின்பு இருவர் ஏகதேசமாக பதில் வெளியிட்டார்க ளென்பதும், அவையும் உடனே * வானோமறிகடலோ மாருதமோ தீயகமோ * என்னும்படியாயின வென்பதும் மேலே 131, 132 லக்கமுள்ள நூல்களால் மிக விளங்கும். இதைப்பற்றி நாம் 100-பக்கமும் 200 பக்கமுமாக எழுதியிருப்பவற்றின் ஸாரத்தை மிகவும் ஸம்க்ஷேபமாக இங்கு உணர்த்துவோம்.

வேதாந்ததேசிகனுக்கு * ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: * என்பதொன்றே தனியன்; ராமாநுஜ தயாபாத்ரமென்கிற தனியன் இருநூற்றைச் சொச்சம் வருஷங்களுக்கு உட்பட்ட காலத்தில் கோவில் சண்டை தொடங்கினபோது நூதனமாகக் கல்பிக்கப்பட்ட சுலோகம். அது தோன்றினகாலம்முதல் ஆங்காங்கு கிரிமினல் வியாஜ்ஜியங்களும் ஸிவில் விவகாரங்களும் அபரிமிதமாகத் தோன்றி அதைச் சொன்னவர்களுக்குப் பலவித தண்டனைகளும் சாச்வத இஞ்ஜங்ஷன்களும் ஊர்ஜிதமாகியிருக்கின்றன. இந்தச்லோகத்தை நவீனமாகத் தொடுத்த நவீனர்களுக்குக் கோவில்களில் ஸம்பந்தமும் நவீனம்; திவ்யப்ரபந்தத்தில் அந்வயமும் நவீனம்; ஆழ்வாராசார்யர்களோடு உறவும் நவீ

னம். இதைப்பற்றின விஷயங்கள் பாரதமும் ராமாயணமும் போலே விஸ்தாரமாகவுள்ளன. அவை இந்நூலில் விசதமாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

மிக முக்கியமான ஒரே விஷயம். பாத்ரத் தனியன் சொன்னபிறகு *யோநித்யமச்யுத* என்கிற உடையவர் தனியனும் *மாதா பிதா* என்கிற நம்மாழ்வார் தனியனும் அநாதி ஸ்ரீ வைஷ்ணவர்களாலே அநுஸந்திக்கப் பட்டு வருகிறது. இது யுக்தம். ஏனென்றால், அவர்கள் எப்போதும் [ஸமாச்ரயணபரம்பரையிலும் க்ரந்தபரம்பரையிலும்] உடையவர்க்கும் ஆழ்வார்க்கும் தனியனாக அந்த ச்லோகங்களையே வைத்துக் கொண்டிருப்பதனாலே. நவீனர்களோ வென்னில், இவற்றைத் தள்ளி இவற்றின் ஸ்தானத்திலே *ப்ரணமம் லக்ஷ்மணமுநி: *யஸ்ய ஸாரஸ்வதஸ்ரோதஃ* என்னும் ச்லோகங்களையே வைத்துக் கொண்டிருக்கிறார்களென்பது நிர்விவாதம். இப்படிப்பட்டவர்கள் திவ்யப்ரபந்தஸேவையில் மாத்திரம் அநாதி ஸ்ரீவைஷ்ணவர்களாதரிக்கும் தனியன்களைச் சொல்லி வருவது எதனாலேயென்று விசாரித்தால் மருமம் விளங்கும். தவிரவும், வாழிதிருநாமத்தில். ஸ்ரீசைலேசத் தனியனுக்கு முன்னடி யநுஸந்திக்கப் பட்டுவருகிற *நம: ஸ்ரீ சைல நாதாய* என்கிற ச்லோகமானது மாமுனிகளுக்கு ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளையின் தனியன். திவ்யப்ரபந்த ஸேவைக்கு மாத்திரம் அது தனிப்பட்ட தனியனன்று; ஸமாச்ரயண பரம்பரையிலும் க்ரந்த பரம்பரையிலும் அவர்க்கு அதுவேதான் தனியன். *ராமாநுஜதயாபாத்ரத் தனியனுக்கு முன்னே சொல்லப்படுகிற *நமோராமாநுஜார்யாய* என்கிற ச்லோகமானது தேசிகர்க்கு ஆசார்யரான அப்புள்ளாருடைய தனியன். ஆனால் அவருடைய உண்மையான தனியன் இதுவல்ல. *யஸ்மாதஸ்மாபிஃ* என்று தொடங்கி அதி கம்பீரமாக தேசிகனருளிச்செய்த தனியன் வேறுஇருக்கிறது. அதுதான் ஸமாச்ரயண பரம்பரையிலும் க்ரந்தபரம்பரையிலும் அப்புள்ளார்க்கு வழங்கிவரும் தனியன்; *நமோராமாநுஜார்யாய* என்கிற இப் புதுச்லோகமானது ராமாநுஜ தயாபாத்ரத்தோடு கூடவே ஸ்ருஷ்டிக்கப் பட்டது. உள்ளதனியனை விட்டு வேறு தனியன் எதற்காக இவ்விதமாய் ஸ்ருஷ்டித்ததென்று கேட்டால் உண்மை வெளிவரும். எல்லாம் கற்பனையென்பது இவற்றால் எளிதாகப் புலனாகும். இங்கு இவ்வளவு போதுமென்று நிற்கிறோம். மத்யஸ்தர்கள் இவற்றை யாராயவேணும்.

131. பாத்ரபத்ய சரித்ரப்ரதிஷ்டா: மேலே 130 லக்கமுள்ள நூலில் ஏகதேசமாகச் சிற்சில விஷயங்களைப்பற்றி மட்டும் பதில் சொல்லவந்த மைஸூர் ஸ்ரீபரகாலமட ஸ்ரீகார்யகர்த்தாவின் "ராமாநுஜ தயாபாத்ர பத்ய தத்வநிரூபணம்" என்கிற (நாலைந்து காகிதமேயான) சிறு நூலுக்கு மறுப்பு இது. இதைப்பற்றி இத் தன்சரிதையில் பக்கம் 219ல் காண்க. இந்த ப்ரதிஷ்டா க்ரந்தம் இரண்டு பரிச்சேதங்கள் கொண்டது; முதல் பரிச்சேதம் 44 விஷயங்களைத் தெரிவித்து ப்ரதிவாதியின் வாதங்களை அடியறுப்பது. இரண்டாம் பரிச்சேதம் புஷ்கரக்ஷேத்ரத்திலிருந்து தாமோதரபண்டிதனென்றொருவன் ஹிந்தியில் எழுதி வெளியிட்டிருந்ததற்கு மறுப்பு.

132. ஸத்ஸம்ப்ரதாய ஸஹஸ்ராம்சு: கீழே செ 120. ராமாநுஜதயா பாத்ரபத்ய சரித்ரமென்கிற நமது நூலுக்கு D.T. தாதாசார்யரும் ஸ்ரீமதுராந்தகம் வீரராகவாசாரியரும் சேர்ந்து மறுப்பெழுதத் தொடங்கி ஸம்ப்ரதாயப்ரதீபமென்றொரு வடநூலை வெளியிட்டார்கள். அதற்கு ப்ரத்யக்ஷரகண்டனமாகத் தமிழிலும் வட மொழியிலும் நம்மாலெழுதப்பட்டது. தமிழில் ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கரனென்பது. அதைப்பற்றி மேலே தமிழ் நூற்பகுதியில் விசதமாகும். ஸத்ஸம்ப்ரதாயஸஹஸ்ராம்சு வென்கிற இந்த வடநூல் ச்லோகரூபமானது. நூலின் பெயருக்குத் தக்கபடி ஆயிரம் சுலோகங்களெழுதுவதென்று

தொடங்கலாயிற்று. மிகவும் அஸம்பத்தமானவிஷயங்களுக்கு மறுப்பெழுது வதே வீணானது; அதிலும் ஆயிரம் ச்லோகமிடுவது எதற்காகவென்று பல ஆப்தர்கள் தெரிவித்தபடியால் அறுபத்துநான்கு சுலோகத்தளவில் நிறுத் தப்பட்டது. திருப்பதி வித்வான்களின் கோரிக்கைக்கிணங்கி இது தெலுங்குலிபியில் அச்சிடப்பட்டுள்ளது. வைபவப்ரகாசிகையென்று கல் பிதமான நூலில் *பத்யைஸ் ஸஹஸ்ரை:* என்றும் *க்ரந்தைச் சதுஸ்ஸப்ததிபிஸ் ஸஹஸ்ரை:* என்றுமுள்ள பிரயோகங்கள் ஸர்வாத்மநா அஸம்பத்தமென்பது இதில் பரக்கநிரூபிக்கப்பட்டிருக்கின்றது; வித்வான்கள் மிகரஸிக்கத்தக்கது.

133. ஸத்ஸம்ப்ரதாயஸஹஸ்ராம்சுவ்யாக்க்யா: கீழ் 132 லக்கமுள்ள நூலுக்கு இது விரி வான வியாக்கியானம்; வடமொழியிலேயே அமைந்தது.

134. பதபாடபரித்ராணம்: இது வேதலக்ஷணரூபமான வைதிகக்ரந்தம். கீழ் நெ. 14 வேதாத்யயநஸர்வஸ்வநூலுக்குத் தொடர்ச்சியானது. இதில் நவாஹ்நிகம் என்று ஒன்பது பரிச்சேதங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தேவநாகரலிபி.

135. சதபூஷணீவஜ்ரநடார: வேதாந்ததேசிகனுடைய சததூஷணீக்ரந்தத்தின்மேல் ப்ரத்யாக்க்யானமாக ஸமீபகாலத்தில் வெளிவந்த சதபூஷணியென்னும் நூலுக்கு மறுப்பு இது. இது உலகமெங்கும் பரவியதாதலால் இதைப்பற்றி இங்கு நாம் அதிகமாக எழுதவேண்டியதொன்றுமில்லை. இது நமது அம் ருதலஹரீ பத்ரிகையில் ஆரம்பிக்கப்பட்டு வைதிகமநோஹராவில் வருகிறது.

136. நவீநசரித்ரக்ரந்தவிமர்ச: வேதாந்த தேசிகனோடு நவீனமாக உறவு கொண் டாடப் புகுந்தவர்கள் கற்பனையாக எழுதிவைத்த மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவமென்னும் புத்தகம் ஆபாதசூடம் அபத்தமும் அஸம்பத்தமுமான தென்று விரிவாக நிரூபிக்கும் நூலிது. தேசிக சரித்திரத்தைப் பிராமாணிக மாகப் பேசவந்த ஆசார்யசம்புவில் இல்லாதவற்றையும், மூரணானவற்றையும் நிராதாரமாக எழுதிவைத்திருக்கிறார்களென்பதை நன்கு நிரூபிக்குமிது.

137. ரஹஸ்யத்ரயார்த்தஸர்வஸ்வம்: முமுக்ஷுப்படிக்கு மணவாள மாமுனிகளின் வியாக்கியானத்தைத் தழுவியெழுதிய ஸம்ஸ்க்ருதவியாக்கியானம்.

138. ஸ்ரீவசநபூஷணதிவ்யார்த்ததீபிகா: ஸ்ரீவசநபூஷண திவ்யார்த்தத்தை மணவாள மாமுனிகளின் வியாக்கியானத்தைத் தழுவியெழுதிய ஸம்ஸ்க்ருதவியாக்கி யானம்.

139. ரஹஸ்யத்ரயஸாரஸாரப்ரதீபிகா: தேசிகனுடைய ரஹஸ்யத்ரயஸாரத்திலுள்ள ஸாரார்த்தங்களை வடநாட்டினருமறிந்து கொள்ளும்படி ஸம்ஸ்க்ருதத்தி லெழுதிய விளக்க நூல்.

140. ஸமஸ்யாபூர்த்திசதகம்: நாநாதேசத்துப் பண்டிதர்கள் கொடுத்த ஸமஸ்யைகளைப் பூர்த்தி செய்த ச்லோகங்கள் நூறு. இவை மஞ்ஜுபாஷிணியிலும் ஸம்ஸ் க்ருத சந்திரிகையிலும் விஜ்ஞாநசிந்தாமணியிலும் ஏறியுள்ளன.

141. சித்ரப்ரச்நோத்தரமாலா: நாநாதேசத்துப் பண்டிதர்கள் கொடுத்த நூற்றுக்கணக் கான சித்ரப்ரச்நங்களுக்கு வெளியிட்ட உத்தரச்லோகங்கள். உதாஹரண மாக ஒன்று காட்டுகிறேன் காண்மின்; * आयान्तं मैथिलीनाथं द्रष्टुमत्र ससंभ्रमम् । अत्र क्रियापदं वक्तु: सुलभं रूप्य पञ्चकम् * என்று ஒருபண்டிதர் சித்ரப்ரச்நம்கொடுப் பது. ஆயாந்தம்—வந்துகொண்டிருக்கிற, மைதிலீநாதம்—ஸீதாபதியான ஸ்ரீராமனை, த்ரஷ்டும்—ஸேவிப்பதற்கு, அத்ர—இவ்விடத்தில், ஸஸம்ப்ரமம்—பரபரப்புடன்.

என்று இவ்வளவே ச்லோகத்திலுள்ளது. வினைமுற்று (க்ரியாபதம்) இல்லை. அது மறைந்து கிடக்கிறது; அதைக்கண்டுபிடித்துச் சொல்ல வேணுமென்று ப்ரச்நம். இதற்கு உத்தரம்; आयामिति पदच्छेदे सुलभं हि क्रियापदम् என்று. (அதாவது) 'ஆயாந்தம்' என்றது ஒரே பதமல்ல, இரண்டுபதம். ஆயாம், தம் என்று பிரித்து, தம் மைதிலீநாதம் த்ரஷ்டும் அத்ர ஸம்ப்ரமம் ஆயாம்=என்று கொண்டால் க்ரியாபதம் காணலாகிறது. ஆயாம்—வந்தேனென்றபடி. இது க்ரியாகுப்த மெனப்படும். இங்ஙனே கர்த்ருகுப்தம், கர்மகுப்தம்...மற்றும் பலவகைகளுமுண்டு. எல்லாவகைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவையும் வடமொழிப் பத்ரிகைகளில் ப்ரஸித்தம்.

142. சரமச்லோகாவளீ: ஸுப்ரதிஷ்டிதர்களாக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் குன்றபாக்கம் ஸ்வாமி, திருமலை திருப்பதி புரிசை ஸ்வாமி, ஸ்ரீமத்பரமஹம்ஸ. அழகிய மணவாள ஜீயர்ஸ்வாமி, முஸர்பாக்கம் விரக்தி ஸ்வாமி, ஸ்ரீகாதி ஸ்வாமி, மாம்பள்ளம் ஸ்வாமி, ஆக இப்பெரியோர்கள் விஷயமாக தத்தத் ஸமயங்களில் இயற்றின சரமச்லோகங்கள். இப்பெரியார்களின் திருவுருவப் படங்களை இத்தன்சரிதையிலேயே ஆங்காங்கு ஸேவித்திருக்கிறீர்கள்.

143. அபூர்வராமாயணம்: இது தமிழ்ப்பாஷையிலெழுதப்பட்டது ப்ரஸித்தம்; மேலே தமிழ்நூற்பகுதியிலும் (லக்கம் 221) வரும். அதுவேபோல வடமொழியிலும் எழுதப்பட்டதிது.

144. திவ்யபுருஷபரீக்ஷா: இது வொரு ஆங்கில காவியத்தின் மொழிபெயர்ப்பான விநோத கத்யப்ரபந்தம்.

145. மஹிளாபுர கேசவஸுப்ரபாதம்:
146. மஹிளாபுர கேசவகர்ணாம்ருதம்:
147. மஹிளாபுர கேசவமங்களம்:
இம்மூன்று நூல்களும் மயிலை ஸ்ரீகேசவப் பெருமாள் ஸந்நிதியில் நித்யமநுஸந்திப்பதற்காக அந்ததேவஸ்தான தர்மகர்த்தாக்களின் விருப்பத்திற்கிணங்க இயற்றப்பட்டன. இவை தேவநாகரி தெலுங்கு தமிழ்லிபிகளில் அச்சேறியுள. இவற்றுள் ஸுப்ரபாதஸ்துதியை மூன்று வருஷகாலமாக தினப்படி ப்ரபாதத்தில் விச்வரூபஸமயத்தில் கோஷ்டியாக விருந்து நியமேந அநுஸந்தித்து வருகிறார்கள். மேலே குறித்த மூன்றுஸ்துதிகளையும் கண்டபாடமாக்கி அஸ்கலிதமாகப் பரீக்ஷை கொடுப்பவர்களுக்குப் பரிசு கொடுப்பதாக தேவஸ்தாநாதிகாரிகள் பிரசுரப்படுத்தப் பல பேர்கள் பரீக்ஷைக்கு வந்தார்கள். ஸ்ரீமதுபயவே. (ரிடையர்டு பெடரல் கோர்ட்டு ஜட்ஜ்) S. வரதாச்சாரியர் ஸ்வாமியும், ஸ்ரீமான் உவே. வித்வான் காரப்பங்காடு வேங்கடாசாரியர் ஸ்வாமியும் இதற்குப் பரீக்ஷகர்களாக இருந்து, இப்பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறின [ஸ்ரீ காஞ்சீ, வேதவேதாந்த வைஜயந்தீ வித்யாலயோபாத்யாயர்களுள் ஒருவரான] ஸ்ரீ உவே. கோயில் கந்தாடை அண்ணன் ராமாநுஜாசாரியர்க்கு தங்கப்பதக்கம் பரிசளித்தார்கள். அவருருவப்படமும் இத்தன்சரிதையில் [பக்கம் 103, 105–களில்] காணலாம்.

148. சென்ன கேசவஸுப்ரபாதம்: மயிலை ஸ்ரீகேசவப்பெருமாள் தேவஸ்தானத்திற் போலவே சென்னை கேசவப்பெருமாள்ஸந்நிதியிலும் தினப்படி ஸுப்ரபாதஸ்துதியின் அநுஸந்தானம் நடந்துவர வேணுமென்று விரும்பிய இந்த தேவஸ்தாநாதிகாரிகளின் அபேக்ஷைக்கிணங்க இயற்றப்பட்டது. இதுவும் மூன்று வருஷகாலமாக இந்த தேவஸ்தானத்தில் விச்வரூபஸமயத்தில் நித்ய கைங்கர்யபரர்களால் நித்யமநுஸந்தானம் செய்யப்பட்டு வருகின்றது. இதுவும் தேவநாகரி தெலுங்கு தமிழ்லிபிகளில் அச்சேறியுள்ளது.

149. வாத்ஸல்யார்த்தப்ரகாசிகா: எம்பெருமானுடைய வாத்ஸல்யகுணத்தில் குத்ஸித வாதங்களைப் பண்ணி பங்கமடைந்தவர்கள் பலர். அவர்களுள் D. T. தாதாசாரியார் அவஸாநத்தில் நின்றவர். இவருடையவும், இவரைச்சார்ந்தவர்களுடையவும் ஸகலவிதமான துர்வாதங்களையும் வேரறக்களைந்து இருநூற்றுச் சொச்சம் ச்லோகங்களாக எழுதப்பட்ட நூலிது. ஸ்ரீரங்க ராஜஸ்தவத்திற்போல் இதில் பூர்வசதகமென்றும் உத்தரசதகமென்றும் இரண்டு சதகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பகவத் குணரஸிகர்களுக்கு இதுபோன்ற நூல் வேறில்லையென்று பலரும் புகழ நின்றது இது. தேவநாகரலிபியிலும் தெலுங்குலிபியிலுமச்சேறியுள்ளது. தமிழுரையும் தெலுங்குடீகையுமுண்டு.

150. வாத்ஸல்யார்த்தப்ரகாசிகாவிவ்ருதி: கீழ் 149 லக்கமுள்ள வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகாக்ரந்தம் ச்லோக ரூபமாகவிருப்பதனால் அதற்கு மிக வெளிய வடமொழி வசன நடையில் அமைந்த வியாக்கியானமிது. (தமிழுரை வேறு.)

151. திவ்யஸூரிவைபவம்: ஆழ்வார்களின் வைபவத்தை வடமொழியிலுணர்த்தும் வசனநூல். (இது நான்கு பாஷைகளிலுமுண்டு.)

152. பூர்வாசார்யவைபவம்: ஸ்ரீமந் நாத முனிகள் முதலான பூர்வாசார்யர்களின் வைபவத்தை வடமொழியிலுணர்த்தும் வசனநூல். ஆளவந்தார் வைபவம் வரைக்குமே அச்சிடப்பட்டுள்ளது. சேஷம் இனி முத்ரிதமாகும்.

153. தர்க்கசாஸ்த்ரஸர்வஸ்வம்: தர்க்க சாஸ்த்ரத்தின் கொள்கைகளை இருவர்ஸம்பாஷண ரூபமாக விளக்கியுள்ளது இதில்.

154. யாத்ராஸ்தோத்ராம்ருதம்: இத் தன்சரிதையிலேயே (பக்கம் 181-186-ல்) காண்க.

155. ஸதர்த்தஸமுச்சய: அநேக நற்பொருள்களை நிரம்பக்கொண்ட வடமொழி வசனநூல்.

ஸம்ஸ்க்ருத நூற்பகுதி முற்றிற்று.

கீழ்பக்கம் 291, 292ல் விளக்கியுள்ளபடி 156 லக்கம் முதல் 163 லக்கம் வரையிலுள்ள ஹிந்தீ பாஷை நூல்களைப்பற்றியும், 164 லக்கம் முதல் 204 லக்கம் வரையிலுள்ள தெலுங்கு பாஷை நூல்களைப்பற்றியும் இங்கு விவரித்தெழுத அவசியமில்லையென்று விடுத்து, இனித் தமிழ் நூற் பகுதியை ஆரம்பித்து விவரிக்கலாகிறது.

இனி தமிழ் நூற்பகுதி. அடியேனுடைய தமிழ் நூல்கள் பன்னிரண்டு துறைகளில் தோன்றியுள்ளனவென்று கீழே பக்கம் 281ல் விவரிக்கப்பட்டுள்ளது. அந்தத் துறைகளினடைவே நூல்களை விவரிப்போமினி.

1. பூர்வாசாரியர்களின் பெருமை யுரைக்கும் நூல்கள்.

205. கூரத்தாழ்வான் வைபவம்: ஸம்ப்ராதாயத்திலிழிந்து அடியேன் முதன் முதலாக எழுதிய தமிழ்நூல் இதுவேயாகும். என்னுடைய நண்பர்களிலொருவர் (சைவர்) 50 வருஷங்களுக்கு முன்பு பெரிய காஞ்சீபுரத்தில் அச்சுக்கூடம் வைத்தார். அவர் முதன் முதலாக என்னுடைய வொரு நூலை அச்சிட விரும்பி என்னிடம் வந்து இந்த விருப்பத்தைத் தெரிவித்து 'தாங்கள் அருமையானவொரு வசனநூல் எழுதித் தர வேணும்' என்று கோரினர். அன்று தைமீ ஹஸ்த நக்ஷத்திரமாயிருந்த படியாலே அன்று திருவவதரித்த கூரத்தாழ்வானுடைய திவ்ய சரித்திரத்தை யெழுதித் தருவதாகச் சொல்லி 'இவ்வாசார்யர் சைவ கண்டனத்தில் தலை நின்றவர்; இவருடைய சரித்திரம் உங்களுக்கு ருசிக்குமோ?' என்றேன். அது கேட்ட அவர் 'உங்கள் கையினுல் எது எழுதிக் கொடுத்தாலும் அதுவே எனக்குப் பரம சந்தோஷம்' என்றும் 'முதன்முதலாக உங்களுடைய திருவாக்கில் வந்தபடி அதையே எழுதித் தரவேணும்' என்றும் சொன்னர். அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற இதை யெழுதிக் கொடுத்தேன். அவரே குமரன் அச்சுக்கூடத் தலைவர். என்னைக்கொண்டு வான்மீகி ராமாயண வசனநூலை எழுதுவித்து அதை முதற் பதிப்புச் செய்வித்தவரும் இந்த நண்பரே யாவர். இந்த கூரத்தாழ்வான் வைபவத்தைப் பல நூல்களை யாராய்ச்சி செய்து மூன்று நாட்களிலெழுதிக் கொடுத்தேன். அவரும் மூன்றே நாளில் அச்சிட்டு முடித்தார். அந்தப்பதிப்பு இப்போதில்லை; பிறகு மிக வழகிய பதிப்பு அமைந்துள்ளது. இந்த நூலைப் படிப்பவர்கள் பெரும்பாலும் "கண்ணீரைப் பெருகவிட்டுக் கொண்டே வாசித்தோம்" என்று சொல்லுவது வழக்கம்.

206. ஸ்ரீராமாநுஜர் வைபவம்: எம்பெருமானருடைய வைபவம் விரிவாகவும் தெளிவாகவும் எழுதப் பெற்ற நூலிது.

207. அனந்தாழ்வான் வைபவம்: எம்பெருமானருடைய திவ்ய நியமனத்தைச் சிரமேற்கொண்டு திருவேங்கட மலையில் அத்புத கைங்கர்யங்களைச் செய்தருளின திருமலை யனந்தாழ்வானுடைய திவ்ய சரிதை.

208. ஆழ்வார்கள் வைபவம்: ஆழ்வார்கள் பன்னிருவரின் சரித்திரம் விரிவாகவும் தெளிவாகவு முள்ளது. ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தை யடியொற்றி யெழுதியது.

209. வேதாந்த தேசிகன் வைபவம்: தேசிகனுடைய திவ்ய சரித்திரத்தைக் கூடியமட்டில் பிராமாணிகமாகப் பேசியிருக்கும் நூல் வேதாந்தாசார்ய விஜயமென்கிற ஆசார்ய சம்பூப்ரபந்தம். அதன்படி தேசிகன் வைபவத்தை இக்காலத்தவர்கள் எழுதுவதும் சொல்லுவதுமில்லை. ஸ்வேச்சையாகப் பல மாறுதல்களைச் செய்தும் இல்லாதவற்றைச் சேர்த்தும் எழுதி வைத்திருக்கிறார்கள்.

அன்னவர்களின் த்ருப்திக்காக நாமும் அவ்வாறே எழுதிய நூலிது. மேலே உதாஹரித்த ஆசார்ய சம்பூ ப்ரபந்தத்தில் கூறியுள்ள சரித்திரம் எத் தகைத்து ? இத்யாதி விஷயங்கள் மேலே சில நூல்களைப் பற்றின விவரணங் களில் விசதமாகும்.

210. மணவாள மாமுனிகள் வைபவம் : யதீந்த்ர ப்ரவண ப்ரபாவத்தையும், எறும்பியப் பாவின் சில ஸ்ரீ ஸூக்திகளையு மநுஸரித் தெழுதப்பட்டது.

211. அண்ணா வைபவம் : அஸ்மத் குல கூடஸ்தரான ப்ரதிவாதி பயங்கராசார்ய ருடைய திவ்ய சரித்திரம் ; பழைய ஏடுகளிலிருந்து ஸங்க்ரஹிக்கப்பட்டது.

212. பூர்வாசார்யப்ரபாவம் : ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி மணவாள மாமுனிகளீறாக ஸகலாசார்யர்களுடையவும் திவ்ய சரித்திரம்.

213. புரட்டாசித் திருவோண மலர் : இதன் முன்னுரை மட்டும் ஸம்க்ஷேபமாக இங்கு வெளியிடப்படுகின்றது ; அதைக்கொண்டே பல தத்துவங்கள் தெரிந்து கொள்ள முடியுமென்று. அந்த முன்னுரையாவது—

“நிகழும் நந்தன வருஷ புரட்டாசித் திருவோணத் திருநாள் ஜகத்தேசிக சிகா மணியான நம் தூப்புல்வள்ளல் திருவவதரித்த நன்னாளாகையாலே அன்று உலகமெல்லாம் திரு நக்ஷத்ரமஹோத்ஸவத்தை வெகு சிறப்பாகக் கொண் டாடும். ஆசார்யனுடைய திவ்ய சரித்ர வைபவங்களையும் திவ்ய ஸ்ரீ ஸூக்தி மேன்மைகளையும் பரிபூர்த்தியாகவும் யதார்த்தமாகவும் அநுபவிப்பதே முக்கிய மான திருநக்ஷத்ரமஹோத்ஸவக் கொண்டாட்டமாதலால் அவ்விதமான அநு பவம் ஸகல தேசஸ்தர்களுக்கும் ஸமரீதியாக வாய்க்கும்படி அடியேன் தொண்டு செய்ய முயல்கின்றேன். ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய சரித்திரத்தைப் பலர் பல விதமாக எழுதி வெளியிட்டுள்ளார்கள். அறுநூறு ஆண்டுகட்கு முன்பு எழுந் தருளியிருந்த மஹாசார்யனுடைய சரித்திரத்தை நாம் நம் மனம் போனபடி எழுதி வெளியிடுவது தகாது. பழையவைகளும் பிராமாணிகங்களுமான சரித்திர நூல்களின் ஆதாரங் கொண்டே எழுதத்தகும். இதர ஆசாரியர் களின் நிந்தைகளைப்புகுத்தியும், இல்லாத வைபவங்களை அநாவச்யகமாக ஏறிட்டும் எழுதப்படுகிற சரித்திர நூல்களால் பிராமாணிகவுலகம் உகப்படை யாது. உகப்புக்கு எதிராக வெறுப்பையுமடையும். உதாரணமாக ஒரு விஷயம் காட்டுகிறேனிங்கு. சென்ற 1944 ஆம் வருஷத்தில் வெளி வந்த தேசிகப் பிர பந்தவுரையில் தேசிகனுடைய சரித்திரம் (16 பக்கம்) அநுபந்தமாகச் சேர்க்கப் பட்டிருக்கிறது. அது சென்னை அட்வகேட் D ராமஸ்வாமி ஐயங்காரவர்கள் எழுதியதாக வெளிவந்துள்ளது. ‘தேசிக வைபவம்’ என்று தலைப்புடைய தான அந்த சரித்திரத்தில் பல பொய்யான விஷயங்களும் இதர ஆசார்ய தூஷணைகளும் விசேஷமாகக் காணப்படுகின்றன வென்று அப்போதே ஒரு ஆராய்ச்சி நூல் வெளியிடப்பட்டு நாடெங்கும் பரவியுள்ளது. அதன் பெயர் ‘தேசிகப்ரபந்தவுரையாராய்ச்சி’ என்பது. அதை வாசித்தவர்கள் யாவரும் ஒருமிடறாகச் சொல்லிக்கொண்டதென்ன வென்றால், இவ்வளவு எளிதாக மறுப்பு ஏறும்படியான தேசிக சரித்திரத்தை மஹாவிவேகியான D. ராம ஸ்வாமி ஐயங்கார் ஒருகாலும் எழுதியிருக்கமாட்டார் ; அவர் பெயரையிட்டு வேறு யாரேனும் எழுதியிருக்கலாம் ; இப்படி பச்சையாக ஆசார்யாபசாரப் படு குழியில் அவர் (D. R.) ஒரு நாளும் விழுந்திருக்க மாட்டார்-என்றே சொல்லிக் கொண்டார்கள். அது வாஸ்தவமே. அதில் பூருவாசாரியர்களை தூஷித்து எழுதியிருக்கும் வார்த்தைகள் பலபல ; இப்போது இங்கு முக்கியமாக ஒன்றே எடுத்துக் காட்டுதும். அதில்,

" ஆறாயிரப்படிக்குப் பின் தோன்றிய பல வியாக்கியானங்களி லுள்ள தோஷங்களைக் கணிசித்து அவற்றையெல்லாம் களைந்து தேசிகனருளிச் செய்த எழுபத்தினாலாயிரம் கிரந்தங்கள் கொண்ட நிகம பரிமள மென்னும் ஓர் அழகியவியாக்கியானம் ஸ்வாமியால் தம்குமாரர்க்கு முன்பே கால க்ஷேபமாக ப்ரவசனம் செய்யப்பட்டிருந்தது "

என்றெழுதப்பட்டுள்ள இவ்வொரு விஷயத்தை யெடுத்துக் கொள்வோம். ஆறாயிரப்படி யென்பது திருவாய்மொழிக்குத் திருக்குருகைப் பிரான் பிள்ளானருளிச்செய்த வியாக்கியானம். இது மிகவும் சுருக்கமானது. இதற்குப் பின் தோன்றிய வியாக்கியானங்களாவன—நஞ்சீயரருளிய ஒன்பதினாயிரப் படியும், பெரியவாச்சான் பிள்ளை யருளிய இருபத்து நாலாயிரப் படியும், வடக்குத் திருவீதிப்பிள்ளையருளிய ஈடு முப்பத்தாறாயிரப்படியும், வாதி கேஸரி அழகிய மணவாளச்சீயரருளிய பன்னீராயிரப்படியுமாம். இவை தவிர வேறு ஒரு வியாக்கியானமும் தேசிகன் காலத்திற்குமுன் தோன்றியதில்லை. ஒன்பதினாயிரப்படி முதலிய அந்த நான்கு வியாக்கியானங்களிலும் தோஷங்கள் இருந்ததாகவும் அவற்றை தேசிகன் கண்டு மனம் நொந்ததாகவும் அந்த தோஷங்களை யெல்லாம் களைவதற்காக அவர் நிகமபரிமளமென்கிற விஸ்தார வியாக்கியானம் வெகு அழகாக இட்டதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அந்த நிகமபரிமளம் இப்போது உள்ளதோ வென்று கேட்டால், ஐயோ! அன்றைக்கே அது அந்தர்த்தானமாய் விட்டதே! யென்று கண்ணீர்மழை பெருக்குகிறார். அது எப்படியாவது போகட்டும். ஒன்பதினாயிரப்படி முதலிய நான்கு வியாக்கியானங்களில் தோஷங்களிருப்பதாக எழுதுகிறவர் ஆறாயிரப் படியையும் அந்த நான்கு வியாக்கியானங்களையும் நன்கு ஸேவித்தவராக இருத்தல் வேண்டும். ஒன்றிலும் ஓரக்ஷரத்தையும் பாராதவரும் பார்க்கவில்லாத வருமான ஒருவர், தம்முடைய ஸம்பிரதாயத்தில் அப்படிப்பட்ட வியாக்கியானங்கள் இல்லையே யென்கிற வருத்தத்தினாலும் இதரஸம்ப்ரதாய ஆசார்யர்களைப் பழிக்க வேணுமென்கிற பாரிப்பினாலுமே மேலே காட்டிய விதமாக எழுதி அஸஹ்யாபசாரப் படுகுழியில் விழுந்திருக்கிறாரென்பது கையிலங்கு நெல்லிக்கனி. உண்மையில், இவர் சுத்தஸம்பிரதாய மென்று அபிமானித்திருக்கின்ற வொரு நூதன ஸம்பிரதாயத்திற்கு ஆறாயிரப்படியோ மற்ற வியாக்கியானங்களோ எல்லாம் வாசியற விருத்த மானதே. இதில் ஸந்தேஹலேசமுமில்லை. மற்ற வியாக்கியானங்களிற் காட்டிலும் ஆறாயிரப்படியே முந்துற முன்னம் இவர்களுக்கு விலக்காகத்தக்க தென்பதும் சிலாவிகிதம்.

உண்மை இப்படியிருக்க, ஆறாயிரப்படியில் மஹார்த்தங்கள் கண்டுவிட்டதாகக் காட்டிக்கொண்டு, இதர வியாக்கியானங்களை துஷ்டங்களென்று பழிப்பது மஹத்தான ஸாஹஸம். வியாக்கியானங்கள் நிற்க; வியாக்கியேயங்களான [மூலமான] திவ்யப்ரபந்தங்களே இவர் கொண்ட ஸம்பிரதாயத்திற்கு நேர் முரணாயிருக்கும்போது வியாக்கியானத்தில் அநுகூலமாக ஓரக்ஷரமாகிலுங் காண அவகாசமேது? மூலத்திற்கு விருத்தமாக ஆறாயிரப்படி எங்ஙனே அமையுமென்று ஆராய அசக்தரல்லரே இவர். விஷயங்களை யெடுத்துக் கொண்டு அலசியலசி ஆராய்ச்சி செய்யும் சிரமத்தை ஏற்றுக் கொண்டாலல்லவோ 'ஆறாயிரப்படியில் நமக்குள்ள அநுகூலமென்ன? இதர வியாக்கியானங்களில் நமக்குள்ள பிரதிகூலமென்ன? என்பதைப் பகுத்துணரமுடியும். ஈடு முதலான வியாக்கியானங்களில் தோஷமிருப்பதாக தேசிகன் திருவுள்ளம் பற்றியிருந்தால் அந்த தோஷம் ஆறாயிரப்படியிலுமிருப்பதாகவே திருவுள்ளம் பற்றியிருக்கவேணு மென்பது திண்ணம். இவ்விஷயம் திருவாய்மொழியின் ஸகல வியாக்கியானங்களையும் தேசிகனுடைய ஸகல ஸ்ரீஸூக்திகளையும் கரதலா

மலகமாகக் கண்டவர்களுக்கே எளிதாகும். இவை யொன்றிலும் அந்வயமில்லாதவரும் ஏதோசில ஸ்தோத்ரங்களில் கண்ணநீரைச் சொரியுமவருமான ஒருவர் உலகமெல்லாம் கொண்டாட நின்ற ஸதாசார்ய வியாக்கியானங்களை தோஷமுடையனவாகப் பழிப்பதும் ககநாரவிந்த சசச்ருங்காதி ஸஹோதரமான வொரு வியாக்கியானத்தை அழகிய வியாக்கியானமென்பதும் வீணான வொரு அபிமானத்தின் க்ருத்யமாமத்தனையன்றோ.

பக்திகனிந்த நெஞ்சுடையவரென்றும் கூடியவரையில் ப்ராமாணிகரென்றும் சொல்ல நிற்கிற இவர் (D. R.) அபசார பஹுளமும் அஸமஞ்ஜஸமுமான அந்த சரித்திரப்பகுதியை எழுதியிருக்க மாட்டாரென்றே மஹான்களின் முடிபு. ஆனால் 1944 ஆம் வருஷத்தில் தேசிகப்ரபந்தவுரையில் சேர்த்து வெளியிடப்பட்டதாய், பிறகு பலமுகமான கண்டனங்களையும் அடைந்ததான அந்த சரித்திரம் மறுபடியும் 1948 ஆம் வருஷத்தில் ஸர்வதாரி புரட்டாசித் திருவோண வெளியீடாக இரண்டாம் பதிப்புச் செய்யப்பட்டிருக்கிறது, அதிலும் இவருடைய கையொப்பம் பன்முறையும் காண்பதால் இவ்வபசாரம் இவர்க்கு மனஸ் பூர்த்தியாகவே நேர்ந்ததென்று நினைக்கலாகிறது. இவ்விருள் தருமா ஞாலத்தின் செயலுக்கு ஆட்படாதாருமுளரோ? * அநுதாபாத் உபரமாத் ப்ராயச்சித்தோந்முகத்வத:. தத்பூரணுச் சாபராதாஸ் ஸர்வே நச்யந்தி பாதஃ: * என்ற அற்புதமான வசனத்தை ஸ்ரீ தேசிகரஹஸ்யங்களிற் கண்டிருப்பரேயிவர். அதனைப் புந: புந: ஆவர்த்தனஞ் செய்து தூய்மை பெறுவதே இவர்க்குப் பாங்காகும். இங்கு வக்தவ்ய சேஷமெல்லாம் மேலே விரிவாகச் சொல்லுவோம். இதராசார்ய தூஷணைகளும் பொய்யுரைகளும் கலசாத ஸ்ரீ தேசிக சரித்திரம் இப்புரட்டாசித் திருவோண மலரிற் காண்க. ஓர் முக்கியமான குறிப்பு ;—இதில் வேதாந்த தேசிகர்வைபவத்திற்கு அடுத்தபடியாக வெளியிடப்பட்டுள்ள ஒவ்வொரு வியாஸமும் இவருடைய பொய்யுரைகளைக் களைந்து யதார்த்தத்தை நன்கு ஸ்தாபிப்பனவாதலால் உண்மையான தேசிக பக்தர்கள் இப்புத்தகம் முழுவதையும் பலகால் வாசித்துப் பரிசீலனைபண்ணவேணும். (இப்புரட்டாசித் திருவோணமலர் தேசிகபக்தர்களுக்கு நிதி போன்றது.)''

214. ஐப்பசித் திருமூலமலர்: இதற்கு 'ஜகதப்யுதயைக மூலம்' என்கிற மறுபெயருமுண்டு. இந்நூலில் மிகப் பெரிய விஷயங்கள் பதினான்கு அடங்கியுள்ளன.

இதன் முன்னுரையை மட்டும் இங்குச் சுருக்கி வெளியிடுகின்றேன்.

“வணங்குந் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி” என்பது (திருவிருத்தத்தில்) நம்மாழ்வாரருளிச் செயல். அதன்படி உலகில் பல்வேறு சமயங்கள் தோன்றி நிற்கக் காணுகின்றோம். ஸகல மதங்களினுள்ளும் ஸ்ரீ வைஷ்ணவ மதம் மிகச் சிறந்ததென்று மெய்யடியார்களின் கொள்கை. அந்த ஸ்ரீ வைஷ்ணவ மதத்தினுள் பல உட்பிரிவினைகள் இருந்தாலும் அவை எல்லாம் ஆழ்வாருடையவும் எம்பெருமானாருடையவும் ஸ்ரீஸூக்திகளையே நிதியாகக்கொண்டிருக்க வேண்டியவைகளாதலால் அவற்றுள் பரஸ்பரம் இகழ்ச்சி காட்டுவது உற்றதன்று. அவரவர்கள் தங்கள் தங்கள் ஸம்பிரதாயங்களில் அன்பும் ஆதரவும்கொண்டிருப்பது ப்ராப்தமேயாகும். சில ஸமயங்களில் பிறமதங்களை நிந்திக்க நேர்ந்தாலுங்கூட, நஹிநிந்தா ந்யாயத்தையே பெரியார்கள் கருதுவர்கள். அந்த நியாயத்தின் கருத்தாவது-ஒரு விஷயத்தில் நிந்தை ஏற்பட்டாலும் அங்கு நிந்தையில் நோக்கென்பதில்லை ; உத்தேச்யமானதொன்றின் உயர்த்தியைக் கூறுவதிலேயே நோக்கம் என்பதாம். இதற்கு உதாஹரணமாக ஒன்று காட்டுவோம் ; ஆசாரியர் பெரியாழ்வாருடைய ஸ்ரீ ஸூக்திக்கு வியாக்கியானம் செய்தருளப் புகுமிடத்து அவ்வாழ்வாரைப் போரப்பொலியப் புகழ்ந்து பேசுவதோடு நில்லாமல் மற்றையாழ்வார்

களைக் குறைத்துப் பேசுவதையும் காணுகின்றோம். இதனால் அவர்களை நிந்திப்பதாக ஆகாது. ப்ரக்ருதத்தில் உத்தேச்யரான வொருவருடையபுகழ்ச்சியிலேயே அது விச்ராந்தமாகும். இதுவே *நஹிநிந்தா நியாயத்தின் கொள்கை. தம்முடைய ஸம்பிரதாயத்தின் மேன்மையையும் தத்துவங்களையும் விளங்கக் காட்ட நினைப்பவர்கள் இதர ஸம்பிரதாயங்களைப் பற்றின இகழ்ச்சியுரையை அணுவளவும் நெஞ்சிலும் நினைக்கக்கூடாது. ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களின் ஸம்ப்ரதாயத்திற்கே தென்னாசார்ய ஸம்ப்ரதாயமென்று பெயர். ச்ருதிகள் பஞ்சராத்ர ஸம்ஹிதைகள் ஸ்மிருதிகள் இதிஹாஸ புராணங்கள் ஆழ்வாரருளிச் செயல்கள் என்று பலவகைப்பட்ட ப்ரமாணங்களுள் ஆழ்வாரருளிச் செயல்களான திவ்யப் பிரபந்தங்களுக்கே அதிசயித்த ப்ராமாண்ய முள்ளதென்று கொள்பவர்களே ஸ்ரீ வைஷ்ணவர்க ளென்பபர். அன்னவர்களையே இக்காரணம் பற்றியே தென்னாசார்யர்களென்பது. தென்கலையாகிய தமிழ் வேதத்தில் ஊற்றமுள்ள ஆசார்யர்கள் தென்னாசார்யர்க ளென்றபடி. இவர்களுடைய ஸம்பிரதாயம் ஆழ்வார்களாலும் ஸ்ரீமத் நாதமுனிகள் தொடங்கி மணவாளமாமுனிகளீறாகவுள்ள ஆசாரியர்களாலும் சேமிக்கப் பட்டதாகும். விசேஷித்துப் பிள்ளை லோகாசார்யரும் மணவாள மாமுனிகளும் இந்த ஸம்பிரதாயத்திற்கு விஜயத்வஜம் போன்றவர்கள். இவ்விரண்டு திருநாமங்களும் திருவவதாரம் செய்தருளாதிருந்தால் இவ்வுலகம் இருள்மயமாகவே யிருந்திருக்கும்.

நமது ஆசார்ய கோஷ்டியில் ஸ்ரீ ராமாநுஜர் ஒருவரே க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர் என்ற பட்டத்தை முதன்மையாகப் பெற்றவரா யிருந்தும் அவர் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு க்ரந்தமும் அருளிச் செய்தாரல்லர். ப்ரஹ்மஸூத்ரங்களின் அர்த்தங்களை விவரிக்க மூன்று நூல்களை அருளிச் செய்தவர் ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு சிறு நூலாவது அருளிச் செய்திருக்கலாம்; இன்னுமொரு திருக்கோலம் பூண்டு [அதாவது—மணவாள மாமுனிகளாக அவதரித்து] அப்போது அருளிச்செய்ய வேணுமென்று திருவுள்ளம்பற்றி யிருந்தமையாலே ஸ்ரீ ராமாநுஜரான அந்த அவதாரந் தன்னிலே ரஹஸ்யார்த்தங்களை ஏடுபடுத்தாமே சென்றனர். ஸ்ரீ பாஷ்யம் கீதாபாஷ்யம் முதலிய திவ்ய க்ரந்தங்களில் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களும் ஆங்காங்குச் சேமிக்கப்பட்டே யிருக்கின்றனவானாலும் அவற்றைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டித் தாராத குறை குறையே. அக்குறைதீர ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான பிள்ளைலோகாசார்யர் முதன் முதலாக ஸ்ரீ வைஷ்ணவ மண்டலிக்கு மஹோபகாரம் செய்தருளினர். லோகாசார்ய ரென்கிற திருநாமம் இவர்க்கே தகும். இவ்விருள் தருமா ஞாலத்தின் அகவிருளை அறவே யொழிக்க வல்ல திவ்ய ஸ்ரீ ஸூக்திகளைத் தேனும் பாலும் நெய்யுங் கன்னலுமமுதுமாக அளித்தருளினவர் இம்மஹாசார்யர். இவருடைய ஸர்வஜ்ஞத்வத்தைப் புகழ்வதா? பரமகாருணிகத்வத்தைப் புகழ்வதா? பரம ப்ராமாணிகத்வத்தைப் புகழ்வதா? என்றால் ஒவ்வொன்றும் நெஞ்சால் நினைப்பரிதே ஒரு அர்த்தத்திலும் ஆக்ரஹமின்றிக்கே ஆசார்ய பரம்பரா ப்ராப்தமான அர்த்தங்களையே அழகுபட அமைத்திருக்குமற்புதம் இவருடைய க்ரந்தங்களுக்கே அஸாதாரணச் செல்வமாயிருக்கும். இவர் அருளிச்செய்த நூல்கள் 'அஷ்டாதச ரஹஸ்யம்' என்று ஸுப்ரஸித்தமா யிருக்கும். அந்தப் பதினெட்டு ரஹஸ்ய க்ரந்தங்களுள் ஸ்ரீவசநபூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி என்ற மூன்று ரஹஸ்ய நூல்கள் மிகச் சிறந்து முக்கியமாக விளங்கும். இவருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த ஆசார்ய ஹ்ருதயமென்னும் ரஹஸ்யமுஞ் சேர்ந்து நான்கு ரஹஸ்ய க்ரந்தங்கள் தென்னாசார்ய ஸம்பிரதாயத்திற்கு மூலாதாரமாக விளங்குகின்றன. இந்த நான்கு க்ரந்தங்களுக்கும் மிகச்சிறந்த வியாக்கியானத்தை அருளிச்செய்தவர் மணவாள மா

முனிகள். இவர்க்கு "விசதவாக் சிகாமணி" என்றொரு பிருதம் வழங்கிவருகின்றது. இதனை முதல் முதலாக அளித்த மஹாநுபாவர் ஆரோ அறிகின்றிலோம். மருமமறிந்து அளித்த அந்த விருது இவ்வாசார்ய சிகாமணியொருவர்க்கேதான் ஏற்குமென்னத் தட்டில்லை. நீறுபூத்த நெருப்பு என்னநின்ற இவ்வாசிரியரின் திருவாக்குப்போல் இவ்வுலகில் இதுகாறும் கண்டதில்லை யென்றால் இனிமேலா காணப்போகிறோம். மாமுனிகளின் திவ்யமங்கள விக்ரஹமும் திருவுள்ளமும் ஸத்வகுணமொன்றே வடிவெடுத்ததா யிருந்ததென்பது அவருடைய திருவாக்குகளில் அக்ஷரந்தோறும் புலப்படா நின்றது. ஸகலசாஸ்த்ர ஸாரார்த்தங்களையும் வெகு அழகாகத் திருவுள்ளத்திலே அடக்கிக் கொண்டு நாட்பூ அலர்ந்தாற்போலே ஸ்ரீ ஸூக்திகளை ஏற்றக் குறைவின்றி அமைத்திருக்கிற அழகு என்னே! என்னே!! என்று உள்ளம் குழைகின்றதத்தனை. விமர்ச சக்தி, நிரூபண நைபுண்யம் என்றிங்ஙனே சொல்லும்படியான திறமையெல்லாம் மிக வியக்கும்படியான முறையில் மணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீ ஸூக்திகளிலேதான் அமைந்துள்ளது. பல சொல்லி என்? ஸாரமாக வொன்று சொல்லித் தலைக்கட்டுகின்றேன். *அப்திர் லங்கித ஏவ வாநரபடை: கிந்த்வஸ்ய கம்பீரதாம் ஆபாதாளநிமக்நபீவரதநுர் ஜாநாதி மந்தாசல:* என்று முராரி என்கிற ஒரு மஹாகவி சொல்லுகிறார். வானரவீரர்கள் கடலைக் கடந்து அப்பால் சென்றுவிட்டார்களெனினும் கடலின் ஆழத்தை அவர்கள் சிறிதும் அறியகில்லார்கள்; கடலினுள்ளே பாதாளம் வரையில் அமிழ்ந்து கிடந்த மந்தரமலைக்கன்றோ அந்த ஆழம் தெரியும்—என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. ஜ்ஞாதாக்களென்று பேர்படைத்த மற்றவர்களெல்லாரும் வானர முதலிகளின் ஸ்தானத்திலேயாய் மணவாள மாமுனிகளொருவரே மந்தர மலையின் ஸ்தானத்திலே எண்ணக்கூடியவராக உள்ளார். ஆசார்யர் என்கிற சொல்லுக்கு மாமுனிகளொருவரே இலக்காமவர் என்றும், ஸூக்தி, ஸ்ரீ ஸூக்தி, திவ்ய ஸூக்தி, திவ்ய ஸ்ரீ ஸூக்தி என்றிங்ஙனே சொல்லும் சொற்களெல்லாம் மாமுனிகளின் திருவாக்கையேதான் இலக்காகக் கொள்ளத் தக்கவை யென்றும் நிஷ்பக்ஷபாதர்களின் ஸித்தாந்தம்.

இப்பரமாசார்யருடைய திவ்ய ஸூக்திகளில் நாமறியவேண்டிய ஸகலார்த்தங்களும் தெள்ளமுதெனக் கிடக்கின்றன. கடலில் நவமணிகளும் உள்ளனவெனினும் விரகர் எடுத்துக் கொடுத்தாலன்றி அநுபவிக்க இயலாதவாறு போல, இவ்வர்த்த விசேஷங்களையும் எடுத்துக்காட்டியே அனுபவிப்பிக்க வேண்டி யிருத்தலால், தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தின் அரிய பெரிய ஆழ்பொருள்களை எளிதிலுணர விரும்புவார்க்குப் பாங்காக இம்மலர் வெளியிடப்படுகின்றது. உயர்ந்த க்ரந்தங்களிலே காலக்ஷேபம் பண்ணிப் பலகால் பெரியார்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டிய நற்பொருள்களை எளிதிலுணர உபாய முண்டோ? என்று கேட்குங்காலமிது. லௌகிக உத்தியோகங்கள் வியாபாரங்கள் முதலானவற்றில் ஈடுபட்டிருந்தும் ஆஸ்திக்யம் குன்றாமலிருந்து இப்படிப்பட்ட நல்விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேணுமென்னும் ருசியுடையார் பலர் இருப்பதால் அன்னவர்களின் கோரிக்கைக்கு இணங்கியும் இம்மலர் வெளியிடப்படுகின்றது. மணவாள மாமுனிகளின் திவ்ய சரித்திரம் முன்னாக ஸகலார்த்தவிசேஷங்களும் அடைவே இதில்வெளியிடப்பட்டன.

215. வாதிபீகர விஜயம். அஸ்மத்குல கூடஸ்தருடைய வைபவத்தில் சில விசிகித்ஸைகளைக் கிளப்பின ஆந்தராளிகர்களின் பிரசுரங்களுக்கு மறுப்புரைக்கும் முகத்தால் தத்வார்த்தங்களை யுணர்த்தின நூல்கள் பல; அவற்றுள் இது தலையானது. மற்றவற்றைப்பற்றி மேலே விவரணம் வரும்.

216. அண்ணாவின் கால நிர்ணயம்: நெ. 215. வாதிபீகர விஜயத்திற்கு சேஷபூதமிது.

1951ஹு ஜுலை மாதத்தில் புது டில்லியில் பிர்லா மந்திரத்தில் கனம் (மினிஸ்டர்) முன்ஷீ அவர்களோடு ஸம்பாஷணை.

டில்லிமாநகரில் ரிகார்டிங் ஆபீஸில்
வேதபாராயண ஸஹஸ்ரநாமபாராயணாதிகளை ரிகார்ட்செய்யும் ஸமயம்.

2. இதிஹாஸபுராண சரித்திர விளக்கநூல்கள்

217. அத்திகிரிவைபவம்: ஹஸ்திகிரி மாஹாத்மியமென்கிற புராண நூலைத்தழுவி யெழுதப்பட்ட காஞ்சீ ஹஸ்திகிரியின் வைபவம், தேவப் பெருமாளவதரித்த வரலாறு, தேவப்பெருமாளை நான்குயுகங்களில் நால்வர் ஆராதித்த வரலாறு முதலியன இதில் விரிவாகவுள. இதுவே வடமொழியிலு மெழுதப்பட்டது. லக்கம் 1 காண்க.

218. திவ்யப்ரபந்தபகவத்கதாம்ருதம்: நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களில் ஆழ்வார்களநுபவித்த பகவத் கதைகள் யாவற்றையும் விவரித்திருப்பது. 'பகவத் கதையமுதம்' என்கிற பெயரால் முதற்பதிப்பு வெளிவந்திருந்தது. இரண்டாம் பதிப்பு இப்பெயரால் வெளிவந்துள்ளது.

219. ஸ்ரீராமாயணஸாரம்: வால்மீகி ராமாயண கதையை ஸம்க்ஷேபமாகவும் ஸாரமாகவும் எழுதப்பெற்றது இது.

220. வான்மீகிராமாயணவசனம்: ஸ்ரீ ராமாயணத்தை உத்தரகாண்ட முட்பட மொழி பெயர்த்த வசனநூல். மூலத்தில் வர்ணனையாகவுள்ளவைமட்டும் இதில் விடப்பட்டன.

221. அபூர்வராமாயணம்: ஸ்ரீ ராமாயணத்தின் ஆரம்பத்தில் வான்மீகி பகவானால் நாரதமஹர்ஷியை நோக்கி * கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச்ச வீர்யவாந் * இத்யாதியால் பதினாறுதிருக்குணங்களைச் சொல்லி ப்ரச்னம் செய்யப்பட்டிருக்கிறதல்லவா? அந்தத் திருக்குணங்களை மிகவிரிவாக விவரிக்கும் முகத்தால் ஸ்ரீ ராம திவ்ய சரித்திரங்களை யெல்லாம் வெகு இனிமையாக அநுபவிக்கத் தோன்றிய நூலிது. ஜகன் மோகினி பத்திரிகையில் மாதந்தோறும் பகுதியாக வெளிவந்து தனிப்புத்தகமாக ஸித்தமானது.

222. நரஸிம்ஹாவதாரசரிதம்: கம்பராமாயணம் யுத்தகாண்டத்தில் விபீஷணாழ்வான் இராவணனுக்கு உபதேசிப்பதாக அமைக்கப்பட்டுள்ள இரணியன் வதைப் படலத்தின் கதாஸாரம். வடமொழி சிறிதும் கலவாத தென்மொழி நூல்.

3. உபந்யாஸகர்களுக்கு உதவியான உபந்யாஸநூல்கள்

223. ஸ்ரீராமாநுஜபூஷணம்: எம்பெருமானாருடைய பெருமைகளைப்பற்றின ஏழு உபந்யாஸங்கள் கொண்டது. அவ்வுபந்யாஸங்களாவன:—

1. * சங்கரபாக்கரப் பாசுரவிவரணம்.
2. ஸ்ரீ ராமாநுஜன் திருநாமவைபவம்.
3. "ராஜஹம்ஸம் - ப்ருங்கராஜம் - யதிராஜமீடே"
4. * பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே.*
5. * யதிராஜஸப்ததியும் எம்பெருமானாரும்.
6. மார்கழி நீராட்டமும் எம்பெருமானாரும்.
7. எம்பெருமானாரும் திருக்கோட்டியூரும்.

1955 ஆம் வருஷத்தில் மாசி மாதத்தில் நடந்த மலைநாட்டுத் திருப்பதி யாத்திரையில்
எரணாகுளத்தில் நிகழ்ந்த புருஷஸூக்தோபந்யாஸ கோஷ்டியின் ஒருபகுதி

224. பக்தாம்ருதம் : நாற்பது உபந்யாஸங்கள் கொண்டதிது. அவையாவன் :—

ஆழ்வாரருளிச்செயற் பெருமை
முதலாழ்வார்களைப்பற்றின
விசேஷார்த்தம்
மதுரகவிகளின் குணாநுபவம்
திருமழிசைப்பிரான் குணாநுபவம்
எம்பார் குணாநுபவம்
கூரத்தாழ்வான் குணாநுபவம்
திருக்கச்சிநம்பியாறுவார்த்தை
விவரணம்
பட்டர் குணாநுபவம்
நஞ்சீயர் குணாநுபவம்
ஆளவந்தார் பெருமையநுபவம்
ஆண்டாள் பெருமையநுபவம்
பிள்ளை லோகாசார்யரும்
மணவாள மாமுனிகளும்
ஆசார்யஹ்ருதயப் பெருமையநுபவம்
ஸ்ரீ மந்நாதமுனிகளின் ஆச்ரமவிசாரம்
முன்னோர்களும் நாமும்
"ஏழை கடுக்காய்"
ஆசார்ய ஹ்ருதயத்தில் ஆராய்ச்சி
(ஸஹபோஜநவிஷயம்)
ஸ்ரீ வைஷ்ணவஸம்பிரதாயத்தில்
முக்கியமாக அறியவேண்டியவை
வேதாந்த தேசிகவைபவாநுபவம்
பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி விமர்சம்
ஸம்ஸ்ப்ருசந்நாஸநம் சௌரே :
தென்மொழியும் வடமொழியும்
கஜேந்திர மோக்ஷம்
நாஸ்திகனும் ஆஸ்திகனுமனது
ஒரு விநோதப்பேச்சு (ஐந்நூறு ரூ.
நானூறு ரூ. முந்நூறு ரூ. இ
நூறு ரூ. நூறு ரூபாய்)
ஸ்ரீ ராமாயணத்தில் விரோத பரிஹாரம்
[*வநவாஸோமஹோதய :—ராஜ்யா ;
ப்ரம்சோவ-நேவாஸ: *]
ஆசார்ய ஸூக்தி விசேஷம்
[*ஸ்திதேரவிந்தே*]
ததிபாண்டன் பெற்றபேறு
ஸ்ரீ ராமாயண விசேஷம்—'திருவடி
நாமம்'
அஷ்டவித புஷ்பங்கள்
பரதனும் குகனும்
பக்ஷிகளில் விசாரம் [அன்னம் சாதகம்
சகோரம் அன்றில் அசுணமா]
அர்ச்சாவதாரமஹிமை
இதிஹாஸபுராணங்களின் நிலைமை
ஸ்தலபுராணங்களில் விமர்சம்
நம்மவர்களின் படிப்புமுறை
அமரகோசம்
மடாதிபதிகளும் தர்மபரிபாலனங்களும்
எம்பெருமானார் வைபவாநுபவம்
நம்பிள்ளைவைபவாநுபவம் ஆக 40.

225. பன்னிருதிங்களநுபவம் : பன்னிரண்டு மாதங்களிலும் அவதரித்த ஆழ்வாராசாரியர்களின் விசேஷங்களை விரிவாக விளக்குவது.

அப்பன்னிரண்டு மாத விஷயங்களின் அட்டவணை.

1. ஐப்பசி மாதம்
முதலாழ்வார்கள்
பிள்ளைலோகாசாரியர்
மணவாள மாமுனிகள்

2. கார்த்திகை மாதம்
திருமங்கையாழ்வார்
திருப்பாணாழ்வார்
அருளாளப் பெருமானெம்
பெருமானார்
நம்பிள்ளை

3. மார்கழி மாதம்
தொண்டரடிப்பொடியாழ்வார்
திருவத்யயநோத்ஸவ வரலாறு

4. தை மாதம்
திருமழிசைப்பிரான்
எம்பார்
கூரத்தாழ்வான்

5. மாசி மாதம்
குலசேகராழ்வார்
திருக்கச்சிநம்பியாறுவார்த்தை

6. பங்குனி மாதம்
நஞ்சீயர்
ஸஹஸ்ரநாம பாஷ்யப்பெருமை
ஸ்ரீஸூக்தபாஷ்யபரிசீலனம்
பெரியபிராட்டியார் பெருமை
கத்யத்ரயத்தின் பெருமை

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி (வர்த்தமான) ஸ்ரீவானமாமலை ஸ்வாமி 1955-ஆம் வருஷத்தில் திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருந்த காலத்து ஸ்ரீஸ்வாமி திருமுன்பே உபந்யாஸகோஷ்டி.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் உபயவேதாந்த ப்ரவசந ப்ரவீணராக எழுந்தருளியிருந்த வித்வான். விஞ்சிமூர். சோலைமலை யாசார்யஸ்வாமி (வைகுண்டவாஸி).

பன்னிருதிங்களனுபவத்தின் தொடர்ச்சி

7. சித்திரை மாதம்

மதுரகவிகள்
எம்பெருமானார்
எம்பெருமானார் தரிசனம்
எம்பெருமானாரும்கீதாபாஷ்யமும்
எம்பெருமானாரும் ஸ்ரீபாஷ்யமும்
முதலியாண்டான்
அனந்தாழ்வான்
ஸ்ரீராமநவமியநுபவம்
ஸ்ரீராமாயணத்தில் ஒரு விசேஷார்த்தம் [மமைவதுஷ்க்ருதம்]
விபீஷண சரணாகதி
ஸ்ரீராமாயணத்தில் ஒரு சிறிய சங்காபரிஹாரம்
அபூர்வமான ஸ்ரீராமாயணக் கதையொன்று [கூனியின் கதை]

8. வைகாசி மாதம்

நம்மாழ்வார்
நம்மாழ்வாரும் எம்பெருமானாரும்
நம்மாழவார்க்குப்பிராட்டியோடொப்பு
பட்டர்=நம்பெருமாள் திருமஞ்சனமும் பட்டர்ஈடுபாடும்

9. ஆனி மாதம்

ஆனிமாத ஆராய்ச்சி
பெரியாழ்வார்
வடக்குத் திருவீதிப்பிள்ளை
ஸ்ரீராமாயணச்லோகவிசேஷார்த்தம்.
காசினி வேந்தா? காய்சினவேந்தா?

10. ஆடி மாதம்

ஆண்டாள்
ஆளவந்தார்

11. ஆவணி மாதம்

கண்ணபிரான்
பெரியவாச்சான்பிள்ளை.
வியாக்கியானங்களைப்பற்றின ஓர் ஆராய்ச்சி

12. புரட்டாசி மாதம்

வேதாந்த தேசிகன்

226. அறுபத்திரண்டு உபந்யாஸமாலை: அடியேனுடைய அறுபத்திரண்டாவது வருஷ பூர்த்திக்கு நினைவு மலராக வெளியிடப்பட்டவிதில் 62 உபந்யாஸங்களுள்ளன.

(அவ்வறுபத்திரண்டு உபந்யாஸங்களின் அட்டவணை)

1. எம்பெருமானார் தரிசனத்தில் ஸர்வமும் ஸத்யம்
2. சாஸ்த்ரார்த்த தத்த்வஸமந்வயம்
3. எம்பெருமானாரும் திவ்யப்ரபந்தமும்
4. திவ்யப்ரபந்த மொழிபெயர்ப்பு
5. தமிழ்மொழி மரியாதை
6. வடமொழி மரியாதை
7. ஆண்டாளும் மங்கைமன்னனும்
8. நம்மாழ்வார் தூது
9. ஸ்ரீராமாயணத்தில் ஓரபூர்வவிஷயம்
10. ஒரு நல்வார்த்தை விமர்சம்
11. ஸ்ரீராம ஸீதாவயோ விமர்சம்
12. விபீஷணசரணாகதிவிசேஷங்கள்
13. கண்ணனும் ராதையும்
14. நர்மதாஸமுத்ரஸம்வாதம்
15. திவ்யதேச நாமத்திருத்தங்கள்
394. ஐகமத்ய ரஸம்: நமது நண்பர் ஸ்ரீஉவே. D. ராமஸ்வாமி ஐயங்கார் தேசிக சரித்திரமெழுதுவதாக வியாஜங்கொண்டு பூர்வாசார்ய நிந்தைகள் செய்திருந்ததற்கு சோகித்து அவர்க்கு நல் தெளிவு பிறக்குமாறு எழுதிய திது.

395. ஐதிஹ்ய நிர்வாஹ ரத்நமாலை: நாலாயிர வியாக்கியானங்களில் காணும் ஐதிஹ்யங்களையும் நிர்வாஹங்களையும் (ஆங்காங்கு விவரணங்களோடும்) சேகரித்தது.

396. க்ஷேத்ர தீர்த்தயாத்திரை விளக்கு: தென்னாடு வட நாடுகளிலுள்ள க்ஷேத்ர தீர்த்தங்களில் யாத்திரை செய்ய விரும்புமவர்களுக்குப் பரம ஸௌகரியமாகும்படி கண்ணாடிபோல் எழுதப்பட்டதிது. இங்ஙனே ஸம்ஸ்க்ருதம் ஹிந்தி தெலுங்கு பாஷைகளிலு மெழுதப்பட்டதுண்டு. லக்கம் 44, 157, 184, 197 காண்க.

397. சதபூஷணீ வஜ்ர குடார ஸாரம்: கீழ் ஸம்ஸ்க்ருத நூற்பகுதியில் நெ. 135. சத பூஷணீ வஜ்ர குடார: என்ற நூலின் விவரணம் காண்க. இந்த ஸார நூலில் 101 பாராக்களினால் சதபூஷணீ காரர் சத தூஷணியைக் கையால் தொடுவதற்கே அநதிகாரி யென்பது விசதமாக நிரூபிக்கப் பட்டது.

398. சாஸ்த்ரார்த்த சந்த்ரிகை: அஹோபில மடத்துப் பத்ரிகையான ந்ருஸிம்ஹப்ரியாவில் "எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளும் ஆதிவண் சடகோப ஸ்வாமி யிடத்திலேயே ஆச்ரயித்தவர்கள்" என்றும் "ஈடு முப்பத்தாறு யிரப்படி வடகலை ஸம்பிரதாயத்திற்கே பொருந்தி யிருக்கிறது" என்றும் இப்படி சில அஸம்பத் தோக்திகளை யொருவர் வெளியிட்டிருந்தார். இவை ஸர்வாத்மநா அபத்த மாகையாலே இவற்றை மறுத்து இந்த வியாஜத்தாலே நாம் பல பலவுண்மைகளை நமது பத்ரிகையில் வெளியிட்டோம். அதற்கு பதிலெழுத வித்வான்கள் முன்வர வேண்டும். முன் வந்த வொரு ஸாமாந்யர் நிந்தைகளைச் சரமாரியாகப் பொழிந்து "அண்ணா ஸ்வாமியின் கேள்விகளுக்குத் தக்க பாணங்களை விடுவதற்குச் சில ஸிம்ஹங்கள் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன" என்று வழிகாட்டி விட்டு விலகினர். பிறகு பழைய D. T. தாதாசார்யரும் மடத்தில் போக்தாக்களாயிருக்கின்றசிலரும் தூஷிக்க வெழுந்தார்கள். 1951—52 வருஷங்களில் இந்த வாத விவாத கேளி மிகவும் மும்மிரமாக நடந்தது. அந்த ஸமயத்தில் "சாஸ்த்ரார்த்த சந்த்ரிகை" என்ற பெயர் கொண்ட வொரு பத்ரிகையை நடத்தத் தொடங்கி அதன் மூலமாகப் பல பல சாஸ்த்ரார்த்த தத்துவங்கள் வெளியிடப்பட்டன. இந்த வகையில் இருபத்து நான்கு பிரசுரங்கள் வெளியாகி யுள்ளன.

399. சிரோமணி சிரோபூஷா: } சென்னைக் காருமானிகலாசாலையில் தலைமைப் பண்டி
400. சிரோமணி சேகரம்: } தராயிருந்து இப்போது விச்ராந்தரா யிருக்கின்ற ஸ்ரீஉ.வே. திருக்கண்ணபுரம் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியே இங்கு சிரோமணி சப்த விவக்ஷிதர். கீழ் ஸம்ஸ்க்ருத நூற் பகுதியில் கெ. 28, 119. நூல்களின் விவரணத்தில் கண்ட மதிரேக்ஷணார்த்த விசாரத்தில் முதன்மையாகத் தலையிட்டவர் இந்த சிரோமணி ஸ்வாமியே யாவர். இவர் அவதம்ஸமாகக் கொள்ளும்படியா யெழுதப்பட்ட நூல்களிவை. ப்ராஸங்கிகமாகப் பல பல விஷய விசாரங்கள் கொண்டவை

401. சுகஸாரண மதமர்தநம்: கீழ் 215, 216 லக்கமுள்ள நூல்களின் ச்ரேணியிலே அமைந்தது இதுவும்.

402. செந்தமிழாராய்ச்சி: சிறந்த தமிழ் வித்வானாகிய ஸ்ரீமத். மு. ராகவையங்கார் (ராமநாதபுரம்) அவர்கள் திவ்யப் பிரபந்தங்களைப் பற்றியும் ஆழ்வார்களைப் பற்றியும் சில ஆராய்ச்சிகளை மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டார்; அவை நம்முடைய ஸதாசார்ய ஸத்ஸம்ப்ரதாய ஸரணிக்குச் சேராதவையென்னு முண்மையை வெளியிட வேண்டியது அவசியமாயிற்று. அந்த ஸந்தர்ப்பத்தில் வெளி வந்ததிது. நான்முகன் திருவந்தாதியில் * தரித்திருந்தேனாகவே தாராகணப் போர், விரித்துரைத்த வெந் நாகத்துன்னை * என்ற பாசுரத்தின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தை மறுக்கப் புகுந்து "வெந்நாகத்து" என்கிற பாடத்தை 'என்னாகத்து" என்று ஸ்வதந்திரமாகத் திருத்திச் சில எழுதி யிருந்தார். அது ஸர்வாத்மனா அஸங்கதமென்று மூதலிக்க முதன் முதலாக இறங்கினேன். அதிலிருந்து பல விஷயங்களை விமர்சிக்க நேர்ந்தது. அந்த விமர்சங்களெல்லாம் தமிழுலகில் ஸுப்ரஸித்தங்களாகையாலே இங்கு விவரிக்கின்றிலேன்.

403. சேஷாவதாரச் சிறப்பு: ஸ்வாமியெம்பெருமானாரை சேஷாவதாரமென்று முன்னோர்கள் பலர் எழுதியுள்ளார்கள். இராமாநுச நூற்றந்தாதியில் (பா. 33-ல்) பஞ்சாயுதாவதாரமென்று உள்ளது. யதிராஜஸப்ததியில் அதையுஞ் சொல்லி விஷ்வக்ஸேநாவதாரரென்றும் சொல்லியிருக்கிறது. இவற்றையெல்லாம் ஸமந்வயப்படுத்தி நிர்வஹிக்கும் வழியறியாத திருவஹீந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரியார் (பரலோகவாஸி) "சேஷாவதாரரென்பது மிகவும் தவறு" என்றெழுதி வெளியிட்டிருந்தார். அதை மறுத்தெழுதி ஸ்வாமி யெம்பெருமானாருடைய சேஷாவதாரத்வத்தை ஸ்தாபித்த நூலிது.

404. சேட்லூரார் நூலாராய்ச்சி } கீழ் லக்கம் 403 நூலுக்குத் தொடர்ச்சியாக அந்த
405. சேட்லூர் மாயமயக்கம் } சேட்லூர் நரஸிம்ஹாசாரியருடைய அஸம்பத்தோக்திகள் பலவற்றைப் பராமர்சித்து ஒன்பது நூல்கள் எழுதி வெளியிடப்பட்டன. 1928ஹ முதல் 33, 34-ஹுவரை அவை வெளிவந்து கொண்டிருந்தன. கடைசியாக அவர்மன்னிப்புக் கடிதமெழுதியனுப்பி விச்ராந்தியடைய நேர்ந்தது. அந்த க்ஷாமணபத்ரிகை இந்த நூல்களில் விசதம். அது வருமாறு—

"ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: மஹாமஹோபாத்யாய பண்டிதபூஷணம். பகவத் விஷயம் தேசிகதர்சநாசார்ய சேட்லூர், நரஸிம்ஹாசாரியார் ஸ்ரீவேதாந்ததேசிக விலாஸம் திருவஹீந்திரபுரம் தேதி 12 ஸ்ரீமதித்யாதி அஸ்மதஸாதாரணஸஹ்ருதயவரிஷ்டாநாம்தத்ரபவதாம்ஸந்நிதௌ விஜ்ஞாபயதி. ஸ்வாமிநியமித்தஸ்ரீமுகத்தைஸேவித்துக் கொண்டேன். ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருவுள்ளத்தில் வெறுப்புண்டாகும்படி செய்தது வல்வினையேன் குற்றமே. வாஸ்தவமாகவோ ஆரோபிதமாகவோ

ஆசார்யாபராதம் அடியேன் மநஸ்ஸில் ப்ரதிபாஸித்ததினால் திருவுள்ளத்துக்கு வெறுப்பும் நிர்வேதமும் உண்டாகும்படி செய்ய நேரிட்டது. அதிலும் பரமனைப் பயிலும் திருவுடைய பாகவதர்களுடைய "சுத்தாநாம் து லபேமஹி" "ஸம்ஸ்ருஜ்யதே யதி ச தாஸஜநஸ் த்வதீய:" என்று ஆசார்யனால் ப்ரார்த்திதமாய் அபவர்க்க தசாநிர்விசேஷமுமான பெறும் பேறாகிய பாகவதாநுக்ரஹத்துக்குப் பாத்ரமாகாதபடி செய்வதற்குரிய பகவந்நிக்ரஹஸங்கல்பமொழிய வேறு ஒன்றுமில்லை. ஆதலால் இவ்விஷயத்தில் 'யச்ச பாஷிதம், மயா த்வம் பருஷாண்யுக்த: தச்ச த்வம் க்ஷந்துமர்ஹஸி' என்கிற இளையபெருமாள்படியை இச்சேதநன்விஷயத்தில் திருவுள்ளம் பற்றி அடியேனுடைய அபசாரங்களை ஸோபாதிகங்களாக்கியதாபூர்வம் அடியேனை ஸஹ்ருதயனாகத் திருவுள்ளம் பற்றும்படி பிரார்த்திக்கிறேன். இத்தம் விஜ்ஞாபயதி பாகவதவிதேய:" என்பதாம்.

இந்த மன்னிப்புக்கடிதம் அச்சாகி வெளியானபிறகு அந்த சேட்லூர் நரஸிம்ஹாசாரியர் பலவருஷங்கள் ஜீவித்திருந்தார். அவர் பரமபதித்த பிறகு சில மாதங்கள் கழித்து அவருடைய ஸஹோதரரான ஸ்ரீநிவாஸமூர்த்தியென்பவர் "என் தமையனார் எழுதியதாக வெளியிடப்பட்டிருக்கின்ற மன்னிப்புக் கடிதத்தின் அஸல்காப்பியைக் காட்டுவீரா?" என்று நமக்கொரு கடிதமெழுதினார். "ஒரு நாள் குறிப்பிட்டெழுதினால் அந்த நாளில் நாமே அந்த அஸல் கடிதத்துடன் திருவயிந்திரபுரம் வருவோம்" என்று பதில் எழுதினேன். அவ்வளவோடு அவர் சாந்தராய் விட்டார்.

406. ச்ருதப்ரகாசிகாரக்ஷா: ச்ருதப்ரகாசிகா பட்டரருளிச் செய்த சரணாகதிகத்ய பாஷ்யத்தில் வாத்ஸல்யமென்கிற குணத்தை விவரிக்குமிடத்து "வாத்ஸல்யம் நாம தோஷேபி குணத்வபுத்தி:" என்றருளிச் செய்யப்பட்டிருப்பதை மேலே ப்ரஸ்தாவித்த சேட்லூர் நரஸிம்ஹாசாரியார் தூஷித்ததுமல்லாமல் "இப்படிப்பட்ட அபார்த்தங்களைக் களைவதற்காகவே தேசிகன் கத்யபாஷ்யமருளிச் செய்தது" என்றுமெழுதியிருந்ததைப் பலப்ரமாணோபபத்திகளுடன் மறுத்து ச்ருதப்ரகாசிகாஸூக்தியை ஸமந்வயப்படுத்தின நூலிது. இத்தன் சரிதையில் கீழே பக்கம் 285-ல் கடைசி பாராவும் காண்க.

407. ஸ்ரீவைஷ்ணவமஹாநிதி: இந்தப் பெயருக்குத் தக்கபடியே அமைந்திருக்கும் நூலிது. நேரில் கண்டுகளிக்கத்தக்கது. ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயப் ப்ரவர்த்தக ஸகலாசார்ய திவ்யஸூக்தி விளக்காக மற்றொருநூலும் இப்பெயர் பூண்டுள்ளது. அது இப்போது துர்லபம்.

408. ஸ்ரீமடஸௌபாக்யம்: கீழ் நெ. 398 நூலின் வகுப்பைச்சேர்ந்தது இது. ஸ்ரீமடமென்றது அஹோபிலமடமென்றபடி.

409. ஸ்ரீராமாநுஜன்: இப்பெயரால் பத்து வருஷகாலமாக மாதப்பத்திரிகை நடந்து வருகின்றதென்பது உலகமறிந்ததே, இதன்மூலமாகப் பல வியாஸங்களும் பலநூல்களும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்தத் தன் சரிதையும் இப்பத்திரிகையின் மூலமாகவே வெளிவருகின்றது.

410. ஜகதாசார்யஸூக்திஸுதாநிதி: ஏழுதரங்கங்களும் அறுபத்துநான்கு உக்திமாலைகளும் கொண்டநூலிது. இரண்டு மூன்று வருஷங்களுக்குமுன்பு ஒரு விவாதக் கிளர்ச்சி விளைந்தது; (அதாவது) த்ரௌபதிக்கு மஹாஸபையில் பரிபவம் நேர்ந்தகாலத்தில் வஸ்த்ரவ்ருத்தியானது ப்ரபத்தியின் பலனாக ஸ்ரீவசநபூஷணத்தினால் தெரிய வருகிறது; அது திருநாம ஸங்கீர்த்தனத்தின் பலனென்று முமுக்ஷுப்படியினால் தெரியவருகிறது. இங்ஙனே தோன்றும்

முரண்பாட்டை எங்ஙனம் பரிஹரிப்பதென்று சர்ச்சை விளைந்ததாம். சென்னையில் ப்ரஸித்த ப்ரவக்தாவாக விளங்குபவரும் நமக்குப் பரமாப்தரு மான ஸ்ரீஉ.வே. வித்வான் காரப்பங்காடு வேங்கடாசார்யஸ்வாமிகள் "ஸ்ரீவசந பூஷணத்தில் த்ரௌபதி ப்ரபத்தி செய்ததாக மட்டும் சொல்லப்பட்டதே யொழிய அது பலித்ததாகவும் சொல்லிற்றில்லை; முமுக்ஷுப்படியில் "த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே" என்று திரு நாமஸங்கீர்த்தனம் பலித்ததாக ஸ்பஷ்டோக்தியுள்ளது. ஆகவே, த்ரௌ பதியின் ப்ரபத்திநிஷ்டை விபலமாயிற்றென்றும் நாமஸங்கீர்த்தனமே ஸபல மாயிற்றென்றும் சொல்லிவிட்டால் உபயக்ரந்தங்களுக்கும் யாதொரு விரோ தமுமில்லையாகும்" என்று ஸ்வாபிப்ராயத்தைப் பிரசுரப்படுத்தினர். இது ஸங்கதமாக அடியேனுக்குத் தோற்றாமையாலே தத்வார்த்தத்தை உலகுக்கு வெளியிடக்கருதி, அந்த வேங்கடாசார்யஸ்வாமியின் திருநாமத்தைத் தொடா மலே "(மேலே காட்டிய) உபயக்ரந்த விரோதத்தை எங்ஙனம் பரிஹரிப்ப தென்று சிலபக்தர்கள் தத்வஜிஜ்ஞாஸையோடு கேட்டார்கள்; பெரியார் களிடம் கேட்டிருந்த ஸமாதானத்தை விவரிக்கிறோம்" என்று தொடங்கி உபயக்ரந்தங்களுக்கும் விரோத ப்ரஸக்தியே கிடையாதென்றும், ப்ரபத்தி யின்பலனை வஸ்த்ரவ்ருத்தியைச்சொன்னதும், திருநாமஸங்கீர்த்தனபலமாக அதனைச் சொன்னதும் பர்யாயமேயொழிய வேறன்று என்றும் இதை மிக விரிவாக நிரூபித்து வெளியிட்டேன். அதன் பிறகு சில பத்ரிகைகளில் விஷய விசாரங்கள் நடந்தன. அந்த ஸ்வாமியும் எழுதினர்; அடியேனும் பதில் எழுதினேன். கடைசியாக அடியேனுடைய நிரூபணங்கள் ஸ்ரீராமா நுஜன் 77, 78-ல் வெளிவந்தன. இதன் பிறகு என்ன நடந்ததென்றால் விஷயசர்ச்சையாக ஒன்றும் வெளிவராமல் அநாமதேயத் துண்டுப்பிரசுரம் தேதிகூட இல்லாமல் ஒன்று வெளிவந்தது. அதில் நிந்தை தவிர வேறு கிடையாது. கையெழுத்துஸ்தானத்தில் "காரப்பங்காடு ஸ்வாமியின் கால க்ஷேபகோஷ்டியார்" என்றிருந்தது. அந்த ஸமயம் அடியேன் பவித்ர யாத்ரையென்று ப்ரஸித்தமான வடநாட்டுத் திருப்பதியாத்திரை தொடங்கி 75-பேர்களுடன் சென்றிருந்தேன். அப்போது மேலே தெரிவித்த அநாம தேயத்துண்டுப் பிரசுரம் விசேஷப்பிரசாரமடைந்து வந்தது. வெளியூர் களுக்கும் அனுப்பப்பட்டு வந்ததாம். விஷயலேசமுமில்லாமல் அஸஹ்ய தூஷணைகள் மலிந்த அந்தத் துண்டுப்பிரசுரத்தை யாரே ஸஹித்திருக்க வல்லார்? அப்போது நடந்த செய்திகள் ஜகத்ப்ரஸித்தமேயானாலும் அந்த விஷமச்செயல்கள் இச்சரிதைநூல் மூலமாக நீடூழி விளங்கவேணுமென்று கருதி அப்போது, மத்யஸ்தர்களான மஹநீயர்கள் வெளியிட்ட வியாஸங் கள் பலவற்றிலிருந்து சில பகுதிகள் இங்கெடுத்துக் காட்டப்படுகின்றன.

(1.) சென்னை பிரபல அட்வொகேட் ஸ்ரீமான் உவே. V. ராஜகோபாலாசாரியார் சுவாமிகள் (கீழ்ப்பாக்கம்) அவர்களின் ஆங்கில வியாஸத்தின் மொழிபெயர்ப்பு: (இவருடைய திருவுருவப் படம் இத் தன்சரிதையில் பக்கம் 175-ல் காண்க.)

"சென்ற சில வாரங்களாய் சென்னையிலும் மற்றவிடங்களிலுமுள்ள ஆஸ்திகர் களிடையே த்ரௌபதீசரணாகதி விஷயமாய்ப் பிள்ளைலோகாசார்யருடைய ஸ்ரீஸூக்திகளில் முரண்பாடு இருப்பதுபோல் நடைபெற்றுவரும் விவாதத்தில் ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் அநாமதேயமாகப் பிரசுரம் செய்திருக்கிற ஓர் அறிக்கையானது பரபரப்பை விளைத்து வருகிறது. அந்த வெளியீடானது காரப்பங்காடு ஸ்வாமியின் அபிப்ராயத்தை ஸித்தாந்தப் படுத்தும் முறையில் மட்டும் அமைந்திருந்தால் அந்த ஸ்வாமியைப்போற்றும் கோஷ்டியினர்க்கு மிகவும் பொருத்தமாகும். அத்துடன் நிற்காமல், ப்ரக்ருத

விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் அபிப்ராயபேதத்தை முன்னிட்டு ஸ்ரீமத் P. B. A. ஸ்வாமியைப்பற்றின தூஷணோக்திகளில் அந்த வெளியீடு இறங்கியிருப்பது அதிக்ரமமானது. அந்த தூஷண பத்ரிகையை நான் பார்க்கவில்லை, அதில் வெளிவந்திருக்கும் தூஷணங்களின் ஸ்வபாவத்தையோ அளவையோ நான் அறியேன். அதைப் பார்க்கவும் எனக்கு விருப்பமில்லை. P. B. A. ஸ்வாமியின் பக்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் அந்த வெளியீடு மனக்கசப்பை விளைவித்திருப்பதிலிருந்தே அதன் தன்மையை ஒருவாறு உணர்ந்திருக்கிறேன். வாதப்ரதிவாதங்களின் தராதரங்களைச் சீர்தூக்கி விமர்சிப்பது உபயவேதாந்த ப்ரவர்த்தகர்களான மஹான்களுக்கேதகும். இப்படிப்பட்ட விஷயங்களில் பரிசயமுள்ள கள்ளக்குறிச்சி அட்வகேட் ஸ்ரீ ஆராவமுதுதாதாசாரியார் இது ஸம்பந்தமாக எழுதி வெளியிட்டிருக்கிற வியாஸத்தில் வாத ப்ரதிவாதங்களை ஆங்கிலம் பயின்றவர்களுக்கு அவகாஹமாகும் முறையில் விசதமாக எழுதியுள்ளார். நம் போலியர்கள் அவரவர்கள் மனோபாவத்துக்கு ருசிக்கும் அபிப்ராயங்களைக் கைக்கொள்வது பொருத்தமுடையதாகும். எந்த சந்தர்ப்பத்திலும் அளவுக்கு மீறின முறையில் ஒருவரையொருவர் கண்டிக்கவும் தகுதியில்லை. நிர்ப்பயமாகவும் நிர்தாக்ஷிண்யமாகவும் தத்வார்த்தங்களைவிளக்கி நிலைநிறுத்த P. B. A. ஸ்வாமி ஒருகாலும் தயங்குவதில்லை யென்பது யாவருமறிந்த விஷயம். விஷயங்களைப் பரிசீலனை செய்ய ஒவ்வொருவரும் சுதந்திரம் பெற்றிருக்கிறபடியாலே படித்தவர்களிடமும் சிறந்த மேதாவிகளிடமும் இப்படிப்பட்ட சர்ச்சைகள் நிகழ்வது ஸஹஜமே. ஆனால் விவாதங்கள் ஒழுங்கான முறையில் உயர்ந்த ரீதியில் எவர் மனமும் நோகாதபடி விமர்சனம் செய்யப்பட வேண்டுமேயல்லாது ஒருவரை யொருவர் தூஷிக்க முற்படுவது தகாது. தக்கபடி பதிலுரைத்துத் தம் வாதங்களை ஸ்தாபிக்க சக்தியற்றவர்கள் தூஷணையில் இறங்க முற்படுவர்களென்பது இயற்கை. காரப்பங்காடுஸ்வாமி தன்கோஷ்டியினரால் வெளியிடப்பட்ட அறிக்கை P. B. A. ஸ்வாமியின் பக்தர்களுக்குமனக்கசப்பையுண்டாக்கியுள்ள தென்பதையறிந்ததும் அந்த அறிக்கையை நிராகரித்து, தனக்கும் அவ்வறிக்கைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்று தெரிவிப்பாரென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. P. B A. ஸ்வாமி பலவாண்டுகளாக ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்காகப் பல்வகையில் ஒப்புயர்வற்ற தொண்டுகள் செய்து வருவது நாட்டில் பலருக்கும் நன்கு தெரிந்திருப்பதால் யாரிடமிருந்தும் எத்துணை தூஷணை யறிக்கைகள் தோன்றினாலும் P. B A. ஸ்வாமியின் கௌரவத்திற்கும் புகழுக்கும் எவ்விதமான குறையும் ஒரு நாளும் ஏற்படாது. அநாமதேயமான ஓர் அறிக்கை என்ன செய்யப்போகிறது. P. B. A. ஸ்வாமியின் உபந்யாஸங்களைக் கேட்டவர்களுக்கும் அந்த ஸ்வாமியின் க்ரந்தங்களை ஸேவித்தவர்களுக்கும் பூர்வாசார்ய க்ரந்தங்களில் உண்மையாக எவ்வித முரண்பாடும் கிடையாதென்பது P. B A. ஸ்வாமியின் ஸித்தாந்தமென்றும், மேலெழுந்த வாரியில் எங்கேனும் முரண்பாடுகண்டாலும் அவைகளைப் பொருத்தமான முறையில் ஸமந்வயப்படுத்துவது ஸ்வாமியின் இயல்பு என்றும் நன்கு உணர்வார்கள். P. B. A. ஸ்வாமியின் கோஷ்டியினர் எதிர் வகுப்பு அறிக்கை விஷயமாய் எவ்விதமான கவலையுங்கொள்ள வேண்டா; அதை லக்ஷ்யத்தில் வைக்காமலிருப்பது நலம். எவ்வித எதிர்ப்பாவது பதிலாவது எழுத வேண்டுவதுமில்லை. மேற்கொண்டு இந்த விவாதத்தில் எவ்வித பிரசாரமும் வேண்டியதுமில்லை. இனி, உலகம் மதிக்கும் உத்தமாதிகாரிகள் பிரஸ்தாப விவாதத்தில் ஏதாவது ஈடுபட்டா லீடுபடட்டும். இவ்விவாதத்தை இத்துடன் முடிவு செய்ய P. B. A. ஸ்வாமியை முழுமனதுடன் பிரார்த்திக்கிறேன். இவ்விரண்டு ஸ்வாமிகளும் ஒரே ஸம்பிரதாயத்தின் அபிவிருத்தியில் அரும்பாடுபடுகிறவர்கள் இருவர்களும் மஹான்கள். உத்தமாதிகாரிகள். தம்தம் அபிப்ராயங்களை அவரவர் சித்

தாந்தமாகக் கொண்டிருந்தாலும் இவ்வபிப்ராய பேதம் வியாஜமாக ஸௌஜந்ய பங்கத்திற்கு எவ்விதமாகவும் இடம் தராமலிருக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

சென்னை
1—8—1955 } V. ராஜகோபாலாசாரி.

(2.) மதுரை ஸத்ஸம்ப்ரதாயஸபையின் காரியதரிசி ஸ்ரீமான் உ. வே. S. ஸுந்தர ராஜய்யங்கார் [வக்கீல், 11, கிருஷ்ணன் ஸன்னிதி வடக்கு மாசி வீதி] அவர்களின் கடிதம். (இவருடைய திருவுருவப்படம் இத் தன்சரிதையில் பக்கம் 174-ல்) சிலமாதங்களாக இரண்டு மஹான்களுக்கு நடந்துவரும் க்ரந்த சர்ச்சை ஒரு அநாமதேய பத்ரிகையினால் மிகவும் சோசநீயமான நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டதென்பதை வெகு வருத்தத்துடன் விஜ்ஞாபிக்கிறேன். ஸ்ரீ காஞ்சீ அண்ணா ஸ்வாமி ஒருவருடைய திருநாமத்தையும் குறிப்பிடாமலும் ஒருவருடைய க்ரந்தத்திற்குக் கண்டன மெழுதுவதாகக் கூடச் சொல்லாமலும் விஷயசர்ச்சை செய்திருந்தார்; அதில் எவ்வித தவறுமில்லை. ஸ்ரீமத் காரப்பங்காடு ஸ்வாமி அதற்கு மறுப்பு எழுதத் தொடங்குகையில் ஸ்ரீ அண்ணா ஸ்வாமியின் திருநாமத்தைக் குறிப்பிட்டு அந்த ஸ்வாமிக்கு மறுப்பு எழுதுவதாகவே கண்டிருந்தது. இது தேவையில்லை. அந்த ஸ்வாமியும் அண்ணா ஸ்வாமி போலவே விஷய சர்ச்சையோடு நிறுத்தி முடித்திருக்கலாம். ஸ்ரீ வைஷ்ணவ வுலகுக்கு அண்ணா ஸ்வாமி உயிர் நிலையாயிருக்கிறார். காரப்பங்காடு ஸ்வாமியும் அவருக்கு அடுத்தபடியே ஆகவே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அன்பர்களாயும் உயிர் நிலையாயுமுள்ள இருமஹான்கள் சண்டையிட்டுக்கொள்வதாக அநாமதேய ரொருவர் தப்புப் பிரசாரம் செய்வது ஸ்ரீ வைஷ்ணவ வுலகுக்கே கேவலமானது. காரப்பங்காடு ஸ்வாமி பரம ஸாத்விகர். அண்ணா ஸ்வாமியிடத்தில் அபாரமான மதிப்பும் பிரதிபத்தியும் வைத்திருப்பவர். உண்மையில் அண்ணா ஸ்வாமியின் வித்யாபரிச்ரமம் அபாரமானது. மாற்சரியமில்லாத யாரையும் கவர்ச்சி செய்யக்கூடியதென்பதில் சந்தேகமில்லை, ஆச்சரியமுமில்லை. அண்ணா ஸ்வாமியைப்போன்ற வித்வான் ஸ்ரீ வைஷ்ணவ வுலகத்தில் இப்போது யாரும் கிடையாது. ஸ்ரீ வைஷ்ணவ வுலகுக்கு இந்த ஸ்வாமி புரியும் தொண்டு வாசாமகோசரம். நூறுபேர்கள் சேர்ந்தாலும் செய்ய முடியாத காரியத்தை அண்ணா ஸ்வாமி ஒருவரே ஸாதித்து விடுகிறார். இதை யெழுதும்போது ஸ்ரீ ராமபிரானுடைய பராக்ரமத்தை வான்மீகிமுனி போற்றி யிருப்பதுதான் நினைவுக்கு வருகிறது. தற்காலம் நடந்துவரும் அந்த ஸ்வாமியின் உத்தரதேசயாத்திரை உண்மையில் திக்விஜயமே யாகும். இந்த யாத்திரையில் ரிஷீகேசத்தில் ஸ்ரீ ஸ்வாமியினுடைய வித்வத்தின் பெருமையையறிந்த ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் **வேதபாரங்கதர்** என்கிற விருதை ஸ்வாமிக்கு அளித்ததாகப் பத்ரிகைகளில் வாசிக்கிறோம். நம் ஸமூஹத்திற்கே, முக்கியமாக மணவாள மாமுனிகளின் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு அண்ணா ஸ்வாமியால் பெருமையும்பெருமதிப்பும் தென்தேசத்திலும்வடதேசத்திலும் அபரிமிதமாக ஏற்பட்டு வருகிறது. ஆகையால் ஸ்ரீ ஸ்வாமியினுடைய கௌரவத்திற்கும் மதிப்புக்கும் ஹானியை விளைக்க யார் நினைத்தாலும் அது உசிதமானதன்று. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இது நெஞ்சாலும் நினைக்கத் தக்கதன்று. காரப்பங்காடு ஸ்வாமியோ அவருடைய கோஷ்டியாரோ இதில் பிரவேசிக்கத் தகவே தகாது. மஹா யசஸ்வியான ஸ்ரீமத் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமியிடத்தில் அண்ணா ஸ்வாமிக்கு விசேஷப்ரதிபத்தியுண்டு. அதிலிருந்தே அவருடைய தௌஹித்ரரும் புத்ரஸ்தாநீயருமான (வர்த்தமாந) காரப்பங்காடு ஸ்வாமியிடத்திலும் அன்பு ஏற்பட்டு விசேஷித்துக் கொண்டு வந்தது. இந்த ஸ்வாமிக்கும் அண்ணா ஸ்வாமியிடத்தில் மிகுந்த அன்பும் மதிப்பும் பிரதிபத்தியும் இருப்பது அடியேனுக்கு

நன்கு தெரியும். இவ்விருவருக்கும் பரஸ்பரம் ஸௌஹார்தம் விலக்ஷண மானதே. யார் கண்ணெச்சில்பட்டதோ அறியோம்! உலகம் வேருகப் பேச அவகாசமேற்பட்டு விட்டது. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். காரப்பங் காடு ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டியிலிருந்து வெளி வந்ததாகக் காணும் ஒரு அநாமதேய துண்டுப்பிரசுரம் அடியேனுக்கும் அனுப்பப்பட்டுக் கிடைத்தது; வாசித்துப் பார்த்தேன். பரமஸாத்விகரான காரப்பங்காடு ஸ்வாமியால் அது எப்படி அனுமதிக்கப்பட்டதென்று அடியேனுக்குமிகுந்த விஸ்மயமுண்டாயிற்று. உண்மையில் ஸ்வாமியால் அனுமதிக்கப்பட்டதல்லவென்றும், சிலருடைய சூழ்ச் சியினல் ஸ்வாமிக்கும் தெரியாமலே பிரசுரம் செய்யப்பட்டிருக்குமென்றும் என் போன்றவர்கள் நினைக்கக் கூடியது. இப்படி பிரசுரமாயிருக்கிறதென்று தெரிந்த பிறகு காரப்பங்காடு ஸ்வாமி அதை அவசியம் மறுத்திருக்கவேண்டும். ஆமோதிக்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் ஏதோ சங்கடமான நிலைமை ஏற்பட்டுவிட்டது போலும். மதுரையில் நம்முடைய ஸத்ஸம்ப்ரதாய ஸபையின் வார்ஷிகோத்ஸவங்களுக்கு இவ்விரண்டு ஸ்வாமிகளும் பரமக்ருபையோடு எழுந் தருள்வதுண்டு. இருவரும் பரஸ்பரம் கொண்டாடிப் பேசுமழகை ஸதஸ் யர்கள் கண்டு பரமானந்தமடைந்திருக்கிருர்கள். அண்ணு ஸ்வாமியின் நாநா வித வித்யாபரிச்ரமங்களைக்கண்டு காரப்பங்காடு ஸ்வாமி வியப்படையாதவரல்லர். ப்ரக்ருத விவாதத்தில் அண்ணு ஸ்வாமியின் வாதங்களை வித்வான்கள் மெச்சு கின்ருர்களென்பதை அடியேன் அறிந்திருக்கின்றேன். காரப்பங்காடு ஸ்வாமி திருவுள்ளத்திலும் இது பட்டிருக்குமென்றே அடியேனுடைய நம்பிக்கை. அடி யேனுக்கு ஸம்பிரதாய விஷயமான ஞானம் மிகவும் குறைவு ஆகவே விஷய சர்ச்சைபற்றி யெழுத சக்தியற்றவன். பிறருடைய அபிப்ராயங்களை அநுவதிக்க வும் அடியேன் அநர்ஹனே; அவ்விஷயத்தில் க்ஷமையை வேண்டுகிறேன். விஷய சர்ச்சையை கோபதாபமில்லாமல் நேர்மையான முறையில் நடத்தினல் உலகுக்கு விசேஷபலன் கிடைக்கும். அபூர்வமான சாஸ்த்ரார்த்தங்கள் தெரிய வரும். அண்ணு ஸ்வாமியின் ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் அபூர்வமான அர்த் தங்களை உலகம் அனுபவிக்கப் பெற்றுவருகிறது. ப்ரக்ருத வாதப்ரதிவாத நூல் களையும் சுவடிகளையும் ஆரம்பம் முதல் அடியேன் தவருமல் படித்து வருகிறேன். இதில் அடியேன் தலையிடத்தகாதென்று வாளாவிருந்தேன். அது தவறு என்று உணர்ந்து இருஸ்வாமிகளுக்கும் தனித்தனி விண்ணப்பங்களெழுதியிருக்கிறேன். இருவரும் அடியேனை அந்யதாவாக நினைக்கக் கூடியவர்களல்லர். அடியே னுடைய பூர்வ ஜன்ம ஸுக்ருதவிசேஷத்தால் இவ்விரு ஸ்வாமிகளும் அடியே னிடத்து ஒரு விசேஷமான அன்பு வைத்திருக்கிருர்கள். அதனல் மிகுந்த தைர்யத்துடன் பிரார்த்திக்கின்றேன் ஸ்ரீ வைஷ்ண வுலகில் திங்களுமாதித்திய னும் ஏககாலத்திலெழுந்தாற்போல் விளங்கும் இவ்விரு ஸ்வாமிகளும் மேன் மேலும் அதிசயிக்கும் ஸௌஹார்தத்துடனே நீடூழி விளங்கி உலகை வாழ்விக்க வேணுமென்றும், சாஸ்த்ரார்த்தங்களை வெளியிடுவதில் ஒருவர்க்கும் வைராக்யமுண்டாக வேண்டாமென்றும், தாம்தாம் கண்ட அர்த்த விசேஷங்களை "சார்ங்க முதைத்த சரமழை போல்" என்கிற அடைவில் அல்லாமல் "வாழ வுலகினில் பெய்திடாய்" என்ற அடைவிலே வர்ஷித்துக் கொண்டிருக்க வேணு மென்றும் பிரார்த்தனை. தாஸன், S. ஸுந்தரராஜன், மதுரை.

(3) கள்ளக்குறிச்சி அட்வகேட் ஆராவமுது தாதாசாரியர் எழுதுவது; (இவரு டைய திருவுருவப்படம் இத் தன்சரிதையில் (பக்கம் 123ல்) காணத்தக்கது.) ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியொன்றுக்கும் முமுக்ஷுப்படி ஸ்ரீஸூக்தி யொன்றுக்கும் பரஸ்பர விரோதமிருப்பதாக வொரு வாதமும், விரோதம்

கிடையவே கிடையாதென்று மற்றொரு வாதமும் ஆக இப்படிப்பட்ட இரு விவாதம் இருமஹான்களுக்குள்ளே நான்கு மாதங்களாக நிகழ்ந்துவருகிறது. இந்த விவாதம் முதல்முதலாக யாரால் ஏற்பட்டது? எப்போது ஏற்பட்டது? என்பது யாவர்க்கும் தெரிந்ததே. ஸ்ரீமத் காரப்பங்காடு ஸ்வாமிகளால் 13 வருஷங்களுக்கு முன்பு எழுதி அச்சிடப்பட்டிருந்த "விரோதபரிஹாரம்" என்கிற வியாஸம் மறுபடியும் நான்கு மாதங்களுக்கு முன்பு பக்தன் என்கிற பத்ரிகையில் அப்படியே மறுபதிப்பாகி வெளிவந்தது. அதற்குக் கண்டனமென்று யாரும் யாதொரு வியாஸமும் எழுதவில்லை. அந்த விரோதபரிஹாரமென்கிற வியாஸத்திற்கு ஸ்ரீமத் காஞ்சீபுரம் ஸ்வாமிகள் கண்டனமெழுதி வெளியிட்டதாகச் சிலர் நினைப்பது சிறிதும் ஆதாரமற்றது. ஸ்ரீ காரப்பங்காடு ஸ்வாமிகள் எப்படி ஒருவரையும் குறிப்பிடாமல் தம்முடைய அபிப்ராயத்தைமட்டும் முதலில் வெளியிட்டாரோ, அப்படியே காஞ்சீபுரம்ஸ்வாமிகளும் ஒருவரையும் குறிப்பிடாமல் ஸ்ரீஸூக்திகளின் ஐககண்டியம், த்ரௌபதியின் ஸம்ரக்ஷணம் என்கிற இரண்டு வியாஸங்களை யெழுதி சென்ற ஜயவருஷ பங்குனி மாதத்தில் தம்முடைய ஸ்ரீராமாநுஜன் பத்ரிகையில் வெளியிட்டிருந்தார். அதில் தம்மிடம் வந்து கேட்டவர்களுக்குத் தாம் உரைத்த பதிலை வெளியிடுவதாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறதேயொழிய, ஒருவருடைய வியாஸத்திற்குக் கண்டன மென்பதாகச் சிறிதும் காட்டப்பட்டிருக்கவில்லை. ஸ்ரீராமாநுஜன் நெ. 74 அனேகமாய் ஒவ்வொருவருடைய க்ருஹத்திலுமிருக்குமே. அதை யெடுத்துப்பார்த்தால் உண்மை விளங்கும். காஞ்சீபுரம் ஸ்வாமியின் ஷெ இரண்டு வியாஸங்களிலுமுள்ள விஷயங்களைக் கண்டனம் செய்து மறுப்பு எழுதவேணுமென்று ஒருவர்க்குத் தோன்றினல் அவர் செய்யவேண்டியதென்ன? அவரும் காஞ்சீபுரம் ஸ்வாமியைப்போலவே பெயரைக் குறிப்பிடாமல் தமக்கு அபிமதமான விஷயங்களைமட்டும் எழுதி லோகாபிராமமான நடையில் வெளியிடுவது நியாயமாகும். ஸ்ரீமத் காரப்பங்காடு ஸ்வாமிகள் அந்த நடையைக் கைப்பற்ருமல், அடுத்த பக்தன் பத்ரிகையில் "காஞ்சீபுரம் மஹா வித்வான் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் என்னுடைய வியாஸத்தைக் கண்டனம்செய்து சிலவியாஸங்கள் வெளியிட்டிருக்கிருர்; அவை யுக்தமல்லவென்று நான் நிரூபணம் செய்கிறேன்" என்று பீடிகையிட்டு ஒரு கட்டுரை [ஆராய்ச்சி யென்பதை] வெளியிட்டார். அது வெளிவந்த பிறகுங்கூட காஞ்சீபுரம் ஸ்வாமிகள் அடுத்த ஸ்ரீராமாநுஜனில் (No. 76ல்) தாம் எழுதி வெளியிட்ட வியாஸம் ஒருவர்க்கும் கண்டனமாக எழுதப்பட்டதல்ல வென்றும் ஒருவரையு முத்தேசித்து எழுதப்பட்டதல்லவென்றும் ஸ்பஷ்டமாக எழுதி வெளியிட்டிருக்கிருர்; இதையும் அனைவரும் வாசித்துப் பார்க்கலாம். அதன் பிறகு மறுபடியும் காரப்பங்காடு ஸ்வாமிகள் அடுத்த பக்தனில் காஞ்சீபுரம் ஸ்வாமிகளின் திருநாமத்தைக் காட்டி அவர் தம்முடைய வியாஸங்களைக் கண்டனம் செய்துவிட்டதாகத் தெரிவித்து அதற்குத் தாம் மறுப்பு எழுதுவதாக (எதிர்மொழிகள்) என்கிற வியாஸத்தை வெளியிட்டார். அதற்குப் பிறகுங்கூட காஞ்சீபுரம் ஸ்வாமிகள் ஸ்ரீராமாநுஜன் 77, 78ல் தாம் விரிவாக எழுதி வெளியிட்ட வியாஸங்களில் ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியின் திருநாமத்தை அடியோடு காட்டாமலே விஷயங்களை மாத்திரம் அழகாக விளக்கியிருக்கிருர். ஆக, இந்த விவாதம் ஏற்பட்டது முதல் காரப்பங்காடு ஸ்வாமிகள் காஞ்சீபுரம் ஸ்வாமிகளின் திருநாமத்தை இருமுறை வெளியிட்டு மறுப்பெழுதினரே தவிர, காஞ்சீபுரம் ஸ்வாமிகள் இந்தக்ஷணம் வரையில் ஒரு வியாஸத்திலும் காரப்பங்காடு ஸ்வாமிகளின் திருநாமத்தை ஸ்பர்சிக்கவேயில்லை யென்பது ஸத்தியம். விஷயங்களின் நிரூபணப்போக்கை கவனித்தால் காரப்பங்காடு ஸ்வாமிகளின் வியாஸங்களுக்கும் கண்டனமாகப் புலப்படும் என்பது தனிப்பட்ட விஷயம். விஷயத்தில் விவாதமுண்

டென்பதை யாரும் மறைக்கமுடியாது. வஸ்துஸ்திதி இங்ஙனேயிருக்க, காரப்பங்காடு ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டியின் சார்பாக வெளியிடப்பட்டதென்று ஒரு அநாமதேயக் காகிதம் நிந்தாமயமாக வெளிவந்திருப்பது எந்த வழிப்போக்கருடைய செயலென்று தெரியவில்லை. இதைப்பற்றி, அடியேனுடைய பரமஸௌஹ்ருத்தான ஸ்ரீமான். பண்டித. சௌரிராஜய்யங்கார் எழுதிய ஒரு வியாஸத்தைப் பின்னே சேர்த்து வெளியிடுகிறேன். ஸஹ்ருதயர்கள் யாவரும் அதனால் அனேக வுண்மைகளைத் தெரிந்துகொள்வார்கள். அந்த அநாமதேயக் கந்தையினால் காஞ்சீஸ்வாமிக்கு அபகீர்த்தி லேசமும் நேராது. ஆனால் காரப்பங்காடு ஸ்வாமிக்கே அதனால் அபக்க்யாதி விளைந்திருக்கிறது. "என்னுடைய காலக்ஷேப கோஷ்டிக்கும் அந்த அநாமதேயக் கந்தைக்கும் யாதொரு ஸம்பந்தமும் கிடையாது" என்று காரப்பங்காடு ஸ்வாமி வெளியிடுவதே நலம். இந்த விவாதத்தில் காஞ்சீஸ்வாமியின் வாதங்கள் யாவும் தனிப் புத்தகமாக விளங்குவது நன்றென்று கருதி ஜகதாசார்யஸூக்திஸுதா நிதியென்னு மிப்புத்தகம் வெளியிடப்படுகிறது." ... ... *

T. ஆராவமுது தாதாசாரியர், கள்ளக்குறிச்சி.

(4.) (பண்டித. சௌரிராஜய்யங்கார், மாம்பலம்—எழுதுவது.)

"ஸ்ரீகாஞ்சீபுரம் ஸ்வாமிகள் வடதிசைநோக்கிச் சென்றுவிட்டாரென்றும், மூன்று மாதம்வரை இத்திசை நோக்காரென்றும் தெரிந்துகொண்ட சில விஷமிகள் ஆருமில்லாதவூரிலே அச்வமேதயாகம் நடத்துகிற கதையாய் "பயங்கரரின் விதண்டாவாதம்" என்றொரு நிந்தைக் காகிதத்தை வெளியிட்டார்கள். சாந்தியும் ஸத்வ குணமுமே வடிவெடுத்தவரான ஸ்ரீமத் காரப்பங்காடு ஸ்வாமிகளின் காலக்ஷேபகோஷ்டியின் சார்பாக அது வெளியிடப் பட்டதாகவும் பொய்யாகவே பிரசுரம் செய்யப்பட்டுவிட்டது. அந்த மஹாபுருஷர் ஒருகாலும் அநாமதேயமான நிந்தைக்காகிதங்களை வெளியிட அநுமதியளிக்கமாட்டா ரென்பது திண்ணம். ஆனால் இரண்டு காரணங்களினால் அந்த மஹாபுருஷரும் இதில் ஸம்பந்தம் பெற்றவரேயென்பதைச் சிலர் நிரூபிக்க முன்வருகிறார்கள். (1) அந்த ஸ்வாமிக்கு காஞ்சீபுரம் ஸ்வாமி ஸாதித்திருந்த ஸ்ரீமுகத்திலிருந்து சில வாசகங்களை உதாஹரித்திருப்பது. (2) இனிமேல் மஹான்கள் முன்னிலையில் வாதம் நடத்துவது தவிர இந்த விவாதத்தில் தாம் எழுத்து மூலமாகச் சிறிதும் ஸம்பந்தம் வைத்துக்கொள்ளப்போகிற தில்லையென்று ஸ்வாமி தெரிவிக்கிறார் என்றது. இவ்விரண்டு காரணங்களினால் ஸ்வாமியின் அநுமதியின் பேரில்தான் அந்த நிந்தைக் காகிதம் வெளிவந்ததென்று நிச்சயிக்கலாம் என்று சிலர் கூற முன்வருகிறார்கள். இவ்விரண்டு காரணங்களும் நம்பத் தகுந்தவையல்ல. காஞ்சீபுரம் ஸ்வாமியால் எழுதப்பட்ட ஸ்ரீமுகங்களை காரப்பங்காடு ஸ்வாமி ஏகாந்தமாகக் காப்பாற்றி வைத்துக்கொள்வதில்லை; காலக்ஷேப கோஷ்டிகளிலே அடிக்கடி வாசித்துக் காட்டுவதுண்டு. 'அதை இப்படி ஸாதிக்க வேணும்' என்று யார் கேட்டாலும் அவர்களிடம் கொடுத்துவிடுவது முண்டு. ஆதலால் முதல் காரணம் தேறாது. இரண்டாவதும் அப்படியே. 'இந்த விஷயத்தில் இனிமேல் நான் எழுதத்தக்கது ஒன்று மில்லை' என்று ஸ்வாமி சிலரிடம் ஸாதித்திருக்கக் கூடும். அதை விஷமிகள் பெருக்கியெழுதியிருக்கிறார்களென்பதுதான் உண்மை. அந்த காகிதத்தில் 11-வது பக்கத்தில் "தத்துவ நூல்களைப்பற்றிய அறிவிலும் உலகியலறிவிலும் துறைபோகிய பலர் காரப்பங்காடு ஸ்வாமியிடம் அன்பும் ஆதரவுங்கொண்டு பல்லாண்டுகளாக ஸம்பிரதாய ரகஸ்யங்களை அறிந்து வருகிறார்கள்" என்றெழுதியிருப்பது உண்மையான விஷயம் அப்படிப்பட்ட மஹான்களிலே சிலரோ ஒருவரோ முன்னின்று தம் பெயரை வெளியிட்டு ஏன் அந்த

நிந்தைக் காகிதத்தைப் பிரசுரம் செய்திருக்கக்கூடாது? அநாமதேயக் காகிதம் என்று அவத்யம் சொல்லும்படியாகவா ஒரு கள்ளப் பிரசுரம் வெளியிடுவது? இது யார் செய்கிற காரியம். இனிமேல் ஒரு பெரியவருடைய பெயரால் பிரசுரம் வெளிவந்தாலுங்கூட அதற்கு கௌரவமில்லாமல் போய்விட்டதே. பெருமுயற்சிகள் செய்து படாதபாடும் பட்டு ஆளைத் தயார் செய்ததாகவன்றோ அர்த்தமாகும். முன்னடியே அந்த பாடுகள்பட்டிருக்கலாமே. இது ஆண்பிள்ளை செய்த காரியமாகத் தெரியவேயில்லையே. "வீண்வாதங்களில் பொழுதுபோக்கும் இயல்புடைய காஞ்சீபுரம் ஸ்வாமி சண்டைச் சுவடிகளை யெழுதிக் குவிப்பதில் வியப்பில்லை" என்று இப்படிப்பட்ட நிந்தைகளை காரப்பங்காடு ஸ்வாமி கனவிலும் நினைக்கமாட்டார். ஆமோதிக்கவும் மாட்டார். காஞ்சீபுரம் ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளின் பெருமைகளைப்பற்றி எத்தனையோ மஹான்கள் எழுதி வெளியிட்டிருந்தாலும் காரப்பங்காடு ஸ்வாமி எழுதி வெளியிட்டிருக்கிற கட்டுரையே எல்லாவற்றிலும் தலைமைபெற்று விளங்குகிறதென்பது உலகமெல்லாமிசைந்த விஷயம்; அப்படி யெழுதின மஹாஸ்வாமி இப்போது ஸ்வல்ப விவாதத்திற்காகத் தம்முடைய திருவுள்ளத்தைத் தலைகீழாக மாற்றிக்கொண்டாரென்பது பாமரர்களுங்கூட நம்பமுடியாத விஷயமல்லவா? "ப்ரக்ருதம் நேர்ந்த விவாத விஷயத்தில் காரப்பங்காடு ஸ்வாமி தம்முடைய கூற்றை ஸ்தாபித்துக்கொள்ள முடியாமையினாலே அநாமதேயமாக நிந்திக்க ஆரம்பித்துவிட்டார்" என்கிற அபக்யாதியன்றோ ஸ்வாமிக்கு உண்டாகும். உண்டாகுமென்று என்ன? உண்டாகியே விட்டது. உண்மையுமதுவே. மஹான்கள் எப்போதும் விஷயவிசாரத்தில் கண்ணுங் கருத்துமாயிருப்பர்களே யல்லது முன்னுக்குப்பின் முரணாக நிந்திக்கத் தலைப்படமாட்டார்கள்.

"யச: காயேந ஜீவதி" என்னப்பட்டவர்களில் தலைவரான ஸ்ரீமத் ராமநாதபுரம் ராகவையங்கார் ஸ்வாமிகள் ஒருஸமயம் மதுரை ஸத்ஸம்பிரதாய ஸபையில் தலைமை வஹித்தபோது காஞ்சீபுரம் ஸ்வாமி விஷயமாக ஒரு வெண்பாவை இயற்றி விரிவாக உபந்யஸித்ததாய் அப்போது பத்ரிகைகளில் பிரசுரமாயிற்று.

"அண்ணங்க ராசிரியர் அற்புதமாம் நூல்கள்தமைப்
பண்ணித் தருகையினால் பாமரரும்—மண்ணுலகில்
நான் சொல்லுகேனதனை நன்றுரைக்கேன் நானென்று
தாஞ் சொல்ல முன்வருவர் தாம்." என்பது அந்த வெண்பா.

இதன் கருத்தை நாம் வியாக்கியானம் செய்யவேணுமோ? ஆயினும் சுருக்கமாக உரைசெய்வோம். காஞ்சீபுரம் ஸ்வாமிகள் அற்புதமாக வெளியிட்டுள்ள நூல்கள் அளவு கடந்தவை. நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கு மிகவிரிவான திவ்யார்த்த தீபிகையுரை; [இது ஒரு பாஷையிலன்று; ஸ்வாமிக்குத் தெரிந்த ஸகல பாஷைகளிலும்.] மற்றும் ஆளவந்தார் முதல் மணவாளமாமுனிகள் வரையிலுள்ள பூருவாசாரியர்கள் வடமொழியிலும் தென்மொழியிலும் அருளிச்செய்திருக்கின்ற சிறியவையும் பெரியவையுமான க்ரந்தங்களுக்கெல்லாம் அரிய பெரிய வியாக்கியானங்கள்; [இவையும் ஒரு பாஷையில் மட்டுமல்ல.] வியாக்கியானங்களாகவல்லாமல் ஸ்வதந்திரமாகவும் பல க்ரந்தங்கள்; ஆயிரக்கணக்கான உபந்யாஸங்கள் காஞ்சீபுரம் ஸ்வாமியால் வெளியிடப் பட்டவை. நாளைக்கும் வெளிவந்து கொண்டிருப்பவை. இவற்றை ஆதாரமாகக்கொண்டே ஆங்காங்கு உபந்யாஸகர்கள் தம் தம் உபந்யாஸங்களை நடத்திவருவதாக ராமநாதபுரம் ராகவையங்கார் ஸ்வாமி கண்டறிந்து வெளியிட்டதில் பொய்ம்மை சிறிதுமுண்டோ? சென்னையில் பலபகுதிகளில் பலமஹான்கள் உபந்யாஸங்கள் நடத்திவருகிறார்கள். ஓரிடத்தில் திருமாலை; மற்றோரிடத்தில் திருநெடுந்தாண்டகம்; வேறோரிடத்தில் திருவாய்மொழி; இன்னோரிடத்தில் ஞானஸாரம்......இப்படி

யாக உபந்யாஸங்கள் நடந்துகொண்டிருப்பது பக்தவர்க்கங்களுக்குத் தெரியுமே. அங்கங்கே சென்று கேளுங்கள்; காஞ்சீபுரம் ஸ்வாமியின் வியாக்கியான நூல்களைக் காணுங்கள்; இவற்றால் அந்தந்த உபந்யாஸகர்கள் எவ்வளவு உபயோகமடைந்து வருகிறார்களென்பதை ஒரே நிமிஷத்திற் காணலாம். ஆண்டுதோறும் மார்கழி மாதம் வருகிறது. அடுத்தபடியாகவும் வரப்போகிறது. திருப்பாவையுபந்யாஸங்கள் நடைபெறுமிடங்களிற் சென்று கேளுங்கள். காஞ்சீபுரம் ஸ்வாமி திருப்பாவைக்கு மிகவும் விரிவாக ஸம்ஸ்க்ருத வியாக்கியானமும் அச்சிட்டு வெளியிட்ட பின்பு பண்டிதர்களுக்குப் பரம ஸௌக்யமாய்விட்டது நாம் இப்படியெழுதுவது ஒவ்வொருவருடைய அநுபவத்திற்கும் அவசியம் வரவேண்டும். வந்திருக்கவுங்கூடும். உபந்யாஸகரத்னமாயும் ஹரிகதா காலக்ஷேப மணியாயும் விளங்கும் ஸ்ரீஉவே. வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாசார்ய ஸ்வாமி யொருவரே தம்முடைய சொற்பொழிவுகளில் அஸூயாலேசமுமில்லாமல் காஞ்சீ ஸ்வாமியின் வியாக்கியான நூல்களின் உபயோகப் பெருமைகளை உலகமறியப் பேசிவருகின்றவர். அந்த ஸ்வாமியின் திருவாக்கிலிருந்து இதை என்னைப்போன்றவர்கள் ஓரிடத்திலன்று, பலவிடங்களில் பலதடவைகள் கேட்டிருப்பர்கள். இத்தகைய உதார குணம் ஸ்ரீமத் காரப்பங்காடு ஸ்வாமியிடத்திலும் குறைந்ததன்று. மற்ற பேர்கள் சொல்லுவதும் எழுதுவதும் நிற்க: ஸ்ரீமத் D. R. ஸ்வாமி 1955 ஜூலை 10உ ஹிண்டு தமது மதிப்புரையில் "ஸ்ரீஅண்ணங்கராசார்ய ஸ்வாமியின் வியாஸங்கள் ஆங்காங்கு உபந்யாஸகர்களுக்கு வழிகாட்டியாயிருக்கும்" என்று எழுதியிருப்பதுண்டே, இதை நடுநிலைமையிலுள்ளவர்கள் கவனிக்க வேண்டும். காஞ்சீ ஸ்வாமியின் 63 உபந்யாஸமாலை யென்கிற புத்தகம் ஸமீபகாலத்தில் வெளிவந்ததன்று; சென்ற ஆண்டில் வெளிவந்தது. அதற்குப் பல பத்ரிகைகளிலும் அப்போதே மதிப்புரை வெளிவந்துவிட்டது. ஹிண்டுவில் மட்டுமே இப்போது தாமதித்து வெளிவந்தது. இந்த ஸந்தர்ப்பத்தில் இது இவ்விதமாக வெளிவந்ததை நோக்குங்கால், மேலே சொன்ன விஷமிகளின் துராக்ருதமான நிந்தைக்கு மறுப்பாகவே பகவானால் இது பிரசுரம் செய்விக்கப்பட்டதென்று நன்குணரலாம். அளவுகடந்த அசூயை குடிகொண்ட விஷமிகள் எதையெழுதினாலும் கேட்பாரில்லையென்று நினைக்கிறார்கள் போலும். யார் எதை யெழுதினாலும் அச்சுக்கூடங்கள் ஏற்றுக்கொள்ளத் தடைசெய்யாது. மை படிய மாட்டேனென்னாது; காகிதம் தாங்கிக்கொள்ள மாட்டேனென்னாது. ஆனால் உண்மையறிவாளிகள் உடனுக்குடனே அவற்றை உதறித்தள்ளுவர்களென்பது உறுதி. விஷமிகள் எது வேணுமானாலும் எவ்வளவு வேணுமானாலும் எழுதட்டும். அதற்காக யாரும் கவலைப்படமாட்டார்கள். மஹாஸாத்விகரான ஸ்ரீமத் காரப்பங்காடு ஸ்வாமிகள் இந்த அதர்க்கண நிந்தைக்கு ப்ரவர்த்தகர் என்று அஸப்யமான ஒரு அபக்க்யாதியை அந்த மஹானுக்கு உண்டாக்க முன்வந்தார்களே! இதுதான் மிகவும் வெறுக்கத்தக்கது. காரப்பங்காடு ஸ்வாமி இதில் ஸம்பந்தப்பட்டிருந்தது உண்மையாயிருந்தால் முக்கியமான விஷயவிசாரம் ஒன்றுதான் இதில் அழகாக வெளிவந்திருக்கும். தவிர, அந்த நிந்தைக் காகிதத்தில், விஷயத்திலே நோக்காக எழுதியுள்ள ஸ்வல்ப பாகமும் அந்த ஸ்வாமியினுடைய திருவுள்ளத்திற்கு பிரதிகூலமானதேயொழிய அநுகூலமானதுமன்று. "காஞ்சீஸ்வாமி தம்முடைய கொள்கையை நிலைநாட்டாமல் வீணாகப் பக்கங்களை வளர்த்திருக்கிறார்" என்று ஊர்பேரில்லாத தூஷகர் ஆரம்பத்திலேயே எழுதுகிறார். ப்ரஸித்தரான ஒரு பண்டிதர் தம்முடைய பெயரை நாடு நகருமறிய வெளியிட்டுக் கொண்டு இப்படிப்பட்ட தூஷணையை எழுதியிருந்தால் சிலராவது இதை மெய்யென்று இரண்டொரு நாளாகிலும் நம்பியிருக்கக்கூடும். ஒன்றுந்தெரியாத பாமரர்கள் மயங்குவதற்கும், அல்பஸந்தோஷத்தையடைந்து ஸ்வல்பகாலம் கொக்கரிப்பதற்குமேயன்றோ இந்த நிந்தைக்காகிதம் உபயோகப்படும். ஆண்

பிள்ளையாயிருந்தால் இப்படி ஊர்பேரில்லாமல் நிந்தித்து விட்டுத் தலைமறைய மாட்டார். தசரதசக்ரவர்த்தியிடம் இராமபிரானது திருக்குணங்களை எடுத்துரைக்கின்ற நகரத்து ஜனங்கள் "யதா வ்ரஜதி ஸங்க்ராமம் க்ராமார்த்தே நகரஸ்ய வா, கத்வா ஸௌமித்ரிஸஹிதோ நாவிஜித்ய நிவர்த்ததே." என்கிறார்கள். இராமன் யுத்தத்திற்குச்சென்றால் வெற்றிபெறாமல்திரும்புவதில்லை என்று இதில் சொல்லப்படுகிறது. அதுபோலவே காஞ்சீஸ்வாமி விவாதங்களில் இறங்கினால் தம்முடைய வாதத்தை நிலைநாட்டாமல் நிற்பதில்லை என்பதைப் பலவாண்டுகளாக உலகம் பார்த்து வருகிறது. ப்ரக்ருதம் த்ரௌபதீப்ரபத்தி விஷயத்தில் காஞ்சீஸ்வாமி, விவாதத்தை தாம் ஆரம்பிக்கவில்லை. "என்னைக் கேட்டவர்களுக்கு என்னபிப்ராயத்தை நான் தெரிவித்தேனத்தனை" என்றே பன்முறையும் எழுதியிருக்கிறார். அப்படியிருந்தும் விவாதம் வீணாக வளர்ந்திட்டது; யாரால் வளர்ந்திட்டது என்பதை நிர்ணயிக்க யாருக்கும் சிரமமில்லை. "பயங்கரரின் விதண்டாவாதம்" என்கிற நிந்தைக் காகிதத்தை வெளியிட்டவர் நிந்தைகளை நிறுத்தி விவாத விஷயத்தில் நிலைநின்று, இவ் விஷயத்தில் 64 பாராக்கள் கொண்ட காஞ்சீஸ்வாமியின் அமுதக்கடலான வியாஸத்தை ஒவ்வொரு பாராவாக எடுத்து மறுப்புரைக்கட்டும். எந்தெந்த பாராக்கள் மறுக்க வேண்டாதவையென்று தோன்றுகிறதோ, அந்த பாராக்களின் லக்கங்களை வரிசையாகக் குறிப்பிட்டு 'இந்த பாராக்களை உபேக்ஷித்து விட்டோம்' என்றெழுதி விடட்டும். மறுக்கத்தக்க விஷயமுள்ள பாராக்களை மட்டும் ப்ரமாணங்களைக் கொண்டு மறுக்கட்டும். அப்போதன்றோ "தம்முடைய கொள்கையை நிலைநாட்டாமல் வீணாகப் பக்கங்களை வளர்த்திருக்கிறார்" என்று அநாமதேயர் எழுதியுள்ள தூஷணம் உண்மையாக யாரிடத்தில் சார்கின்றதென்பதை உலகம் காணும். காஞ்சீஸ்வாமியின் 64 பாராக்கள் கொண்ட வியாஸத்திற்கு மறுப்பெழுத வேணுமென்பதுகூட அபேக்ஷிதமன்று. ஸ்ரீலோகாசார்ய ஸூக்திகளுக்குள் பரஸ்பரவிரோதமே கிடையாதென்றும், விரோதமிருப்பதாக வைத்துச் செய்திருக்கிற பரிஹாரம் யுக்தமன்று என்றும் இந்த விஷயத்தை காஞ்சீஸ்வாமி ஒருவருடைய பெயரையும் தொடாமல் எப்படி லோகாபிராமமாக நிரூபணம் செய்திருக்கிறாரோ, அப்படி ஒரு பண்டிதர் எழுந்து 'விரோதமுண்டுதான், விரோதபரிஹாரம் அவசியந்தான், பரிஹாரப்ரகாரம் இதுதான்' என்று காட்டி ஒருவர் பெயரையும் தொடாமல் லோகாபிராமமாக எழுதி வெளியிடட்டும். அதனால் உலகம் உண்மையையுணர்ந்து கொள்ளட்டும். காஞ்சீஸ்வாமியை வீணாக நிந்திக்க வேணுமென்றும், அவர் தூஷிக்கிறாரென்று பொய்ப்பிரசாரம் செய்து முக்கியமான விஷய விசாரத்தை மறைத்துவிட வேணுமென்றும் இவ்வளவே ஆசை கொண்டவர்களுக்கு இந்த வழிகள் அடியோடு ருசிக்கமாட்டாவென்பதை யறிவோம். ஸ்ரீஉ.வே. பண்டித V. P. ரங்காசாரியர் ஸ்வாமியின் வெளியீட்டில் இரண்டு வார்த்தைகளை ஸாரதமமாக ஒரு ரஸிகர் எடுத்துரைத்தார். அவை யாவன; (1) "இப்படி யழுகிறவர்கள் மற்றும் பலருளர்; அவர்களோடு சேர்ந்து *வாயுந்திரையுகளுமநுஸந்தான மாகலாம்." (2) "இந்த மார்க்கங்களில் ஒன்றிலும் புத்தி செல்லாமல் ஊர்பேர் தேதியொன்றுமில்லாத நிந்தைக்கந்தைகளை வெளியிடத்தான் எங்கள் கோஷ்டிக்கு ஸாத்யமாகுமென்னில் அதைத் தடுப்பாராருமில்லை; அப்படியே நடக்கட்டும்." என்னுமிவை. பகவானுடைய விபவாவதாரங்களில் ஸ்ரீராமக்ருஷ்ணாதிகளின் சக்திவிசேஷங்களை மிக நன்றாக அறிந்து வைத்தும், *வல்லரக்கர் புக்கழுந்த* என்று நம்மாழ்வார் ஸாதிக்கும்படியாக அரக்கருமசுரரும் தயரதன்பெற்ற மரகதமணித்தடாகத்திலே தாமாகவே வந்து விழுந்து முடிந்தனரென்று பழங்கதை கேட்டிருந்தோம். அதை இப்போது ப்ரத்யக்ஷமாகப் பார்த்து மெய்யேயென்று நம்புகிறோம். ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியின் விரோதபரிஹாரமென்கிற வியாஸம் 13 வருஷங்களுக்குமுன்னமே வெளி

வந்ததென்பதை யாரும் மறுக்கமாட்டார். அதுவே மறுபடியும் பக்தனில் ஆவச்யகமாகவோ அநாவச்யகமாகவோ வெளியிடப்பட்டது. அதிலிருந்தே இவ்வளவு விவாதக் கிளர்ச்சி ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அஸ்து. விரோதபரிஹாரமென்கிற அந்த வியாஸம் வெளியான பிறகு காஞ்சீபுரம் ஸ்வாமி வெளியிட்ட வியாஸம் இன்னதென்பதை "பயங்கரரின் விதண்டா வாதம்" என்கிற நிந்தைக்காகிதம் உள்ளபடி எடுத்துக் காட்டியிருக்கிறது. அதில் 5வது பக்கம் ஆரம்பம்—:'இப்படி காரப்பங்காடு ஸ்வாமி இந்த விஷயத்தை உபபாதித்திருக்கிறார். இதைக் கண்டதுமே ஸ்ரீ. பிர. அ (காஞ்சீஸ்வாமி) பிரளயம் நேர்ந்ததுபோலச் சீறிக்கொண்டும் அலறி மேல்விழுந்து கொண்டும் ஸ்ரீஸூக்திகளின் ஐககண்ட்யம் என்றவொரு வியாஸத்தை யெழுதி பக்தனுக்கு அனுப்பினர்" என்றிருக்கிறது. இந்த ஒரு விஷயத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம். காரப்பங்காடு ஸ்வாமியின் விரோதபரிஹாரமென்கிற வியாஸத்தைக் கண்டவுடனே காஞ்சீபுரம் ஸ்வாமி சீறிக்கொண்டும் அலறி மேல்விழுந்து கொண்டும் ஐககண்ட்ய வ்யாஸத்தை எழுதினரென்று தெரிவிக்கிற இந்த விதண்டாவாதக் காகிதமானது உண்மையாக ஸ்ரீஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டியார் சார்பில் வெளியிடப் பெற்றதாயிருக்குமாயின் அந்த காலக்ஷேப கோஷ்டியைச் சேர்ந்த மஹான்களில் ஒருவராவது இதை விமர்சிக்கத் திறமையில்லாதவராகவா இருப்பர்? காஞ்சீ ஸ்வாமியின் ஐககண்ட்ய வ்யாஸந்தானே விவாதத்திற்கு மூலமானதென்று (அல்லது) ஆஸ்பதமானதென்று இவர்களால் காட்டப்படுகிறது. அந்த வியாஸம் அச்சாகி வெளி வந்திருப்பதுதானே. அதில் காரப்பங்காடு ஸ்வாமியைப்பற்றியோ, அவரைச் சார்ந்தவர்களைப்பற்றியோ, வேறு எந்த நபர்களைப்பற்றியோ, பக்தனைப்பற்றியோ கிஞ்சித்தாவது ப்ரஸ்தாவமுண்டா? கடுஞ்சொல்லாவது உண்டா? அணுவளவு இருந்தாலும் எடுத்துக் காட்டட்டும். இல்லாததை எப்படி காட்டமுடியும்? காட்ட முடியவில்லையென்று தீர்ந்து விட்டால் "காரப்பங்காடு ஸ்வாமியின் வியாஸத்தைக் கண்டதுமே காஞ்சீ ஸ்வாமி பிரளயம் நேர்ந்து விட்டதுபோல் சீறிக்கொண்டும் அலறி மேல்விழுந்து கொண்டும் ஐககண்ட்ய வ்யாஸத்தை யெழுதினர்" என்று ஒருவழிப்போக்கர் வரைந்து வெளியிட்டிருப்பதானது வீணுமாச்சரியத்தை வளர்ப்பதற்காகவே யென்பது வெளிப்படை. உண்மைக்குமாறாக அஸம்பத்தமா யெழுதி தூஷித்திருப்பதுமல்லாமல், இது காரப்பங்காடு ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டியின் மூலமாக வெளியிடப்பெற்றதென்றும் ஒரு அபத்தம் எழுதி, பரமஸாத்விகரான அந்த மஹானுக்கும் வீணை அபக்க்யாதியை விளைவித்ததானது திருவல்லிக்கேணி வாஸிகளான பிராமாணிகர்களால் அவசியம் கண்டிக்கத் தக்கதென்பதில் ஐயமுண்டோ? ஸ்ரீமான் உவே பண்டித V. P. ரங்காசாரியர் ஸ்வாமி வெளியிட்டுள்ள "அநாமதேயரின் ஆத்திரம்" என்னும் உண்மையுரைப் புத்தகமும், கள்ளக்குறிச்சி அட்வகேட், ஆராவமுதுதாதாசாரியர்ஸ்வாமி ஆங்கிலத்திலும் தமிழிலும் தெலுங்கிலும் விஷய தத்துவங்களை வெகு விசதமாக விவரித்து வெளியிட்டிருக்கிற லோகாசார்ய ஸ்ரீஸூக்தி ஸாமரஸ்யமென்கிற புத்தகமும் உலகம் பரவியிருப்பதால் ப்ரக்ருத விவாத ஸம்பந்தமான ஸகலதத்துவங்களும் அவற்றால் விசதமாகும். இவற்றையெல்லாம் கடாக்ஷித்தருளும் ஸ்ரீ காரப்பங்காடு ஸ்வாமிகள் இந்த நிலைமையில் தமக்கு கர்த்தவ்யம் இன்னதென்பதை உணரகில்லாதவரல்லர். உணர்ந்து, செய்வன திருந்தச் செய்வதே நலம்... ..".

அன்பர்களே! இத் தன்சரிதையில், கீழ் 140 பக்கத்தில் ஆரம்பித்த விஷயத்தையும், 143 பக்கத்தின் கடைசிபாராவையும் மறுபடியும் ஒரு முறை காணவேணும். இப்போது இங்கு விரித்துரைக்கப்பட்ட விஷயமெல்லாம் அங்கே சுருக்கமாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. கீர்த்தி மூர்த்தியான ஸ்ரீமத் காரப்பங்காடு சிங்கப்பெருமாள்ஸ்வாமியின் திருவாக்குறுதியை அடியேன்நினையாத நிமிஷமில்லை.

411. தத்வநிவேதநம். கீழ் (பக்கம் 328ல்) கெ. 125 ஸமஸ்யமாநோக்தி விஷயகங்களான நூல்களில் இதுவு மொன்று.

412. தத்வஹிதோபதேசம். கீழ் கெ. 391, 392 நூல்களின் விஷய பூதரானவர்க்கு அளித்த தத்வோபதேசங்களும். ஹிதோபதேசங்களு மிதில் காணத்தகும்.

413. தத்வார்த்த பூஷணம்: அஹோபில மடத்து போக்தாக்களில் ஒருவர் எழுதிய தத்வபாஷணத்திற்கு மறுப்புரை. இவ்விஷயம் ரஸிகவித்வான்களுக்கு அவசியம் தெரிந்திருக்கவேண்டுமல்லவா? சிறிது தெரிவிக்கிறேன்; அடியேனெழுதிய ஸதுபதேச சிக்ஷையில் (பக்கம் 11ல்)

பூயிஷ்டாம் தே நமஉக்திம் விதேம என்கிற ஸுப்ரஸித்தச்ருதிவாக்கியத்திற்கு "பூயிஷ்டாம் நம உக்திம் தே விதேம" என்கிற அந்வயமும் அதற்குரிய பொருளுந் தவிர வேறு அறியார்கள் நவீனர்கள். இவ்வந்வயம் நம்பிள்ளை கோஷ்டியில் தலைகாட்ட ப்ரஸக்தியில்லையே. தே பூயிஷ்டாம் நமஉக்திம்—உனக்குக் கனத்துத்தோன்றும் நம உக்தியை;—உன் கருத்தாலே பொறுக் கொணாச்சுமையான நம உக்தியை என்றன்றோ நம்பிள்ளை யருளின பொருள். அடியார்கள் வாக்கிலே நம: என்கிற சொல் வந்தாலும் அதை மலை சுமந்ததாக நினைப்பவனும் எம்பெருமான்—என்றெழுதியிருந்தேன். (இதன்மேல் பாஷணகாரர் (பக்கம் 17-ல்)

> "ஔபாஸநாந்தத்தில் (அக்நேநய) என்றாரம்பித்து *பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம* இத்யந்தமான அக்நிவிஷயகமான உபஸ்தாநமந்த்ரம் படிக்கப்பட்டிருக்கிறது. இது ஸாக்ஷாத் பகவத் விஷயகமன்று. *அபரிமித க்ருத்வஸ் தே நம:* என்கிற வாக்யத்தை யநுஸரித்து இங்கும் (பூயிஷ்டாம் நமஉக்திம் தே விதேம) என்று அர்த்தங்கொள்வதே அத்யந்தமுசிதமாகும். வேறுவிதமான அர்த்தங்கொண்டால் விருத்தமாக முடியும்."

என்று எழுதிவிட்டு, "தே பூயிஷ்டாம் நம உக்திமென்று அந்வயிக்கவேணுமென்று நம்பிள்ளை எங்கே சொல்லியிருக்கிறார்? ஆச்சான் பிள்ளை சொல்லியிருக்கிறாரா, நம்பிள்ளை சொல்லியிருக்கிறாரா?......இம்மாதிரியான மாயாஸீதாவ்யாபாரம் அநர்ஹமானது" என்றெழுதினார். இவர் வேதாந்த வித்வானென்று நிர்ப்பயமாய் விருது வெளியிட்டுக்கொள்ளுகிறார். இதைப்பற்றி விரிவாகக் கேளுங்கள். *அக்நே நய ஸுபதா* என்கிற மந்த்ரம் ஈசாவாஸ்யோபநிஷத்தில் முடிவான ருக்கு; ப்ருஹதாரண்யகத்திலும் ஏழாமத்தியாயத்தின் முடிவானது. ஈசாவாஸ்யோபநிஷத்திற்கு ஸ்வாமி தேசிகன் பாஷ்யமருளிச் செய்திருக்கிறார். ஸ்வாமியின் அவதாரிகை "அக்நி சப்தவாச்யம் பகவந்தம் ஸ்வாபேக்ஷிதம் ப்ரார்த்தயேத்யாஹ" என்றே. மேலே விவரணமும் காணீர்:—"(அக்நே!) அக்நி சரீரக!. *யஸ்யாக்நிச் சரீரமிதி அந்தர்யாமிப்ராஹ்மணம். *ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநிரிதி*ந்யாயாத் அக்ரநயநாதிகுணயுக்த! இதி வா." என்று கதிராயிரமிரவி கலந்தெரித்தாற் போன்ற விளக்கமான விவரணமுள்ளது. இப்படியிருக்க, இது ஔபாஸநமந்த்ரமென்றும், ஸாக்ஷாத் பகவத் விஷயகமன்று என்றும் எழுதிவிட்டு வேதாந்த வித்வானென்று வெடிபோடுகிறார். ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தின் கதி இதுவாயிற்று. இனி திராவிட வேதாந்தத்தின் கதியையும் பார்ப்போம். *பூயிஷ்டாமித்யாதிக்கு ஆச்சான் பிள்ளை அபார்த்தம் எழுதியிருப்பரேயொழிய நம்பிள்ளை யெழுதியே யிருக்கமாட்டாரென்று கொண்டு உறுமுகிறார்: உபய வேதாந்தங்களிலும் கனமகர குண்டலமணிந்து விளங்குமழகுக்கு ஆலத்தி வழிக்க வேணும் "பூயிஷ்டாம் தே நமஉக்திம்" என்பதற்கு 'மிக அதிகமான நம உக்தியை உன் விஷயத்திலே செய்யக்கடவோம்' என்கிற பொருள் அஸங்கதமன்று; அது சப்த ஸப்யமே யாகும். [ஆவ்ருத்திதோ பூயஸீம் நம உக்திம்

விதத்மஹே] என்று தேசிகன் வியாக்யானம் செய்தருளி யுள்ளார். நமோநம: நமோநம: என்று பலகால் சொல்லுவதே ஆவ்ருத்தியினால் பூயிஷ்டமான நம உக்தியாகும். இங்ஙனே வியாக்யானம் செய்வதைக் காட்டிலும் எம்பெருமானுடைய தன்மைக்குப் பொருத்தமாக வியாக்கியானம் செய்தருளவேணுமென்று திருவுள்ளம்பற்றிய நம்பிள்ளை விலக்ஷணமாக வியாக்யான மருளியுள்ளார். ஆழ்வாருடைய திவ்யஸூக்தியும் அதற்குக் கைகொடுத்தது. நம்பிள்ளை திருவுள்ளம்பற்றின பொருள் எங்ஙனே யென்னில்; நம: என்கிற உக்தியானது எம்பெருமானுக்குக் கனத்துத் தோற்றுவதாக அவர் கொண்ட பொருள். உள்ள சொல்வடிவில் இப்பொருள் எங்ஙனே கிடைக்கிறதென்று விமர்சிக்கவேணும்; "பூயிஷ்டாம் நமஉக்திம் தே விதேம" என்று அந்வயங் கொண்டால் முந்துற முன்னம் உதாஹரித்த பொருள் கிடைக்கின்றது. "தே பூயிஷ்டாம் நம உக்திம் விதேம" என்று அந்வயம் கொள்ளுமளவில் நம்பிள்ளை திருவுள்ளம்பற்றின விலக்ஷணப்பொருள் கிடைக்கின்றது. எங்ஙனேயென்னில், தேபூயிஷ்டாம்—உன் மனத்தால் கனத்ததான என்றபடி. "வேங்கடத் துறைவார்க்கு நம வென்னலாங் கடமையது சுமந்தார்கட்கே" என்றருளிச் செய்கிறாராழவார். "நம உக்தியைச் சொன்னவர்களுக்கு" என்று விவக்ஷிதமான இவ்விடத்தில் "அது சுமந்தார்கட்கே" என்று அருளிச்செய்தது ஏன்? என்று ஆராய்ச்சி செய்தருளின நம்பிள்ளை—"இவன்பக்க லுள்ளத்தைக் கனக்க நினைத்திருக்கு மவன் கருத்தாலே" என்று அருளிச்செய்து அதற்கு ஸம்வாத ப்ரமாணமாக "பூயிஷ்டாம்" என்கிற இந்த ச்ருதியை உதாஹரித்தருளியுள்ளார். அவ்விடத்தில் உரைகாரர் [தே பூயிஷ்டாம் நம உக்திம்—உக்திः நம இத்யேதாவந்மாத்ராபி பகவதபிப்ராயேண பூயிஷ்டா பவதீதி அர்த்தः] என்று விவரித்துள்ளார். முநித்ரய ஸம்பிரதாயத்தில் தலைவரான ஸாக்ஷாத் ஸ்வாமி என்பவரும் தம்முடைய திருவாய்மொழியுரையில் இதே யிடத்தில் இந்த ச்ருதிவாக்கியத்தையே உதாஹரித்து இங்ஙனமே அர்த்தம் நிரூபித்துள்ளார். இது நம்பிள்ளை யருளிய பொருளேயன்றி ஆச்சான் பிள்ளையருளிய பொருளன்று. இத்யாதி.

414. தானேயெழுதியதன்சரிதை. இப்போது அன்பர்கள் கையில் வைத்துக் கொண்டு கடாக்ஷித்தருளும் நூல் இதுவே. அடியேனுடைய தெலுங்கு பாஷைப் பத்ரிகையிலும் இது அந்த பாஷையில் வெளியாகிவருகிறது. (சிரஞ்சீவி) ஆழ்வார் திருநகரி. இளையவில்லி பூவராஹன் எம். ஏ. இதனை ஆங்கில பாஷையில் மொழி பெயர்த்து வருகிறான். அதுவும் அச்சாகி வெளிவரும். (அவனுருவப்படம் இதில் பக்கம் 116ல் காண்க.)

415. திருப்புட்குழிஸ்வாமிவைபவபரிஷ்காரம்.
416. தத்பரிசிஷ்டம்.
ஸ்ரீ காஞ்சியில் திருப்புட்குழி ஸ்வாமி யென்றே ப்ரஸித்தரான ஸ்ரீக்ருஷ்ண தாதா சார்யஸ்வாமி யென்பவர் மஹாவ்யாபகராக எழுந்தருளியிருந்தார். அந்த மஹாஸ்வாமியைத் 'திருப்புட் குழியப்பா' என்று வழங்கிப் போருவர்கள். அவர் தேவப்பெருமாள் ஸந்நிதிக்கு தர்மகர்த்தாவாகவு மெழுந்தருளியிருந்தார் சிலகாலம். அவர் சதுச்சாஸ்த்ர வித்வானென்று கொண்டாடப்பட்டவர். இந்த மஹானுடைய சரித்திர மெழுதுவதாகப் புகுந்த அய்யா. க்ருஷ்ண தாதாசார்யீ ரென்பவர் பல பொய்யான கதைகளைப் புகுத்தி யெழுதி வேதாந்த தீபிகை யென்னும் அஹோபில மடத்துப் பத்ரிகையில் பிரசுரம் செய்வித்து வந்தார். அந்தப் பொய்க்கதைகளை நீக்கி, யதாவஸ்திதமான சரித்திரத்தைப் பரிஷ்காரப்படுத்தியவை இவ்விருநூல்களும். மேலேசொன்ன வேதாந்த தீபிகாபத்ரிகைக்கு ஆசிரியராயிருந்த ஸ்ரீ V. V. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள் இவ்விரண்டு நூல்களையும் பூர்த்தியாக வாசித்

சென்னைத் தண்டையார்பேட்டையில் "ஸ்ரீ ராமா" என்னும் ஸபாமண்டபத்தில் 1954௵ ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவத்தை முன்னிட்டு நடத்தின ஸ்ரீ ராமாயண நவாஹப்ரவசனத்தில் பட்டாபிஷேக ஸமய விசேஷத்தின் உருவப்படம்.

துப் பார்த்து மிகவுகந்து "இவற்றை தேவரீர் தனிப்பட அச்சிட்டிருக்க வேண்டாமே; எனக்கு அனுப்பியிருந்தால் வேதாந்த தீபிகையிலேயே பிரசுரம் செய்திருப்பேனே" என்று தெரிவித்திருந்தார்.

417. திவ்யஸூரிசரிதகாலநிர்ணயம். எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்திருந்த கருடவாஹந பண்டிதர் பணித்த திவ்ய ஸூரி சரிதகாவ்யம் ஐம்பது வருஷங்களுக்கு முன்பு மைஸூரில் அச்சிடப் பட்டிருந்தது. அது நாளடைவில் துர்லபமாய்விட, அதை அடியேன் மறுபதிப்புச் செய்வித்தேன். இந்தநூல் எம்பெருமானார்காலத்தில் அவதரித்ததன்றென்றும், மிகப் பிற்காலத்தில் தோன்றிய தென்றும் சுதேசமித்திரனில் ஒருவர் வெளியிட, அது ஸர்வாத்மநா அபத்த மென்பதை நன்கு நிரூபித் தெழுதிய நூலிது. சுதேசமித்திரனாராய்ச்சி யென்றும் இதற்கு மறு பெயருண்டு.

418. தீண்டாமைதொலையாமை: நூற்பெயரைக் கொண்டே நூலின் ஸ்வரூபமுணரலாம்.

419. துவரைப்பிரான் திருவருள்: துவரைப் பிரானென்று த்வாரகாநாதனுடைய திருநாமம். பல தடவைகள் த்வாரகைக்கு விடை கொண்டிருக்கிறேன். பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு தடவை விடை கொண்டபோது ஸ்ரீத்வாரகாதீசனுடைய முன்னிலையில் அநுயாயிகளுடன் கோஷ்டியாக விருந்து அருளிச்செயல் ஸேவித்துக் கொண்டிருக்கையில் *துவரைப்பிரானுக்கே சங்கற்பித்துத் தொழுதுவைத்தே னொல்லை விதிக்கிற்றியே* என்ற நாச்சியார் திருமொழிப்பாசுரம் ஸேவிக்குமளவில் D T. தாதாசாரியாரிடமிருந்து ஒரு அபார்த்த புத்தகம் கிடைத்தது. அதற்கு அப்போதே அவ்விடந்தன்னிலேயே மறுப்பெழுதி அச்சிட அனுப்பலாயிற்று. இது துவரைப்பிரான் திருவருள்மூலமாகத் தோன்றியதால் நூலுக்குத் துவரைப்பிரான் திருவருளென்று பெயரிடலாயிற்று. இவ்விஷயம் இந்நூலிலும் விளக்கப்பட்டுள்ளது மற்றவை நூலிற் காணத்தக்கன. ப்ராஸங்கிகமாக இங்கொன்று விஜ்ஞாபிக்கிறேன். அடியேன் வடநாடு யாத்திரை புறப்பட்டேனென்றால் அதைத் தெரிந்துகொண்ட விஷமிகள் "இவன் திரும்பிவரப் பல மாதங்களாகுமன்றோ; அதுவரையில் நம்முடைய சுவடி பங்கமடையாமல் ப்ரசாரம் பெறுமல்லவா?" என்று *மநோரதாநாம் அதடாந் ப்ரவாஹாந் வளர்த்தி எதையாவது எழுதி வெளியிடுவார்கள். அது மூன்று நாளிலேயே அடியேனுக்குக் கிடைத்து மறுமூன்று நாளிலேயே மறுப்பு வெளியாகும்படி எம்பெருமான் செய்தருள்வன். இந்த ரீதியிலேயே முப்பது நூல்களுக்குமேல் வெளியாகியுள்ளன. அன்னவற்றுள் இதுவொன்று.

420. தேசிகப்பிரபந்தவுரையாராய்ச்சி: 1944-ஆம் ஹு டிசம்பர் மாதம் முடிவில் தஞ்சாவூரில் ஒரு பெருங்கூட்டத்தின் மூலமாக அரங்கேற்றமடைந்து வெளிவந்த தேசிகப்பிரபந்தவுரையைப்பற்றினது இவ்வாராய்ச்சிநூல். இத் தன்சரிதையில் [பக்கம் 193-ல்] ஸேவைஸாதித்தருளும் ஸ்ரீ மதுபயவே, வித்வத்வரேண்ய (உப்பிலியப்பன் ஸன்னிதி) நவநீதம் க்ருஷ்ணமாசார்யஸ்வாமியின் ஜ்யேஷ்டபுத்ரரத்னமான சிரோமணி வித்வான். ஸ்ரீராமதேசிகாசார்யரே உரையாசிரியர். இவர் எனக்கு இளமை தொடங்கியே *பஹி: ப்ராண இவாபர:* என்றும் *ப்ராணேப்யோபி கரீயாந்* என்றும் சொல்லும்படி சீரணிந்த தோழமைகொண்டு விளங்குபவர். இவருடைய பாண்டித்யமும் விமர்சசக்தியும் லேகன சாதுர்யமும் மிக வியக்கத்தக்கவை. உண்மையில், என்னுடைய பரமாப்த பண்டிதமணிகளுள் இவர்க்கே முதல்ஸ்தானம் கொடுத்

திருக்கிறேன். அஸ்மதாசார்யரான ஸ்ரீ காதிஸ்வாமி தென்னாட்டுத் திவ்ய தேச யாத்திரையாக எழுந்தருளியிருந்த காலத்தில் திருவையாற்றில் இரண்டொருநாள் தங்கியிருக்க நேர்ந்தது. அப்போது இவர் அவ்விடத்து ஸம்ஸ்க்ருத கலாசாலையில் சாஸ்த்ரம் பயின்றுவருகிறார். இவருடைய திருத்தகப்பனார் எனக்குப்போலவே ஸ்ரீ காதிஸ்வாமிக்கும் பரமப்ரேமபாத்ரபூதராதலால் அந்தத் தொடர்பை முன்னிட்டு இவர் ஸ்ரீ காதிஸ்வாமி ஸன்னிதியில் ஏகாந்த விருப்பில்வந்து ஆழ்வார் திவ்யஸூக்திப் பெருமை விஷயமாகச் சிறிய தோருபந்யாஸம் செய்தார். அதைத் திருச் செவிசாத்தின ஸ்ரீ காதிஸ்வாமிக்கு உண்டான ஹர்ஷமும் விஸ்மயமும் எல்லைகடந்திருந்தது. இளமையிலிருந்தே இவருடைய யோக்யதை வியக்கத்தக்கதாயிருந்ததென்கைக்காக இதையெழுதினபடி. அன்றியும் என்னுடைய நித்யஸ்மரணத்திலிருந்துவருமிவ்விஷயத்தை எழுதாமலிருப்பதும் ஆத்மவஞ்சனையாகும். இவருடைய உருவப்படத்தை சேகரிக்க முயன்றும் அம்முயற்சி பலிக்கவில்லை. அக்குறை தீரவும் இஃது எழுதலாயிற்று. இத்தகைய மஹாவிவேகியான இவருடைய அப்புத்தகத்தில் தேசிகனுடைய திவ்ய சரித்திரத்தை இவர் தாமேயெழுதியிருந்தால் நிரவத்யமாயிருந்திருக்கும். அதில் ஸந்தேஹமேயில்லை. ஏதோ தாக்ஷிண்யத்திலகப்பட்டு D. R. என்பவரை அஃதெழுதும்படி கோரினார். அவர்தாம் "பூர்வாசாரியர்களை தூஷிப்பது தான் தேசிகபக்தி லக்ஷணம்" என்று உறுதிகொண்டவராதலால் அந்தவுறுதியை உலகமறியுமாறு தேசிக சரித்திரமெழுதிக் கொடுத்தார். அதனை இந்த பரமஸாது வாசித்துப்பாராமலே தன்னுரையோடு சேர்த்து வெளியிட்டதனால் "மதிராபிந்துமிச்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்த ஸலிலம் போலே" என்கிற திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய திருவாக்குக்கு ஸ்மாரகமாய்விட்டது அப்புத்தகம். அதனாலேயே தேசிகப்பிரபந்தவுரையாராய்ச்சியென்னுமிந்த நூல் நமது அம்ருதலஹரீ பத்ரிகையின் மூலமாக வெளியிட நேர்ந்தது. அதில் முன்னுரையிலிருந்து மட்டும் சில வார்த்தைகளை இங்கு எடுத்துக் காட்டுகிறோம். அவற்றால் பலவிஷயங்கள் தெரியவரும்.

"மஹோபகாரகர்களான ஆசாரியர்களின் பெருமையை நன்கு விளக்குவது நன்றியறிவுடைய நல்லன்பர்களின் கடமையே. உபகாரகர்களில் தலைவரான தேசிக ஸார்வபௌமரது பெருமையை எவ்வளவு பகர்ந்தாலும் எத்தனை பக்கங்களெழுதி வெளியிட்டாலும் போராது. அங்ஙனம் எழுதப்படும் பெருமையானது இதர ஆசார்ய தூஷணைக் குற்றம் கலசாமலும் பிராமாணிக வழியைக் கடவாமலுமிருத்தல் வேண்டும். 600-வருஷங்களுக்கு முன்பு வாழ்ந்த மஹானுடைய சரித்திரம் நமக்குப் பரோக்ஷமாதலால் பிராமாணிகமானவொரு முன்னூலைத் தழுவியெழுதியாகவேண்டுமேயல்லாது நம்மனத்தில் தோன்றியவாறு எதையேனுமெழுதி விடுவது விவேகிகளின் பணியன்று. முன்னோர்கள் எழுதாத கதைகளைத் தொடுப்பதும், அவர்கள் எழுதியுள்ளதற்கு மாறுபாடாக வரைவதும் சில பாமரர்களை மயக்குமேயல்லது விவேகிகளை உகப்பிக்கமாட்டாது. இதர ஆசாரியர்களைத் தூஷிப்பதற்கு ஒரு வியாஜமாக தேசிக சரித்திரம் எழுதுகிறோமென்று முன்வருவது உண்மையில் தேசிகனை லாகவப்படுத்தியதாகுமேயொழிய இறையும் பெருமைப் படுத்தியதாகாது. இக்காலத்தில் லௌகிகமறியாத வெறும் வைதிகர்கள் எழுதும் நூல்களை எப்படியெழுதினாலும் ஆங்கிலம் படித்து லௌகிகத் தேர்ச்சி பெற்றவர்கள் எழுதும் நூல்கள் பழிப்புக்கு இடமற்றிருக்க வேண்டுமே; அவற்றிலும் அப்ராமாணிக விஷயங்களும் இதர ஆசார்ய தூஷணைகளும் மலிந்திருந்தால் எவ்வளவு வெறுக்கதக்கதாயிருக்குமென்பதை விவேகிகள் விமர்சிப்பது. இப்போது நாம் ஆராய்ச்சி செய்ய எடுத்துக்கொண்ட தேசிக சரித்திரம் **ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கர் பி.ஏ., பி.எல். அட்வகேட் எழுதியது.**

இவரும் மனத்தை நடுநிலையில் வைக்காது பொய்க்கதைகளையும் பொறாமைப் பேச்சுக்களையும் பொழிந்து எழுதினரென்றால் இவரால் உலகம் என்னவுதவி பெற்றதாகும்? உண்மைக் கதைகளையுணரவிரும்பும் பக்தர்களுக்கு இவர்என்ன வுதவி புரிந்தாராவர்? இப்பெரியார் எழுதியுள்ள தேசிக சரித்திரம் 16-பக்கங்கள் கொண்டது. இதிலுள்ள ஆசார்ய தூஷணைகளை ஈண்டெடுத்துக் காட்டுவோம். (1) "தேசிகனுடைய காலத்தில் ஸ்ரீரங்கத்தில் ஆசார்ய ஸ்தானம் வஹித்திருந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் திவ்ய ப்ரபந்தத்தை மட்டும் அதிகரித்து ஸ்வகோஷ்டியில் உபந்யாஸம் செய்ய வல்லவர்களாகமாத்திர மிருந்தார்களே யன்றி ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களைப் பரிசயம் செய்து பிறமதத்தினரோடு வாதஞ் செய்ய உரியராக இல்லை." [பக்கம் 8.] (2) "தாம் கற்காத ஸ்ரீ பாஷ்யாதிகளை நன்கு கற்றுப் பன்முறை ப்ரவசனஞ் செய்து, தாம் கற்ற பிரபந்தங்களிலும் தம்மிலும் தெளிவான ஞானத்துடன் திகழ்ந்து தம்மிலும் மிகுந்த ஆதரத்தை அப்பிரபந்தங்கள் பால் செலுத்திய தேசிகன் விஷயத்தில், அதற்கு முன் ஸ்ரீரங்கத்தில் ஆசார்யகம் செய்து வந்தவர்களும் அவர்கள் சிஷ்யர்களும் பல்வகையான இடையூறுகளையும் ஹிம்ஸைகளையும் புரியத் தலைப்பட்டனர். அவர்களால் ஸ்வாமியடைந்த கஷ்டங்கள் பல." [பக்கம் 10.] (3) "தேசிகனிடம் பொறாமை கொண்டவருள் ஒருவரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் இவருடன் போட்டியிட்டதின் பலனாக ஸ்வாமியிடமிருந்து ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரமென்ற க்ரந்தம் தோன்றியது." [பக்கம் 11.] (4) "ஆறாயிரப்படிக்குப் பின் தோன்றிய பல வியாக்கியானங்களிலுள்ள தோஷங்களைக் கணிசித்து அவற்றையெல்லாம் களைந்து தேசிகனருளிச் செய்த எழுபத்தினாலாயிரம் கிரந்தங்கள் கொண்ட நிகம பரிமளமென்னும் ஓர் அழகிய வியாக்கியானம் ஸ்வாமியாலே தம் குமாரருக்கு முன்பே காலக்ஷேபமாக ப்ரவசனம் செய்யப்பட்டிருந்தது." ஆக இந்த நான்கு பாராக்களை மாச்சரிய மற்ற விவேகிகள் நோக்கவேண்டும். இந்த நான்கு தூஷணைகளும் பிராமாணிகமான தேசிக சரித்திர நூல்களில் சிறிதும் காணப்படாதவை. எந்த நூலை ஆதாரமாகக் கொண்டு இந்த அட்வகேட் இந்த தூஷணைகளைப் பெய்திருக்கின்றாரோ? மேலே உதாஹரித்த வார்த்தைகள் D. R. எழுதிய தேசிக சரித்திரத்தில் உள்ளவை. இவற்றுக்கு நிச்சேஷமான மறுப்புகள் ப்ராமாணிக பத்ததியில் இவ்வாராய்ச்சி நூலில் காணத்தகும். ஸ்ரீ பாஷ்யத்திலோ பகவத்விஷயத்திலோ ப்ரவேசலேசமாவது இருக்கப்பெற்றவர்கள் இங்ஙனே யெழுதியிருந்தால் ஸஹிக்கலாம். ஒன்றையுமறியாத வொருவர் ஆசாரியர்களின் ஞானத்தையளவிட முன் வந்ததுண்டே, இதுதான் அஸஹ்யாபசாரமென்பது. தேசிகனுக்குண்டான ஸ்ரீ பாஷ்யஜ்ஞானமும் பகவத்விஷயஜ்ஞானமும் பகவத்பக்தியுமெல்லாம் ஆறாயிரப்படிக்குப் பிற்பட்ட ஸதாசார்ய ஸ்ரீஸூக்திரத்னங்களின் ஸேவையையே மூலமாகவுடையவை என்கிற தத்துவம் நவீனர்களின் புத்தியில் எளிதாக ஏற மாட்டாவாகிலும் அடியேனுடைய நூல்களையெல்லாம் ஆழ்ந்து அநுபவிப்பவர்களுக்கு அறிய வெளிதே. இவ்வாராய்ச்சி நூலைப்போன்ற பல நூல்கள் இவருடைய துரபிநிவேசத்தைத் தொலைப்பதற்கென்றே தோன்றியவை. ஸபாபுஜங்கீ ஸர்வஸ்வம் முதலிய நமது வடமொழி நூல்களும் இவருடைய மருளையகற்றவே யாயின. கீழே நெ. 213 புரட்டாசித் திருவோணமலரு மிவருக்காகவே.

421. தேசிக ப்ரபாவ பரிஷ்காரம்: கீழே பல்கால் ப்ரஸ்தாவிக்கப்பட்ட திருவஹீந்திரபுரம் சேட்லூர் நரஸிம்ஹாசாரியர் தாமொரு தேசிக சரித்திரமெழுதி வெளியிட்டார். அதன் முன்னுரையில்-வடகலையார்க்கு குருபரம்பரா ப்ரபாவம் புராதனமாக எதுவும் கிடையாதென்றும், ஆனல் புராதனமாக இருந்ததுண்டு, அது முன்னமே லோபித்து விட்டதென்றும், பிற்காலத்தவர்கள் எழுதிய சரித்திர நூல்களெல்லாம் நிராதாரங்களாய் ஒன்றை யொன்று

க்ருஷ்ணா ஜில்லா குடிவாட ஸமீபத்தில் வாடவல்லி யென்னும் க்ராமத்தில் அடிக்கடி ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ப்ரசாரஸபையை அடியேன் சென்று நடத்துவதுண்டு. அவ்விடத்தில், நிகழும் 1957 மார்ச்சுமாதத்தில் ஸதஸ்ஸு நடந்தபோது இது அந்தரங்க பரிஷத்து.

கண்டிப்பவையா யிருப்பதால் அவிச்வஸநீயங்க ளென்றும் எழுதி முடித்து விட்டு, தாம் பரமப்ராமாணிகமாக தேசிக ப்ரபாவமெழுதுவதாக வரைந்தார். மரத்தின் நுனியிலுட்கார்ந்து கொண்டு அடிமரத்தை வெட்டுகிறவன் கதை யாயன்றோ இஃதுள்ளது. மூலாதாரமே கிடையாதென்றும், ஸூத்ர்யர்கள் எழுதியிருப்பதெல்லாம் நிராதாரமென்றும் எழுதி முடித்தவர் தாம் எந்த ஆதாரத்தைக் கொண்டு இந்த சரித்திரமெழுதுகிறு ரென்பதைக் காட்டித் தீரவேண்டுமே. தம்முடைய உக்திகள் வேதம் போல் ஸ்வதஃ ப்ரமாண யென்று கொள்ளக் கடவதென்றே கருதிவிட்டார். இவ ரெழுதி யிருப்பதெல்லாம் ஆபாத சூடம் அஸம்பத்த மென்பதை நன்கு நிரூபித்துக் காட்டத் தோன்றியது இந்நூல். இவருடைய ஸம்ஸ்க்ருத ஜ்ஞானம் எவ்வளவிற் றென்பதை இந்நூல் பரக்க நிரூபித்திருக்கிறது. அதில் ஒரு விஷயம் மட்டும் இங்கெடுத்துக் காட்டலாகிறது.

தேசிகன் ஸ்தோத்ர பாஷ்ய முடிவில் "அகணி ஸதஸி ஸத்பி: யஸ் ஸமஸ்யா ஸஹஸ்ரீ கவி கதகம்ருகேந்த்ரஸ் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர:" என்றருளிச் செய்துள்ளார். இதில் 'ஸமஸ்யா ஸஹஸ்ரீ' என்பது தனிப்பதம். இது தேசிகனுக்கு அடைமொழி. தம்மை ஸமஸ்யா ஸஹஸ்ரி யென்று ஸத்துக்கள் கொண்டாடினதாக இங்குச் சொல்லப்பட்டதே யொழிய வேறில்லை. சேட்லூரையங்கார் இங்கு "ஸமஸ்யா ஸஹஸ்ரீ கவி கதகம்ருகேந்த்ர:" என்று ஏகபதமாகக் கொண்டு, ஸமஸ்யா ஸஹஸ்ரி யென்று ஒரு க்ரந்தத்தைக் கவி செய்தவரென்று பொருளுரைத்து, தேசிக க்ரந்தங்களைப் பரிகணநம் செய்து வருமடைவில் "ஸமஸ்யா ஸஹஸ்ரீ. இந்த க்ரந்தம் இப்போது லுப்தமென்று மெழுதிவிட்டார். பஞ்சாநாம் வடாநாம் ஸமாஹார:-பஞ்சவடீ; பஞ்சாநாம் ஸஹஸ்ராணும் ஸமாஹார:– பஞ்ச ஸஹஸ்ரீ என்கிறாப்போலே, ஸமஸ்யாநாம் ஸஹஸ்ராணும் ஸமாஹார:—ஸமஸ்யா ஸஹஸ்ரீ என்று ஸமாஸமாகிறதென்று நினைத்து விட்டாரந்தோ. ஸங்க்யாவாசக பதம் முன்னே யிருக்க வேணு மென்கிற நியமத்தை யறிந்திலரந்தோ. நவீனர்களின் வகுப்பில் பெரும்பாலு மிப்படிப்பட்டவர்களே பண்டித பூஷணுதி பிருதாவளீ ஸமலங்க்ருதர்களாய் ஆசார்ய பீட மேறுகிருர்கள். இவ்வழுகுகளை அலசிக் காட்டினுல் 'யுக்த முக்தம்' என்பாருளரோ? சேட்லூரார் இப்படிப்பட்ட பலநூறு விஷயங்களில் அகப்பட்டுக் கொண்டதனுல் தான் வேறு புகலில்லை யென்று துணிந்து க்ஷாமண பத்ரிகை யெழுதிக் கொள்ள முன் வந்தார். அது செ. 403ல் காணத்தக்கது.

422. தேசிக ஸூக்தி ஜயத்வஜமாலா: கீழே பலகால் ப்ரஸ்தாவிக்கப்பட்ட கீழச்சேரி பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியர் தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷிணீ என்கிற பத்ரிகையைப் பிரசுரம் செய்யத் தொடங்கினபோது "காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யருடைய நூல்களைக் கண்டனம் செய்வதற்காகவே இப்பத்ரிகை ஆரம்பிக்கப்படுகிறது" என்று உண்மையை யொளித்திடாமல் விளம்பரம் செய்திருந்தார். அவற்றுக்கு உடனுக்குடனே கண்டனங்களை வெளியிடுவதற்காக "தேசிகஸூக்தி ஜயத்வஜமாலா" என்கிற ஸஞ்சிகை அப்போது நம்மால் மாதந்தோறும் சிலகாலம் வெளியிடப்பட்டு வந்ததென்பதை வித்வான்கள் மறந்திரார்கள். இளமை தொடங்கி அடியேன்பால் அன்பே நிருபகமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத். (திருச்சி) ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியும் அப்போது தைவதுர்விபாகாத் சிறிது வேறுபட்டு அந்த ஸம்ரக்ஷிணீ பத்ரிகைக்கு ஸம்பாதக பதவியை வஹித்து அடியேன் எதிரம்பு கோக்கும்படி நடந்துகொண்டாரென்பதும், பிறகு ஸாமரஸ்யத்தை விரும்பி க்ஷமா பத்ரிகையை அநுக்ரஹித்துப் பழைய ஸௌஹார்தத்தைப் பதின்மடங்கு பெருக்கிக்கொண்டு விளங்குகிறுரென்பதும் ஜகத்ப்ரஸித்தம்.

இங்கே ஒரு சிறுவிஜ்ஞாபனம். கீதாசார்யன் * சதுர்விதா பஜந்தே மாம்* என்று பணித்த கணக்கிலே அடியேன் கண்ட வித்வான்கள் நான்கு வகையாகப் பிரியலுற்றார்கள். அந்த நால்வகையாவன. (1) அடியேனுடைய நூல்களை ப்ராமாணிகங்களென்றும் யுக்தி யுக்தங்களென்றும் கொண்டு வீண்வம்புச் சண்டைக்கு வாராதார் வகுப்பு முதலது. ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்வாமி, திருவிண்ணகர் நவநீதம் ஸ்வாமி போல்வார் பலர் இவ்வகுப்பில் பரிகணிதர்கள். (2) அடியேனுடைய சில நூல்களைக் கண்டு கோபதாபம் மேலிட்டு மறுப்பெழுத வேணுமென்று ஆசை கிளர்ந்தும் அவ்வாசையை வாக்கினால் வெளியிட்டுக் கொள்வதற்கு மேற்பட ஒன்றும் செய்யவில்லாமல் வாளாவிருப்பவர்களின் வகுப்பு இரண்டாவது. (3) மறுப்பெழுத வேணுமென்று கிளர்ந்த ஆசையை எவ்விதத்திலும் அடக்கிக் கொள்ளமாட்டாமல் எழுதித் தீர்த்து * கீலோத்பாடீவ வாநர:* என்ன நிற்பாருடைய வகுப்பு மூன்றாவது. (4) அப்படி மறுப்பெழுதி உடனுக்குடனே நம் மறுப்புநூல்களைப் பெற்று, ஆத்மவஞ்சனை பண்ண முடியாமலும் ப்ராமாணிகத்வத்தைப் பரிபாலிக்க வேண்டியும் எதிரம்பு கோப்பதை விட்டொழித்து விரோத பாவனையை அறவேயகற்றி ஸ்நேஹத்தை விரும்பி க்ஷமைவேண்டுவார் வகுப்பு நான்காவது. இவற்றுள் முதல் வகுப்புக்கு உதாஹரண வ்யக்தி விசேஷங்களைக் காட்டினது போல மற்ற மூன்று வகுப்புக்களுக்கும் காட்டாததேன் ? என்று ஒருவரும் கேட்க முன் வரமாட்டார்.

423. தேசிகஸூக்திபரிமளம் : ஸமஸ்க்ருத நூற்பகுதியில் நெ. 125 ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவவிமர்சமென்னும் நூல்தோன்றுவதற்கு முன்னே நடந்த வாத ப்ரதிவாத நூல்களுள் இதுவொன்று.

424. தேசிகஸூக்திஸித்தாஞ்ஜநம்: கீழ் நெ. 423 நூல்போன்றதே இதுவும்.

425. தேவப்பெருமாள்ஸந்நிதிவிமர்சம்: 1945-ஆம் வருஷத்தில் செட்டிநாடு வாரப் பத்ரிகையில் ராவ்பஹதூர். ப. சம்பந்த முதலியார் B.A.B.L. என்பவர் "சின்னக் காஞ்சிபுரம் வரதராஜஸ்வாமி கோயில்" என்ற தலைப்பின் கீழ் ஒரு வியாஸமெழுதி வெளியிட்டிருந்தார். அதில் ஸ்ரீவரதராஜர் கோவில் நானூறு வருஷங்களுக்கு முன்பு சிவாலயமாக இருந்ததென்றும் பிறகு விஷ்ணு கோயிலாக மாற்றப்பட்டதென்றும் சில சான்றுகளைக்கொண்டு தாம் முடிவு செய்திருப்பதாக அஸம்பத்தோக்திகளை நிரப்பி யெழுதியிருந்தார். அதற்கு இது பரிபூர்ணமான மறுப்பு. மார்க்கபந்து பத்ரிகையிலச்சிடப்பட்டது,

426. நப்பின்னையவதாரரஹஸ்யம் : 1953-ஆம் வருஷத்தில் அடியேனெழுதி தேவநாகாலிபியில் அச்சிட்டு வெளியிட்டதும், ஸர். S. வரதாசார்ய ஸ்வாமியின் தலைமையில் அரங்கேற்றப்பெற்றதுமான திருப்பாவை ஸம்ஸ்கிருத வியாக்கியானத்திற்கு மதிப்புரையாக ஸ்ரீ உவே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமியின் வியாஸம் 14-2-54உ தினமணிச்சுடரில் வெளிவந்தது. அதாவது,

"இந்த ஸம்ஸ்கிருத வியாக்கியானம் முன்னோருரைகளை முற்றுந்தழுவி மிக அழகான ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதிவெளியிடப்பட்டுள்ளது ஸ்ரீப்ரதிவாதி பயங்கரஸ்வாமி உபயவேதாந்தங்களில் மஹாப்ராஜ்ஞரென்பது உலகறிந்ததேயாம். ஸிம்ஹியின் வயிற்றிற் பிறந்த ஸிம்ஹக்குட்டிபோன்று ஸ்ரீஸ்வாமியிடம் பிறந்த இவ்வியாக்கியானமும் வீறுபெற்று விளங்குகின்றதென்னில் இது கேவலம் ஸ்துதியாகாது. ஒவ்வொரு பாட்டிலும் ஸ்வாபதேசார்த்தம் மிக அழகாக நிரூபிக்கப்பட்டுள்ளது இவ்வியாக்கியானத்திற்குத் தனிச்சிறப்பாகும். மேலும், பெரியவாச்சான் பிள்ளை முதலான பூருவாசாரியர்களருளிச் செய்த வியாக்கியானங்களில் காணக்கிடைக்காத சில கற்பனைகளும் ஸ்ரீ அண்ணங்கராசாரிய ஸ்வாமியின் ஸம்ஸ்

க்ருத வியாக்கியானத்திலுள்ளன......அது ரஸிகர்களுக்கு வெகுரஸமானதென்
பது கூறாமலேயே விளங்கும்.”

(என்று எழுதி, இதற்கு மேல்)

“ஆனால், ஸ்ரீராமாநுஜர் தமது சரணாகதி கத்யத்தில் ‘ஸ்ரீவல்லப! ஏவம்பூத பூமிநீலா
நாயக!’ என்று கூறியுள்ளார்; இந்த வாக்கியங்களை உற்று நோக்குங்கால் மஹா
லக்ஷ்மியும் நீளாதேவியும் ஒருவரல்லரென்பது தெரிகிறதன்றோ. இந்த ஸம்ஸ்
க்ருத வியாக்கியானம் *நீளாதுங்கஸ்தநகிரிதட* என்னும் திருப்பாவைத்தனியனில்
அமைந்த நீளாசப்தம் மஹாலக்ஷ்மியின் அவதாரமாக நப்பின்னையைக் குறிப்ப
தாகக் கூறுகின்றது; ‘ஸ்ரீக்ருஷ்ணாவதாரே ஸ்ரீமஹாலக்ஷ்மீ: கோகுலே கும்ப
நாமக கோபாலதல்லஜஸ்ய பவநே நப்பின்னைப் பிராட்டி நாம்நா அவதீர்ய ஸ்திதா’
என்றதைக் காண்க. நப்பின்னை மஹாலக்ஷ்மியினுடைய அவதாரமா? நீளாதேவி
யினுடைய அவதாரமா? என்பது விசாரிக்கத்தக்கது. ஸம்ஸ்க்ருத பாஷா பரிசயம்
பெற்றுள்ளவர்களுக்கு இந்த வியாக்கியானம் மிகவும் பயன்படும்” என்று நிகமித்த
படியால் விசாரிக்க வேண்டிய பொறுப்பை நாமே ஏற்றுக்கொண்டு

व्रजे नन्दसूनोः प्रिया कुम्भकन्या प्रसिद्धैव नीलावतारत्वकीर्त्या ।
रमायाश्च सैषाऽवतारत्व भागित्यसौ वाक् च साधीयसीत्युद्गृणीमः ॥

என்று தொடங்கி இருபது பாராக்களினால் இவ்விஷயத்தில் தெளிவைப்பிறப்பித்து
எழுதப்பட்ட நூலிது. இந்நூலைக் கடாக்ஷித்தருளின அந்த ஸ்வாமி சொல்லி
யனுப்பினதாவது—‘நான் ஏதோ குறை கூறினதாகத் திருவுள்ளத்தில் படக்
கூடாது. மதிப்புரைகளில் ஏகதேசம் இவ்வண்ணமாக எழுதிவைக்கவேணு
மென்று பத்ராதிபர்களின் கட்டளையைப் பரிபாலித்தவத்தனை’ என்று. அதன்
பிறகு நாம் நமது நூல்களைப் பத்திரிகைகளுக்கு அனுப்புவதையே நிறுத்திக்
கொண்டோம்.

427. நமஸ்காரதத்வம்:
428. நமஸ்காரதத்வவிஜயத்வஜம்: } கீழே பலகால் ப்ரஸ்தாவிக்கப்பட்ட சேட்லூர் நர
ஸிம்ஹாசாரியர் *நமோ நமோ வாங்மநஸாதிபூமயே*
என்கிற ஸ்தோத்ரரத்நஸ்ரீ ஸூக்தியை விவரிக்கும் வியாஜத்தினால் ஸக்ருத்
ப்ரணாம ஸம்ப்ரதாயத்தை தூஷிக்க, தேசிக திவ்யஸூக்திகளினால் ஸக்ருத்
ப்ரணாம ஸம்ப்ரதாயமே ஸம்ப்ரதிபந்நமானதென்று விபுலநிரூபணம் செய்
தது நமஸ்கார தத்வமென்கிற நூல். ஸ்ரீரங்க தேவஸ்தானத்து அர்ச்சக
நமஸ்கார வ்யவஹாரத்தில் இந்நூல் தாக்கல் செய்யப்பட்டு ஸக்ருத் ப்ரணா
மமே ஸாதுவென்று முடிவு செய்யப்பட்டது. அதன் மேல் புத்தங்கோட்
டம் ஸ்ரீநிவாஸாசாரியர் மறுப்பெழுத, அதற்கு மறுப்பாகத் தோன்றினது
நமஸ்காரதத்வவிஜயத்வஜம்.

429. நற்பொருள்விளக்கம்: கீழ் நெ. 420 ஆராய்ச்சிநூலின்மேல் மதுரை நாராயணை
யங்காரென்பவர் எழுதிய பதிலுக்கு விடையளிப்பு.

430. நான்கண்டநல்லது: திவ்யப்பிரபந்த வியாக்கியானப் பேராசிரியர்களான
நம் பூர்வாசாரியர்களைத் தமிழறியாதவர்களென்று நிந்தித்தும், அவர்களது
ஸ்ரீஸூக்தி நடையைப் பரிஹஸித்தும், மூல பாடங்களை யதேஷ்டமாகத்
திருத்தியும் ஒரு அவ்யபதேச்யன் வெளியிட்டதற்கு மறுப்பு. இந்நூலின்
முன்னுரையில், இத் தன் சரிதையில் பக்கம் 222-ல் விளங்குகின்ற ஸ்ரீமத்
மகாமகோபாத்யாய. தாக்ஷிணாத்ய கலா நிதி. டாக்டர். உ. வே. சாமி
நாதையரவர்கள் 1939-ஆம் வருடத்தில் எழுதி அச்சிட்டு வெளியிட்ட நல்

லுரைக் கோவை நாலாம் பாகத்தில், வித்துவான் தியாகராச செட்டியார் அவர்களின் சரிதை யெழுதிவருகையில் அதில் 159-ஆம் பக்கத்தில் ஆரம்பமாகி 163-ஆம் பக்கத்தில் முடிகின்ற ஓர் பகுதி எடுத்து வெளியிடப்பட்டிருக்கின்றது. அதைமட்டும் இங்கு அநுவதிக்கிறேன்.

"பிறருடைய குறையைக் கண்டவிடத்துக் கண்டிக்கும் இயல்புடைய தியாகராச செட்டியார் தம்முடைய நிலையை நன்றாக உணர்ந்திருந்தார். தம்முடைய அளவுக்கு மிஞ்சிய காரியத்தைப் பிறர் வற்புறுத்தினாலும் செய்யார்; இது சிலரிடத்தில் மாத்திரம் காணப்படும் அருமையான குணம். திருச்சிராப்பள்ளியிலும் வேறு இடங்களிலும் சிரஸ்தேதாராகவும் டிப்டி கலெக்டராகவும் இருந்து விளங்கிய திரு. பட்டாபிராம் பிள்ளை யென்பவர் தமிழபிமானம் மிக்கவர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் பாதுகாக்கும் இயல்பினர்; மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை நன்கு அறிந்தவர்; ஸ்ரீ தியாகராச செட்டியாரிடத்தில் மிக்க அன்பு பூண்டவர்; அறிவாளிகள் நிலையான காரியங்கள் செய்ய வேண்டுமென்பது அவருடைய விருப்பம். திவ்யப் பிரபந்தங்களுக்குப் பெரியோர்களால் வடமொழி தென்மொழியிற் செய்யப்பெற்ற வியாக்கியானங்கள் இருப்பது போலத் தேவார திருவாசகங்களுக்கு இல்லையே யென்ற வருத்தம் அவருக்கு உண்டு. அதனால் சைவமடாதிபதிகளையும் சைவ வித்துவான்களையும் சந்திக்கும் பொழுதெல்லாம் திருமுறைகளுக்கு ஓர் உரை எழுதும்படி வற்புறுத்திக் கூறுவார். கேட்பவரிற் பெரும்பாலோர் இயன்றவரையில் உழைத்துப் பார்ப்போமென்றே விடை பகர்ந்து வந்தார்கள்.

தியாகராச செட்டியார் உபகாரச் சம்பளம் பெற்றுத் திருவானைக்காவில் சில ஆண்டுகள் இருந்த போது பட்டாபிராம் பிள்ளை அவர் வீட்டிற்கு அடிக்கடி சென்று பார்த்து வருவார். அப்போது அவரைத் திருவாசகத்திற்கு உரை எழுத வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுவார். அன்றியும் அங்கங்கே நிகழும் கலியாணங்களை விசாரிக்கப் போன காலங்களிலும் மற்ற இடங்களுக்குச் சென்றிருந்த காலங்களிலும் அவரைச் சந்தித்தபோதெல்லாம் மேலும் மேலும் கூறுவார்; "எழுத ஆரம்பித்தீர்களா? எவ்வளவு ஆயிற்று" என்று கேட்பார்; அருகிலுள்ள கனவான்களிடம், "இவரிடம் எவ்வளவு நாளாகச் சொல்லி வருகிறேன்; கேட்க மாட்டேனென்கிறாரே!" என்று சொல்லுவார். ஒரு நாள் செட்டியார் திருச்சிராப்பள்ளியிலுள்ள உறவினரொருவர் வீட்டில் நிகழ்ந்த ஒரு துக்கத்துக்காக அங்கே சென்று விசாரித்து நீராடிவிட்டு ஈரத்துணியோடு மீண்டு காவிரி யாற்றுப் பாலத்தின் மேல் நடந்து வந்தார். அப்பொழுது நடுப்பகல் பன்னிரண்டு மணி நேரம். செட்டியார் வெயிலாலும் பசியாலும் மிகவும் களைப்படைந்திருந்தார். அச்சமயம் பட்டாபிராம் பிள்ளை ஸ்ரீரங்கம் சென்று பெருமாளைத் தரிசனம் செய்துவிட்டு மார்பிற் சந்தனம் விளங்க உத்ஸாகமாக எதிரே ஒரு வண்டியில் வந்தார். செட்டியாரைக் கண்டவுடன் அவர் வண்டியை நிறுத்திக் கீழே இறங்கினார்; செட்டியாரை யணுகி க்ஷேம சமாசாரம் விசாரித்த பின்பு வழக்கம் போலவே 'திருவாசகவுரை எவ்வளவாயிற்' றென்று கேட்டார். நீண்டநாளாக இந்த விஷயத்தைப்பற்றி எவ்விடத்திலும் கேட்டு வந்ததனாலும் அப்பொழுது தமக்கு இருந்த தளர்ச்சியினாலும் செட்டியாருக்குக் கோபம் உண்டாயிற்று; "நீங்கள் கொஞ்சமாவது திருவாசகத்தின் பெருமையை அறிந்து கொள்ளவேயில்லை யென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். அதற்கு என்னால் உரை எழுத முடியுமா? திருவாசகம் எவ்வளவு! என்னுடைய படிப்பு எவ்வளவு! அதற்கு உரையெழுத வேண்டுமென்றால் வேதம், உபநிஷதம், ஆகமங்கள், புராணங்கள், யோக சாஸ்திரங்கள் முதலியவை தெரிய வேண்டாமா? தமிழில் உள்ள இலக்கண இலக்கியங்களையும் சில சைவ சித்தாந்த சாஸ்திரங்களையுமே படித்தநான் எப்படி எழுத முடியும்?" என்றார்.

அதற்குப் பட்டாபிராமபிள்ளை :—" திவ்யப் பிரபந்தத்திற்கு அவர்கள் வியாக்கியானம் செய்யவில்லையா?" என்று கேட்க, அதற்குச் செட்டியார் "என்ன ஐயா! உங்களுக்கு அவர்களுடைய படிப்பின் அளவு சிறிதேனும் தெரியாது போல் இருக்கிறது ; அவர்கள் வடமொழி தென்மொழி இரண்டிலும் சிறந்த புலமையுடையவர்கள்; அவர்களது உரையினலல்லவா நூலின் பெருமை அதிகமாகின்றது? நான் உரை எழுதினல் திருவாசகத்திற்கு எவ்வளவு குறைவு உண்டாகும் தெரியுமா? என்னுடைய உரையினல் அதற்குக் குறைவு ஏற்பட வேண்டுமென்பது தங்கள் எண்ணமோ? எங்கே கண்டாலும் நச்சு நச்சென்று என் படிப்பின் அளவு தெரியாமல் திருவாசகத்திற்கு உரையெழுதும்படி சொல்லிச் சொல்லி என்னை வருத்துகின்றீர்கள். இனி மேலும் இப்படித் தொந்தரவு செய்வதாயிருந்தால், இதோ இந்தக் காவிரியில் இப்படியே பொத்தென்று விழுந்து என் உயிரை விட்டு விடுவேன். பட்டாபிராம பிள்ளையவர்கள் திருவாசகத்திற்கு உரையெழுதும்படி அடிக்கடி தொந்தரவு செய்ததனல் அந்தத் துன்பத்தைத் தாங்கமாட்டாமல் தியாகராச செட்டியார் ஆற்றில் விழுந்துவிட்டாரென்ற அபக்கியாதி உங்களுக்கு ஏற்படட்டும்" என்றார். பட்டாபிராம பிள்ளை உடனே செட்டியாருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, "ஐயா! ஐயா! வேண்டாமையா! இனிமேல் நான் இதைப்பற்றிக் கேட்பதே இல்லை ஐயா!" என்று சொல்லிச் சமாதானப்படுத்திவிட்டு அவருடைய அயர்ச்சியான நிலையை அறிந்து தம் வண்டியில் ஏற்றித் திருவானைக்காவிலுள்ள அவரிருப்பிடத்தில் அவரை விட்டுவிட்டுத்திரிசிரபுரத்திலிருந்த தம்மிடம் சென்றார்.'

431. ந்ருஸிம்ஹப்ரியா நிரீக்ஷணம் :
432. ந்ருஸிம்ஹப்ரியா ஸமீக்ஷா :
} கீழ் கெ. 398 நூலுக்கும் கெ. 408 நூலுக்கும் சேஷ பூதங்களிவையிரண்டும்.

433. பகவச் சாஸ்த்ரதத்வம் : கீழ் கெ. 418. நூலின் ப்ரமேயமே இதற்கும்.

434. பக்தன் மூவிதழாராய்ச்சி : திருவல்லிக்கேணியிலிருந்து வெளிவரும் பக்த னென்னும் மாதப் பத்ரிகையின் ஜயஹு ஆடி ஆவணி புரட்டாசி ஆகிய மூன்று மாத ஸஞ்சிகைகளை யாராய்வதென்று பொருள். கப்யாஸச்ருதி விசாரபரமான இச்சிறு நூல் நேராக அநுபவிக்கத் தக்கது.

435. பரதுக்கதுத்கித்வ பரமார்த்தரக்ஷா : ஸஹஸ்ர நாமத்தில் 'விகர்த்தா' என்கிற திருநாமத்திற்கு பாஷ்யம் செய்தருளின பட்டர் "அந்யதா பரதுக்கது:க்கித்வாதயோ குணா: கதமஸ்ய ஸ்யு: ?" என்றருளிய ஸ்ரீஸூக்தியின் உண்மைப் பொருளை மிக விரிவாக நிரூபிக்கும் நூலிது.

436. பாதுகா ஸஹஸ்ர வுரையாராய்ச்சி : D. T. தாதாசார்யரா லெழுதப்பட்ட தென்று சென்ற வருஷத்தில் வெளிவரத் தொடங்கிய பாதுகா ஸஹஸ்ரவுரையிலுள்ள பலவகை அவத்யங்களை ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமாக விவரித்தது.

437. பாத்ரதத்வவிஜயத்வஜம் :
438. பாத்ரதத்வ பரமார்த்தம் :
} இவை யிரண்டும் ராமாநுஜ தயாபாத்ரத் தனியனின் நவீநத்வத்தை நன்கு ஸ்தாபித்தவை. நேரில்காண்க.

439. பிழைதிருத்தப் பேரின்பம் : அஸ்மத் குலகூடஸ்தருடைய வைபவத்தைப் பற்றின ஆந்தராளிக விவாதத்தை நிரஸிக்கத்தோன்றின நூல்களுள் இதுவொன்று.

440. பெரியாழ்வார் திருமகள் : உலகப் பிரஸித்தரான C. R. அவர்கள் (ராஜாஜீ) த்ரிவேணி யென்னும் ஆங்கில பத்ரிகையில்-ஆண்டாளென்று ஒரு வ்யக்தி தனிப்பட கிடையாதென்றும், திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும்

பெரியாழ்வார் தாமே தம்மைப் பெண்பிள்ளையாகப் பாவனை செய்து எழுதியவை யென்றும் நூதனமான வொரு கொள்கையைப் பிரசுரம் செய்ததற்கு ப்ரமாண யுக்தி புஷ்கலமான நிரஸனம். இது ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்டது. இதை ராஜாஜீ அவர்கள் வாசித்துப் பார்த்து உகப்பைத் தெரிவித்தார்கள்.

441. பேரருளாளன் பாடல் விளக்கம்: தேவப் பெருமாளுக்கு ஆழ்வார் பாடல் கிடையாதென்றும், மதுராந்தகம் போலே காஞ்சியும் ஆசார்யாபிமானம் பெற்ற ஸ்தலமே யொழிய திவ்ய தேசமன்றென்றும் சேட்லூர் நரஸிம்ஹாசாரியர் எழுதியிருந்ததற்கு ப்ரத்யக்ஷர கண்டனம். இதன் முடிவில் பெரிய ச்லோக மொன்று; அதன் நான்காவது பாதம்-* காஞ்சீம் வீக்ஷ்ய ஹநா நிஜே பள பளாத்காராஞ்சனைஸ் ஸமஸ்க்ரியாத் * என்பது. சேட்லூரார் இந்நூலுக்கு விடையிறுக்க சக்தராகில் எழுதட்டும்; இல்லையேல் காஞ்சீபுரியைத் திசை நோக்கித் தொழுது தம் தவடையில் பளபள பளவென்று அறைந்து கொள்ளட்டும் என்பது அந்த ச்லோகத்தின் கருத்து. அநுஷ்டானத்தில் அதுவே பலித்தது.

442. ப்ரணவாதிகார தத்வம்: ஸப்ரணவாஷ்டா க்ஷரம் ஸர்வாதிகாரமன்றென்றும், ஸ்த்ரீ சூத்ரர்கள் விலக்ஷணர்களா யிருந்தாலும் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டுமென்றும் பிறர் எழுதி யிருந்ததற்கு நூறு பாராக்களினால் மறுப்பு. ஸ்ரீ ரங்கத்தில் வாழ்ந்த ஸ்ரீ உவே. திருக்கோட்டியூர் ஸ்ரீராம தேசிகாசார்ய ரென்கிற பண்டிதர் இதன்மேல் மறுப்பெழுதி வெளியிட்டிருந்தார். அப்போது ஸ்ரீ ரங்கத்தில் வாழ்ந்து வந்த ஸ்ரீ உவே. திருமணி அப்பன் ஸ்வாமி "இந்த மறுப்பு நூலுக்குக் கண்டனம் நானே யெழுதிக் கொண்டிருக்கிறேன்; இதில் தேவரீர் அந்வயிக்க வேண்டாம்" என்று அடியேனுக்குத் தெரிவித்துத் தாமே சிறந்த கண்டன மெழுதி வெளியிட்டார். அதன்மேல் ஒரு மறுப்பு வெளிவந்தது; அதற்கும் அந்த ஸ்வாமியே ப்ரதித்வநி கிளம்பாதபடி மறுப்பெழுதி முடித்தார்.

443. ப்ரமாணத் திரட்டாராய்ச்சி: திருக்குடந்தையில் வாழ்ந்த ஸ்ரீ V. K. ராமாநுஜாசாரியா ரென்கிற பெரியார் "ரஹஸ்யத்ரய ஸாரப்ரமாணத் திரட்டு" என்று ஒரு நூலெழுதி வெளியிட்டார். அது மருளே வடிவெடுத்ததா யிருந்தபடியால் உலகம் ஏமாற்ற மடையாமைக்காகத் திருத்தங்கள் செய்தது இது. இதைப் பற்றி ஸ்ரீமத் A. V. கோபாலாசார்ய ஸ்வாமி ஸம்ரக்ஷிணீ பத்ரிகையில் எழுதும் போது "இரண்டு கண்களும் அடியோடு தெரியாதவவர் ஏதோ எழுதினர்; அதைப் பொருள்படுத்தி யிருக்கவேண்டாம்" என்றுவரைந்தார்.

444. மடவித்வத் விபூஷணம்: அஹோ பிலமடத்து விவாத நூல்களி லொன்று.

445. மாமுனிவனருள் விளக்கு: இது நேரில் அநுபவிக்கத் தக்கது.

446. யுஷ்மத்ஸூக்திஸௌரபம்: யதிராஜ விம்சதிப்ரயோக தூஷண நிரஸநம்.

447 ரக்ஷாவிமர்ச சிக்ஷா: கீழே ஸம்ஸ்க்ருத நூற்பகுதியில் நெ. 34 மேலே நெ. 457 உள்ள நமது ஸதாசார்ய ஸூக்திரக்ஷா என்னும் நூலின் மீது தோன்றின பதிலுக்கு மறுப்பு.

448. ராமாநுஜதயாபாத்ரபத்ய சரித்ரம்: கீழே ஸம்ஸ்க்ருத நூற்பகுதியில் நெ. 130 நூலுக்கு நேரான மொழி பெயர்ப்பு.

449. ராமாநுஜதயாபாத்ரதத்வம்: இந்த நவீனத் தனியன் விஷயமாக நாம் எழுதியுள்ள நூல்களில் இதுவே முற்பட்டது. இதையும் இதற்கு அநுபந்தியான நூல்களையும் வாசிப்பவர்கள் ராமாநுஜதயாபாத்ரத்தனியன் நவீன காலத்தில் போட்டியாகக் கல்பிக்கப்பட்டதே யென்பதை நிஸ்ஸந்தேஹமாக வுணர்ந்தும், இரண்டு நூற்றாண்டாக ப்ரபலமான போராட்டம் லக்ஷக் கணக்கான பணச் செலவுடன் பார்லிமெண்டு வரையிலுங்கூட நடந்துவிட்டபடியால் ப்ராமாணிகர்களுங்கூட உண்மை நெறியைக் கடைப்பிடிக்க முடியாமலிருக்கின்றது. இது ஸர்வஜநஹ்ருதயஸாக்ஷிகம்.

450. வம்பவிழ்கோதை தத்துவம்: கீழ் வடநூற் பகுதியில் நெ. 126 'கோதார்த்தோக்ஷாவமர்த:' என்னும் நூலின் விவரணம் காண்க.

451. வரதன் ஸன்னிதி வரலாறு: தேவப்பெருமாள் ஸன்னிதியின் வரலாற்றை மிகவும் பொய்யான முறையில் D. ராமஸ்வாமி ஐயங்கார் B.A.B.L. எழுதி வெளியிட்ட (வரலாறு) அபத்தக் களஞ்சியத்திலுள்ள பொய்க் கதைகளை ஒவ்வொன்றையும் ப்ரமாண பூர்வகமாகக் கண்டித்து உண்மையான வரலாறுகளை விளக்கி யெழுதப்பட்ட நூலிது. பொய்க் கதைகள் மலிந்த அவருடைய புத்தகத்தையும் இவ்வரலாற்றையும் சேர்த்து வாசிப்பவர்கள் "மனச் சாட்சியை மீறி அபிநிவேச வசத்தாலோ துராக்ரஹத்தினாலோ பாமர ப்ரதாரணமாகப் பொய்க் கதைகளையெழுதின அவர் அநுதாபம் காட்டாமல் எப்படி யிருக்கிறார்?" என்று வியந்து கேட்பார் பலருளர். 'அவ்வளவு ப்ராமாணிகத்வம் எளிதிலுண்டாய் விடுமோ?' என்று அவரவர்களே ஸமாதான மடைந்திடுவர்கள். பதினாறு அத்யாயங்கள் கொண்ட நமது வரதன் ஸன்னிதி வரலாற்றில் இந்த தேவஸ்தானத்தின் சரித்திரம் பூர்த்தியாக ரிகார்டுகளை முன்னிட்டு மூதலிக்கப்பட்டுள்ளது. ப்ராஸங்கிகமாய்ப் பொதுவாகப் பல தத்துவங்களும் இதில் விவரிக்கப்பட்டிருப்பது மத்யஸ்தமநீஷிகளால் அவசியம் நோக்கத்தக்கது. ஸ்ரீமான் D. ராமஸ்வாமி ஐயங்காரிடத்தில் மிகச் சிறந்த வொரு ஸ்வபாவமுண்டு; அதை நாம் அபலாபம் செய்யாமல் அக மகிழ்ச்சியுடன் வெளியிடக் கடமைப் பட்டிருக்கிறோம். (அதாவது) ஏதோ காரண வசாத் தாம் அபத்தமாகவும் அஸம்பத்தமாகவும் பல எழுதி விட்டாலும் உடனே நம்முடைய மறுப்புரைகளினால் தெளிவு பெற்று எதிரம்பு கோக்காமலிருந்திடுவர். மற்றவர்களைப்போல் எதையாவது எழுதி * நிந்தாபிச்சேஷ பூரணம் செய்யும் வழியைக் கனவிலு மறியார். பிறர் யாரேனும் பதிலெழுதப் புறப்பட்டாலும் * அப்ரமேயம் ஹி தத்தேஜ: * என்று உபதேசித்த மாரீசனைப் போலே பலவுமுபதேசித்து * ஸ்வஹஸ்தே நோத்க்ஷிப்தை ரித்யாதி யதிராஜஸப்ததி ஸூக்தியையும் ஸ்மரிப்பித்து விலக்குவர். இஃதொன்று இந்த மஹாண்டத்தில் நாம் கண்ட மிகச் சிறந்த நலம். இத் தன் சரிதையில் கீழே பக்கம் 66 முதல் ஐந்து பக்கங்களை ரஸிகர்கள் மீண்டும் வாசித்துப் பார்க்க வேணும். அதில் பக்கம் 68ல் இந்த D. R. ஐயங்காருடைய அந்தரங்க ஸாக்ஷிகமான பத்ரிகையும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அடியேனைப் பற்றிப் பல விஷயங்கள் எழுதிவிட்டு முடிவில் எழுதுகிறார்—"இவ்வளவு சக்தி வாய்ந்த ஒரு மஹா புருஷர் விஷயத்தில் அசூயையையும் பொறாமையையும் எத்திக்கிலிருந்தும் எதிர் பார்க்கலாம்; ஆனால் எவ்வித வாதப்போரிலும் ஸ்வாமி பின்வாங்கவே மாட்டார்; இவருடைய வாதமே கடைசியாக ஓங்கி நிற்கும். இந்த ரீதியில் அனேகம் உள்ளன. விஷயங்களைத் தேங்கா யுடைப்பதுபோல் வெட்டொன்று துண்டிரண்டென்று உடைத்துக் காட்டுவர். இவை ஒரு பக்கம் கிடக்கட்டும்; ஸ்ரீவைஷ்ணவத்திற்காக இவர் செய்திருக்கும் செய்து கொண்டிருக்கும் பணி கணக்கிட முடியாதது." என்று. இங்ஙனே ஸ்ரீமத் ஸர். எஸ். வரதா சாரியர்

ஸ்வாமி போல்வாரான ஏழெட்டு மஹான்களும் எழுதியிருந்தாலும், விவாத நூல்களுக்கு இலக்கியமாகாத அவர்கள் எழுதியிருப்பதில் அதிசயமில்லை. விவாத விஷயங்களில் தலையிட்டு, ஒவ்வொன்றிலும் நாம் தவருக எழுதி விட்டோமென்று அநுதபிக்கும்படியான ஸந்தர்ப்பத்தை அடியேனது நூல்களினுல் அடைந்து நிற்குமவர் ஆத்ம வஞ்சனையில்லாமல் எழுதினதன்றோ அதிசயம். D. T. தாதாசார்யரும் பிறருடைய போதனைக் கிணங்கி மாச்சரியம் கொள்வதற்கு முன்னே உத்யாக பத்ரிகையில் நம்முடைய நூல்களைப்பற்றி யெழுதியுள்ள ப்ரசஸ்திகள் அச்சேறி விட்டபடியால் மாறமாட்டாமலுள்ளன.

452. விதவாவபந வித்வம்ஸநம்: திருக்குடந்தையில் வாழ்ந்த ஸ்ரீமத் அக்நி ஹோத்ரம் கோபால தேசிகாசார்யரென்கிற ஸஹ்ருதய ஸஹ்ருந்மணி நாற்பது வருஷங்களுக்கு முன் "விதவாச் சவபநஞ்ச" என்றொரு ஸம்ஸ்க்ருத வியாஸமெழுதி மஞ்ஜுபாஷிணியில் வெளியிடுவிக்க வேணுமென்று அடியேனுக் கனுப்பினுர். அதை அப்படியே அதில் பிரசுரஞ்செய்து, அதற்கு மறுப் பெழுதி அதையும் அதிலேயே (நாலைந்து இதழ்களில்) க்ரமச: பிரசுரித்தேன். உபய ஸம்பிரதாயத்தையும் பூஷித்தே அடியேன் எழுதி யிருந்தபடியால் அவர் மிகவுகந்துபதில் திருமுகமருளினுர். விதவாவபந வித்வம்ஸநமென்கிற இந்நூலும் அதே ப்ரணளியில்தான் தமிழில் தோன்றியுள்ளது.

இந்த நூல் எதற்காகத் தோன்றியது? இதில் எவ்விதமான முடிவு உள்ளது? என்பதை அடியோடு பாராமலே நூலின் பெயரை மாத்திரமே கண்டோ கேட்டோ சில பாமரர்கள் பழிப்பதுண்டு. விஷயம் தெரிவிக்கிறே மிங்கு. மாயவரம் நடேச சாஸ்திரிகளென்பவர் வபனம் செய்துகொள்ளாத விதவைகள் வாழும் ஸம்பிரதாயத்தை இழித்துரைத்து வேதாந்ததீபிகையில் ஒரு வியாஸம் வெளியிட்டிருந்தார். பிரமாணங்களைப்பராமர்சியாமல்வீணை ஆக்ரஹங்கொண்டு அநாதி ஸம்பிரதாயத்தை நிந்திப்பது முறையன்று என்றுமுகவுரையில் விளக்கி உபயஸம்பிரதாயங்களுக்கு முரிய பிரமாணங்களை விவரித்தே இந்த நூல் இயற்றப்பட்டது. இதில் முடிவுகட்டிய விஷயம் என்ன என்பதையும் எடுத்துக் காட்டுவோம். உபஸம்ஹாரத்தில் (பக்கம் 33-ல்) "விதவைகளுக்கு முண்டனம் செய்கையும் செய்யாமையுமாகிய இவ்விரு வகை யனுஷ்டானங்களும் சிஷ்ட சிரேஷ்டர்களின் பரம்பரைகளிலே நெடுநாளாகவே நிகழ்ந்துவரக் காணுநின்றோம். இவ்வநுஷ்டானங்களைப் பரஸ்பரம் நிர்மூலமென்று தூஷிக்க வொண்ணுதபடி சாஸ்திரங்களிலே விதி நிஷேதங்களும் விளங்கக் காணு நின்றோம். இவை...அதிகாரி பேதத்தையிட்டு உபபந்நங்களாகக் கூடியவை. ஆனபின்பு அவரவர்கள் பரஸ்பரம் இகழ்ச்சியின்றியே யிருக்க ப்ராப்தம்." என்று மதுரமாக முடிவுகட்டியிருக்கிறது. நமஸ்காரதத்வம் முதலிய மற்றஎந்நூலை யெடுத்துக் கொண்டாலும் இவ்வகையான நிகமனமே நாம் செய்திருப்பது காணப்படும். முதன் முதலாகப் பிறர் தூஷணைகளெழுதுவதும் அதன்மேல் நாம் ஆராய்ச்சி செய்து ஒழுங்குபடுத்துவதுமாக இப்படிப்பட்ட முறைதான் அன்று தொட்டு இன்றுகாறும் நிகழ்ந்து வருகின்றது. எமது உடலை ஒருவர் தூஷித்தால் அதை நாம் சிறிதும் பொருள்படுத்தமாட்டோம். நாம் உயிராகக் கொண்டிருக்கிற ஸம்பிரதாயத்தைச் சிலர் தூஷித்தாலும், ஸம்பிரதாய விருத்தமாக எவரேனும் ஏதேனும் எழுதினுலும் வாளாவிருக்ககில்லோம். உண்மையில் நமக்குள்ள ஸதாசார்ய பக்தியையும் யதார்த்த க்ராஹித்வத்தையும் ப்ராமாணிகார்த்த விசேஷங்களில் அசஞ்சலமான ப்ரதிபத்தியையும் கண்டு நல்லார் உகக்கின்றனர். இந்த விதவாவபன நூல் தோன்றி இன்றைக்கு 23-வருடங்கள் ஆனுலும் புத்தகம் துர்ப்பிக்ஷமில்லாமல் கிடைக்கிறது. அதில் 1. 2. 3. என்று வரிசையாக லக்க

மிட்டு 50 விஷயங்களெழுதப்பட்டுள்ளன. இதன்மேல் இன்றுவரை ஒருவராவது ஒரு பதிலாவது எழுதினதில்லை. உபயஸம்பிரதாயத்திற்குமுரிய சாஸ்திரங்கள் இருக்கின்றன வென்றும், இருவகுப்பிலும் அநாதியாக வரு மனுட்டானங்களைப் பரஸ்பரம் இகழ்ந்துகொண்டு அழிந்துபோக வேண்டா வென்றும் நாம் நிகமனம் செய்திருக்கையாலே பிராமாணிகர்கள் இதில் உகப்புக் கொள்ள இடமுளதேயன்றி வெறுப்புக்கொள்ள ஈஷத்துமிட மில்லாமை பற்றியே இந்நூலையும் இதுபோன்ற பல நூல்களையும் சிறந்த ஞானிகள் மத்யஸ்த புத்தியுடன் கொண்டாடியிருக்கிறார்கள்.

453. வித்வத்விநோதிநீ: கீழே பக்கம் 281-ல் இதைப்பற்றி விவரித்திருப்பது காண்க.

454. வ்யாமோஹப்ரசமௌஷதம்:
455. வாத்ஸல்யார்த்தவிவரணம்:
456. வாத்ஸல்யார்த்தவிஜயத்வஜம்:
இம்மூன்று நூல்களும், இடைக்காலத்தில் வேறுபட்டிருந்த ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணியான ஸ்ரீமத். ஏ. வி. கோபாலாசார்யஸ்வாமியின் வியாஸங்களுக்கு மறுப்பாக எழுதப்பட்டு வெளிவந்தவை. பரமப்ராமாணிகரான அவருடைய க்ஷாமணபத்ரிகையோடு விச்ராந்தியாகி, புராதந ப்ரேமாபிவிருத்தியுமாயிற்று. ஜ்ஞானம் சீலம் வயது முதலிய எல்லாவற்றாலும் மூதுவராக விளங்கிக் கொண்டிருக்கின்ற அந்த மஹாஸ்வாமி அடியேனுக்கு க்ஷாமணபத்ரிகை யெழுதிக்கொண்டாரென்று நீசனேன்கையாலெழுதுவது ஸ்வரூபமன்று. இதற்தகாக அடியேன் க்ஷமை வேண்டுகிறேன். கீழே பக்கம் 224 முதல் 230 முடியுமளவும் அடியேனெழுதியுள்ளவற்றை மீண்டுமொருமுறை வாசிப்பது.

457. விஷ்ணுகோவில்களும்விசேஷநர்மபரிபாலனமும்: இந்நூல் நேராக வாசிக்கவுரியது.

458. ஸதாசார்யஸூக்திரக்ஷா: கீழே ஸம்ஸ்க்ருத நூற்பகுதியில் (பக்கம் 306-ல்) நெ. 34 காண்க. த்வயார்த்த விவரணத்தில் ஆச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தியைப் பற்றின ப்ரபலவிவாதத்தில் ஸ்ரீமத் பரமஹம்ஸ. கோழியாலம் ஸ்வாமியினுடையவும் தச்சிஷ்யர்களினுடையவும் வாதங்களுக்கு மிகவிரிவான விடையளிப்பு.

459. ஸத்புருஷஸமாராதனம்: அஹோபில மடத்துச் சார்பில் D. T. தாதாசார்யரால் வெளியிடப்பட்ட 'ஸஜ்ஜநாராதநம்' என்னும் சுவடிக்கு மிகவும் விபுலமான மறுப்பு இது. நமது சாஸ்த்ரார்த்த சந்த்ரிகையில் வெளிவந்த இந்நூலைக் கண்ட பின்பே மடத்து போக்தாக்கள் விதீதர்களாயினர் என்பது இங்கு அறிவிக்கத்தக்கது. இந்நூலில் அபூர்வ விஷயங்கள் அனந்தங்கள்.

460. ஸத்ஸம்ப்ரதாயபரித்ராணம்: கீழ் நெ. 420 தேசிகப்ரபந்தவுரை யாராய்ச்சியின் மீது திருப்பாப்புலியூர் சடகோபாசாரியரெழுதிய பதிலுக்குப் பரிபூர்ணமான மறுப்பு. இதில் பன்னிரண்டு விஷயங்கள் அலசியலசிப் பரிஷ்கரிக்கப் பட்டுள்ளன.

461. ஸத்ஸம்ப்ரதாயபரிசுத்தி: தேசிகரஹஸ்யங்களுள் முதலது ஸம்ப்ரதாய பரிசுத்தி யென்பது. அய்யாக்ருஷ்ண தாதாசார்யர் இதற்கு வியாக்கியானமெழுதுவதாக வொரு வியாஜங்கொண்டு ஸதாசார்ய ஸதர்த்த தூஷணங்களை நிரப்பி தத்தகபித்தகவென்றெழுதிவந்ததை வேதாந்த தீபிகாபத்ரிகை வெளியிட்டுவந்தது. அதற்கு ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ பத்ரிகை மூலமாய் உடனுக்குடனே வெளியிட்டு வந்த கண்டனம் தனிப்புத்தகமாக் கப்பட்டது. அதுதானிது. தேசிகனுடைய அந்தரங்கத்தை உள்ளபடி விளக்குவது.

462. ஸத்ஸம்ப்ரதாயபாஸ்கரன் : கீழே ஸம்ஸ்க்ருத நூற்பகுதியில் நெ. 132. விவரணம் காண்க. நவீநபாத்ரத் தளியலைப்பற்றித் தெரிவிக்க வேண்டிய உண்மைகளெல்லாம் இதில் மிகத்தெளிவாகவும் விரிவாகவுமுள்ளன. ஒவ்வொரு விஷயத்திலும் 'வாய்திறக்கவுண்டோ வழி' என்னும்படியான நிரூபணமாதலால், ஸம்ப்ரதாயப்ரதீபமென்கிற சுவடியை யெழுதிய D. T. தாதாசாரியரும் மதுராந்தகம் வீரராகவாசாரியரும் *தாளாலுலகமளந்த வசவேகொல்* என்ற பாசுரத்தின் இரண்டாமடியின்படியே ஸேவை ஸாதிக்கிறார்கள்.

463. ஸதுபதேசசிக்ஷா: அஹோபிலமடம் விஷயமாய் அவசியமான பலஆராய்ச்சிகள்.

464. ஸத்யநாராயணஸ்த்ரம் : } இவ்விரண்டு நூல்களும் அஸ்மத்குலகூடஸ்தவைபவ விஷயமான விவாதத்தில் ப்ரதிபக்ஷிதுர்வாத ஸமூலோந்மூலனமாகத் தோன்றியவை.
465. ஸத்யநாராயணஸ்த்ரஸத்யப்ரதாபம் : }

466. ஸத்யவாதிஸமாச்வாஸம் : "அஹோபில மடத்தில் ஈடு முப்பத்தாறுயிரப்படி ப்ரவசநம் வெகு அழகாக நடந்துவருகிறது" என்று அர்த்தமில்லாத வார்த்தை அடிக்கடி ந்ருஸிம்ஹப்ரியாவில் வெளிவந்து கொண்டிருக்கையில் "மடத்தின் தற்கால நிலைமைக்கும் ஈட்டுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை; சுஷ்கமான ஆடம்பரோக்திகளால் பயனொன்றுமில்லை" என்று "ஈடும் மடமும்" என்ற வியாஸத்தினுல் உள்ளவாறு வெளியிட நேர்ந்தது; அதற்குமேல் மடவித்வானாகிய புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசாரியர் 'ஈட்டு விமர்சம்' என்றொரு வியாஸம் வெளியிட்டார். அதன்மேல் 'ஈட்டு விமர்சபராமர்சம்' என்னும் வியாஸம் வெளியிடலாயிற்று. அதன்மேல் ஆசைதீர வசவுகளைப் பொழிந்து தீர்த்துவிட வேண்டியதென்று தீக்ஷைகொண்ட மடபோக்தாக்கள் 'பராமர்சஸாரப்ரகாசனம்' என்றொரு காகிதத்தை அச்சுக்கூடத்தின் பெயர்கூட இல்லாமலும், இன்னார் வெளியிட்டது என்பதுமில்லாமலும் (ஓர் ஸத்யவாதி) என்று கையொப்பமிட்டுப் பிரசுரஞ் செய்தார்கள்; அதற்கு நாம் நம்முடைய அந்தேவாஸியொருவர் பெயரால் வெளியிட்ட பதில் இது.

467. ஸ்வாபதேசாந்யாபதேசதத்வம் : 'ஸ்வாபதேசம் அந்யாபதேசம்' என்கிற சப்த ப்ரயோகமே அஸாது என்றெழுதிய திருப்பாப்புலியூர் சடகோபாசாரியர்க்கு விரிவான நிரூபணங்களினுல் தெளிவு பிறப்பித்தநூலிது.

468. ஸௌஜந்யஸௌரபம் : இதுவும் மடத்துவிவாத மறுப்பு நூல்களிலொன்று.

469. ஸ்தோத்ரவ்யாக்யாநசோதநம் : ஸ்தோத்ரரத்னத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளையருளிச் செய்த வியாக்கியானத்தில் ஆறு தூஷணங்களை யெழுதிய சேட்லூர் நரஸிம்ஹாசாரியர் ஸம்ஸ்க்ருதவ்யுத்பத்திவைதேசிகரென்பதை விளக்கிக்காட்டும் நூலிது. இது ஸாரஸ்வதஸாரஜ்ஞர்களுக்குப் பரமரஸ்யமானதென்று வித்வான்களுகந்தது. இதற்கு அவருடைய மன்னிப்புக் கடிதமே பதில்.

470. ஸ்வக்ரந்த ஸம்சோதநம் : அடியேன் இயற்றியவையும், பரிசோதித்துப் பதிப்பித்தவையுமான நூல்களில் பல காரணங்களினுல் நேர்ந்த பிழைகளைப் புத்திக்கெட்டின வரையில் திருத்திக் காட்டும் நூலிது. அச்சிடும் நூல்களில், பிழைகள் விழுவதற்குப் பல காரணங்களுண்டு; நம்முடைய அஜ்ஞானம் அநவதானம் என்னுமிவை முக்கியமான காரணங்கள். இவை தவிர அச்சுக்கூடத்தில் சில காரண விசேஷங்களினுல் பிழைகள் பரிஹரிக்கப்படாமல் நின்றுவிடுவதுண்டு. நாம் நன்றாகத் திருத்தியனுப்பியிருந்தாலுங்கூட அச்சுக் கோப்பவர்களால் எப்படியோ விபர்யயம் நேர்ந்துவிடுகிறது. அச்சுக்கூடங்களில் நியமிக்கப்பட்டுள்ள பரிசோதகர்கள் தாங்கள் தலையிடத்தகாத திருத்தங்களில் தலையிட்டு விருத்தமாகத்திருத்திவிடுவதுண்டு. அடியேனுடைய பதிப்புகள் பெரும்பாலும் சென்னை, ஸ்ரீரங்கம், கும்பகோணம், தேவகோட்டை, புதுக்

கோட்டை, ஷோலாபூர், பாம்பே என்றிப்படிப்பட்ட தூரதேசங்களிலேயே நடப்பன; ஸ்வஸ்தானத்திலேயே நடக்கிறபதிப்பு மிகவும் ஸ்வல்பம். நாம் அவ்வப்போதுகளில் வெகுதூரதேச யாத்திரைகள் செய்ய நேர்ந்துவிடுகிறது. அப்போது சில மஹான்களை விச்வஸிப்பதனால் அவர்களாலும் பல பிழைகள் நேர்ந்துவிடுவதுண்டு. நேர்ந்த பிழைகள் நமக்கு உடனே தெரிவதுமில்லை. மொத்தத்தில் லக்ஷக்கணக்கான பக்கங்கள் நம்மால் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றனவாதலால் அவற்றையெல்லாம் நாம் மறுபடியும் வாசித்துப்பார்க்க ப்ரஸக்தி நேருகிறதில்லை. சிலசில ஸமயங்களில் சில சில புத்தகங்களை [சொந்தப் பதிப்புகளை] எடுத்துப் பார்க்கும்போது பிழைகள் கண்டு வருந்தவேண்டியதாகிறது. ஆங்காங்குள்ள ஆப்தர்கள் தெரிவிப்பது கொண்டும் சில பிழைகளையறிய ப்ராப்தமாகிறது. சில கேண்மின். சரணாகதி கத்யத்தில் "தாஸபூதம், சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ இதி வக்தாரம் மாம் தாரய" என்பது ஒரு ஸ்ரீஸூக்தி. இதை "தாஸபூதஃ சரணாகதோஸ்மி...." என்று சிலர் சொல்லி வருவதுண்டு. இது தவறான பாடம். அடியோடு சேராது. இப்பிழையை அடியேன் முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்னமே திருத்தி வெளியிட்டிருக்கிறேன். அப்படியிருந்தும் ஸ்ரீமத்வேதாந்த தேசிக க்ரந்தமாலையில் சேர்ந்த கத்யபாஷ்யத்தில் 'தாஸபூதஃ' என்கிற தவறான பாடம் மூலத்திலும் பாஷ்யத்திலும் விழுந்திருப்பதை நெடுநாள் கழித்துப் பார்க்க நேர்ந்தது. இப்பிழை எவ்வாறு நமது பதிப்பில் விழுந்திட்டதென்று வியந்தேன், வியாகுலப்பட்டேன். அச்சுக் கூடத்திலேயே சில பண்டிதர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்களல்லவா? அவர்கள் தாம் கடைசியாகத் திருத்தங்கள் கவனிப்பவர்கள். அவர்களது சேஷ்டைகளினால் இப்படி ஸம்பவிக்கிறதென்று நெடுநாள் கழித்துத் தெரிந்து கொள்ளலாகிறது.

இந்தத் தன் சரிதையிலும் சில பல பிழைகள் விழுந்து விட்டதாகப் பிறகு தெரிந்து கொள்ளலாயிற்று. ஒன்றிரண்டு இடங்கள் மட்டும் இங்குக் காட்டுகிறேன். பக்கம் 352-ல் நூற்பெயரை நிர்தேசிக்குமிடத்தில், 230 அறுபத்து மூன்று உபந்யாஸமாலை என்றேயுள்ளது; ஆனால் பக்கத்தின் தலை மேலேயிடும் மகுடத்தில் "அறுபத்திமூன்று..." என்று விழுந்திருக்கிறது. சிலர்க்கு இதில் பிழையிருப்பதாகவே தோன்றாமற் போகும். சிலர் அச்சுப்பிழையென்று போவார்கள். சிலர், நாமே அறுபத்தி என்று எழுதிக்கொடுத்ததாகக் கொண்டு ஏசப்புகப்படுவார்கள். ஏச நினைப்பவர்களுக்கு இப்படிப்பட்ட பிழைகள்தானே கிடைக்கும் இதிலேயே பக்கம் 376-ல் 382 to 385 லக்கமுள்ள நூல்களைப்பற்றி விவரண மெழுதுகையில் "இந்நான்கு நூல்களும் ஸ்ரீராமாயணயுத்த காண்டத்திலுள்ள..." இத்யாதிவாக்யம் அஸங்கிதமாக விழுந்திருக்கிறது. இதில் ஒரு வரி விட்டுப்போயிற்று. இப்படியாகப் பிறகு நமக்குத் தெரியவரும் பிழைகள் பலபல. ஸமீபத்தில் (15-8-57-ல்) வெளிவந்த அம்ருதலஹரியில் "**தீதில் நன்னெறி**" என்று மகுடம் புனைந்த ஆரம்ப வியாஸத்தில் "மஹாஜநோ யேந கதஸ் ஸ பந்தாஃ" என்கிற வசனத்தையுதாஹரித்துப் பொருளெழுதுகையில் "பெரியோர்கள் செல்லும் வழி" என்று நாமெழுதியிருக்க 'சொல்லும் வழி' யென்று விழுந்திட்டது. அதிலேயே ஜிதந்தாஸ் தோத்ரத்திற்கு உரையெழுதி அச்சிடுவித்திருக்கிறேன்; அதில் முன்னுரையின் முடிவில் 'ஸ்தோத்ரத்தை நாடோறும் க்ருஹாராதநஸமாப்தியில் அநுஸந்திக்கப்பட்டு வருவது" என்று தவறாக விழுந்துவிட்டது. 'அநுஸந்தித்து வருவது' என்றிருக்கவேணும்; அல்லது 'ஸ்தோத்ரத்தை' என்பது (ஸ்தோத்ரம்) என்றிருக்க வேணும்.

அடியேன் ஆழ்வார்கள் வைபவத்தை ஸம்ஸ்க்ருத பாஷையிலெழுதி அச்சிட்டபோது தொண்டரடிப் பொடியாழ்வார் வைபவத்தின் உபக்ரமத்தில் அவ்வாழ்வார் விஷயமாகச் செய்த வொரு ச்லோகத்தில் "தநுர்மாஸி தநிஷ்டோடுநி" என்றெழுதி விட்டேன். இவ்வாழ்வார் கேட்டை நக்ஷத்ரத்திலவதரித்தவர்; கேட்டைக்கு ஜ்யேஷ்டா என்று பெயரே தவிர தநிஷ்டா என்று கிடையாது. அது அவிட்டத்திற்குப் பெயர். இது அடியேனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் ஏதோ

ப்ரமாதவசத்தாலே 'தநிஷ்டோடுஷி' என்று எழுத நேர்ந்து விட்டது. பிறகு இதை ஆப்தர்கள் தெரிவிக்கத் திருத்தம் வெளியிடப்பட்டேயிருக்கிறது. இந்த ப்ரஸங்கத்தில மிகுந்த வருத்தத்துடன் ஒன்று தெரிவிக்க வேண்டியதாகிறது. ஆசார்யஹ்ருதயத்தில் "இவற்றுக்கு மூலம் இருவல்லருள் நல்வினைகள்" என்பது எட்டாவது சூர்ணை இதன் பொருளென்ன வென்றால், கீழ்ச் சூர்ணையில் சொல்லப் பட்ட ஜன்மத்திற்கு மூலம் ப்ரபலங்களான புண்ய பாபங்கள்; (கீழ்ச் சூர்ணையில் சொல்லப்பட்ட) கடாக்ஷத்திற்கு மூலம் ஸ்வாபாவிகக்ருபையாகிற ஸுக்ருதம். என்பது பொருள். இப்பொருளுக்கு வாசகமாக மூலத்திலுள்ள ஸ்ரீஸூக்தியோ வென்னில், "இருவல்லருள் நல்வினைகள்" என்பது. *சார்ந்த இருவல்வினைகளும் சரித்து* என்கிற பாசுரத்தையும், *தொல்லருள் நல்வினையால்* என்கிற பாசுரத்தை யுங்கொண்டு இந்த ஸ்ரீஸூக்தி வெகு அற்புதமாக அருளிச் செய்யப்பட்டது. ஆசார்யஹ்ருதயகாரருடைய ஸாமார்த்தியங்களில் விலக்ஷண ஸாமர்த்தியமிது; விசேஷணம் பேதப்படாமல் விசேஷ்யங்கள் மட்டும் பேதப்பட்டிருக்கும் ப்ரமாணங் களைத் தாம் சேர்க்கும் போது, விசேஷணபதத்தை ஒரு தடவை மட்டும் சொல்லி விடுவர். (இதற்கு உதாஹரணம்.) *ஸர்வலோக சரண்யாய* என்கிற விபீஷண வசனத்தையும், * (அபயம்) ஸர்வபூதேப்ய:* என்ற பெருமாள் வசனத்தையும் ஒரே வார்த்தையாக்கத் திருவுள்ளம்பற்றி "ஸர்வலோக பூதேப்ய:" என்றருளிச் செய் திருக்கிறார். மேலே காட்டின இரண்டுவசனங்களிலும் விசேஷ்யபதங்கள் பேதப் பட்டிருந்தாலும் (ஸர்வ என்கிற) விசேஷணபதம் ஒன்றே யாதலால் அதை முன்னே ஒருமுறை ப்ரயோகித்து, வெவ்வேறான விசேஷ்யங்களை யொன்று சேர்த்து (ஸர்வ-லோகபூதேப்ய:) என்றவிது வேறொருவருடைய மதிக்கு நிலமன்று.

விசேஷணங்கள் வேறுபட்டு விசேஷ்யம் மட்டும் வேறுபடாமலிருக்கும் ப்ரமாணவசனங்களைத்தாம் சேர்க்கும்போது, வெவ்வேறான விசேஷணபதங்களை அப்படியே காட்டி, வேறுபடாத விசேஷ்யத்தை மட்டும் ஒரு முறை சொல்லுவர். இதற்கு உதாஹரணம் மேலே காட்டின (இருவல்லருள் நல்வினைகள்) என்பது. *சார்ந்த இருவல்வினை* என்றவிடத்தும் *தொல்லருள் நல்வினை* என்ற விடத்தும் வினையென்பதே விசேஷ்யமாதலால் அதை இருமுறை ப்ரயோகித்திலர். ஒரு பாசுரத்தில் (இருவல்) என்பது விசேஷணம்; மற்றொரு பாசுரத்தில் (அருள்நல்) என்பது விசேஷணம். இந்த வெவ்வேறுபட்ட விசேஷணங்களை ஒன்று சேர்த்து (இருவல், அருள்நல்) என்றாக்கி விசேஷ்யமான வினையைக் கூட்டி "இருவல்லருள் நல்வினைகள்" என்று யோஜித்திருப்பதானது அஸாதாரண சக்தி விசேஷ நிபந் தநம். இவ்விடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் விரிவாக விவரணம் காட்டியருளாமல் "இருவல்லருள் நல்வினைகள் என்றது இருவல்வினையும் அருள்நல் வினையும் என்றபடி" என்று இவ்வளவே காட்டியருளினர். நெடுநாளைக்கு முன்னே தெலுங்குலிபியிலும் தமிழ்லிபியிலும் ஆசார்ய ஹ்ருதய வியாக்கியானத்தைப் பதிப் பித்தவர்கள் இங்கு "இருள்வல்வினையும் அருள் நல்வினையுமென்றபடி" என்று இல்லாதவொருளகரத்தைச் சேர்த்துத் தவறாக அச்சிட்டுவிட்டார்கள். மணவாள மாமுனிகளின் வியாக்கியானத்தை அடியேனும் தெலுங்கு தமிழ்லிபிகளில் பதிப் பித்திருக்கிறேனே; அவற்றிலும் ஸரி; ஸ்வகீய ஸாரநூல்களிலும் ஸரி; தவறில் லாத சுத்த பாடத்தையே பதிப்பித்திருக்கிறேன். செ. 233, அறுபத்துநான்கு நல் வார்த்தைகள் என்னுமொரு நூலில் (60-ஆம் வார்த்தையில் பழைய பதிப்புகளின் அசுத்தியைக் காட்டி உண்மையான பாடத்தின் தத்துவத்தைக் காட்டுமிடத்தில் 'இருவல்வினையும்' என்னுமிடத்தில் 'இருநல்வினையும்' என்று அச்சு விழுந்திருக் கிறதாம். [உண்மையாகவே இந்த அச்சுத்தவறு உள்ளதுதான்.] இது அச்சுப் பிழையேயொழிய வேறன்று என்பதை அல்பஜ்ஞர்களும் எளிதாக இசைந்து தீரு வர்கள். விசேஷஜ்ஞரான வொரு ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணியானவர் இந்த இடத்தையெடுத்துக்கொண்டு ப்ரளயம் செய்கிறார். அப்பெரியார் அடியேனுக்கு எழுதுகிறார்—"தேவரீர் வேறுபல விடங்களில் (இருவல்வினையும் அருள்நல்வினை

யும்) என்று சுத்தமான பாடத்தைப் பதிப்பித்திருப்பது வாஸ்தவமே; ஆனாலும் அப்பதிப்புக்களுக்கெல்லாம் பிற்பட்டதான ஸமீபநூலில் (இருநல்வினையும்) என்று காண்பதால் இதுதான் ஸித்தாந்தமான பாடமென்று கொள்ள என்ன தடை?" என்கிறார். அப்பெரியார்க்கு அடியேன் என்ன பதிலெழுதினேனென்றால், பெரிய பகவத் விஷயமென்று குலாவப்படுகிற தெலுங்குலிபி ப்ராசீன பகவத்விஷய ஸ்ரீகோசமானது பெரும்பாலும் சுத்தமென்று மதிக்கப்படுவது. இதில்*வைகுந்தா மணி வண்ணன் வியாக்கியான முடிவில் திருவாய்மொழி நூற்றந்தாதி பாசுரம் வியாக்கியானத்தோடு பதிப்பிக்குமிடத்து அப்பாசுரத்தின் ஈற்றடியானது "வண்மையடைந்தான் கேசவன்" என்று முதலில் மூலத்தில் பதிப்பிக்கப்பட்டது; பிறகு உரையில் ப்ரதீகதாரணத்தில் 'வண்மையடைந்தான்' என்று பதிப்பிக்கலாயிற்று. பிற்பட்டதற்கே ப்ராபல்யமாதலால் 'வன்மையென்கிற பாடம் தவறு; வண்மையென்பதே சுத்த பாடம்' என்று கொள்ளும் மேதாவிகள் இங்குமப்படியே கொள்ளலாமென்று தெரிவித்தேன். வஸ்துஸ்திதியில் பிழைதிருத்தம் மிக அவசியமேயென்பது மறுக்க முடியாதது; கேவலம் ரந்த்ராந்வேஷிகளான புரோபாகிகளுக்கு இட மறும்படி செய்துவைக்கவேண்டியது நமது கடமையாதலால் "ஸ்வக்ரந்தஸம்சோதநம்" என்னுமிந்த நூல் மிகவும் ஆவச்யகமென்றுகொண்டு சேகரிக்கப்பட்டு வருகிறது. இஃது ஒரு நாள் வரையிலே முடியுமதன்று.

தன் சரிதை தலைக்கட்டுதல். (நிகமனம்.)

சீலமில்லாச் சிறியேனுடைய சரிதையை இவ்வளவு பெரியதாக்கின அபராதம் உண்மையில் மிகப் பெரியதே. இத்தனை பெரிதாக எழுத வேணுமென்று உபக்ரமத்தில் ஸங்கல்பித்திலேன். ஆயினும்*ஏவம் ஸமஜாயத* என்ற கணக்கிலே இவ்வளவாக வளர்ந்திட்டது. இதில் பலபல பெரியோர்களுடைய புகழுரைகள் மலிந்திருந்தாலும் வாதப்ரதிவாத முறையில் வாதிகளாகவோ ப்ரதிவாதிகளாகவோ நின்றவர்களைப்பற்றிக் குறைபாடாக எழுத நேர்ந்திருப்பதுமுண்டு; அது வ்ருத்த கீர்த்தனமேயொழிய எள்ளளவும் அஸதுக்தியன்றென்பதை உண்மையறிவாளிகளான தடஸ்தமஹநீயர்கள் நன்குணர்வார்கள். ஆனாலுங்கூட பாகவதாபசாரத்திற்கு நாம் வெருவியிருக்க வேண்டுவது ஸ்வரூபமாதலால்*பிழைப்பராகிலும் தம்மடியார் சொல் பொறுப்பது பெரியோர் கடனன்றே* என்னும் பெரியாழ்வார் பாசுரத்தையே அநுஸந்தித்து நிற்கின்றேன். வடமொழி நூற்பகுதியிலும் தென்மொழிநூற்பகுதியிலும் சேர்ந்து ஏறக்குறைய நூறு நூல்கள் பரபக்ஷப்ரதிக்ஷேபபரங்களாகத் தோன்றியவையுண்டு. இவை மறுப்பு நூல்களாயினும் அவரவர்கள் மிக அவசியமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய ஸத்ஸம்ப்ரதாய ஸாரார்த்தங்களையே தெள்ளமுதாக விளக்குவனவாதலால் இவையும் ரஸிகவித்வான்களுக்கு மிகவும் ஆதரணீயங்களேயாகுமென்பதைப் பல மஹநீயர்கள் உலகுக்கு ப்ரஸித்தப்படுத்தியுள்ளார்கள். வைகுண்ட வாஸிகளான (மாம்பலம்) ஸ்ரீ உவே. S. வாஸுதேவாசார்ய ஸ்வாமியும், மயிலாப்பூர் S கோபாலஸ்வாமி ஐயங்கார் (அட்வகேட்) அவர்களும் அன்னவர்களில் பரிகணிதர்கள். இப்போது வாழ்பவர்களில் டாக்டர், ஸர் K. S. க்ருஷ்ணன் ஸ்வாமி (டில்லி), S. R. S. ராகவன் ஸ்வாமி (டில்லி) ராவ் பஹதூர். மகீஷிமாந்ய. R. நரஸிம்ம அய்யங்கார் ஸ்வாமி (மதுரை), ராவ்ஸாஹிப், S. ராகவையங்கார் ஸ்வாமி (மாம்பலம்), C. R. ராமஸ்வாமி ஐயங்கார் B.A.B.L., (கோயமுத்தூர்) இத்யாதி மஹநீயர்கள் பரிகணநீயர்களாக விளங்கி வருகின்றார்கள். *மதுரேண ஸமாபயேத்* ஆகையாலே மிக மதுரமானதொரு விஷயத்தை மிகச் சிறு நூலாக்கி முடிவில் உபகரிக்க முன்வருகின்றேன். அதுதான் "மூன்றுகத்தின் மூலஸ்தானம்" என்னும் பெயர் கொண்டு அடுத்துள்ளது. இத் தன்சரிதையில் பக்கம் 40-ல் ஸேவைஸாதித்தருளும் ஸ்ரீ உவே. விஞ்சிமூர் ஆழ்வார் ஸ்வாமியென்று ப்ரஸித்தரான அஸ்மத்ஸுஹ்ருந்மணியின் நியமனத்தையே கொண்டு அவருடைய திருவுள்ள உகப்புக்காக இன்றே எழுதப்பட்ட இந்நூல் ஸகல ரஸிகர்களுக்கும் பரம போக்யமாகுமென்று விஜ்ஞாபித்து நிற்கிறேன்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.   நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

மூன்றுதத்தின் மூலஸ்தானம்.

ஸஹஸ்ரஶீத்யாம் ஸங்கோசவஶாத் நைவ நாமஸங்க்ரஹவிவக்ஷுத்யயா ।
ஶ்ருதாநி ஸஜய்ஸ்ய யதாவஸரணம் ப்ராஸாணிகாநாம் ஹ்ருதயம் பிநோதி ॥

ஶ்ரீயதிநவ்யநமஸாஹிஜநா: ப்ரதிஜ்ஞா
தாஸஸ்ய ஶிக்ஷணயோ விவாஸ்யா சஹாங்க: ।
ஸ்யாஸதே ய ஜஹ வைஷ்ணவவாசநாச்ரம்
க்ஷேத்ரம், தவைவ ஸூக்தஸூக்திகாம் பஹேஸது ॥

I. நம்பிள்ளை திருவடிகளில் வடக்குத் திருவீதிப் பிள்ளை பகலெல்லாம் கேட்ட அர்த்தங்களை இரவிலே ஏடுபடுத்திவைப்பராம்; அந்த ஏடுகளை இரு திருக்குமாரர்களும் கூடி இரவெல்லாமாராய்ந்து அவற்றில்கண்ட அர்த்த விசேஷங்களைப்பெய்து தாங்கள் ரஹஸ்ய க்ரந்தங்களை இட்டருளினார்களாம். அஷ்டாதச ரஹஸ்ய கர்த்தாவான பிள்ளை லோகாசாரியரும், அருளிச்செயல் ரஹஸ்யம், ஆசார்ய ஹ்ருதயம் இத்யாதிகளுக்குக் கர்த்தாவான அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருக்குமாரர்களேயன்றோ. இவ்விருவருமருளிச்செய்த ரஹஸ்ய க்ரந்தங்களில் விசேஷித்து ஸ்ரீவசநபூஷணத்திலும் ஆசார்ய ஹ்ருதயத்திலும் காண்கிற திவ்யார்த்த ரத்னங்களெல்லாம் பெரும்பாலும் ஈடு முப்பத்தாறாயிரப்படியில் ஆங்காங்கு சிதறியிருப்பவை. பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானங்களிலிருந்து கொள்ளப்பட்ட ரத்னங்களுமுண்டு.

2. ஆசார்ய ஹ்ருதயத்தில் நான்காம் ப்ரகரணத்தில் திருவாய்மொழி யெட்டாம் பத்தின் ஸாரார்த்த ஸங்க்ரஹமாக இட்டருளின சூர்ணையில் “மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினைநோய் மறுவலிடாமல் சிறியேனென்றதின் பெருமையைக்காட்ட” என்றுள்ள திவ்ய ஸ்ரீஸூக்தியானது ஈடுமுப்பத்தாறாயிரப்படியையே மூலாதாரமாகக்கொண்டு அவதரித்தது. இதை நிரூபிக்கவே இந்தச் சிறுநூலெழுகின்றது. மேலெடுத்த ஸ்ரீஸூக்தியின் விவரணத்தில் அபிப்ராயபேதம் விளைந்திருப்பது விச்வப்ரஸித்தம். இவ்விஷயம் அம்ருதலஹரீ பத்ரிகையிலும், ஸ்ரீராமாநுஜனிலும் விரிவாக வெளிவந்திருப்பதால் அவற்றைக் கடாக்ஷித்தருளியிருக்கும் வித்வான்கள் இந்த விசாரத்தின் மருமத்தை நன்கறிவர்கள். அடியேனுடைய க்ரந்தங்களின் வரிசையில் 233 லக்கம் பெற்றுள்ள ‘அறுபத்துநான்கு நல்வார்த்தைகள்’ என்னும் நூலில் அறுபத்திரண்டாம் நல்வார்த்தையும் காணத்தக்கது.

3. ஆழ்வார்க்குத் திருவாய்மொழியில் மூன்று கண்டங்களுண்டாகி அவை எம்பெருமானால் பரிஹரிக்கப்பட்டனவாகவும், அப்படிப்பட்ட கண்டம் நான்காவது தடவையாக (எட்டாம்பத்தில்) உண்டாகப்புக, அதையும் எம்பெருமான் களைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்

படுகிறது மேலே உதாஹரித்த "மூன்று தத்துக்குப் பிழைத்த" என்ற ஸ்ரீஸூக்தியினால். நான்காவதான அந்த கண்டம்மட்டும் மூலகாரரால் [ஆசார்ய ஹ்ருதயகாரரால்] ஸுஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டுவிட்டது. முந்தின மூன்று கண்டங்கள் எங்கே தோன்றினவென்று ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. ஆனாலும், ஆசார்ய ஹ்ருதயகாரருடைய ஸரணியென்று ஒன்று பரம விலக்ஷணமாகவுண்டாகையாலே அந்த ஸரணியில் நன்கு காட்டப்பட்டே யிருக்கின்றது. ஆசார்ய ஹ்ருதயகாரர்க்கு அஸாதாரணமென்று சொன்ன அந்த ஸரணி இன்னதென்பதை முன்னம் வேறோரிடங்கொண்டு நிரூபித்துக்காட்டிவிட்டுப் பிறகு ப்ரக்ருத ஸ்தலத்தில் நிரூபணம் செய்வோம்.

4. இரண்டாம் ப்ரகரணத்தில் "ச்ரமணீ விதுர ரிஷிபத்நிகளைப் பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு" என்பது ஒரு ஸ்ரீஸூக்தி 'சபரியையும் விதுரரையும் ரிஷிபத்நியையும் பரிசுத்தப்படுத்தின புண்டரீகாக்ஷனுடைய திவ்யகடாக்ஷமானது' என்பது இந்த வாக்கியத்தின் பொருள். இங்கு "பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடுநோக்கு" என்கிற சொல்தொடர் மிக அற்புதமானது. மேலே யெடுத்த மூவரையும் எம்பெருமான் பரிசுத்தப்படுத்தி யருளினதை அந்தந்த ஸ்தலங்களிலுள்ள ப்ரமாணங்களைக் கொண்டே காட்டுவதாகவன்றோ இந்த சொல்தொடர் அவதரித்திருக்கின்றது. (1) * சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந! *. என்கிற சபரியின் வார்த்தையையே நினைப்பூட்டுகிறது 'பூதராக்கின' என்கிற சொல். (2) விதுரர் திருமாளிகையிலே அமுதுசெய்தருளின கண்ணபிரானை நோக்கித் துரியோதனன் 'பீஷ்மாசார்யரையும் த்ரோணாசார்யரையும் என்னையு முபேக்ஷித்து (விதுரனென்னும்) சூத்ரனுடைய அன்னத்தை எவ்வாறு புஜித்தாய்?' என்று க்ஷேபிக்கும்போது * பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷலபோஜநம் * என்ற ச்லோகத்தில் 'புண்டரீகாக்ஷ!' என்று ஸம்போதித்தான்; வையவந்த இந்த விடத்திலே இப்படிப்பட்ட ஸம்போதநம் தகவேதகாது. ஆனாலும் தைவிகமாகவே அவன் வாயில் புண்டரீகாக்ஷ! என்கிற ஸம்போதனம் வெளிவந்தது; விதுரன் சூத்ரயோநியில் பிறந்தவனாயினும் உன்னுடைய தாமரைபோன்ற திருக்கண்பட்டதனால் சபரியைப்போலவே அவனும் பரிசுத்திபெற்றனன் என்பதாகக் காட்டுவதாம் இந்த புண்டரீகாக்ஷ! என்பது. ஆகவே இதுவும் திருக்கண்ணோக்கத்தாலே பரிசுத்தப் படுத்துகையென்கிற ப்ரக்ருத உத்தேச்ய விஷயத்தில் விதுரரைப் பரிசுத்தராக்கினதற்கு ப்ரமாண வசனம் காட்டினபடியாயிற்று. (3) இனி மூன்றாவதாகவுள்ள நெடுநோக்கு என்கிற சொல் *வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போது, ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பத்தவிலோசனத்து * என்கிற ஆண்டாள் பாசுரத்தை நினைப்பூட்டும் முகத்தாலே அந்த விஷயத்திற்கு ப்ரமாணம் காட்டினபடியாகிறது. ஆக இங்ஙனே ப்ரக்ருத விவக்ஷிதத்திற்கு ப்ரமாணம் காட்டுவதாகப் பிறர் தெரிந்துகொள்ள முடியாதபடிக்கு ப்ரமாணங்களைக் காட்டும் முறையிலே உக்திவிந்யாஸம் செய்வது ஆசார்ய ஹ்ருதயகாரர்க்கு அஸாதாரணமான ஸாமர்த்தியம். இப்படி அமைந்த க்ரந்தம் வேறுகிடையாதென்பது புநருக்தம்.

5. இனி ப்ரக்ருதவிஷயத்திற்கு வருவோம். "மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய்" என்ற இவ்விடத்தில் அருவினை, நோய் என்கிற சொற்கள் மூன்று தத்துக்கள் தோன்றியவிடங்களைக் காட்டுவன: எங்ஙனேயென்னில்; (1) அருவினை என்னுஞ் சொல்லானது *வளவேழுலகின் முதலாய வானோரிறையை அருவினையேன் * என்கிற பாசுரத்தை நினைப்பூட்டா நின்றுகொண்டு முதல்தத்துக்கு ஸ்தலம்—வளவேழுலகு பதிகமென்று காட்டிற்

ருகிறது. (2) நோய் என்கிற சொல்லானது * நீயும் நானு மிந்நேர்நிற்கில், மேல்மற்றோர் நோயும் சார்கொடான் * என்கிற * பொருமாநீள்படைப்பதிகப் பாசுரத்தை நினைப்பூட்டா நின்றுகொண்டு இரண்டாம் தத்துக்கு ஸ்தலம் அந்த பொருமாநீள்படைப்பதிகமென்று காட்டிற்றுகிறது. அவ்விடத்து ஈட்டில் நோயாவது இதுதானென்று ஸ்பஷ்டமாக வியாக்கியானிக்கப்பட்டுள்ளது. (3) நோய் என்கிற அந்தச் சொல்தானே * வைகுந்தாமணிவண்ணன் பதிகத்தில் (பா. 4) * உள்ள நோய்களெல்லாம் துறந்து * என்கிற பாசுரத்தை நினைப்பூட்டா நின்றுகொண்டு மூன்றுவது தத்துக்கு ஸ்தலமும் காட்டிற்றுகிறது. * நீயும் நானுமிந்நேர் நிற்கில் மேல்மற்றோர் நோயும் சார்கொடான்* என்றவிடத்து ஈட்டில் "அயோக்யதாநுஸந்தானம்பண்ணி அகலவிடுதல்" என்று [நோயின் சப்தார்த்தமாக] அருளிச்செய்யப்பட்டிருப்பது போலவே * வைகுந்தா மணிவண்ணனிலுள்ள *உள்ளநோய்களெல்லாமென்றவிடத்தும் "அயோக்யன் என்று அகன்றுவருமவை" என்றருளிச்செய்யப்பட்டிருப்பது முக்கியமாக— மிக முக்கியமாக நோக்கத்தக்கது. அயோக்யதாநுஸந்தானம்பண்ணி அகலுகை என்கிறவிஷயம் * வைகுந்தாமணிவண்ணன் பதிகத்தினீட்டிலே எத்தனைபர்யாயம் அருளிச்செய்யப்பட்டிருக்கிறதென்பதை ப்ராமாணிகர்கள் காணவேணும்.

6. இவ்விஷயம் *அந்தாமத்தன்பிலன்றே காட்டப்படவேண்டும்;* வைகுந்தாமணிவண்ணனில் காட்டிப் பயனென்? என்ன வேண்டா; அந்தாமத்தன்பிலே தலைகாட்டின அந்த நோய், பரிஹ்ருதமானது * வைகுந்தாமணிவண்ணனிலாகையாலே இங்குத்தான் காட்டப்படவேண்டும். மேல் எட்டாம்பத்தில் *இருத்தும் வியந்திலே *சிறியேனுடை* என்றவிடத்துத் தலைகாட்டினவிது அடுத்த பதிகமான *கண்கள் சிவந்தில்தானே ஆசாரியர்களால் காட்டப்பட்டது. அதுபோலவே இதுவும். இவ்வளவே வாசி; (அதாவது) * வளவேழுலகிலுண்டான கண்டம் வளவேழுலகிலேயே பரிஹரிக்கப்பட்டதாக ஆசாரியர்களால் தெரிவிக்கப்பட்டது. * பொருமாநீள்படையிலுண்டான கண்டம் பொருமாநீள்படையிலேயே பரிஹரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. *அந்தாமத்தன்பிலுண்டான கண்டம் அடுத்த * வைகுந்தாபதிகத்தின் தொடக்கத்தில் பரிஹரிக்கப்பட்டதாக இதுவும் ஆசாரியர்களாலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மேலே மிக விசதமாகும்.

7. நோய் என்கிற ஒருசொல்லே இரண்டு ஸ்தலங்களைக் காட்டுமோவென்று சங்கிக்க வேண்டா. இதுவும் ஆசார்ய ஹ்ருதயத்தின் அஸாதாரண ஸரணியில் சேர்ந்தது. மூன்றும் ப்ரகரணத்தில் *வளர்த்தெடுப்பார் கையிருந்து* என்ற விடத்தில் * வளர்த்தெடுப்பார் * என்ற ஸ்ரீஸூக்தியானது * வளர்த்ததனால் பயன்பெற்றேன் * இன்னடிசிலொடு பாலமுதூட்டி யெடுத்த * இட்டமாக வளர்த்தெடுத்தேனுக்கு * என்ற மூவிடத்துப் பாசுரங்களையுட்கொண்டதாக வியாக்கியானிக்கப்பட்டிருப்பது காண்க. ஆக "அருவினை நோய்" என்ற மூல ஸ்ரீஸூக்தியினாலேயே மூன்று தத்துக்குமுரிய இடங்கள் காட்டப்பட்டுவிட்டனவென்பது அசைக்கமுடியாத விஷயம்.

8. இனி, (மூன்று தத்துக்கு) என்பதற்கடுத்துள்ள (பிழைத்த) என்னுஞ் சொல்லும் * வைகுந்தாமணிவண்ணன் பதிகத்தைக் காட்டிற்றுகிறதென்று நிர்வஹிப்பதும் ஒரு வழியுண்டு. இதையும் இங்கு விளக்கமாக உபபாதிக்கப்போகிறேன். அதற்கு முன் ஒரு சிறிய சங்கையைப் பரிஹரிக்கவேண்டியதாகிறது. 'பிழைத்த' என்கிற சொல் மூன்றுவதான தத்தைக் காட்டுவதாகில் அது மூன்றுவது சொல்லாகவன்றே பிரயோகிக்கப்பட்டிருக்க

வேண்டும்; அப்படியல்லாமல் முதல் சொல்லாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பது பொருந்துமோ? என்று சிலர் சங்கிக்கநேரும். சொல்தொடர் அந்வயிக்கவேண்டிய ரீதியில் ஸ்ரீஸூக்திகளை அமைக்கவேண்டி யிருப்பதால் இங்ஙனே வ்யுத்க்ரமமாக அமைப்பதும் இந்நூலின் ஸரணியே யாகும். ஒன்றே இங்குக் காட்டுவோம்; மூன்றாம் ப்ரகரணத்தில் "க்ஷுத்த்ருட்பீடித நிர்த்த நரைப்போலே கண்டுகொண்டு உண்டு பருகி" என்னும் ஸ்ரீஸூக்தியைக் கொள்வோம்; இங்கு க்ஷுத்பீடிதரிடத்தும் த்ருட்பீடிதரிடத்தும் நிர்த்தநரிடத்தும் க்ரமேண அந்வயிக்கும்படி மேலே ப்ரயோகிக்கப்படும் சொற்கள் 'உண்டு பருகிக் கண்டுகொண்டு' என்றிருக்கவேண்டு வன மாறிப் பிரயோகிக்கப்பட்டிருப்பது காண்க. இந்த வ்யுத்க்ரமம் எதற்காகக் கொள்ளப் பட்டதென்பது தனிப்பட்ட விசாரம்; வ்யுத்க்ரமமுள்ளதென்பது மறுக்கமுடியாததாதலால் அதைப்பற்றிமட்டும் கொண்டோமென்க. 'பிழைத்த' என்கிறவிது * வைகுந்தா மணிவண்ணன் பதிகத்தை எங்ஙனம் காட்டிற்றாகிறதென்பதை உபபாதிக்கிறேன் காண்மின்.

9. இந்நூலாசிரியர் ப்ரமாணவசனங்களை நேராகக் கையாள்வதுபோலவே ப்ரமாண வசனப்பொருளைக் கையாள்வதுமுண்டு; முதல் பிரகரணத்தில் "இருள்தருமமலங்களாக வென்னும் ஜந்ம ஜாயமாநகாலகடாக்ஷங்கள்" என்றதில் * இருள்தரும்பாசுரத்திலுள்ள சொல் பிறவியென்பதா யிருக்க, அச்சொல்லைவிட்டு அதன் பொருளையுடைய ஜந்மபதத்தை யிட்டருளினார். *அமலங்களாகவென்னும் பாசுரத்திலுள்ளசொல் விழிக்கு மென்பதாயிருக்க, அச்சொல்லைவிட்டு அதன் பொருளைக்கொண்ட ஜாயமாநகாலகடாக்ஷபதத்தையிட்டருளினார். இந்நூலின் தொடக்கம் "காருணிகனான ஸர்வேச்வரன்" என்பது; அங்கு ஆசிரியர் கொண்ட *விவேக்து மீசோ மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி* என்ற பட்டர் ஸ்ரீஸூக்திக்குச் சேர "காருணிகனான ஈசன்" என்றே அருளிச்செய்திருக்கவேண்டும்; "ஈசனை யீசனீ சன்பாலென்ன" என்று மேலே அருளிச்செய்கிறார். அப்படி இங்கு அருளிச்செய்யாமல் 'ஸர்வேச்வரன்' என்றது பொருளைக்கொண்டேயன்றோ. "வைஷ்ணவ வாமநத்தில் நிறைந்த நீலமேனியின் ருசிஜநகவிபவ லாவண்யம் பூர்ணம்" என்கிறார். இங்கு *நிறைந்தென்னுள்ளே நின்றொழிந்தான் * என்னெஞ்சம் நிறைந்தனவே * என்ற சந்தைகளுக்குச்சேர "லாவண்யம் நிறைந்தது" என்னவேண்டியிருக்க, பூர்ணம் என்றருளியது பொருளைக்கொண்டேயன்றோ. இங்ஙனே பலபலவுங் காணலாம். ப்ராக்ருதத்தில் * உள்ள நோய்களெல்லாம் துரந்து உய்ந்து போந்திருந்தே * உய்ந்து போந்தென்னுலப்பிலாத வெந்தீவினைகளை நாசஞ்செய்து * என்ற பாசுரங்கள் * வைகுந்தாவில் உயிரானவையாகையாலே (உய்ந்து போந்து) என்றதன் பொருளையே *பிழைத்த வென்பதனால் காட்டியருளினாரென்று திண்ணமாகவெண்ணுக. (மூன்றுதத்துக்கு உய்ந்த) என்றே அருளிச்செய்திருக்கலாகாதோ வென்னில், அதில் ரஸமில்லையென்பதைக் காட்டுகிறோம் காண்மின்.

10. (மூன்றுதத்துக்குப் பிழைத்த) என்றவிதில் பிழைத்த வென்பதற்கு இரு வகைப் பொருள் காணலாம். மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தில் "இவர் பிழைத்த" என்று ஆழ்வாரோடே கூட்டிப் பொருள் பணித்திருக்கையாலே 'ஜீவித்த' என்பது ஒரு அர்த்தம். பிழைத்தலாவது ஜீவித்தலும் தப்புதலும். ஜீவித்தலென்கிற பொருளுக்கு உதாஹரணம் காட்ட அவசியமில்லை. * கஞ்சன் வலைவைத்தவன்று காரிருளெல்லில் பிழைத்து * வலையில் பிழைத்த பன்றிபோல் * என்னும் ஆண்டாள் பிரயோகங்களில் தப்புதலென்னும் பொருள் ப்ரஸித்தம். ஆக ஜீவித்தலென்னுமர்த்தத்தையும் தப்புதலென்னுமர்த்தத்தையுங் கொண்ட பிழைத்த வென்னுஞ் சொல்லை இங்கு ஆசிரியர் பிரயோகித்தருளினது வெகு ரஸம்.

மூன்று கண்டங்களுக்குத் தப்பினாப்ப! என்னவேண்டியே பிழைத்தவென்றார். உய்ந்த என்றால் இந்தரஸம் வாராது. எனவே, பிழைத்த என்கிற ஸ்ரீஸூக்தியும் மூன்றுவதுதத்தின்ஸ்தலத்தைக் காட்டிக்கொடுக்கவற்றே யென்பது அசைக்கமுடியாதது. “மூன்றுதத்து மறுவலிடாமல்” என்று எளிதாக அருளிச்செய்து போகலாமே. “மூன்றுதத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவலிடாமல்” என்று அதிகமாக வருளிச்செய்தது எதற்காகவென்பது இப்போது விளங்கிற்றாகும். அதி கம்பீரமான மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்திலிருந்தே அடியேன் இந்த மருமங்களை உய்த்துணர்ந்து எழுதுகின்றேன். *மநஸி விலஸதாஸ்ஞு பக்திஸித்தாஞ்ஜநே ந ச்ருதிசிரஸி நிகூடம்......நிதிமிவ புஞ்ஜதே தத்யா:* என்று பட்டருளிச்செய்த கணக்கிலே நிகூடநிதியைக் கண்டநுபவிப்பதற்கு மூலம் பக்தி ஸித்தாஞ்ஜநமேயாம்.

11. ஸ்யஶத்ரு ஸாரா நிஷ்ஷ-ஃ. ஆசார்ய ஹ்ருதய மூலகாரரும் வ்யாக்யாதாவான மணவாளமாமுனிகளும் திருவுள்ளம்பற்றின மூன்று தத்துக்கள் இதுவரை நிரூபிக்கப்பட்டபடியேயொழிய வேறுவிதமாகவல்ல. * வளவேழுலகிலேயே இரண்டு தத்துக்களென்றும் * பொருமாநீள்படையிலே ஒருதத்தென்றும் ஆக இவையே மூன்று தத்துக்களென்றுகூறி * அந்தாமத்தன்பிலே அங்ஙனேயான தத்து கிடையவேகிடையாதென்று க்ருஹீதக்ராஹிகளாய்ச் சொல்லுமவர்கள் மணவாளமாமுனிகளின் திருவுள்ளத்தை மிகவும் புண்படுத்துமவர்களென்னத் தட்டில்லை. மாமுனிகள் தமது நூற்றந்தாதியில் * பொருமாநீள்படைக்கு இட்டருளின பாசுரத்தில் நைச்யாநுஸந்தாந ப்ரஸக்தியைச் செய்தருளவேயில்லை. * வைகுந்தா மணிவண்ணனுக்கு இட்டருளின பாசுரத்தில் * வைகுந்தன்வந்து கலந்ததற்பின் வாழ்மாறன் செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து — நைகின்ற தன்மைதனைக்கண்டு * என்று ஸ்பஷ்டமாகவுள்ளது. கீழ் * அந்தாமத் தன்புபதிகத்திற்கு இட்டருளின பாசுரத்தில் *சந்தாபம் தீர்ந்த சடகோபன் * என்றதையும் சேர்த்து நோக்குமளவில் ஒரு ரஸகனமான கருத்து விளங்கும்— *அந்தாமத்தன்பிலே ஆழ்வார் சந்தாபம் தீர்ந்தார்; உடனே வைகுந்தன் சந்தாபமுற்றான் என்று. ஆழ்வார் சந்தாபம் தீர்ந்ததற்கு ஹேது இறைவன்வந்து ஆக்கலந்தது; வைகுந்தன் சந்தாபமுற்றதற்கு ஹேது மாறன் செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்தது. இது நாம் எறிட்டுக் காட்டவேண்டாதபடி மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்தியில் அநாயாஸலப்யமாயிருக்கச் சிலர் இங்கு வீண்விவாதத்தை வளரச்செய்து போருகிறார்களென்றால் * என் சொல்லவல்லேனென்வாய்கொண்டே ?

12. விசேஷித்துச் சில விண்ணப்பங்கள் குறிக்கொண்மின். திருவாய்மொழியாயிரத்திலும் ஆழ்வார் நைச்யாநுஸந்தானம் பண்ணினவிடங்கள் நூற்றுக்கணக்காகத் தேறும். * நீசனேன் நிறையொன்றுமிலேன் * என்கிற பாசுரத்தில் ஸுஸ்பஷ்டமான நைச்யாநுஸந்தானம் காண்கிறது; *சீலமில்லாச் சிறியன்* இத்யாதிகளும் பலபல. ஆயினும் அவ்விடங்களில் ஆழ்வார் அயோக்யதாநு ஸந்தானம்பண்ணி அகலப்பார்ப்பதாக ஆசார்யர்கள் வியாக்கியானித்தருள்வதில்லை. மருமமறிந்து வியாக்கியானித்தருளுமாற்றல் நம் ஆசார்யர்களுக்கே அஸாதாரணமாதலால் அன்னவர்கள் வியாக்கியானித்தருள்வதே நமக்குத் தஞ்சம். ஆழ்வார் நைச்யாநுஸந்தானம்பண்ணி அகலப்பார்த்தவிடங்கள் மூன்றென்று நம் ஆசாரியர்கள் திருவுள்ளம்பற்றினார்கள். * வளவேழுலகிலும் * பொருமாநீள்படையிலும் இது உபயவாதி ஸம்மதமாய் நிர்விவாதமாயிற்று. * அந்தாமத்தன்பு பற்றியே விவாதமுள்ளது. * வளவேழுலகில் ஒருதடவை நைச்யாநு ஸந்தானம்பண்ணி அகலப்பார்த்து அது சாந்தமாகி மறு

முறையும் அது தலைகாட்டினதாகவும் பரிஹரிக்கப்பட்டதாகவும் வியாக்கியானம் ஸ்பஷ்டமாகக் காண்கையாலே *வளவேழுலகுதன்னிலேயே இரண்டு தத்துக்களென்று கொள்ளக் குறையில்லையாதலால் *அந்தாமத்தன்பு விசாரம் ப்ரஸக்தமாவதற்கு அவகாசமே யில்லையென்று சிலர் கருதுவது பொருத்தமற்றது. இதைப்பற்றி நன்கு கேண்மின்.

13. திருவாய்மொழியாயிரத்தில் தூதுவிட்ட பதிகங்கள் * அஞ்சிறையமடநாராய் * *வைகல் பூங்கழிவாய் *பொன்னுலகாளீரோ* எங்கானலகங்கழிவாய்—என நான்கு உள்ளன. இப்பதிகங்களொவ்வொன்றிலும் பல தூதுகளுண்டு. இருந்தாலும் "தூது நாலுக்கும் விஷயம்" என்றருளிச்செய்தவர் ஆசார்ய ஹ்ருதயகாரரே. ஒவ்வொரு பதிகத்தையும் ஒவ்வொரு தூதாகவைத்து நாலு தூதென்று கணக்கிட்ட இவ்வாசிரியர் * வளவேழுலகை ஒரு தத்தென்று கணக்கிடுவரேயல்லது இரண்டு தத்தென்று ஒருகாலும் கணக்கிடமாட்டார். * அந்தாமத்தன்பு பதிகத்திலும் இங்ஙனே தத்து உண்டென்பது ஈட்டினுலும் திருவாய்மொழி நூற்றந்தாதியினுலும் நிர்விவாதஸித்தமாயிருக்க, இதனை ஏன் விட்டொழிப்பது ?

14. இங்கே பிறர் சொல்லுவதாவது, * அந்தாமத்தன்பிலே நைச்யானுஸந்தானம் பண்ணியிருக்கிருரென்பது உண்மையே; அதை யாரும் அபலபிக்கவில்லை; ப்ரக்ருதத்திற்கு அதுமட்டும் போதாது; அகன்றதாகவோ அகலப்பார்த்ததாகவோ தெரியவரவேணும்; அது இங்குத் தெரியாமையாலே இப்பதிகம் தத்துக்கு நிரூபகமாகாது—என்று. இங்குத்தான் அவரவர்கள் அவதானம் கொள்ளவேணும். நைச்யாநுஸந்தானம் பண்ணுகிற ஆழ்வார் நான் அகலுகிறேனென்ருே, அகலப்பார்க்கிறேனென்ருே ஓரிடத்திலும் பணித்திலர். பணித்ததுண்டாகில் எடுத்துக்காட்டலாம். அகலவேணுமென்று ஆழ்வார் தாம் நிச்சயித்து * வளவேழுலகுபாசுரம் பேசியிருந்தாராகில் அந்தப்பாட்டோடே ஆழ்வார் அகன்றிருக்கவேண்டும். மேல்பாசுரம் தொடங்கியிருக்கவெ கூடாது. (1—10—8) * செல்வநாரணன் பாட்டின் ஈட்டவதாரிகையில் "ஒரு குட்டிச்சுவரிலே முட்டாக்கிட்டுக்கொண்டு கிடந்தார்" என்று நம்பிள்ளை சாடுக்தியாக அருளிச்செய்கிருரே அவ்வண்ணமாக * வளவேழுலகு பாட்டுச் சொன்னவுடனேயே—* நினைந்து நைந்துள்கரைந்துருகி பாட்டு தொடங்குவதற்கு முன்னமேயே ஆழ்வார் ஒரு குட்டிச்சுவரிலே சென்று முட்டாக்கிட்டுக்கொண்டு கிடந்திருக்க வேணும். அப்போதே பொலிந்துநின்ற பிரான் பதறி யோடிவந்து தன் சீலகுணத்தை வாய்விட்டுச் சொல்லியோ, சரித்திரவிசேஷமொன்றை நினைப்பூட்டியோ அகலவொட்டாதபடி வளைத்திருக்கவேண்டும். அப்படி செய்திருக்கவில்லை யென்பது ஸ்பஷ்டம். ஆகவே அகலப் பார்த்தாரென்பதோ, அகன்ருரென்பதோ விஷயமேயன்று. ஆழ்வாருடைய நைச்யாநுஸந்தானங்களுக்குள் எந்த நைச்யாநுஸந்தானத்தினல் எம்பெருமானுக்கு அதிசங்கையுண்டாகி [அதாவது, ஐயோ! ஆழ்வார் நம்மைவிட்டுவிட்டாராகில் நம் கதி என்னே! என்று அச்சமுண்டாகி] தத்பரிஹாரம்செய்ய ப்ரவ்ருத்தி யுண்டாகிறதோ அப்படிப்பட்ட நைச்யாநுஸந்தானங்களையே தத்துக்களாகக் கூறுகின்ருர்கள் தத்வவித்துக்கள்.

15. பரிஹாரப்ரகாரங்கள் ஒரேவிதமன்று. மூன்றிடங்களிலும் மூன்று விதம். உலகிலும் பார்க்கலாம். தாரித்ரியத்தினல் ஒருவன் சோகிக்கிருன்; அவனுக்கு சோகநிவ்ருத்தியைப்பண்ண ஒரேவழிதானென்பது கிடையாது. (1) நான் உதாரனல்லவா ? என்று சொல்ல அதனுலும் சோகம் நிவ்ருத்தமாகும். (2) உனக்கு வேண்டியதை நான் கொடுக்கிறேனப்பா! என்று சொன்னுலும் சோகம் நிவ்ருத்தமாகும். (3) ஒன்றும் சொல்லாமலும்

இங்கிதங்களும் காட்டாமலும் உடனே கையில் காசு கொடுத்துவிட்டால் சோகம் நிவ்ருத்தமாமென்பது சொல்லவேண்டா. சோக நிவர்த்தந ப்ரகாரங்கள் இங்ஙனே பல வுண்டு. ப்ரக்ருதத்தில் பாருங்கள். (1) வளவேழுலகிலுண்டான தத்தை * திசைகளெல்லாம் திருவடியால் தாயோன் * என்னும்படி உலகளந்த கதை காட்டியும் [* உண்டாயுலகேழ் முன்னமே *] வெண்ணெய்க் கதை சொல்லியும் பரிஹரித்தான். (2) * பொருமாநீள்படையிலுண்டான தத்தை எம்பெருமான்தான் ஆழ்வாரை விடமாட்டாதவனென்பதைக் காட்டிப் பரிஹரித்தான். அதாவது, இனி பகவத்விஷய கதையே நமக்கு வேண்டாமென்று உறுதிகொண்ட ஆழ்வாருடைய பரிஸரத்திலே ஒருவனைப் போகவிட்டு அவன் வாயால் ஸ்ரீமந்நாராயணனென்று சொல்லுவித்து அம்முகத்தாலே ஆழ்வாரை அகலவிடாமல் ஈடுபடுத்திக்கொண்டது. இது * வளவேழுலகிற்செய்த பரிஹாரத்திற்காட்டிலும் விலக்ஷணமானது.

16. மூன்றுவது தத்தைப் பரிஹரித்தது இதனில் மிக விலக்ஷணம். இதை நன்கு விவரிக்கிறேன். * அந்தாமத்தன்பிலே * அல்லாவியுள் கலந்த * என்றவிடத்திலும் * என் முடிவு காணாதே * என்றவிடத்திலும் நைச்யம் தோன்றநின்றது. அந்த நைச்யாநுஸந்தானத்தினால் ஆழ்வாரிடத்திலே எம்பெருமானுக்கு அதிசங்கை உதித்தது. "இவ்வாழ்வார்க்கு ஏற்கெனவே இருமுறைவந்து கழிந்த நோய் மறுபடியும் தலைகாட்டத் தொடங்கிவிட்டது போலுள்ளதே; பழைய பரிஹாரங்களையே மீண்டும் செய்வதில் பயனில்லை; புதிய பரிஹார முறையும் ஒன்றும் தோன்றவில்லையே! என்செய்வது! இவரை இழந்தே போமித்தனையோ! என்று மிக வருந்தியிருந்தான். கண்ணுங் கண்ணீருமான நிலைமையையுங் காட்டி நின்றான். அதுகண்ட ஆழ்வார் "ஐயோ! நம்முடைய நைச்யாநுஸந்தானத்தினால் இப்படிப்பட்ட அநர்த்தமன்றோ விளைகிறது. ஆனந்தமயனாக ஓதப்பட்ட எம்பெருமான் சோகமயனாக ஆய்விட்டானே! இது நம்மால்வந்த அனர்த்தமன்றோ? இவ்வநர்த்தத்துக்கு நாம் ஹேதுவாகலாமோ? ஐயோ!" என்று அநுதபித்து எம்பெருமானுக்குத் தாம் அபய ப்ரதாநம்பண்ணும்படியாயிற்று. இந்த கெட்டத்தில் ஆழ்வாருடைய நைச்யாநுஸந்தானத்தினால் எம்பெருமான் மிக வருந்தினானென்பது எங்ஙனே தெரிகிறது? நீ நேரில் கண்டாயோ? உன் உல்லேகமோ இது? என்ன வேண்டா; * பொய்யிலாத மணவாளமாமுனிகளன்றோ இதனை நிஸ்ஸந்தேஹமாக அருளிச்செய்திருப்பது. * வைகுந்தன்வந்து கலந்ததற்பின் வாழ்மாறன், செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து * என்றதற்குமேல் என்னவுள்ளதென்று பார்க்கவேணும். "நைகின்ற தன்மைதனைக்கண்டு" என்றன்றோவுள்ளது, இதுவன்றோ இங்கு உயிரானவார்த்தை.

17. ஆழ்வாருடைய நைச்யாநுஸந்தானம் மட்டும் பாசுரத்தில் காணப்படுகிறது. அதாவது * அந்தாமத்தன்பிலுள்ளது. எம்பெருமான் வருந்தியது பாசுரத்திலில்லை. அப்படியிருக்க எதுகொண்டு நம்பிள்ளையும் மணவாளமாமுனிகளும் எம்பெருமான் வருந்தி நின்றதாக அருளிச்செய்கிறார்களென்று பார்க்கவேணும். ஸ்ரீவசநபூஷணத்தில் "ஶாஸ்த்ரம் என் கையாலே சோகஜநகம்" என்கிற ஸ்ரீஸூக்தியின் பொருள் தெரியுமன்றோ. அந்த ரீதி இங்கும் காணத்தக்கது. எம்பெருமான் சோகித்திருந்திலனாகில் * உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கனவே * என்று ஆழ்வா ரருளிச்செய்ய ப்ரஸக்தியே கிடையாது. இதனால் எம்பெருமானுக்கு சோகநிவ்ருத்தி யானது மட்டுமன்றிக்கே வடிவில் பௌஷ்கல்யமு முண்டாயிற்றென்றல்லவோ நம்பிள்ளை இரண்டாம் பாட்டுக்கு அவதாரிகையிட்டருளினர். * உன்னை நான் பிடித்தேன்கொள் சிக்கனவே * என்றதனால் எம்பெருமானுக்கு எவ்வளவோ ஸம்ருத்திகள் விளைந்ததாக அந்தப் பதிகமே நன்கு காட்டித்தருகின்றது. அதனை விசதவாக்சிகாமணிகள்

"உன்னைத்தான் விடேனென்றுரைக்க, வன்மையடைந்தான் கேசவன்" என்றருளிச்செய்தது சுநவசுமான ஸ்ரீஸூக்தியன்றோ. * வைகுந்தாமணிவண்ணனில் கேசவன் வன்மையடைந்தானென்றால் அதற்கு முன்னே வன்மையிழந்திருந்தா னென்பது சொல்லவேண்டுமோ? சொல்லவேண்டாவாயினும் * நைகின்ற தன்மைதனைக்கண்டு * என்று சூஷியாநிகமாகவும் சொல்லிவைத்தது. அப்படி வன்மை யிழந்திருந்தது ஆழ்வார் அகன்றிடுவரோ! என்னு மதிசங்கையால் தானே. வேறு காரணமுண்டாகில் ஸாதித்தருளலாம்.

18. ஆக, *அந்தாமத்தன்பிலே * அல்லாவியுள் கலந்த* என்றும் *என் முடிவு காணாதே யென்னுள் கலந்தானை * என்றும் ஆழ்வாரருளிச்செய்ததை எம்பெருமான் தன் சிந்தையிலே மனனம் பண்ணப்பண்ண, அவனுக்கு அஞ்சவேண்டியதாய் வந்துவிழுந்தது. என்னவென்று அச்சம்? தம்முடைய நைச்சியத்தைப் பேசின இவர் நம்மைவிட்டு அகல்வார் போலே யிருக்கிறதே! என்று கொண்டு அச்சம். கீதையிலே * ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்* என்றவனன்றோ எம்பெருமான். "* என்ன துன்னதாவியிலே அறிவாராத்மாவென்று அவன் மதம் தோன்றும்" என்றன்றோ ஆசார்ய ஹ்ருதயமும். ஆழ்வார் உயிராகவும், எம்பெருமான் உடலாகவுமிருக்கையில் உயிர் அகலப்பார்த்ததென்றால் உடலுக்கு அச்சம் அவர்ஜநீயமேயன்றோ. * மே மத மென்ற கீதை அபத்தமாகில் இதுவும் அபத்தமாகும். அதுவும் அபத்தமன்று, இதுவும் அபத்தமன்று. ஸர்வஜ்ஞனை எம்பெருமானுக்கும் இப்படியொரு அதிசங்கை யுண்டாகுமாவென்று நமது ஸம்ப்ரதாய ஸரணியில் படியாதவர்கள் க்ஷேபிப்பர்கள். நம்மவர்கள் க்ஷேபிக்க ப்ரஸக்தியில்லை. எம்பெருமானுக்கு அதிசங்கையுண்டானதையும், அச்சமுண்டானதையும், அந்த அச்சம் ஆழ்வாருடைய ஸஹயோஸ்தாநத்தாலே பரிஹாரமடைந்ததையும் ஆசார்யர்கள் நிரூபித்தருளியிருப்பதைப் பின்பற்றியே இவ்வளவுரைத்தோம்.

ஸப்தப்ரச்நஸமாதி:.

"மூன்றுதத்துக்குப் பிழைத்த" இத்யாதியான இந்த சர்ச்சையில் ஸ்ரீமதுபயவே. வித்வான் விஞ்சிமூர் ஆழ்வார்ஸ்வாமி தலையிட்டிருப்பது முன்னமே வெளியிடப்பட்டிருக்கின்றது. இடையில் பல வருஷங்கள் சாந்தமாகியிருந்த இந்த சர்ச்சை இப்போது [ஹேவிளம்பிஹூ திருவாடிப்பூரம் முதலாக] மீண்டும் கிளர்ந்திருக்கின்றது. அந்த ஸ்வாமியின் சில திருமுகங்களுக்காகவே மூன்றுதத்தின் மூலஸ்தானமென்னும் இச் சிறுநூல் எழுதலாயிற்று. அந்த ஸ்வாமி முடிவாக ஏழு கேள்விகள் கேட்டிருக்கிறார்; அந்தக் கேள்விகளையும் அவற்றிற்கு அடியேனுடைய விடைகளையும் இதன்கீழ் க்ரமேண வெளியிட்டு இதை முடிக்கிறேன்.

"அந்தாமத்தன்புதத்து விஷயத்தில் சில ப்ரச்னங்களை ஸவிநயமாய் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன். அவைகளுக்கு பரம க்ருபயா உத்தரம் அருளிச்செய்தருளவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

(1) அந்தாமத்தன்பில், ஐந்தாம் பாட்டிலுள்ள "அல்லாவியுள் கலந்த" என்னுமிடத்திலும், எட்டாம் பாட்டிலுள்ள "என் முடிவு காணாதே யென்னுள் கலந்தானை" என்னுமிடத்திலும் சேர்ந்து ஒருதத்து உண்டாயிற்றோ? அல்லது ஐந்தாம்பாட்டுத்தத்து வேறு, எட்டாம் பாட்டுத்தத்து வேறு என்று இருவுள்ளமா?

இதற்கு விடை:—* வளவேழுலகில் 1, 2, 7 பாட்டுக்களாகிற மூன்று பாசுரங்களிலும் சேர்ந்து ஒருதத்து என்று எப்படி வஸ்துஸ்திதியோ அப்படியேதான் இங்கும். ஒரு

பதிகத்தில் எத்தனை பர்யாயம் நைச்யாநு ஸந்தானம் நடந்தாலும் அந்த ஸ்தலத்தை நம் ஆசார்யர்கள் தத்து என்று திருவுள்ளம் பற்றியிருந்தால் அது ஒரு தத்தேயொழிய இரண்டு தத்தல்ல என்பதைச் சிக்கனக் கொள்க. இதை ஒருகாலும் மறக்கவேண்டா. கலங்கவேண்டா.

(2) வாலேழுலகில் 1, 2 பாட்டுத்தத்துக்கு மூன்றாம் பாட்டினவதாரிகையில் ஸௌசீல்யகுணாநுஸந்தானத்தால் பரிஹாரமுண்டானதாகவும், ஏழாம்பாட்டிலுண்டான தத்துக்கு எட்டாம்பாட்டி னவதாரிகையில் திருவாய்ப்பாடிவெண்ணெய் வ்ருத்தாந்தத்தால் பரிஹாரமுண்டானதாகவும், பொருமாநீள்படையில் ஏழாம்பாட்டிலுண்டான தத்துக்கு எட்டாம்பாட்டி னவதாரிகையில் ஸ்ரீமந்நாராயணன் என்கிற திருநாம ச்ரவணத்தால் பரிஹாரமுண்டானதாகவும் ஈட்டில் அருளிச்செய்திருப்பதுபோல் "அல்லாவி" தத்துக்கு, அடுத்த ஆறாம் பாட்டினவதாரிகையில் பரிஹாரம் உண்டானதாக அருளிச்செய்திருக்கிறாரா? "என் முடிவு காணாதே" தத்துக்கு ஒன்பதாம்பாட்டி னவதாரிகையில் பரிஹாரமுண்டானதாக அருளிச்செய்திருக்கிறாரா?

இதற்கு விடை:—* அந்தாமத்தன்பில் தத்து உண்டு என்பது ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. [அதுவே இச்சிறுநூலின் முக்கியவிஷயமாக விரித்துரைக்கப்பட்டுள்ளது காண்க.] இந்த தத்து எவ்வாறு பரிஹரிக்கப்பட்டதென்றால் "செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து நைகின்ற தன்மைதனைக் கண்டு" என்கிற நூற்றந்தாதிப் பாசுரத்தின்படியே எம்பெருமானால் தன்னுடைய அளவுகடந்த அவஸாதத்தைக் காட்டிப் பரிஹரிக்கப்பட்டது. "உன்னை நான் பிடித்தேன்கொள் சிக்கனவே" என்று ஆழ்வாரருளிச்செய்ததற்கு மூலமென்ன? என்பதையும், அதனால் தேறினதென்ன? என்பதையும் இன்னமும் க்ரஹித்திராவிடில் மீண்டும் உபபாதிக்கிறேன். * அந்தாமத்தன்பில் இரண்டு பாசுரங்களில் நைச்யாநுஸந்தானம் வெளிவந்தது. இது ஸ்வரூப ப்ராப்தமான ஸ்வாபாவிக நைச்யாநு ஸந்தானமாகவு மிருக்கலாம்; எம்பெருமான் அப்படி திருவுள்ளம் பற்றாமல் இது அகல்வதற்காகச் செய்த நைச்யாநுஸந்தானமென்று கொண்டு அழத்தொடங்கிவிட்டான். அந்த அழுகைதான் ஆழ்வாருடைய மூன்றுவது த்த்தைப் பரிஹரித்தது. * உன்னை நான் பிடித்தேன்கொள் சிக்கனவே * என்றதற்கு "நான் அகலமாட்டேனப்பா! அகலமாட்டேனப்பா! அழேலழேல்" என்பதே அர்த்தம்; இதுதவிர வேறு அர்த்தம் கிடையாது. ஆகவே எம்பெருமானுடைய அழுகைதான் ஆழ்வாருடைய மூன்றுவது தத்தைப் பரிஹரித்ததென்பது ஸ்பஷ்டம்.

(3) "இப்படி மூன்றிடத்திலே வந்து பரிஹ்ருதமானதாகையாலே" என்று மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்தி இருக்கிறபடியால் அந்தாமத்தன்பிலே யுண்டான இந்த மூன்றுவதுதத்துக்கும் பரிஹாரம் அவசியம் சொல்லப்பட்டிருக்கவேணுமே, அது ஈட்டில் எவ்விடத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது?

இதற்கு விடை;—* வைகுந்தாமணிவண்ணனீட்டு ப்ரவேசத்தின் முடிவில்—"இவர் தாம் இனி நம்மைவிடில் செய்வதென்! என்று அதிசங்கைபண்ணி அவன் அலமாக்கிறபடியைக்கண்டு 'நீ இங்ஙன்படவேண்டா' என்று அவனதிசங்கையைப் பரிஹரித்து அவனை யுளனாக்குகிறார்" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. அதன் பொருள் ஒருவருபதேசிக்கவேண்டும்படி இல்லையே. ஆழ்வார் எம்பெருமானுக்கு அளிக்கிற இந்த அபயப்ரதானத்தினாலேயே ஆழ்வாருடைய அருவினைநோய் பரிஹ்ருதமாய்விட்டதென்று தெரியவில்லையா? ஆழ்வாரிடத்தில் அருவினைநோய் அபரிஹ்ருதமாகவே யிருந்ததாகில் "உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கனவே" என்று அவர் சொல்ல ப்ரஸக்தியுண்டோ? ஒருவன் பிறவியே தொடங்கி ஊமையாய் இருந்தான்; ஒருநாள் அவன் பேசத்தொடங்கிவிட்டான்; ஆயிரம்பேர் முன்னிலையில் பேசாநின்றான். அப்போது "இவன் ஊமையல்லவா? இவனுடைய ஊமைத்தனம் போய்விட்டதென்று யார் எங்கே எழுதியிருக்கிறார்?" என்று கேட்பானொரு மேதாவியுண்டாகில், அந்த மேதாவி இந்த மஹாநுபாவரேயாகவடுக்கும். ஸந்நிபாத ஜ்வரம்வந்து அயர்ந்துகிடந்தவன் ஒருநாள் வீதிகளிலே உலாவாநின்றால் "இவனுக்கு ஜ்வரம் நீங்கிவிட்டதென்று யார் சொன்னார்? யார் எழுதிவைத்திருக்கிறார்? எங்கே யெழுதி வைத்திருக்கிறார்? என்று ஆக்ஷேபிப்பீர்போலும். ஆசார்ய ஸார்வபௌமர்கள் எழுதிவைத்திருப்பதிலும் குறையில்லையே.

(4) வைகுந்தாமணிவண்ணன் முதற்பாட்டினவதாரிகையிலுள்ள எம்பெருமானதிசங்கையும், கண்கள் சிவந்து ப்ரவேசத்திலுள்ள எம்பெருமானதிசங்கையும் ஒரேமாதிரியானதா, வெவ்வேறுமாதிரியானதா.

இதற்கு விடை;—இந்தக் கேள்வி எங்ஙனே யிராநின்றதென்றால், *வைகுந்தாமணி வண்ணனருளிச்செய்த ஆழ்வாரும் *கண்கள் சிவந்து அருளிச்செய்த ஆழ்வாரும் ஒரே வ்யக்தியா? வெவ்வேறு வ்யக்தியா? என்று கேட்பதுபோலிராநின்றது. கேண்மின். எம்பெருமானைவிட்டு அகலவேணுமென்று ஆழ்வார் ஒருகாலும் நினைத்தவரல்லர், நினைப்பவரு மல்லர். எம்பெருமானுடைய பெருமையையும், தம்முடைய தாழ்வையும் சொல்லவேண்டியது அனைவர்க்கும் ப்ராப்தமாகையாலே ஆழ்வாரும் தம் ஸ்வரூபம் நிறம்பெறத் தமது தாழ்வை—சிறுமையை—நைச்சியத்தை ஆங்காங்கு அநுஸந்திக்கிறார். வளவேழுலகோ, பொரு மாநீள்படையோ, அந்தாமத்தன்போ, இருத்தும் வியந்தோ....எல்லாவற்றிலும் இவ்வளவு தானுள்ளது. இந்த நான்கிடங்கள் தவிர மற்ற இடங்களில் தமது நைச்சியத்தை யநுஸந்தித் திலர் என்று சொல்லமுடியுமோ? இப்படி யநுஸந்தித்தவிடங்கள் அபரிமிதங்கள். ஆனால் இந்த நைச்யாநுஸந்தானத்திலிருந்து எம்பெருமானுக்கு அதிசங்கைவிளைந்தஇடங்கள் நான்கே. நான்கிலும் துல்யமான அதிசங்கைதான். பரிஹாரப்ரகாரத்தில்மட்டுமே வாசியுள்ளது. ஸ்வாமிந்! எதை மறந்தாலும் இஃதொன்றைமட்டும் மறவாமல் சிக்கனக்கொள்ளவேணும்.

(5) "அருவினைநோய் மறுவவிடாமல்" என்கிற மூல ஸ்ரீஸூக்தியாலும் அதன் வியாக்கியாந ஸ்ரீஸூக்திகளாலும் அகலில் செய்வதென் என்று பயந்து அகலுவதற்கு முன்னமேயே ஆத்ம ஸ்வரூப வைலக்ஷண்யத்தைக்காட்டினான் என்று தெளிவாக ஏற்படுவதுபோல் 'வைகுந்தாமணிவண்ணன்' முதற்பாட்டிலுண்டான எம்பெருமானதிசங்கையை அகலுவதற்கு முன்னமேயே தீர்த்துவைத்தாரா, அகன்று வெகுதூரத்திற் போனபின்பா?

(6) அகலுதல் உண்டாவதற்கு முன்பேயே என்று ஒப்புக்கொள்ளில், வளவேழுலகு, பொருமாநீள்படைதத்துக்களோடு, அந்தாமத்தன்புதத்து ஸமாநஸ்கந்தமாக எப்படி ஆகமுடியும்?

(விடை) இக்கேள்விகளை அசட்டுக் கேள்வியென்று ஒதுக்கவேணும்; ஆனாலும் அமைதியுடன் விடையிறுக்கிறேன். வளவேழுலகிலும் ஸரி, பொருமாநீள்படையிலும் ஸரி, ஆழ்வார் திருப்புளியாழ்வாரடியை விட்டுப்பெயர்ந்தது கிடையாது; கடுகளவும் பெயர்ந்தது கிடையாது; *தூதுரைத்தல் செப்புமின்கள் என்ற பாட்டில் *தூமொழிவா யென்ற விடத்து ஈட்டில்— "பெருமாளு மிளையபெருமாளும் கையும் வில்லுமாய் வருகிறபடியைக் கண்டு 'இவர்கள் வாலி வரவிட வருகிறார்களோ!' என்றஞ்சி மஹாராஜர் நாலு மூன்று யோஜநம் அவ்வருகே யோட" என்று நம்பிள்ளை யருளிச் செய்கிறார். தாசரதிகளைக்கண்டு அஞ்சின ஸுக்ரீவன் மூன்று நான்கு காததூரம் ஓடிவிட்டதாக இதற்குப் பொருள். ஸ்ரீராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டம் – இரண்டாம் ஸர்க்கத்தில் *உத்விக்ந ஹ்ருதய ஸர்வா திஸஸ்ஸமவலோகயந் । *நவ்யதிஷ்டத கஸ்மிம்ஸ்சித் தேசே வாநரபுங்கவ:* என்றும், *ஸ ஸசிவான் பரித்ராதும் ப்லுதோ ஹரிபுங்கவ:* என்று முள்ளது. இடையில் *ஜகாம ஸஹஸா ஸாலாத் பர்வதாந் ந்ருஹரி ஸாமந்த:* என்று முள்ளது. ஆனாலும் *யதி நயாதி யவே வஹதி ஸாரஸ்ஸாக் க்ஷணே ந தங்கம்ருதா: । ருஷி தாநி ஸமாராஸ்ய ந்யவஸாணி ஸநஸ்தைவ ஷ்டிதாநி* என்ற கணக்கிலே நம்பிள்ளையருளிச் செய்தது இன்சுவைமிக்கதே. ஸுக்ரீவன் இடத்தைவிட்டுப் பெயர்ந்து அங்குமிங்கும் சிதறியோடினதுண்டாகையாலே அங்ஙனமருளிச் செய்யக் குறையில்லை. ஆழ்வாரோ திருப்புளியிலே அசைந்தாலும் தாம் அசைபவரல்லர். வ்யாக்யாந சதுரர்களான ஆசார்ய ஸார்வபௌமர்கள் 'ஆழ்வார் அகன்றார்' என்றெழுதியிருந்தாலும், அகலப்பார்த்தார், அகல நினைத்தார் என்பதுதான் அதற்குப் பொருள். சிறிய திருமடலில் கட்டுவிச்சியின் செயலைச் சொல்லத் தொடங்கினபோது *பேராயிரமுடையானென்றாள்* என்றும் *சீரார்வலம்புரியே யென்றாள் * என்றும் * திருத்துழாய்த் தாரார்நறுமாலை

கட்டுரைத்தாள்* என்று முள்ள விடங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளை என்ன வியாக்கியானமருளினுரென்று பார்க்கவேணும். வாய்விட்டுச் சொன்னதாக மூலம் காட்டினுலும் வாய்விட்டுச் சொன்னமையில்லை யென்றன்றே வியாக்கியான முள்ளது. ஆழ்வார் அகல நினைத்தா ரென்பதும் அதிசங்கை கொண்ட எம்பெருமான் நினைவாலத்தனை. ஆழ்வார் திருநகரித் திருவீதியில் வருவாரையும் செல்வாரையும் திருவண்பரிசாரத்திலிருந்து வருவாராகவும் திருவண்பரிசாரத்திற்குச் செல்வாராகவும் ஆழ்வார் எண்ணினது போலவே, ஆழ்வார் ஸ்வரூபப்ராப்தமாகப் பண்ணின நைச்யாநுஸந்தானத்தை அகல்வதற்காகச் செய்ததாய் எம்பெருமான் எண்ணினுனத்தனை. ச்ருதப்ரகாசிகையில் "ஸம்பந்தவிசேஷாந் நிதர்சயதி வீதீः க்ருஹா:; யஸ்ய விவாஹ: ஸ்வர்க்கம் நஹயபரம்ஸிகவழ......." என்றருளிச் செய்திருப்பது பெரியாழ்வார் போல்வாரான ஆழ்வார்கள் பக்கலிலே ஸமந்விதமாகிறுப்போலே எம்பெருமான் பக்கலிலும் ஸமந்விதமாகக் குறையில்லை. ஆழ்வார் பகவத் விஷயம் நடையாடாத தேரிடத்திலே போய்ப் புக்கொளிக்கவேணுமென்று கருதி ஒரு குட்டிச்சிவரிலே முட்டாக்கிட்டுக் கொண்டு கிடந்தாரென்று நம்பிள்ளை ஈஸவநமாக அருளிச்செய்த சாடுக்தியைக் கொண்டு ஆழ்வார் திருநகரியில் ஒரு ஸ்வாமி தம் திருமாளிகைப் பக்கத்திலுள்ள ஒரு குட்டிச்சுவரைக்காட்டி "இதுதான் பொருமாநீள்படையிலாழ்வார் முட்டாக்கிட்டுக்கொண்டு கிடந்த குட்டிச்சுவர்" என்று ஐதிஹ்யம் சொல்லிக்கொண்டிருந்தாராம். மற்றொரு கிழவர் தம் திருமாளிகையில் கோயிலாழ்வாரில் ஒரு ஜீர்ண வஸ்த்ரத்தை அமுக்கி வைத்து இதுதான் முன்பு ஆழ்வார் குட்டிச்சுவரிலே முட்டாக்கிட்டுக்கொண்டிருந்த திருப்பரிவட்டம் என்று காட்டிக்கொண்டிருந்தாராம். கிங்குர்ம: கிமநுஷ்டேயஸ்யாயம் ஸம்விதோ துச?

ஸாரமாகக் கேளீர். அகன்றுரென்பது எங்குமே கிடையாது. நைச்யாநுஸந்தானம் பண்ணின ஆழ்வார் நம்மை விட்டிடுவரோ! என்று எம்பெருமான் அதிசங்கித்தது தானுள்ளது. இவ்வதிசங்கையினுல் ஆழ்வார்க்குத் தன்னிடத்தில் ஆபிமுக்யம் மிகும்படியான வழியைத் தேடினுனெம்பெருமான். *அந்தாமத்தன்பில் கண்ட நைச்யாநுஸந்தானத்தினுல் ஆழ்வார் நம்மை விட்டுவிடுவரோ! என்று அதிசங்கித்தானெம்பெருமான் என்பது அபலபிக்கப் போகாது; அந்த அதிசங்கையினுல் நைந்து வருந்தினுன் என்பதும் அபலபிக்கப்போகாது. அந்தவருத்தத்தை ஆழ்வார் கண்டாரென்பதும் அபலபிக்கப்போகாது; கண்டஆழ்வார் எம்பெருமானுக்கு அபயப்ரதாநம் செய்தாரென்பதும் அபலபிக்கப்போகாது. இவ்வளவால் அருவினைநோய் பரிஹ்ருதமாயிற்று என்பதும் அபலபிக்கப்போகாது. பலமுறை பன்னிப் பன்னியுரைத்தானுர் இது க்ரஹிக்கப்படவில்லையென்பதும் அபலபிக்கப்போகாது. விஷயம் தெளிவாக மனத்தில்பட்டும் தப்பிடத்தில் ஏதோ சரக்கிருப்பதாகக் காட்டிக்கொண்டு ஓயாமல் வெள்ளைக் காகிதங்களைக் கறுப்பாக்கி வருகிறுரென்பதும் அபலபிக்கப்போகாது. ஆனுல் அபலபிக்கப்படுவது ஒன்றே; அதுதான் அந்தரங்க ஸாக்ஷ்யம். தஜ்ஜம் ஸர்வஜ்ஞவேதி.

ஸஹஸ்ரபரம்பரா நந்வே!,—அகல்வதற்கு முன்னேயா பின்னேயா என்கிற அஸமஞ்ஜஸ ப்ரச்நங்கள் மீண்டுமீண்டும் தலைகாட்டவேண்டா. கண்ணபிரான் அக்ரூரரைப் பரிஷ்வங்கித்தபோது *ஸம்ஸ்பர்சமாத்ர ஸமுத்பந்ந ப்ரீத்யா ஸம்ஹ்ருஷ்ட விசிஷ்டஸங்கே* என்றுர் முனிவர். ஸம்ஸ்பர்சித்தவுடனே அக்ரூரர் *அம்மானுழிப்பிரானவன் எவ்விடத்தான்யானுர்?* என்று இருய்த்தார்; எட்டடியோ பத்தடியோ பிற்காலித்தார். அவரைக் கண்ணபிரான் வலியப் பிடித்திழுத்து அணைத்தானென்பது ஆக்ர்ஷ்ய என்பதனுல் தெரியவருகின்றது. ஆழ்வாருடைய பரிமாற்றம் அத்தனைத்தன்று. ஆசார்ய ஹ்ருதயத்திலேயே "இவற்றுல்வரும் ஸம்ச்லேஷவிச்லேஷங்களாகிறன...தர்சந ஸமமான மாநஸாநுஸந்தானமும், திண்கொள்ளப்

பெறுத மநச்சைதில்யமும்" என்றருளிச்செய்திருப்பதும் அவ்விடத்து மாமுனிகளின் வியாக்யானமும் காண்க. ஏதுவும் மாநஸாநுபவமாத்ரமே யல்லது வேறல்லவே. *வளவேழுலகு தலையெடுத்து ஆழ்வார் அகன்ருரென்ருல் திருநகரியைவிட்டுத் திருச்செந்தூருக் கெழுந்தருளிவிட்டாரென்ருே நினைத்திருப்பது? தேவரீருடைய ஐந்தாவது கேள்வியின் முடிவில்—"வைகுந்தாமணிவண்ணன் முதற்பாட்டிலுண்டான எம்பெருமானதிசங்கையை அகலுவதற்கு முன்னமேயே தீர்த்துவைத்தாரா? அகன்று வெகுதூரத்திற்போனபின் தீர்த்துவைத்தாரா?" என்று கேட்டிருப்பதை நினைக்க நினைக்க வியப்பும் வெறுப்பும் சிரிப்புமுண்டாகிறது. *வைகுந்தா முதற்பாட்டில் எம்பெருமானுக்கு அதிசங்கையுண்டானதாக யாரும் சொல்லவில்லை. *அந்தாமத்தன்பில் இரண்டு சந்தைகளைக் கேட்டபோது எம்பெருமானுக்கு அதிசங்கை யுண்டாயிற்றென்றும், அவ்வதிசங்கை *வைகுந்தா முதற்பாட்டில் பரிஹ்ருதமாயிற்றென்றும் இங்ஙனேதான் ஆசாரியர்கள் ஸாதித்திருப்பதும் அடியேன் விஜ்ஞாபிப்பதும். "அகல்வதற்கு முன்னமேயே தீர்த்துவைத்தாரா? அகன்று வெகுதூரத்திற் போனபின் தீர்த்துவைத்தாரா?" என்கிற கேள்வி பகவத்விஷயம் நடையாடாதவிடத்திலிருப்பார் கேட்கத்தக்கதத்தனை. அகன்றதே கிடையாதென்று கல்வெட்டாகச் சொன்னபின் சிறிது தூரம் போவது, வெகுதூரம்போவது என்கிறபேச்சே அப்ரஸக்தம். அஸமஞ்ஜஸம்.

(7) அம்ருதலஹரியில் த்ருஷ்டாந்தமாக எடுத்த அஞ்சிறையமட நாரையின் எட்டாவது பாட்டான "நீயலையே சிறுபூவாய்" என்னும் பாட்டில் தூதுவிட்டமை உண்டா, இல்லையா?

அடியேனுடைய இந்த ஏழு ப்ரச்நங்களுக்கும் க்ருபயா தெளிவாக உத்தரம் அருளிச்செய்யவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

இதற்கு உத்தரம்;—* நீயலையே பாட்டில் *நோயெனதுநுவல்* என்றவளவில் வாக்யபேதம் பண்ணினுல் தூதுவிட்டதாகச் சொல்லலாம். அதற்கு ஔசித்யமில்லை. ஆகவே தூதுவிட்டமையில்லையென்பதே எனது கொள்கை. தூதுவிட்டமையுண்டுதானென்னில்; அங்ஙனமே தாராளமாகக் கொள்க. மறுப்பேனல்லேன். வாத விவாதங்களில் கேட்கிற கேள்விகள் ப்ரதானமான விஷயத்தில் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்திற்கும் ஸ்வபக்ஷ ஸ்தாபனத்திற்கும் உபயுக்தமா யிருக்கவேண்டும். "ஞாயிற்றுக்கிழமைமாலையில் எதற்காக ராஹுகாலம்? திங்கட்கிழமை காலையில் எதற்காக ராஹுகாலம்" என்றும் கேட்கலாமே.

ஸ்ரீபாஷ்யாதிகளில் தத்வார்த்தஜ்ஞான முண்டாவது எளிது; பகவத் விஷயத்தில் அஃதுண்டாவது மிகவுமரிது. ஆழ்வார் *அஞ்சிறையமடநாரையில் *திருவடிக்கீழ் குற்றேவல்....அகல்வதுவோ விதியினமே* என்று வாய்விட்டு அகலுகையை ப்ரஸ்தாவித்திருக்கிருர். [இது *வளவேழுலகுக்கு முன்னமேயே.] *அகல்வதுவோ விதி* என்ற அந்தப் பாசுரமும் எம்பெருமான் திருச்செவியில் விழுந்ததே. அப்போது அப்பெருமான் என்ன செய்தான்? 'அகன்றுபோனுல் போமே' என்று எம்பெருமான் உபேக்ஷித்திருந்துவிட்டதாகவே அடுத்தபாட்டி னவதாரிகையில் ஸாதித்திருப்பதைக் காணலாம். மேலுள்ள பாசுரத்திற்குத் தக்கபடி அவதாரிகை யிடவேண்டியிருந்ததனுல் இங்ஙனே அவதாரிகையிட்டருளினுர். கடைசியாக, *சிறியேனென்றதின் பெருமையைக் காட்டின *கண்கள் சிவந்துக்குப் பிறகு ஆழ்வார்க்கு நைச்யாநுஸந்தான முண்டாகாமலிருந்ததா? என்று பார்ப்போம். அது எப்படி உண்டாகாமலிருக்கமுடியும்? திருக்காட்கரைப் பதிகத்தில் *வெறிகமழ்சோலைத் தென்காட்கரை யென்னப்பன், சிறியவென்னுருயிருண்ட திருவருளே* என்றிருப்பதை உற்றுநோக்கவேணும். *இருத்தும் வியந்தில் *சிறியேனுடை* என்றதைக் கேட்டு ஸம்ப்ரமித்த எம்பெருமான் அதைவிட அதிகமாக இங்கு ஸம்ப்ரமிக்கவேணுமே; ஏன் ஸம்ப்ரமிக்கவில்லை? என்று கேட்டால் வாய்திறப்பாருண்டோ? இத்தகைய அரும்பெரும் பொருள்களை வாரியிறைக்க யானே தவஞ்செய்தேன். தற்போது இவ்வளவோடு நிற்கிறேன். .... *

அடியேன் பரிஷ்கரித்து வெளியிட்ட
புராதந க்ரந்தங்கள்

1. శ్రీ విష్ణుపురాణమ్ - மூலம் மட்டும்
2. భగవద్రామానుజ గ్రన్థమాలా (இந்த ஸ்ரீ கோசம் இப்போது கிடைப்பதில்லை)
3. भगवद्रामानुजग्रन्थमाला - ஸமீபப் பதிப்பு
4. सहस्रनामभाष्यम्
5. భగవద్విషయమ్ - ఈడు
6. பகவத்விஷயம்—ஈடு
7. முதலாயிர வியாக்கியானம் (இது 40 வருஷங்களுக்கு முன் ஸ்ரீஸுதர்சன அச்சுக்கூடத்தில் ஸ்ரீ காதிஸ்வாமி நியமனத்தினால் அச்சிடுவிக்கப்பட்டது. இப்போதும் அவ்வச்சுக் கூடத்தில் கிடைக்கும்.)
8. श्रीमद्वेदान्तदेशिकग्रन्थमाला
9. శ్రీ దేశికరహస్య దేశికప్రబన్ధాః
10. దేశికస్తోత్రాణి
11. పాదుకాసహస్రమ్
12. శ్రీమద్వరవరమునీన్ద్ర గ్రన్థమాలా
13. ஆசார்யஹ்ருதய வியாக்கியானம் (மணவாள மாமுனிகள்)
14. श्रीवचनभूषणमीमांसाभाष्यम्
15. సంప్రదాయచన్ద్రికా (இப்போது அரிது)
16. రహస్యత్రయ కారికావళీ
17. పురుషకార మీమాంసా
18. దివ్యసూరి చరితమ్
19. பரந்த ரஹஸ்யம் - மாணிக்கமாலை
20. தேசிக ரஹஸ்யங்கள் 16
21. सिद्धित्रयम्
22. यतीन्द्रमतदीपिका
23. భగవద్విషయ ప్రమాణ తిరట్టు
24. మూవాయిరవ్యాఖ్యానప్రమాణ తిరట్టు
25. రహస్యవివేకః
26. బ్రహ్మసూత్రాణి
27. ఉపనిషత్సంగ్రహః
28. ఇతిహాసపురాణ ప్రమాణసంగ్రహః
29. நாலாயிர திவ்யப் பிரபந்தம்
30. அத்யாபகஹஸ்த பூஷணம்
31. रघुवंशकाव्यम्
32. కైశికపురాణమ్ (భట్టర్)
33. கைசிக புராணம் (பட்டர்)
34. ముదలాయిరమ్ మూలమ్
35. తిరువాయ్మొழி ,,
36. అరుళిచ్చెయల్ రహస్యమ్
37. ముముక్షుప్పడి తత్త్వత్రయమ్, శ్రీవచన భూషణమ్(మూలమ్)
38. తత్త్వశేఖరమ్ - అర్చిరాది - ప్రమేయ శేఖరమ్ - ప్రపన్న పరిత్రాణమ్ ,,
39. ఆచార్యహృదయమ్ ,,
40. நித்யாநுஸந்தானம்.
41. सकलपूर्वाचार्यस्तोत्रमाला
42. నిత్యానుసంధేయ స్తోత్రజాలము
43. పఞ్చస్తవ శ్రీరఙ్గరాజస్తవౌ
44. ஸ்ரீ ராமாயண ஸௌரபம். (ஸ்ரீ ராமாயண தனி ச்லோகி.)
45. ஸ்தோத்ரரத்நமஹோததி: 1, 2.

---

45 ஸ்தோத்ர ரத்ந மஹோததி யென்னுமிந்த க்ரந்தம் இரண்டு ஸம்புடமானது. தேசிக ஸ்தோத்ரங்கள் தவிர, மற்ற ஸகல ஸ்ரீவைஷ்ணவாசார்ய ஸ்தோத்ரங்களும் இவ்விரண்டு ஸம்புடங்களிலும் சேர்ந்துள்ளன. ஸ்ரீ உ. வே. (வைகுண்டவாஸி) குணகரம்பாக்கம். அனந்தாண் பிள்ளை, பண்டித. அனந்தாசார்ய ஸ்வாமியால் தமது அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. இது அச்சிடத் தொடங்கின போது அந்த ஸ்வாமிக்கு அடியேனிடத்தில் நல்ல அபிப்பிராயமில்லாமலிருந்தது. “பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளில் இவன் ஸ்வதந்திரமாகத் திருத்தங்களைச் செய்பவன்” என்று விபரீதாபிப்ராயம் கொண்டிருந்தார். அதனால், இவர் அடியேனுடைய ஸமீபத்திலேயேயிருந்தும் அடியேனுடைய உதவியைக் கொள்ளாமலே தாமே பரிசோதித்து, அச்சிடத் தொடங்கிச் சில பாரங்கள் அச்சிட்டுவிட்டார். அந்த ஸமயத்தில் “ஸுகதரமாராத்யதே விசேஷஜ்ஞ:” என்றதை நினைத்து இவரை அடியேனாக உபஸர்ப்பணம் பண்ணி, பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் நேர்ந்துள்ள பாடப் பிழைகளையும், திருத்தவேண்டிய ப்ரகாரங்களையும் ஐந்தாறுநாள் தொடர்ந்து ஸப்ரயாணமாக விஜ்ஞாபிக்க, ஸுப்ரஸந்நஹ்ருதயராய் சோதநபாரத்தை அடியேனிடமே ஒப்படைத்து, அதன் முகவுரையில் “இந்த ஸ்தோத்ரங்களில் அந்த பரம்பரையில் வந்த அபத்தபாடங்களெல்லாம் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் அகற்றப்பட்டிருக்கின்றன” என்றெழுதி இரண்டு ஸம்புடங்களிலும் பதிப்பித்துள்ளார்.

இத் தன் சரிதையில் விளங்கும் உருவப் படங்களுக்கு அட்டவணை.

மடாதிபதிகளும், வித்வான்களும் மஹநீயர்களும், பக்தமணிகளும், கோஷ்டியாயிருப்பவர்களும் வரிசையாகத் தெரிவிக்கப்படுகிறார்களிங்கு.

1. மடாதிபதிகளின் திருவுருவப் படங்கள்.

பக்கம்
3. ஸ்ரீகாஞ்சீ அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி (மாதாமஹர்)
42. வர்த்தமாந வானமாமலை ஸ்வாமி
45. ,, திருக்குறுங்குடி ஸ்வாமி
78. ,, திருமலைதிருப்பதி சின்ன ஜீயர்ஸ்வாமி
216. ,, அழகிய சிங்கர்
217. ,, ப்ரஹ்மதந்த்ரபரகால ஸ்வாமி

பக்கம்
220. வர்த்தமாந காமகோடி சங்கராசாரிய ஸ்வாமி
66. வர்த்தமான ஆண்டவன்
56. இஞ்சிமேட்டழகிய சிங்கர்
84. வானமாமலை சின்னகலியன் ஸ்வாமி
58. தேரழுந்தூ ராண்டவன்
207. ஆக்கூராண்டவன்
214. 41-ஆம் பட்டம் அழகிய சிங்கர்

2. வித்வான்களுடையவும் மஹநீயர்களுடையவும்.

பக்கம்
2. ஸ்ரீகாதி. அனந்தாசார்ய ஸ்வாமி
24. குன்றபாக்கம் ஸ்ரீநிவாஸார்ய ஸ்வாமி
5. புரிசை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி
8. புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி
9. சரண்யாசார்யவாதி கேஸரிகள்
12 கஸ்தூரி ரங்காசார்யஸ்வாமி
15. குண்டலம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி
16. ஆஸூரி ராமாநுஜாசார்ய ஸ்வாமி
20. கோயில் பத்தராவி ஸ்வாமி
22. ஈச்சம்பாடி நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி
23. ஈச்சம்பாடி ராமாநுஜார்ய ஸ்வாமி
27. ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யா:
29. மண்டயம் ஆழ்வார்ஸ்வாமி
33. திருக்கண்ணபுரம் பட்டப்பாஸ்வாமி
34. கிடாம்பி தெய்வசிகாமணி ஸ்வாமி
35. குவளக்குடி சிங்கமையங்கார்
39. அரையர் வடபத்ரமையங்கார்
40. விஞ்சிமூர் ஆழ்வாரையங்கார்
41. இளையவில்லி சடகோபார்ய ஸ்வாமி
43. அ. வீ. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி
49. S. ரங்கஸாமி ஐயங்கார் (குடந்தை)
52. விரக்தி. பாஷ்யகாராசார்யஸ்வாமி
53. மயிலை கோபாலஸ்வாமி ஐயங்கார்
57, 160. ஸர். எஸ். வரதாசார்ய ஸ்வாமி
65. வில்லியம்பாக்கம் கோபாலதாதாசார்ய ஸ்வாமி

பக்கம்
74. வை.மு. சடகோபராமாநுஜாசார்யா:
75. ,, கோபாலக்ருஷ்ணமாசார்யா:
88. வி. ப்ர. ரங்கஸ்வாமி ஐயங்கார்
97. மாம்பள்ளம்ஸுதர்சநாசார்யஸ்வாமி
98. கோவர்த்தனம். ரங்காசார்யர்
100. வேதவாத்யார். க்ருஷ்ணமாசார்யா:
101. விக்ரமம். கனபாடி. வெங்கடாசார்
123. T. ஆராவமுது தாதாசார்யா:
127. மெ. ஸுந்தரராஜாசார்யா:
134. கபிஸ்தலம் தேசிகாசார்யா:
136. எம்பார் க்ருஷ்ணமாசார்யா:
137. லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யா:
140. காரப்பங்காடு சிங்கப்பெருமாள்
141. புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசார்
153. } அக்காரக்கனி. ராமாநுஜாசார்யா:
153. } ,, பாஷ்யகாராசார்யா:
157. ராமநாதபுரம். ராகவையங்கார்
161. மாம்பலம்.S.வாஸுதேவாசார்யா:
164. M. ஸுதர்சனமையங்கார்
167. T. S. நடேச சாஸ்திரிகள்
173. மதுரை R. நரஸிம்ஹய்யங்கார்
174. ,, S. ஸுந்தரராஜய்யங்கார்
175. கீழ்ப்பாக் V. ராஜகோபாலாசாரி
179. குளித்தலை ராஜகோபாலையங்கார்
187. அத்தங்கி குமாரதாதாசார்யஸ்வாமி
190. ஸ்ரீசைல. சக்ரவாத்யாசார்யா:

பக்கம்

191. வேதவ்யாஸ திருமலை பட்டர்.
192. C.R.ராமஸ்வாமி ஐயங்கார்,கோவை
193. நவநீதம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி
194. திருவஹீந்திரபுரம். பாஷ்யகாரர்:
199. வானமாமலை. ஸ்ரீநிவாஸய்யங்கார்
200 தே. ஸ்ரீநிவாஸய்யங்கார் (அதிகாரி)
201. M. ஸௌந்தரராஜய்யங்கார்
202. மாம்பலம். S. ராகவையங்கார்
204. எம்பார். ஜீ. ஸ்ரீநிவாஸாசார்யார்:
205. பிள்ளைலோகம். திருவேங்கடாசார்
206. மதுரை. ராமஸ்வாமி ஐயங்கார்
213. அத்தங்கி. தெட்டு. தாதாசார்யார்:
222. ஊ. வெ. சாமிநாதய்யரவர்கள்
224. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி
231. S. R. S. ராகவன்ஸ்வாமி, டில்லி
236. } டாக்டர். ஸர். K. S.
246. } க்ருஷ்ணன்ஸ்வாமி, F. R. S.
235. திருநாங்கூர். க்ருஷ்ணமாசார்யார்:
236. விசாகப்பட்டணம். ரங்காசார்யார்:
237. திருப்புகழ் க்ருஷ்ணஸ்வாமி ஐயர்
239. அரையரண்ணா
244 A கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்
245. மங்கலம். ராமாநுஜாசார்யர்

பக்கம்

247. C. S. பார்த்தஸாரதி ஐயங்கார்
249. நடாதூர் க்ருஷ்ணமாசார்யார்:
250. தத்புத்ரரத்ந. ராகவாசார்யார்:
251. காளி. ரங்காசார்யார்:
254. P. K. ராஜகோபாலையரவர்கள்,
255. S. T. G. வரதாசார்யார்:
256. அக்காரக்கனி. ஸம்பத்குமாராசார்
257. நம்பிள்ளை ஸன்னிதி
259. தேவப்பெருமாள்
260. முதுனூர்பாடு.வேங்கட நரஸிம்ஹார்:
264. அம்ருதூர். ராமாநுஜாசார்யார்:
265. தென்திருப்பேரை.ராமசந்திராசார்
266. கரியமாணிக்கம் V. V. ஐயங்கார்
269. கூடாலை. P. B. கோவிந்தாசார்யார்:
269. ப்ரயாக. திருமலாசார்யார்:
270. ஸ்வீக்ருதபுத்ரேண ஸஹ
272. திவான்பஹதூர் ஆராவமுதைங்கார்
349. ஸ்ரீவில்லிபுத்தூர். விஞ்சிமூர்
சோலைமலையாசார்ய ஸ்வாமி
351. V.S.தோதாத்ரி ஐயங்கார்
357. V. T. க்ருஷ்ணமாசாரியாரவர்கள்
378. S. ஸத்யமூர்த்தி ஸ்வாமி - க்வாளியர்
359. கிடாம்பி. கோபாலக்ருஷ்ணமாசார்

3. பக்த பாகவதமணிகளின் உருவப் படங்கள்.

பக்கம்

124. ஆத்தூர். ஸ்ரீமான் கேசவலு நாயுடு
152. குராஸா மஹந்த் பாகவதாசாரி
154. உஜ்ஜயினீ ,, கருடத்வஜாசாரி
165. ஊரா. ஸ்ரீராமுலு செட்டியார்
238. காசீ கோஸ்வாமி தாமோதரலால்
240 காசீ தேவநாயகாசாரி
241. நேபாள மஹந்த் ராமாநுஜதாஸ்
169. A. ஷண்முகசுந்தர முதலியார்
172. K. நாராயணப்ப நாயுடுகாரு
176. கொஞ்சேடி. ஸுப்ராயலு செட்டி

பக்கம்

252. கொஞ்சேடி. சேஷாசல செட்டி
262. கொம்பெல்லி. ஆண்டாளம்மா
353. ராஜா கோவர்த்தனலால் பீதீ
353. ,, ப்ருந்தாவனலால் பீதீ
351. K. S. S. ராமாநுஜம், கல்கட்டா
369. உப்பட்டூர். எம்பெருமானார் செட்டி
,, ஆனந்தகிருஷ்ண செட்டி
,, ஸேதுராம் செட்டி
376. கிருஷ்ணா ஜில்லாவில் இரண்டு
பக்த மணிகளுடன்

4. ஸமஷ்டி கோஷ்டித் திருவுருவப் படங்கள்

பக்கம்

17. காழியூர். ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி
காலக்ஷேபகோஷ்டி
33. கோயில். மெய்யுவையங்கார் ,,
48. திருக்குடந்தை ஸ்ரீநிவாஸாசார்ய ,,

பக்கம்

103. வைதிக கோஷ்டி :—
தி. அ. பு. ஸ்ரீநிவாஸாசாரி,
கோ. க. அ. ராமாநுஜாசாரியர்,
தி. வி. சிங்கராசாரியர்,

பக்கம்
மா. கு. நரஸிம்ஹாசாரியர்,
மா. பாஷ்யகாராசாரியர்.
105. விருதுபெற்ற வைதிக கோஷ்டி :—
தி. வி. சிங்கராசாரியர்,
மணவாள ஸ்ரீநிவாஸாசார்யா:,
கற்பூரம். வேங்கடாசாரியர்,
தி. அ. தொட்டயாசாரியர்,
கோ. க. அ. ராமாநுஜசாரியர்,
மா. கு. நரஸிம்ஹாசாரியர்,
தி. க. பார்த்தஸாரதி ஐயங்கார்,
தி. ந. ச. திருவேங்கடாசாரியர்.
108. ஸ்வகீய திருமந்த்ரார்த்த
காலக்ஷேப கோஷ்டி
109. ஏலூர் வைதிக பரிஷத்தின் பகுதி.
115. கோயில். ப்ர. கண்ணமாசாரியர்,
தி. அ. கிருஷ்ணமாசாரியர்,
தி. த. சேஷாத்ரி ஐயங்கார்,
கிடாம்பி. ரங்கஸாமி ஐயங்கார்,
116. இளையவில்லி. சடகோபாசார்யா:,
(தத்புத்ர) பூவராஹாசார்ய:,
(மத்புத்ர) ரங்கநாத:,
கநிஷ்டஜாமாதா. திருமலாசார்ய:
117. நம்பிள்ளை ஸன்னிதி. நித்ய
காலக்ஷேப கோஷ்டி
120. ஸ்வகீய நித்ய ப்ரதக்ஷிண கோஷ்டி
122. நெல்லூர். வெங்கடாசார்ய ஸ்வாமி
யின்ஷஷ்ட்யப்தபூர்த்தி கோஷ்டி.
125. கள்ளக்குரிச்சி. திருப்ரதிஷ்டை
170, 171. திருமலையில் உலகமுண்ட
பெருவாயன் சாத்துமுறை
கோஷ்டிகள் 2.
177. நமது ஸத்காலக்ஷேபஸபா மெம்பர்
களின் குழு.
186. விசேஷோபந்யாஸ ஸபா கோஷ்டி
189. (க்ரந்தமாலா சோதக ஸமிதி.)
அ. மு. ஸ்ரீநிவாஸாசார்யர்,
அ. ஸம்பத் குமாரா சார்யர்.

பக்கம்
196. மேலைவாத்யார்ஸ்வாமிகாலக்ஷேபம்
197. பொம்மலூர். பண்டித பரிஷத்து
198.} பதரிகாச்ரம யாத்ரா கோஷ்டி
355.} ,,
223. மந்தஸா. ராமாநுஜாசார்யா:,
தெ. கம். கோபாலாசார்யா:,
ஸ்ரீமந் நாராயணாசார்யா:,
273. காரப்பங்காடு. வேங்கடாசார்ய
ஸ்வாமி கோஷ்டி
277, 366. முதலியாண்டான் ஸ்வாமி
கோஷ்டி
345. புது டில்லியில் கனம் முன்ஷீ அவர்
களோடு ஸம்பாஷணை கோஷ்டி.
345. டில்லியில் வேத பாராயணதிகளை
ரிகார்டு செய்த கோஷ்டி.
347. ஏரணகுலத்தில் புருஷ ஸூக்
தோபந்யாஸ கோஷ்டி.
347. திருவனந்த சயனத்தில் கோஷ்டி.
349. திருவல்லிக்கேணி வானமாமலை
மடத்தில் உபந்யாஸ கோஷ்டி
355. தேவராஜபுரம் திருப்ரதிஷ்டையில்
உபந்யாஸ கோஷ்டி.
357. அவ்விடத்திலேயே அந்தரங்க
பக்தர்களோடு.
362. கோவை பட்டர்ஸ்வாமிஷஷ்ட்யப்த
பூர்த்திம ஹோத்ஸவ கோஷ்டி
364. மதுரை ஸத்ஸம்ப்ர தாயஸபை பரி
ஷத்து
368. நெல்லூர். பகவத் விஷயசாத்து
முறைகோஷ்டி
376. க்ருஷ்ண ஜில்லா வாடவல்லியில்
ஸமாஜம்.
395. சென்னைத் தண்டையார் பேட்டை
யில் ஸ்ரீராமா என்னும் ஸபா மண்ட
பத்தில் உபந்யாஸ கோஷ்டி.

—: o :—

ஸ்ரீ:

ஸம்ஸ்க்ருத நூற்பகுதியில் மொத்தம் நூல்கள் 155.

அவற்றுள் பிறருடைய வாதத்தின்மேல் ப்ரதிவாதமாக எழுந்த நூல்கள் 28.

அவற்றுக்கு அகராதி அட்டவணை. (லக்கம் — நூல்வரிசைலக்கம்.)

85. அத்யமேபத்யார்த்த சததூஷணீ
117. அபீகவதயா சதகம்
41. உத்யான சுஷ்கவசோவிமர்சம்
6. திவ்யப்ரபந்த வைபவவிவேக:
16. பரமார்த்த பரித்ராணம்
11. பரிபந்தி பஞ்சபங்கீ
123. பரீக்ஷாவிமர்சபராமர்ச:
29. பாடசோதந பரீக்ஷா
131. பாத்ரபத்ய சரித்ர ப்ரதிஷ்டா
121. பாதுகா ஸஹஸ்ராவதார தத்வம்
13. ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா
28. மதிரேக்ஷணார்த்த தத்வம்
119. மதிரேக்ஷணார்த்த மாதுர்யம்
43. யுஷ்மத்ஸூக்தி ஸௌரபம்
124. ரக்ஷாவிலோசந பாவப்ரகாசிகா
40. ரத்நபரீக்ஷா
17. ரஸிக புகரஞ்ஜநம்
30. ரஸிக ரஸாயநம்
27. லக்ஷ்மீதத்வவிநிர்ணய:
(ஸ்ரீதத்வசோதநம்வா)
149. வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகா
135. சதபூஷணீ வஜ்ரகுடார:
34. ஸதாசார்ய ஸூக்திரக்ஷா
132. ஸத்ஸம்ப்ரதாய ஸஹஸ்ராம்சு:
21. ஸபாபுஜங்கீ ஸர்வஸ்வம்
125. ஸமஸ்யமாநோக்திஸௌஷ்டவ விமர்ச:
15. ஸர்வஸ்வ கவசம்
120. ஸஹ்ருதய ஸௌபாக்யம்

தமிழ் நூற்பகுதியில் கண்ட நூல்கள் மோத்தம் 266. அவற்றுள் பிறருடைய வாதத்தின் மேல் பிரதிவாதமாக எழுந்த நூல்கள் தனிப்பட (முடிவில்) விவரிக்கப்பட்டுள்ளன. அவை பகவத்கடாக்ஷத்தாலும் ஸதாசார்யாநுக்ரஹத்தாலுமே தோன்றியவை யென்பதை அந்தரங்கஸாக்ஷிகமாக விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். இப்போது அடியேன் வெகு ஊக்கத்துடன் எழுதிக் கொண்டிருக்கும் நூல்கள் பலவுண்டு. அவற்றில், திவ்யப்ரபந்தங்களுக்கு ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதும் வியாக்கியானங்களே தலைமை பெற்றனவாகும். அவற்றால் தென்னாடும் வடநாடும் மஹோபகாரம் பெற்றுவருவதால் பெருந்தேவிமணவாளனை பேரருளாளன் இந்த ஸம்ஸ்க்ருத வியாக்கியான விலேகந கைங்கர்யத்தையே அடியேனுக்கு முக்கியமாக வைத்து விரைவில் நிறைவேற்றியருளவேணுமென்று பிரார்த்தித்து நிற்கிறேன்.

முடிவான விஞ்ஞாபனம்

—:o:—

1. இந்தத் தன் சரிதையை 1950 ஸுக்கு முன்னமே (அதாவது, நம்முடைய ஷஷ்டியப்த பூர்த்திக்கு முன்னமே) எழுதி வெளியிடப் பல ஆப்தர்கள் ஆஜ்ஞாபித்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் அப்போது இதில் நமக்கு ருசியுண்டாகவில்லை. அநிவார்யமான சில பெரியார்களின் நியமனத்தையே கொண்டு இது இப்போது எழுதி வெளியிடப்பட்டு முடிந்தது. இதில் ஒரெழுத்துக்கூட அயதார்த்தமாக எழுதப்படவில்லை யென்பதை அந்தரங்க ஸாக்ஷிகமாக விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

2. நம்முடைய தௌர்ப்பாக்யவசத்தால் மறைந்து போனவர்களும், நம்முடைய ஸௌபாக்ய வசத்தால் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுமான பல பெரியார்களின் திருவுருவப்படங்களை வெளியிட்டு அவர்களின் பெருமைகளையும் யதோசிதம் வெளியிடவேணுமென்கிற விருப்பமே அடியேனுக்கு அபரிமிதமாக இருந்தது. அந்த விருப்பம் இதில் பெரும்பாலும் நிறைவேறியதுபற்றி அடியேனுக்குண்டான மகிழ்ச்சி உண்மையில் உள்ளடங்காததே. இன்னமும் நூற்றுக் கணக்கான ஆப்தர்களைப்பற்றியும் மஹநீயர்களைப்பற்றியும் எழுதவேண்டிய விஷயங்கள் உள்ளத்துள்ளே உறைந்திருக்கின்றன. ஸமயம் எதிர்பார்க்கப்படுகின்றது.

3. அடியேனியற்றிய நூல்களைப்பற்றி விவரங்களெழுதி யிருப்பது இந்நூலில் நான்கிலொரு பகுதியாகும். அந்த விவரணங்களை யெல்லாம் பூர்த்தியாக வாசித்துப் பார்ப்பவர்களுக்கு அடியேனுடைய நூல்களின் தன்மைகள் விளங்கும். அடியேனுடைய வடமொழி நூல்களும் தென்மொழி நூல்களும் பன்னிரண்டு துறைகளில் தோன்றி யிருக்கின்றன வென்பதை விளக்கமாகக் காட்டியிருக்கிறேன். அந்த 12 துறைகளில் பரபக்ஷப்ரதி க்ஷேப நூல்கள் கடைசியான துறையில் சேர்ந்தவை. அந்த நூல்கள் மட்டும் சில மஹான்களுக்கு வருத்தத்தை விளைக்கக்கூடுமாயினும் அதற்காக நாம் செய்யலாவதொன்றில்லை. ஸ்ரீ தேசிகனுடைய திவ்யக்ரந்தங்களில் சததூஷணீ, ஸச்சரித்ரரக்ஷை முதலான சில நூல்கள் சிலர்க்கோ பலர்க்கோ வருத்தம் தருவனவாகிலும் அவை அவதரித்தே தீர வேண்டியவையாயின. அது போலவே இவற்றையும் கொள்வர் விவேகிகள். ஸ்ரீமத். S. R. S. ராகவன் ஸ்வாமி (டில்லி) இங்ஙனமே யெழுதியுள்ளாரென்பதை மஹான்கள் வாசித்தே யிருக்கிறார்கள்.

4. “சேஷாயுஷ்யபி சேஷிதம்பதி தயாதீக்ஷாமுதீக்ஷாமஹே” என்ன நின்ற ஆயுச் சேஷத்தில் ஆவிர்ப்பவிக்கின்ற அடியேனுடைய நூல்கள் ஸகல ஸஜ்ஜனஸ்ப்ருஹணீயங்களாகவே அமைய வேணுமென்று ஆப்தர்கள் ஆசாஸிக்க வேணும். அடியேனும் அங்ஙனமே ஆசம்ஸியா நின்றேன்.

ஸ்ரீகாஞ்சீ, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்

தானே யெழுதிய தன் சரிதை முற்றுப் பெற்றது.